பல்கலைக்கழக மானியக்குழு (UGC) அங்கீகாரம் பெற்ற மாதஇதழ்
New Centurian Ungal Noolagam ISSN 2394-7535-113

நியூ செஞ்சுரியின்

# உங்கள் நூலகம்

மாத இதழ்

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly)



| மலர் : 16<br>Vol : 16 | இதழ் : 07<br>Issue : 07 | www.ncbhpublisher.in | அக்டோபர் 2024<br>October 2024 | விலை<br>Price | ₹ 45/- | ஆண்டு சந்தா<br>Annual Subscription | ₹ 540/- |
|---|---|---|---|---|---|---|---|







## ஆதிக்க வர்க்கம் தீர்மானிக்கும் மொழியில்தான் எழுதவேண்டுமா?

- மாற்கு

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் வெளியீடாக திருச்சி சிவா எம்.பி. நூல்கள்





₹ 200/-




₹ 250/-




₹ 650/-




₹ 300/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410, 48601884 www.ncbhpublisher.in | email: info@ncbh.in




கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

**நியூ செஞ்சுரியின்**

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2055*

*மலர் - 16 இதழ் - 07 - அக்டோபர் 2024*

ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு

பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன்
முனைவர் ச.சுபாஷ் சந்திரபோஸ்
முனைவர் ந.முத்துமோகன்
முனைவர் மு.இராமசுவாமி
முனைவர் நா.இராமச்சந்திரன்
முனைவர் பா.ஆனந்தகுமார்
முனைவர் ஞா.ஸ்டீபன்
ப.கு.ராஜன்
முனைவர் இரா.அறவேந்தன்
முனைவர் இரா.காமராசு
முனைவர் உ.அலிபாவா

இதழ் வடிவமைப்பு

**கா. குணசேகரன்**

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142). ஜானி ஜான்கான் ரோடு.
இராயப்பேட்டை. சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com
இணைய தள முகவரி: www.ncbhpublisher.in

தனி இதழ் ₹ 45.00. ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00
ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00

சந்தா தொகையை
New Century Reader's Sangam
Central Bank of India
Ambattur Branch. Chennai - 600 050
A/c.No. 1035249018
IFSC Code : CBIN0282161
என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி) லிட்.,**
**41-பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்.**
**அம்பத்தூர். சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


## உள்ளே...


1 அறிவுச் சமூகத்திற்கு அடித்தளம்
ஆசிரியர் குழு....................04

2 ஆதிக்க வர்க்கம் தீர்மானிக்கும் மொழியில்தான் எழுதவேண்டுமா?
மாற்கு....................06

3 நினைவுச் சின்னங்கள்
பாவண்ணன்....................19

4 சீர்திருத்தச் செம்மல் சொ.முருகப்பா
டாக்டர் சு.நரேந்திரன்....................23

5 மக்களாட்சியில் வன்முறை
க.பழனித்துரை....................26

6 கம்பன் கவி உள்ளம்
முனைவர் யாழ் சு.சந்திரா....................30

7 ஓவியர் நடேஷ் மறைந்தார்
ஷங்கர்ராமசுப்ரமணியன்....................33

8 லெனின் தேர்வு நூல்கள் ஓர் அறிமுகம்
ப.கு.ராஜன்....................35

9 கவி கா.மு. ஷெரீபின் கவிதைகளில் தமிழும் தமிழ்நாடும்
ப. முத்துபாண்டியன் & உ.அலிபாவா....................39

10 பேராசிரியர் ஆறு. இராமநாதன் நாட்டுப்புறவியல் ஆய்வில் 50 ஆண்டுகள்
முனைவர் மு. ஏழுமலை....................42

11 பதின் பருவ சிறார் இலக்கியம் ஒரு பார்வை
சுகுமாரன்....................48

12 சிவக்கும் கவிதைகளும் கவிஞர் சிவசேகரமும்
மு. அஜித்குமார்....................52

13 வைணவப் பெருஞ்சமய நெறியில் கரைந்த நாட்டார் மரபு
த. குணாநிதி....................57

14 சமுதாய மாற்றத்துக்கான நாவல்
இரவீந்திரபாரதி....................63

15 புறநானூற்றில் ஔவையும் அதியனும்
முனைவர் சு. சதாசிவம்....................65

16 Chthulucene Sensibility Demonstrated by Malayali Tribe of the Eastern Ghats of Tamil Nadu
Dr. S. J. Kala & Ms. Sajoe Monica....................70




# அறிவுச் சமூகத்திற்கு அடித்தளம்

சென்னை, நெய்வேலி ஆகிய இரண்டு ஊர்களில் புத்தகக் கண்காட்சிகள் பல வருடங்களாக நடைபெற்று வருகின்றன. பின்னர் ஒருகட்டத்தில் புத்தக வாசிப்பில் ஆர்வமும் நம்பிக்கையுமுள்ள சமூ நல அமைப்புகள் ஆங்காங்கு புத்தகக் கண்காட்சிகள் நடத்தின. மிகக் குறைவான ஊர்களில் மட்டுமே இத்தகைய கண்காட்சிகள் நடத்தப்பட்டு வந்தன.

ஈரோட்டில் 2005ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கண்காட்சி 'புத்தகத் திருவிழா' என்ற பெயரில் நடத்தப்பட்டது. புத்தகச் சந்தை, புத்தக வணிகம் என்பதைத் தாண்டி வாசிப்பு, அறிவு, சிந்தனை சார்ந்த பல சிறப்பம்சங்கள் அதில் உள்ளடக்கப்பட்டன.

ஒரு திருவிழாவில் எப்படி ஒரு பக்கம் குழந்தைகளுக்கான பொழுதுபோக்கு நிகழ்வுகளாக ராட்டினம், குதிரைச் சவாரி, பலூன் சுடுதல் போன்ற பல அம்சங்கள் இடம்பெறுகின்றவோ அப்படிப் புத்தகச் சந்தைகளில் புத்தக வெளியீடு, படைப்பாளர் சந்திப்பு, மாலை நேரச் சொற்பொழிவு, கதை சொல்லுதல், உலகத் தமிழர் வருகை என வாசகர்களை வரவழைக்கிற – வந்த பொதுமக்களுக்கு புத்தக வாசிப்பு பற்றிய புரிதலை ஏற்படுத்துகிற சிறப்பம்சங்கள் சேர்க்கப்பட்டன. இவை மக்களுக்கு திருவிழா மனநிலையை படிப்படியாக மேம்படுத்த உதவின.


அடுத்த கட்டத்தில் அரசே 'புத்தகத் திருவிழா' என்று பெயரிட்டு ஆணை வெளியிடும் அளவுக்கு ஏற்கெனவே நடைபெற்று வந்த 'திருவிழாக்கள்' மக்கள் மனதில் ஆழப் பதிந்திருந்தன. வெற்றி பெற்றிருந்தன.

அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் புத்தகத் திருவிழாக்கள் நடத்தப்பட அரசே ஆணை பிறப்பித்தது மிகவும் வரவேற்கவும் பாராட்டவும் தக்கதாகும். ஏற்கெனவே சிறப்பாக நடத்தி வரும் சமூக நல அமைப்புகளோடு இணைந்து நடத்தவும் அத்தகைய சிறப்பும் அனுபவமும் மிக்க அமைப்புகள் விரும்பினால் அவ்வமைப்புகளை நடத்த அனுமதித்துவிட்டு நிதிஉதவி வழங்குவதற்கும் அந்த அரசாணை வழிவகை செய்கிறது. அரசாணையிலுள்ள அனைத்து அம்சங்களும் வரவேற்கத் தகுந்தவையே.



இனி அடுத்தகட்டம் பற்றிச் சிந்திக்கவும் முடிவெடுக்கவும் அவ்வாறு எடுக்கப்படுகின்ற சில நல்ல முடிவுகளை உடனடியாக அமல்படுத்தவும் அரசு முன்வருதல் அவசியம். புத்தகத் திருவிழாக்கள் சடங்குபூர்வமானதாகவோ, சம்பிரதாயபூர்வமானதாகவோ அமைந்துவிடுதல் கூடாது.

மாவட்டத் தலைநகர்களில் புத்தகத் திருவிழாக்கள் நடத்தப்படுகிறதென்றால் அம்மாவட்டம் முழுவதிலுமுள்ள பள்ளி, கல்லூரி மாணவர்கள் அனைவரும் அத்திருவிழாவில் பங்கேற்பதை மாவட்ட நிர்வாகம் உறுதி செய்ய வேண்டும். முதன்மைக் கல்வி அலுவலர் மூலம் சுற்றறிக்கை அனுப்புவது முதல்கட்ட முயற்சியே தவிர முழுப்பயனளிக்கிற ஒன்றல்ல.



ஒரு அறிவுச் சமூகத்தை உருவாக்குவது அவ்வளவு எளிதான ஒன்றல்ல. மக்களை வாசிப்புக்கு வசப்பட வைப்பதும் அதிலும் வாழ்க்கைக்கும் சமூகத்திற்கும் தேவையான தேர்வு செய்யப்பட்ட நல்ல நல்ல அறிவார்ந்த நூல்களை வாசிக்கப் பழக்கப்படுத்துவது பல கோணங்களிலான தொடர்ந்த இடைவிடாத முயற்சிகளின் விளைவாகவே சாத்தியப்படுவதாகும்.

இதற்கு அரசு, பதிப்புத் துறை, கல்வி நிலையங்கள், சமூகம், ஆசிரியர், பெற்றோர், நூலகங்கள், பொது நல அமைப்புகள் என அனைத்துத் தரப்பினரது முன்முயற்சிகளும் முனைப்பான ஒருங்கிணைப்பும் ஒத்துழைப்பும் அவசியப்படுகிறது.

இந்த ஒருங்கிணைப்பை உயிரோட்டத்துடன் உருவாக்க வேண்டியதும் வழிநடத்த வேண்டியதும் மாவட்ட நிர்வாகத்தின் வழியாக தமிழ்நாடு அரசுதான் என்பதை மறுக்க இயலாது.

புத்தகத் திருவிழா நடத்தப்படுவதற்கான அரசாணை வெளியிடப்பட்டதன் நோக்கம் முழுமையாக வெற்றி பெறத் தகுந்த முன்முயற்சிகளை முழுமூச்சுடன் அரசு மேற்கொள்ள வேண்டும். அனைத்துத் தரப்பினருமே உண்மையாகவும் உணர்வுபூர்வமாகவும் ஒத்துழைக்க உறுதியேற்க வேண்டும்.

**ஆசிரியர் குழு**



# ஆதிக்க வர்க்கம் தீர்மானிக்கும் மொழியில்தான் எழுதவேண்டுமா?

## மாற்கு

**நேர்காணல்: ஜி.சரவணன்**

மாற்கு ஸ்டீபன் என்கிற மாற்கு அடிகளார் விருதுநகர் மாவட்டம் வ.புதுப்பட்டியைச் சேர்ந்தவர். 1982இல் குருப்பட்டம் பெற்றதும் கோட்டார் மறைமாவட்டம் கோடிமுனையில் பங்குப் பணியாளராகப் பணியைத் தொடங்கினார். கத்தோலிக்க கிருத்தவத்தில் மேலதிகமாக தீண்டாமை இருப்பதைக் கண்டு தலித் கிருத்தவ இயக்கத்தைத் தொடங்கி அதில் மாற்றங்களை ஏற்படுத்த தீவிரமாக முயன்றவர். களச்செயல்பாடுகளின் வழியாக ஆய்வு செய்து அருந்ததியர்களின் இனவரைவியலை நூலாக எழுதியவர்.

சமூக அக்கறையுள்ள பாதிரியாராக களத்தில் பணியாற்றியபடியே அனுபவ அறிவில் தான் கண்ட உண்மைநிலைதனை மையமாகக் கொண்டு நாவல்கள், சிறுகதைகள், விழிப்புணர்வு, இறையியல், தன்வரலாறு, மானுடவியல் எனப் பல்வேறு தளங்களில் இருபதுக்கும் மேற்பட்ட நூல்கள் எழுதியவர். இவரது படைப்புகள் பல கல்லூரிகளில் பாடத்திட்டங்களாக உள்ளன. இவரது படைப்புகளை ஆய்வு செய்து சிலர் முனைவர் பட்டங்களைப் பெற்றுள்ளனர். தற்போது சென்னை லயோலா கல்லூரி வளாகத்தில் உள்ள தங்குமிடத்தில் தங்கி எழுத்துப் பணிகளில் ஈடுபட்டு வரும் அவரைச் சந்தித்தோம்.

**கத்தோலிக்க அவையின் உலகளாவிய முக்கிய துறவற சபையில் நீங்கள் ஒரு துறவியாகச் சேர்ந்தது உங்களது சுயவிருப்பமா, அல்லது உங்கள் பெற்றோர் எடுத்த முடிவா?**

என் சொந்த ஊர் விருதுநகர் மாவட்டத்திலுள்ள வத்திறாயிருப்புக்கு அருகில் உள்ள புதுப்பட்டிதான். அங்கு கோயில், வளாகம், பள்ளி மூன்றும் ஒரே இடத்தில் இருந்தன. இவற்றின் முன்னிருந்த தெருவின் முதல் வீட்டில் நான் பிறந்தேன். எனது சிறுவயது அனுபவங்கள் அனைத்தும் இவற்றோடு தொடர்புடைய கிறிஸ்தவச் சூழல் மட்டுமே. இங்கு பணியாளர் திரிங்கால் 1876இல் உருவாக்கிய திரிங்கால் ஆர்.சி.நடுநிலைப்பள்ளியில்தான் படித்தேன். அப்பள்ளியிலேயே சிறிது காலம் ஆசிரியராகப் பணியாற்றினேன். அப்போதுதான் சேசு சபையில் சேர்ந்து பணியாற்ற வேண்டும் என்ற ஆவல் உருவானது. இதற்குக் காரணம் வெவ்வேறு சிந்தனைப் போக்குள்ள நண்பர்களது உறவின் காரணமாகத் தீவிரமாகக் கிறிஸ்தவ கோட்பாடுகளைப் பின்பற்ற வேண்டும் என்பதே. எனது பெற்றோர் இதை விரும்பவில்லை. வீட்டின் பொருளாதார சூழ்நிலையே இதற்குக் காரணம். பெற்றோர்களின் சம்மதத்தைப் பெற நான் ஓரளவு போராட்டம் நடத்தவேண்டியிருந்தது. அரை மனதுடன் நான் சேசு சபையில் சேர்வதற்கு என் தந்தை சம்மதித்தார். என் அம்மா அறவே ஏற்கவில்லை. அதிலிருந்து அவர் என்னுடன் பேசுவதையே முற்றிலும் தவிர்த்தார். அவர் இறப்பு வரை என்னுடன் பேசவில்லை. அவரது இறப்பு என்னை மிகவும் பாதித்தது. இருப்பினும் உறுதியுடன் சேசு சபையில் சேர்ந்தேன். இதைப்பற்றி தெளிவாக எனது ‘பேருவகை’ என்ற என் சுயசரிதையில் விரிவாக எழுதியுள்ளேன்.

**உங்கள் முடிவு என்றால் இதற்கு உந்துவிசையாக இருந்தது ஆன்மீகம் மட்டும்தானா? சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் வேட்கையும் இணைந்ததா?**

இளம் வயதில் வெவ்வேறு சாதி, மதம், சித்தாந்தம் (நக்சல்பாரி-நடராஜன், பொதுவுடைமை-ராஜ்கௌதமன், நாத்திகம்-பாலகுரு, காங்கிரஸ்-பழனிச்சாமி, கிறிஸ்தவம்-நான்) பின்னணி கொண்ட ஐவர் நண்பர்களானோம். தீவிர வாசிப்பே எங்களை இணைக்கும் புள்ளியாய் இருந்தது. வாசித்தவைகளை எங்களது கொள்கைகளின் பின்னணியில் விமர்சித்தோம். காலப்போக்கில் நாங்கள் நம்பிய சித்தாந்தங்களைப் பற்றியும் தீவிரமாக விவாதித்தோம். சில வேளைகளில் விடியும்வரைகூட எங்களது விவாதம் நீடித்ததுண்டு. கருத்து வேறுபாடுகள் எங்களது நட்பைப் பிரிக்கவில்லை. மனித நேயமே அனைத்துச் சித்தாந்தங்களுக்கும் அடிப்படை என்பதிலும், அடித்தட்டுமக்கள் ஒன்றிணைந்து போராடினால்தான் சமூகத்தில் மாற்றம் வரும் என்பதிலும் நாங்கள் உறுதியாயிருந்தோம். எங்களது உளமார்ந்த தேடலே எங்களது நீடித்த நட்புக்கு அடித்தளமிட்டது. இச்சூழலில் நான் சேசு சபையில் சேர்ந்தேன். நண்பர்கள் எனது முடிவை ஏற்கவில்லை. இருப்பினும் எங்களது நட்பு தொடர்ந்தது. எனது துறவுப் பயணம் நான் இளைஞனாக இருந்தபோது நண்பர்களோடு இணைந்து நம்பிய இரண்டு குறிக்கோள்களின் பின்னணியிலேயே தொடர்ந்தது என்று கூறலாம்.

**விடுதலை இறையியல் (Liberation Theology) அல்லது விடுதலைக்கான இறையியல் (Theology of Liberation) என்ற சிந்தனையோட்டம் நீங்கள் துறவற வாழ்க்கையைத் தொடங்கியபோது அறிமுகம் ஆகியிருந்ததா?**

தொடங்கவில்லை என்றுதான் கூறுவேன். ஆனால் அந்த இலக்கை நோக்கிச் சென்றது என்று கூறலாம். துறவு வாழ்வின் தொடக்கத்தில் நவதுறவிகளின் இயக்குநராக இருந்த தந்தை மரியதாஸ் ஏழைகளுக்காக உழைக்கவேண்டும் என்ற குறிக்கோளுடன் எங்களை வழிநடத்தினார். அந்தத் தாக்கம் என்னில் இருந்தது. 1974இல் சேசு சபையின் 32வது பொதுஅமர்வு ரோமில் நடந்தது. அதில் நீதிக்காக உழைப்பதே சேசு சபையினரது விசுவாசம் என்று சபை பிரகடனப்படுத்தியது. இக்கருத்து என்னில் ஆழமாக வேர்விட்டு வளர்ந்தது. பயிற்சிக் காலத்திலேயே ஏழைகளோடு வாழும் அனுபவம் வேண்டும் என்றும் 32வது பொது அமர்வு வலியுறுத்தியது. இக்கருத்தின் பின்னணியில் கொடைக்கானலில் உள்ள செண்பகனூர் திரு இருதயக் கல்லூரியில் தத்துவ இயல் படித்தபோது கல்லூரின் வசதியான வாழ்வை விட்டுவிட்டு நாங்கள் ஆறுபேர் ஏழை மக்கள் நடுவில் ஒரு குடிசையில் தங்கி வாழ்ந்தோம். வாட்டும் குளிரில், வறுமையில் வாழும் ஏழை மக்களது துன்பங்களை நேரில் அறிந்துகொண்டோம். இன்றுவரை எங்களால் அந்த அனுபவத்தை மறக்க முடியாது. அதைத் தொடர்ந்து 1978இல் தலித் மக்களை இயக்கமாக ஒருங்கிணைக்க பல்மேரா (Peoples' Action and Liberation Movement in East Ramand-PALMERA) என்ற சமூகச் செயல்பாட்டுக் குழுவை நால்வர் இணைந்து தொடங்கினோம். ஓர் ஆண்டு அங்கு பணிபுரிந்தேன். உட்சாதிப் பிரிவு, மதம், கலாச்சாரம், கட்சி எனும் தடைகளைக் கடந்து தலித்துகளை இயக்கமாக ஒருங்கிணைத்த அனுபவம் இன்றும் என்னை வழிநடத்துகிறது. ஏழை மக்களிடமிருந்து அதிகம் கற்கும் வாய்ப்பும் அங்கு எனக்குக் கிடைத்தது.

எங்கள் குழுவினர் டில்லியில் 1981இல் மூன்றாம் ஆண்டு இறையியல் படித்தபோது வளரும் நாடுகளின் இறையியல் அறிஞர்களின் மாநாடு அங்கு நடைபெற்றது. இலத்தீன் அமெரிக்க இறையியல்

அறிஞர்கள் பலர் அதில் கலந்துகொண்டனர். அதில் சிலரைச் சந்திக்கும் வாய்ப்பும், அவர்களோடு உரையாடும் வாய்ப்பும் எங்களுக்குக் கிடைத்தது. லத்தீன் அமெரிக்க சூழ்நிலையை விளக்கிய அவர்கள் அடித்தட்டு மக்களின் விடுதலைக்காகப் போராடிய ஆயர், குருக்கள், இருபால் துறவிகள், பொது நிலையினர் என்று எண்ணற்றவர்களைச் சுட்டுக்கொன்ற பல நிகழ்வுகளை வேதனையுடன் பகிர்ந்தனர். நிகழ்வுகள் எங்களை அதிகம் பாதித்தன. எங்களது பாதிப்புகளைப் பதிவு செய்ய விரும்பினோம்.

ஒவ்வொரு குழுவினரும் தங்களது குருத்துவத்தின் நினைவாக ஒரு புத்தகத்தை எழுதி வெளியிடுவது வழக்கம். நாங்கள் எங்களது குருத்துவத்தின் நினைவாக லத்தீன் அமெரிக்காவில் போராடி ஆதிக்க வர்க்கத்தால் சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் உண்மைச் சரித்திரத்தை எழுதி வெளியிடலாம் என முடிவு செய்தோம். கணினி, இணையதளவசதி இல்லாத காலம் அது. ஒவ்வொருவரும் தாங்கள் எழுத விரும்பியவர்களின் உண்மைச் சம்பவத்தைப் பெரும் முயற்சி செய்து பெற்று எழுதினோம். பேராயர் ரொமேரோ, பணியாளர் ருட்டில்லோ கிரான்டா, பணியாளர் மாரிஸ், பணியாளர் ஜான் போஸ்கோ பெர்னியர், சகோதரி டாரத்தி கேஸல், செல்வி ஜீன் டானோவன், சகோதரி மோரா, சகோதரி ஈட்டாவி மற்றும் பலரைப் பற்றிய சரித்திரத்தை எழுதி 'செந்நீரில் எழுதிய சித்திரங்கள்' என்ற தலைப்பில் 02-05-1982இல் எங்களது குருப்பட்ட நாளில் வெளியிட்டோம்

ஒரு பணியாளராயிருந்து விடுதலைக்காகப் போராட தனது அங்கியைத் துறந்துவிட்டு துப்பாக்கியுடன் போராட்டக் களத்திற்குக் சென்று அரசுப் படைகளால் சுட்டுக்கொல்லப்பட்ட கமிலோ தோரஸின் வாழ்வைக் 'கண்ணீரில் எழுதிய கடிதம்' என்ற தலைப்பில் நான் எழுதினேன். 'புரட்சிவாதியாக இல்லாத கத்தோலிக்கன் சாவான பாவத்தில் வாழ்கிறான்' என்ற கமிலோ தோரஸின் கருத்து இன்னும் என் மனதில் எதிரொலித்துக்கொண்டே இருக்கிறது.

**நீங்கள் எழுத்தாளரான பின்னணியை விரிவாகச் சொல்லுங்களேன்.**

நான் ஏற்கனவே என்னிடமிருந்த வாசிப்புப் பழக்கத்தைக் குறிப்பிட்டிருக்கிறேன். நண்பர்களுடன் வாசித்தவற்றைப் பற்றி விவாதித்திருக்கிறேன். சில சமயங்களில் வாசித்தபோது நாவலை வேறுவிதமாக எழுதியிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்குமே என்று எண்ணினேன். அப்போது நானே ஏன் எழுதக்கூடாது என்ற கேள்வி என்னில் எழுந்தது. எழுத ஆரம்பித்தேன். ஒரு நாவலை எழுதி முடித்தபின் நண்பர்களிடம் வாசிக்கக் கொடுத்தேன். வாசித்த அவர்கள் மிகவும் பாராட்டினார்கள். அந்த உற்சாகத்தில் அடுத்த நாவலையும் எழுதினேன். முதல் நாவலைவிட இரண்டாம் நாவல் சிறப்பாக இருப்பதாக ராஜ் கௌதமன் கூறினார். இச்சூழலில் நான் சேசு சபையில் சேர முடிவெடுத்தேன். இரண்டு நாவல்களின் கையெழுத்துப் பிரதிகளை வீட்டில் வைத்துவிட்டு சேசு சபையில் சேர்ந்தேன். சில ஆண்டுகளுக்குப் பின்பு வீட்டிற்குச் சென்றபோது பிரதிகள் வீட்டில் இல்லை.

சேசு சபையில் தமிழ் இறையியல் (அருள் கடல்) 1979இல் சென்னையில் தொடங்கப்பட்டது. இறையியல் மாணவர்களின் முதல்குழுவில் நானும் ஒருவன். மக்களின் வாழ்வை ஆராயும்போது எழும் இறையியல் கேள்விகளுக்கு இறையொளியில் விடை காண்பதே தமிழ் இறையியலின் நோக்கம். மானிடவியல் பேராசிரியர் ஜெயபதி வழிகாட்டுதலில் கிராமங்களில் ஆய்வை மேற்கொண்டு கட்டுரைகள் எழுதினோம். நான் ஜெயபதியிடம், 'கட்டுரை நமது வடிவமல்ல. மேற்கத்திய வடிவம். நமது மரபு கதை சொல்லுவதுதான். ஐம்பெருங்காப்பியங்கள் என நாம் போற்றுவது கதைகளே. கட்டுரையில் என்ன புனிதத்துவம் இருக்கிறது? ஏன் மாற்று வடிவத்தை நோக்கி நகரக்கூடாது' என்று கேட்டபின் எனது நாவல் அனுபவங்களைக் கூறினேன். அவரும் ஏற்றுக்கொண்டார். மற்றவர்கள் கட்டுரையாக எழுத நான் எனது அனுபவங்களை 'வருவான் ஒருநாள்' என்ற நாவலாக எழுதிச் சமர்ப்பித்தேன். மிகவும் பாராட்டப்பட்டு 1980இல் பதிப்பிக்கப்பட்டது. அதுதான் நான் எழுதி வெளியான முதல் நாவல்.

அது தந்த ஊக்கத்தில் அவ்வாண்டே கிறிஸ்தவத்தில் இருக்கும் கல்லறைப் பிரச்சினைகளை மையப்படுத்திய 'சுவர்கள்' நாவலை ஓய்வு நேரத்தில் எழுதினேன்.

மூன்றாவது நாவல் மிக முக்கியமானது. இறையியல் மூன்றாம் ஆண்டு டில்லியில் உள்ள இறையியல் கல்லூரி வித்ய ஜோதியில் படித்தேன். நாங்கள் ஒரு தலைப்பைத் தேர்வுசெய்து, அதை மையப்படுத்தி மூன்று ஆண்டுகள் இறையியலில் கற்ற அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு நெடிய ஆய்வுக் கட்டுரையை (thesis) எழுதவேண்டும். அந்த ஆய்வுக் கட்டுரையை ஒட்டித்தான் நான்காம் ஆண்டில் இறுதித் தேர்வு இருக்கும். நான் வன்முறை என்ற தலைப்பைத் தேர்வு செய்தேன். அதை நாவலாக எழுத இறையியல் பேராசிரியர்களிடம் அனுமதி கேட்டேன். 1980களில் தமிழகத்தில் எம்.ஜி.ஆர். ஆட்சி நடந்துகொண்டிருந்தது. அப்போது திருப்பத்தூர் (வட தமிழ்நாடு) பகுதியில் படித்த பல இளைஞர்கள் மார்க்சிய சிந்தனைகளை உள்வாங்கி ஏழைகள், கூலித் தொழிலாளர்களை ஒருங்கிணைத்து, கூலி உயர்வுக்காகப் போராட்டங்களை முன்னெடுத்தனர்.

எம்.ஜி.ஆர். ஆட்சியில் அவர்களை எல்லாம் 'நக்சலைட்டுகள்' என முத்திரையிட்டு காவல்துறையினர் சுட்டுக்கொன்றனர். இவற்றைக் கருத்தில் கொண்டு தமிழ்நாட்டுச் சூழலைப் படித்து, உள்வாங்கி, கிறிஸ்தவப் பின்னணியில் இறையியல் கண்ணோட்டத்தில் வன்முறையை எப்படிப் பார்க்கிறேன் என நாவல் வடிவில் எழுதுகிறேன் என்றேன். என் புதிய முயற்சி பற்றி பேராசிரியர்கள் தேர்ந்து தெளிந்து முடிவெடுத்தனர். அவர்களது அனுமதியுடன் 'கத்தியின்றி இரத்தமின்றி' நாவலை எழுதினேன். வித்தியாசமான முயற்சிக்குப் பெரும் வரவேற்பு கிடைத்தது. நாவல் புத்தகமானது. இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழில் நாவல் பற்றி பெரிய கட்டுரையை டி.என்.கோபாலன் என்ற பத்திரிகையாளர் எழுதினார். 'யார் இந்த மாற்கு?' என்று என்னைத் தேடிவந்து பாராட்டினார். சில கல்லூரிகளின் பாடத்திட்டத்திலும் நாவல் இடம்பெற்றது.

வருவான் ஒருநாள் நாவல் உடனடியாக வெளிவந்தாலும் சுவர்கள், கத்தியின்றி இரத்தமின்றி நாவல்கள் வெளியாவதில் சிக்கல்கள் இருந்தன. பெரும் போராட்டத்திற்குப் பின் பல ஆண்டுகள் கழித்துத்தான் அவை வெளியாயின. வருடத்திற்கு ஒரு நாவல் எழுதலாம் எனத் திட்டமிட்டிருந்த நான் அதன்பின் பத்து ஆண்டுகள் எழுதவில்லை. ஐடியாசில் பதிப்பகம் ஒன்று ஆரம்பித்த பின்புதான் மீண்டும் எழுத ஆரம்பித்தேன். அப்படி எழுதிய நாவல்தான் யாத்திரை. விருதுநகர் மாவட்டம் ஆலங்குளத்தில் அருந்ததியர்களோடு வாழ்ந்த சமயத்தில் மானிட இயல் நூலாக 'அருந்ததியர்: வாழும் வரலாறு' எழுதினேன்.

அதைத்தொடர்ந்து சங்கரலிங்கபுரத்தில் நடந்த காவலர்களின் வன்முறையை மற்றவர்களின் துணையோடு எதிர்த்தோம். எங்களது தொடர் போராட்டத்தின் காரணமாக அப்போது தமிழக முதல்வராக இருந்த செல்வி ஜெயலலிதாவே அங்கு நேரடியாக வந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறியதோடு இழப்பீடும் வழங்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது. இந்த நிகழ்வுகளை 'மறியல்' நாவலாக எழுதினேன்.

சேசு மீண்டும் வந்தால் தமிழகத் திருஅவையை எப்படிப் பார்ப்பார் என்பதை 'மறுபடியும்' நாவலிலும், திருஅவையில் பெண் குருத்துவத்தை வலியுறுத்தி 'இப்படியும்' நாவலிலும், திருஅவையில் சாதியம் எங்கும்-எதிலும் இருப்பதை 'எப்படியும்' நாவலிலும் பதிவு செய்தேன்.

யாத்திரையின் தொடர்ச்சியாக தலித் கிறிஸ்தவ விடுதலை இயக்கத்தின் போராட்டங்களை 'மீள்வெளி' நாவலிலும், இயற்கையோடு இணைந்து வாழவேண்டும் என்பதை 'ஐம்பேரியற்கை' நாவலிலும் வலியுறுத்தினேன். பணியாளர் திரிங்காலின் பணிகளை சரித்திரப் பின்னணியோடு சமூக வரலாற்று நாவலாக 'முன்னத்தி'யையும் எழுதினேன்.

மக்களின் போராட்டங்களைப் பதிவு செய்வதோடு அடுத்து எந்த இலக்கை நோக்கிப் பயணம் செய்ய வேண்டும்... இப்படிச் செய்தால் நல்லது என்கிற வழியைக் காட்டக்கூடிய தீர்க்கத்தரிசியாக, அருள்வாக்குக் கூறுபவராக, ஓர் இறைவாக்கினராகச் செயல்படவேண்டும் என்பதில் நான் தெளிவாயிருக்கிறேன்.

இதுவரை நாவல்கள், சிறுகதைகள் தொகுப்பு, விழிப்புணர்வு, புலனாய்வு, மானிட இயல், தன் வரலாறு, இறையியல் என 23 புத்தகங்களை எழுதியுள்ளேன்.

நான் அடிப்படையில் சமூகச் செயல்பாட்டாளன். ஏழை, மற்றும் பாதிக்கப்பட்ட மக்களோடு இணைந்து அவர்களது உரிமைக்காக உழைக்கிறேன். அந்த அனுபவங்களை பல்வேறு இலக்கிய வடிவங்களில் எழுதுகிறேன். எந்த வடிவம் என்பதை சூழல்தான் உணர்த்துகிறது.

**'அடிப்படையில் நான் ஒரு சமூகச் செயல்பாட்டாளன்' என்று குறிப்பிடுகிறீர்கள். உங்களது ஒருசில முக்கியமான சமூகச் செயல்பாடுகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.**

தற்புகழ்ச்சியாக இருக்குமோ என தயங்குகிறேன். இருப்பினும் இதை வாசிக்கும் சிலருக்கு இப்படியும் செயல்படலாம் என்ற துணிவு ஏற்படலாம். அதற்காக சிலவற்றைச் சுருக்கமாகக் கூறுகிறேன். எனது சுயசரிதையான பேருவகையில் அனைத்தையும் விரிவாகப் பதிவிட்டுள்ளேன்.

அருள்பொழிவு பெற்றபின் 1982இல் கோட்டார் மறைமாவட்டத்திலுள்ள கோடிமுனையின் பணியாளராக நான் நியமிக்கப்பட்டேன். அங்குள்ள கல்லறைத் தோட்டம் நிரம்பிவிட்டது. கல்லறைத் தோட்டமானது அழகிய வேலைப்பாடுகளுடன் மிகப்பெரிதாகக் கட்டப்பட்ட பணக்காரக் கல்லறைகளாலும், பளிங்குச் சிலுவைகள் பதிக்கப்பட்ட நடுத்தர வர்க்கத்தினரின் கல்லறைகளாலும், மண் குவியல்கள்மீது மரக்குச்சிச் சிலுவைகள் நடப்பட்ட ஏழைகளின் கல்லறைகளாலும் நிறைந்திருந்தது. மண் குவியல் கல்லறைகள் மட்டுமே மறுசுழற்சிக்குப் பயன்பட்டன. கல்லறைகளில் பாகுபாடு இருக்கலாமா? என்ற கேள்வி என்னில் எழுந்தது. மக்களை ஒருங்கிணைத்து அவர்களிடம் கல்லறைகளை அகற்றிவிட்டு மறு சுழற்சிக்குப் பயன்படும் விதத்தில் புதிதாகக் கல்லறைத் தோட்டத்தை உருவாக்கலாம்... புதிய கல்லறைகளில் மரச்சிலுவைகளை மட்டுமே நடலாம்... ஓர் ஆண்டிற்குப்பின் அதையும் அகற்றிவிடலாம் எனக் கூறி மக்களை முடிவெடுக்கக் கூறினேன்.

மக்கள் முடிவுப்படி ஊரார் அனைவரும் சென்று கல்லறைகளை அகற்றிச் சமமாக்கினர். எதிர்ப்புகள் எழுந்தாலும் ஏழைகள் இணைந்திருந்ததால் அவை நீடிக்கவில்லை. விளைவாகத் தற்போது கோட்டார் மறைமாவட்டத்தில் பெரும்பாலான கடற்கரை கிராமத்தினர் இப்பழக்கத்தைப் பின்பற்றுகின்றனர். ஏழைகளின் சக்தியை உணர்ந்து வியந்தேன். எனது வாழ்வில் நான் செய்த அர்த்தமுள்ள மிகப்பெரிய பணி இது.

1984இல் சென்னை - மயிலை உயர் மறைமாவட்டத்தில் பத்துக் கிளைகளுள்ள ஓங்கூர் பணித்தளத்தின் பணியாளரானேன். கிறிஸ்தவர் அனைவருமே தலித்துகள். இவர்களிடம் 'கொத்து' என்ற பாகுபாடான குடும்ப அமைப்பு இருந்தது. இதைப் போக்க வரிசையாக உள்ள பத்துக் குடும்பங்களை ஒன்றிணைத்து அடித்தள சமூகங்களை உருவாக்கினேன். தன்மானம், தன்னிறைவு, தன்னாட்சி என்ற மூன்று சித்தாந்தங்களின் அடிப்படையில் இவர்கள் தங்களைத் தாங்களே ஆளும் சூழ்நிலையை உருவாக்கினேன். ('அடித்தள விழிப்பினிலே' புத்தகத்தில் இதை விளக்கியுள்ளேன்.)

ஓங்கூரின் நல்லூர் கிராமத்தில் தலித் மாதா என்ற பெயரில் புதிய சுரூபத்தை தலித் பெண்கள்போல வடிவமைத்து, கோயிலும் கட்டி தலித்துகளுக்காக புதிய ஆன்மீகம் உருவாக ஏற்பாடு செய்தேன். பேராயர் அனுமதி அளிக்கத் தயங்கியதால் தலித் மாதா, விடுதலை மாதாவானார்.

மதுரை ஐடியாஸ் மையத்தில் ஒரு பதிப்பகத்தை உருவாக்கி தலித் படைப்புகள் வெளிவர வழிவகுத்தேன்.

விருதுநகர் மாவட்டத்தில் அருந்ததியர்களை ஒருங்கிணைத்து அவர்களது வளர்ச்சிக்காக ஐந்து சேசு சபையினரைக் கொண்ட 'கரிசல்' அமைப்பை உருவாக்கினேன். இதன் வழியாக அருந்ததியர் வளர்ச்சிக்காக விடுதி உட்பட பல நலத்திட்டங்களை நிறைவேற்றியதோடு விழிப்புணர்வும் கொடுத்தோம். 1995இல் அருந்ததியர்களில் நூற்றுக்கும் மேற்பட்டவர்களுக்கு மேலாக ராஜபாளையம் முதல் விருதுநகர் வரை எட்டு நாள்கள் நடைபயணம் மேற்கொண்டோம். அருந்ததியர் வாழும் கிராமங்கள் வழியாகச் சென்று அங்குள்ள தீண்டாமைகளைப் பட்டியலிட்டோம். அவற்றைப் போக்க மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவரிடம் மனுகொடுத்தோம். நானும் நடைபயணத்தில் கலந்து கொண்டேன்.

திண்டிவனத்தில் துறவு சபை சகோதரர்கள் போதிய இழப்பீடு கொடுக்காமல் தங்கள் நிறுவனத்தில் பணி செய்த பல தலித்துகளை வெளியேற்றினர். அதனால் அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர். இந்த பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் பணியாளர் எஸ்.டி.செல்வராஜ் சகோதரர்களுடன் பல பேச்சுவார்த்தை நடத்தியும் தீர்வு எட்டப்படவில்லை. அவர்களிடம் கோரிக்கையை வலியுறுத்துவதற்காக அவர்களது நிறுவனத்தின் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தினார். அவரோடு நானும் இன்னும் பல பணியாளர்களும் சகோதரிகளும் இணைந்து போராடினோம். நாங்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டோம். பேராசிரியர் கல்யாணி போன்ற தோழர்களின் முயற்சியால் சிறையிலிருந்து பிணையில் வெளிவந்தோம்.

2004இல் சுனாமியால் திருச்செந்தூரில் அருந்ததியர்கள் பாதிக்கப்பட்டனர் என்ற செய்தியைக் கேள்விப்பட்டு அங்கு சென்றேன். மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட அருந்ததியர்களுக்கு உதவ அவர்களுக்காக 'மாவீரர் நகர்' என்ற புதிய கிராமத்தை 84 வீடுகள் மற்றும் இதர வசதிகளுடன் நிர்மாணித்தேன். இதற்கு 'வெட் டிரஸ்ட்' இயக்குநர் ஜெயதாஸ் உதவினார். அருந்ததியர்கள் படிக்கும் நோக்கத்தில் இவர்களே நடத்தும் 'ஸ்டார் மேல்நிலைப் பள்ளி'யை அனைத்து நவீன வசதிகளுடன் உருவாக்கினேன். இதற்கு உதவி செய்தவர் எனது ஜெர்மன் நண்பர் பெர்னாட் ஈழன் சே.ச.

கோட்டூர் அருகிலுள்ள வீரபட்டி கிராமத்தில் தலித் மக்களை மதத்திற்கு அப்பாற்பட்டு ஒருங்கிணைத்து அவர்களே செயல்படும் சூழ்நிலையை உருவாக்கினேன். மதப்பாகுபாடு அற்ற கல்லறையையும் உருவாக்கினேன். இவர்களுக்காக அனைத்து வசதிகளும் நிறைந்த 60 வீடுகள் கொண்ட புதிய குடியிருப்பை உருவாக்கினேன்.

கோட்டுருக்கு அருகில் தாப்பாத்தி என்ற ஊரில் 'சாதி மறுப்புத் திருத்தலம்' உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டேன். கோயிலும் கட்டி முடிக்கப்பட்டது. ஆனால் அதற்குள் நான் மாற்றப்பட்டதால் அத்திட்டத்தை என்னால் முழுமையாக நிறைவேற்ற முடியவில்லை.

கொடைக்கானல் மலைக்கிராமங்களில் வாழும் பழங்குடியினர் மற்றும் அருந்ததியர்களுக்காக 'பீக்' என்ற தொண்டு நிறுவனத்தை சேசு சபையினர் நடத்தினர். பழங்குடி மற்றும் அருந்ததியர்கள் நலனுக்காக இவர்கள் வாழும் 16 கிராமங்களில் சமுதாயக்கூடம் கட்ட பணஉதவிக்கு ஏற்பாடு செய்தேன். பெரும்பாலான சமுதாயக் கூடங்களை நானே திறந்து வைத்தேன்.

நான் படித்த, பணிபுரிந்த புதுப்பட்டி ஆர்.சி.திரிங்கால் நடுநிலைப் பள்ளி சிதலமடைந்ததைக் கண்டு வேதனைப்பட்டேன். அங்கு அனைத்து வசதிகளும் நிறைந்த மிகப்பெரிய பள்ளியைப் புதிதாகக் கட்ட ஏற்பாடு செய்தேன்.

சபை கேட்டுக் கொண்டதால் மறைமலைநகருக்கு அருகில் உள்ள வடமேல்பாக்கம் கிராமத்தில் ஏழை தலித் மாணவர்களுக்குப் பயன்படும் விதத்தில் ஒன்றிய அரசின் அங்கீகாரம் பெற்ற சி.பி.எஸ்.சி. மேல்நிலைப் பள்ளியை ‘லொயோலா அகாடெமி’ என்ற பெயரில் துவக்கி அதை திறம்பட நான்கு ஆண்டுகள் நிர்வகித்தேன்.

பட்டியல் நீளமானது. ஒருசிலவற்றை மட்டும் கூறியுள்ளேன். படைப்பாற்றலுடன் செயல்பட்டால் எவ்வளவோ பணிகளை நம்மால் ஏழை எளிய மக்களுக்குச் செய்ய முடியும். அடித்தட்டு மக்களுக்கு வளர்ச்சி முக்கியமா? அல்லது விழிப்புணர்வு கொடுத்து இயக்கமாக உருவாக்குவது முக்கியமா? இக் கேள்விகள் என்னில் எழுந்தபோது வளர்ச்சிப் பணியும், விழிப்புணர்வுப் பணியும் இணைந்த பணியே முக்கியம் என்ற நோக்கில் என் பணிகளை அமைத்துக் கொண்டேன்.

**இலத்தீன் அமெரிக்க நாடுகளில் தோன்றிய கலகக்காரத் திருஅவையோ, அங்கி அணிந்த கலகக்காரர்களோ இந்தியாவில் உருவாகாமைக்குக் காரணம் என்ன?**

இலத்தீன் அமெரிக்க சூழ்நிலையிலிருந்து முற்றிலும் வேறுபட்டது இந்தியச் சூழல். இலத்தீன் அமெரிக்க நாட்டினர் பெரும்பாலோர் கிறிஸ்தவர்கள். அங்கு ஒடுக்குபவர்களும், ஒடுக்கப்படுபவர்களும் கிறிஸ்தவர்கள். அதனால் அங்கு ஒடுக்கப்பட்ட மக்களிடமிருந்து விடுதலை இறையியல் பிறந்தது. உங்களது வார்த்தையில் குறிப்பிட வேண்டும் என்றால் கலகக்கார திருஅவை பிறந்தது. ஆனால் இந்தியாவில் கிறிஸ்தவர்கள் ஐந்து சதவிகிதத்திற்கும் குறைவே. அப்படியிருக்க இங்கிருந்து ஆளும் கட்சிக்கு எதிராகக் கலகக்கார திருஅவை எப்படி பிறக்க முடியும்?

மேலும், இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு. மதச்சார்பின்மை என்பது அரசு எந்த மதத்தையும் சார்ந்தது அல்ல என்பது ஐரோப்பிய அமெரிக்க நாட்டினரது புரிதல். ஆனால் இந்தியாவில் மதச்சார்பின்மை என்பது அரசு எல்லா மதங்களையும் சமமாக நடத்த வேண்டும் என்று விளக்கப்படுகிறது. இச்சூழலில் சிறுபான்மையினரான கிறிஸ்தவர்கள் அரசுக்கு எதிராகப் புரட்சி செய்வர் என்பது யதார்த்தம் அல்ல.

ஆனால் கிறிஸ்தவத்தில் குறிப்பாக சேசு சபையில் விடுதலை இறையியலின் தாக்கம் அதிகம் இருக்கிறது என்று சொல்வேன். சேசு சபையிலேயே செபஸ்டியான் காப்பன், சாமுவேல் ராயன் போன்றோர் விடுதலை இறையியல் பற்றி பேசியும் எழுதியும் இருக்கின்றனர். இருவருமே எனது பேராசிரியர்கள். அருட்கடலில் பேராசிரியர் லூர்துசாமி சே.ச. கிறிஸ்தியலை, விடுதலை இறையியலாகத்தான் கற்றுக்கொடுத்தார். அவரின் தாக்கம் என்னில் அதிகம்.

80களில் சென்னை-மயிலை மறைமாவட்டத்தில் ஓங்கூரில் நான் பணியாற்றியபோது ஜார்ஜ் ஜோசப், மார்ட்டின் என்ற இரு பணியாளர்களின் உதவியுடன் 1986இல் தலித் கிறிஸ்தவ இயக்கத்தை உருவாக்கினேன். கிறிஸ்தவத்தில் சமத்துவத்தையும் அரசு தலித் கிறிஸ்தவர்களை எஸ்.சி. பட்டியலில் சேர்க்கவேண்டும் என்ற இரட்டை நோக்கத்துடன் உருவாக்கினோம். தலித் கிறிஸ்தவர்களே தலைமைப் பொறுப்பு ஏற்று நடத்தினர். இயக்கத்தை சேசு சபையினர் ஆதரித்தனர். 1989இல் பணியாளர் அந்தோனிராஜ் சே.ச. தமிழகத் தலித் கிறிஸ்தவர்களை ஒருங்கிணைத்து தலித் கிறிஸ்தவ விடுதலை இயக்கத்தை உருவாக்கினார். தமிழகத்தில் தலித் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப (சுமார் 70 சதவிகிதம்) கிறிஸ்தவ நிறுவனங்களில் பணி நியமனத்திலும், மாணவர் சேர்க்கையிலும் இடஒதுக்கீடு வழங்கப்படவேண்டும் என்று பல போராட்டங்களை நடத்தினார். அதனால் தமிழகத் திருஅவை தலித் கிறிஸ்தவர்களின் நலனுக்காகப் பத்து அம்சத் திட்டங்களை 1990இல் அறிவித்தது. ஆனால் இத்திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை. இவை நிறைவேற்றப்படவேண்டும் என்று பல போராட்டங்களை தலித் கிறிஸ்தவ விடுதலை இயக்கத்தினர் அந்தோனிராஜ் தலைமையில் நடத்தினர். சேசு சபையினரது நிறுவனங்களிலும் பணி நியமனத்திலும், மாணவர் சேர்க்கையிலும் இடஒதுக்கீடு வழங்கப் போராடினார். 50 சதவிகிதம் உடனடியாக அளிப்பதாகவும் 70 சதவிகிதம் இலக்கு என்றும் சேசு சபையினர் வாக்களித்தனர். அது இன்றும் நிறைவேற்றப்படுகிறது.

ஆனால் தமிழகத் திருஅவையின் ஆயர்களால் இந்தப் போராட்டங்களை ஏற்க முடியவில்லை. அந்தோனிராஜ் தலித் கிறிஸ்தவ விடுதலை இயக்கத்தின் தலைவராக இருப்பதால்தான் இப்பிரச்சினை வருகிறது என்ற புரிதல் ஆயர்களுக்கு இருந்ததால் அவர் தலைவராக இருக்கக்கூடாது என்று ரோமில் உள்ள சேசு சபைத் தலைவருக்கு எழுதினர். அந்தோனிராஜ் இயக்கத்தின் தலைவராக நீடிக்க தமிழக சேசு சபைத் தலைவர் ஆதரவு அளித்தார். இருப்பினும்; ரோம் அந்தோனிராஜ் தலைவராக இருக்கக்கூடாது என்று முடிவெடுத்தது. அந்தோனிராஜ் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகினார். ஆனால் பொது நிலையினரின் தலைமையில் த.கி.வி.இ. இன்றும் செயல்படுகிறது.

திருஅவைக்கு வெளியேயும் நீதிக்காக சேசு சபையினர் போராடுகின்றனர். அதற்கு உதாரணமாக ஸ்டான் சாமியைச் சொல்லலாம். இவர் மலைவாழ் மக்களது உரிமைக்காக மதம் கடந்து மிகத் தீவிரமாக

அதேசமயம் சட்டத்திற்கு உட்பட்டுச் செயல்பட்டார். தீவிரவாதிகளுடன் தொடர்பு இருக்கிறது என்று அவருக்கு எதிராகப் போலியான ஆவணங்களை உருவாக்கி அவரைச் சிறையில் அடைத்தது தற்போதைய ஒன்றிய அரசு. 84 வயதில் நரம்பு நோயால் பாதிக்கப்பட்டிருந்த அவருக்குத் தண்ணீர் குடிக்க உதவும் உறிஞ்சு குழாய்கூட கொடுக்காமல் சிறையிலேயே கொன்றது ஒன்றிய அரசு.

**சாதிய மேலாண்மை, தீண்டாமை என்பனவற்றை உங்கள் நாவல்கள் வெளிச்சம் போட்டுக்காட்டுவதும் இவற்றிற்கு எதிரான எதிர்க்குரலையும் உரக்கவே ஒலிக்கின்றன. இதற்கு உங்கள் துறவற அவையும் சராசரிக் கத்தோலிக்கர்களும் ஆற்றிய எதிர்வினை எவ்வாறு இருந்தது?**

தீண்டாமைக்குத் திருஅவையில் இடமே இல்லை என்பதுதான் கொள்கை. 1990இல் தமிழகத் திருஅவையின் ஆயர்களும் துறவு சபைத் தலைவர்களும் பத்து அம்சத்திட்டங்களை அறிவித்தனர். 20ஆம் நூற்றாண்டின் இறுதிப் பத்தாண்டுகளை ஷெட்யூல்டு வகுப்பினரின் ஆண்டுகள் என அறிவித்தனர். திருஅவையில் தீண்டாமையை-ஜாதி-சமூக வேறுபாடுகளை உடனடியாக ஒழிக்கப்பட்டு கத்தோலிக்கத் திருஅவையில் நீதி, அன்பு, சகோதரத்துவம், சமத்துவம், மனிதாபிமானம் ஆகியவை நிலவ அனைத்துத் தரப்பு மக்களும் உழைக்க அன்புடன் கோரிக்கை விடுத்தனர்.

இருப்பினும் பெரும்பாலான ஆயர்களும், துறவு சபையினரும் பத்து அம்சத் திட்டங்களை நிறைவேற்றவில்லை. ஆதிக்கச் சாதிக் கிறிஸ்தவர்களும் பத்து அம்சத் திட்டங்களுக்கு ஆதரவு அளிக்கவில்லை. இந்த உண்மை நிகழ்வுகளைத்தான் எனது நாவல்களில் பதிவு செய்தேன். எனவே எனது நிலைப்பாடு கிறிஸ்தவத்திற்கு எதிரானது, திருஅவைக்கு எதிரானது என யாரும் தீர்ப்பிடமுடியாது. இருப்பினும் எதிர்ப்புகள் ஆங்காங்கே இருக்கத்தான் செய்தன. ஒரு சமாதானக் கூட்டத்திற்குச் சென்றபோது வெளியே வா, உன்னைக் கொல்லாமல் விடமாட்டோம் என்று ஆதிக்கச் சாதிக் கிறிஸ்தவர்கள் கொதித்தெழுந்ததையும், சில இடங்களில் தாக்க முயன்ற சம்பவங்களும் நடந்துள்ளன. இவற்றைப் பெரிதாக நினைக்கவில்லை.

எனது படைப்புகளை வெளியிடுவதில் சேசு சபைக்குள்ளும் சில பிரச்சினைகள் எழுந்தன. ஆன்மீக நூல்களைத்தான் வெளியிடுவோம் என்பதே காரணம். எனது நாவல்கள் ஆன்மீகமில்லை என்று கருதியிருக்கலாம். அதனால் தலித்துகளின் பிரச்சினைகளை மையமாக வைத்து எழுதியவைகளை வெளியிட மதுரை ஐடியாசில் ஒரு பதிப்பகத்தை உருவாக்கினேன். அதில் எனது படைப்புகள் சிலவற்றை வெளியிட்டேன். அதையும் கடந்து பொதுவெளியில் பல பதிப்பகங்களோடு தொடர்பு கொண்டு வெளியிடும் வாய்ப்பும் உருவானது.

நான் தூத்துக்குடி மறைமாவட்டத்தில் கோட்டூரில் பணியாற்றியபோது அருகில் உள்ள சங்கரலிங்கபுரத்தில் ஊராட்சித் தலைவர் தேர்தலில் பொதுத்தொகுதியில் தலித் போட்டியிட்டதால் பிரச்சினை உருவானது. காவலர்கள் ஆதிக்கச் சாதியினருடன் கைகோர்த்துத் தலித்துகள்மீது பொய் வழக்குகளைப் பதிவு செய்தனர். இதை எதிர்த்து தலித்துகள் சாலை மறியல் செய்ததால் அவர்களைக் காவலர்கள் கண்மூடித்தனமாகத் தாக்கினர். அதோடு சங்கரலிங்கபுரம் தலித் பகுதிக்குள் நுழைந்து வீடுகளையும் பொருள்களையும் முற்றிலும் அழித்தபோது ஆண்-பெண் என்று பாராமல் கண்ணில் பட்ட தலித்துகளைக் கைதுசெய்து கொடுமையாகத் தாக்கி எலும்புகளையும் உடைத்தனர். அதோடு மிகக் கேவலமான பாலியல் வசவுகளால் தலித்துகளின் மனதில் ஆழமான காயங்களையும் ஏற்படுத்தினர். நீதிக்கான பொது விசாரணையில் காவலர்களின் பாலியல் வசவுகளை தலித் ஆண்களும் பெண்களும் அப்படியே கூறினர். அவற்றைப் பதிவு செய்து நடந்த நிகழ்வுகளை 'மறியல்' என்ற நாவலில் பதிவுசெய்தேன். சபையின் அனுமதியோடுதான் வெளியிட முடியும்.

பிரதியை வாசித்தபின் பாலியல் வசவுகளை எப்படி நீங்கள் எழுதலாம். அவற்றை எழுதக்கூடாது என்றனர். தாங்கள் எப்படிப் பாதிக்கப்பட்டோம் என்பதைக்கூட ஆதிக்க வர்க்கம் தீர்மானிக்கும் மொழியில்தான் எழுதவேண்டுமா? என்ற கேள்வியை எழுப்பிய நான் எதையும் மாற்ற முடியாது என்பதில் உறுதியாயிருந்தேன். பல்வேறு உரையாடல்களுக்குப் பின் வெளியிட அனுமதி அளித்தபின் சபை இதை வெளியிடாது என்றும், பிற வெளியீடுகளில் வெளியிட்டாலும் சேசு சபை (சே.ச.) என்ற அடையாளத்தோடு வெளியிடக்கூடாது என்றனர். நானும் ஏற்றுக்கொண்டேன். எனது படைப்புகளை அதுவரை மாற்கு சே.ச. (சேசு சபை) என்ற அடையாளத்தோடுதான் வெளியிட்டேன். கலகம் பதிப்பகத்தில் மறியல் நாவலை வெளியிட்டபோது மாற்கு என்று மட்டும் குறிப்பிட்டேன். அதன் பிறகு நான் எழுதியவற்றை மாற்கு என்ற அடையாளத்தோடு மட்டுமே வெளியிடுகிறேன். சே.ச. என்ற அடையாளத்தை எடுத்துவிட்டு பொதுநிலையினருடன் நான் இணைந்துகொண்டேன். இதை நினைத்து நான் பெருமைப்படுகிறேன்.

மற்றொன்றையும் குறிப்பிடவேண்டும். 'உண்மையா... அது என்ன?' என்ற நாவலை எழுதினேன். அப்பொழுது சேசு சபைக்குக் களங்கம் ஏற்படும் மிகப் பெரிய நிகழ்வு நடந்தது. அதுவே

தமிழகத்தின் பேசு பொருளாகத் திகழ்ந்தது. இப் பிரச்சினையை மையப்படுத்தித்தான் நாவல் எழுதப்பட்டுள்ளது என்ற வதந்தி சபையில் பரவியது. நான் அப்பிரச்சினை பற்றி எழுதவில்லை. ஆனால் அப்பிரச்சினையை சேசு சபையினர், பிற துறவு சபையினர், கிறிஸ்தவர்கள் எப்படி சாதியக் கண்ணோட்டத்தில் பார்த்தனர் என்பதை எழுதியிருந்தேன். சபையில் சாதி இருக்கிறது... இதுதான் உண்மை என்ற யதார்த்தத்தை எழுதியிருந்தேன். மாநிலத் தலைவர் என்னை அழைத்து புத்தகத்தை வெளியிடக்கூடாது என்றார். புத்தகம் ஏற்கனவே அச்சாகியிருந்தது. நான் அவரிடம் புத்தகத்தின் பிரதியை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒரு குழுவை அமைத்து அவர்களிடம் புத்தகத்தைக் கொடுங்கள்... அவர்களது ஆலோசனைக்குப் பின் முடிவெடுங்கள் என்றேன். யாருமே வாசிக்காமல் முடிவெடுப்பது ஏற்புடையதல்ல என்றேன். முதலில் நீங்கள் நான் சொல்வதற்குக் கீழ்படியுங்கள். உங்கள் கருத்தைப் பிறகு ஆராயலாம் என்றார். நானும் வெளியிடவில்லை. குழு இன்றுவரை அமைக்கப்படவில்லை. நாவல் வெளிவரவில்லையே என்ற வடு இன்றும் என்னிடம் இருக்கிறது.

**உங்கள் நாவல்கள் சிலவற்றில் (யாத்திரை, முன்னத்தி) கனவுகள் இடம் பெற்றுள்ளன. இது கனவுகள் தொடர்பான உங்களது நம்பிக்கையின் வெளிப்பாடா, அல்லது ஓர் இலக்கிய உத்தியாக மட்டும் இதைக் கொள்ளலாமா?**

கனவுகளை நான் நம்புவதில்லை. ஆனால் எனது பல நாவல்களில் கனவை ஓர் இலக்கிய உத்தியாகப் பயன்படுத்தியுள்ளேன். அதற்குக் கிறிஸ்தவப் பின்னணி உண்டு. விவிலியத்தின் பழைய ஏற்பாட்டின் தொடக்க நூலில் எகிப்தின் மன்னன் பார்வோன் ஒரு கனவு காண்பார். அதில் நைல் நதிக்கரையில் நின்றுகொண்டிருக்கும் அவர் நதியிலிருந்து கொழுத்த ஏழு பசுக்கள் வெளிவந்து செழுமையான கோரைப்புற்களை மேய்வதைக் காண்பார். தொடர்ந்து எலும்பும் தோலுமாக வேறு ஏழு பசுக்கள் நைல் நதியிலிருந்து வெளிவரும். அவை கொழுத்த ஏழு பசுக்களையும் விழுங்கிய பின்னும் எலும்பும் தோலுமாக இருப்பதைக் காண்பார். இக்கனவிற்கு விளக்கம் கொடுக்க ஞானிகளின் உதவியை நாடுவார். அவர்களால் விளக்கம் கொடுக்க இயலாது. சிறையிலிருக்கும் யோசேப்பு கனவுகளுக்கு விளக்கம் கொடுப்பார் என்று கேள்விப்பட்டு அவரிடம் விளக்கம் கேட்பார் மன்னர். யோசேப்பும் விளக்கம் கொடுப்பார். ஏழு நல்ல பசுக்கள் ஏழு செழுமையான ஆண்டுகளைக் குறிக்கும்... ஏழு மெலிந்த பசுக்கள் பஞ்சம் நிறைந்த ஏழு ஆண்டுகளைக் குறிக்கும்... நாட்டின் செழுமை அனைத்தையும் பஞ்சம் அழித்துவிடும் என்று கனவுக்கு விளக்கம் அளித்ததோடு அதிலிருந்து விடுபட செழுமையான காலத்து விளைச்சலை அதிக அளவு களஞ்சியத்தில் சேர்த்து பஞ்ச காலத்தில் அதை மக்களுக்கு விநியோகிக்கலாம் என்ற தீர்வையும் கூறுவார்.

அதுபோல புதிய ஏற்பாட்டில் மரியாளின் கணவர் யோசேப்புக்கு இறைவன் கனவு வழியாகவே சிலவற்றை உணர்த்துகிறார்.

இதைப்போன்ற கனவுகளைத்தான் நான் எனது இலக்கியங்களில் உருவாக்குகிறேன். உதாரணத்திற்கு முன்னத்தி நாவலைக் குறிப்பிடலாம். 18, 19ஆம் நூற்றாண்டுகளில் கணவனை இழந்த பெண்கள் ‘சதி’ என்று உயிரோடு எரித்துக் கொல்லப்படுவதையும் அல்லது விதவைக் கோலத்தில் அவர்கள் படும் அவலங்களையும் பணியாளர் திரிங்கால் 1844இல் அறிகிறார். இதற்கு விதவைகளின் மறுமணமே தீர்வு என்று உணர்கிறார். இருப்பினும் முடிவெடுக்க முடியாமல் திணறுகிறார். அப்போது அவரது கனவில் மஞ்சள் கழுத்துப் பறவை எரித்துக் கொல்லப்படுவதைக் காண்கிறார். அக்கனவு அவருக்கு ஒரு தெளிவைக் கொடுக்கிறது. துணிந்து ஒரு விதவைக்கு மறுமணம் செய்துவைக்கிறார். அதன்பின்பே தமிழகத் திருஅவை கிறிஸ்தவ விதவைகளின் பிரச்சினைகளைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பிக்கிறது. இதைப் போன்று எனது படைப்புகளில் பல கனவுகளை நான் குறிப்பிடுகிறேன். வாசித்தோர் கனவுகளை ரசித்ததாகப் பாராட்டியுள்ளனர்.

மீள்வெளி நாவலில் அருள்வாக்குக் கூறுவதுபோன்று கனவின் வழியாக நற்செய்திக்கு புது விளக்கம் அளிக்கும் பகுதியும் உண்டு.

**உயர்நிலைப்பள்ளியில் உங்களது வகுப்புத் தோழராக படைப்பிலக்கியவாதி பாமாவின் அண்ணனும் தமிழ்நாட்டின் குறிப்பிடத்தக்க ஆய்வாளரும் எழுத்தாளருமான பேராசிரியர் ராஜ் கௌதமன் இருந்துள்ளார். நண்பர்கள் என்ற முறையில் உங்கள் இருவருக்குமான உறவு குறித்துக் கூறுங்களேன்.**

ராஜ்கௌதமனின் கிறிஸ்தவப் பெயர் புஷ்பராஜ். நாங்கள் இருவரும் ஒரே ஊர். ஒரே பள்ளியில் படித்தவர்கள். நண்பர்கள். நான் சேசு சபையில் சேரும் முடிவை இவரிடம் கூறியபோது சேரவேண்டாம் என்று தனது ஆலோசனையை வழங்கியவர். அதற்கான காரணங்களையும் விளக்கியவர். இருப்பினும் நான் சபையில் சேர்ந்தேன். அதன் பின்பும் எங்கள் நட்பு கடிதங்கள் வழியாகத் தொடர்ந்தது. ஊரில் மற்ற நண்பர்களுடன் இணைந்து இலக்கிய வெளிவட்டம் என்ற சிறுபத்திரிகையை நடத்தினார். அதன் பிரதிகளைத் தவறாமல் எனக்கு அனுப்பினார். தனது பெயர் ராஜ்கௌதமன் என்று மாற்றியதையும் குறிப்பிட்டார். பல சமயங்களில் காரைக்கால் மற்றும் பாண்டிச்சேரிக்குச் சென்று அவரின் இல்லத்தில் தங்கியதுண்டு. அப்பொழுதெல்லாம் அவர் தனது

கருத்துக்களை திறந்த மனதோடு என்னிடம் பகிர்வார். இவரது சிந்தனையைக் கண்டு நான் வியப்பதுண்டு. இவரது உடன் பிறந்தவர்கள் மற்றும் இவரது குடும்பத்தினர் அனைவரையும் நான் நன்கு அறிவேன்.

எனது குருத்துவத்திற்குப் பின்பு எங்களது உறவு அதிகரித்தது. நான் பணிசெய்த ஓங்கூருக்குக் குடும்பத்துடன் வந்துள்ளார். எனது பணிகளைக் கேட்டு அவற்றிற்கு முழு ஆதரவு அளித்தார். நான் ஐடியாஸ் மையத்தில் சேசு சபையின் சமூகப் பணிகளின் ஒருங்கிணைப்பாளராக இருந்தபோது 1991இல் தலித் எழுத்தாளர்களை உருவாக்க ஒரு பயிற்சி முகாமிற்கு ஏற்பாடு செய்தேன். அதை முழுமையாக ஆதரித்த ராஜ்கௌதமன் தலித் இலக்கியம் எப்படி இருக்கவேண்டும் என்று ஒரு கட்டுரையையும் எழுதிக்கொடுத்தார். அதுவே ஐடியாசின் முதல் வெளியீடானது. பயிற்சி முகாமிற்குத் தன்னால் வர இயலாது என்று சொன்னாலும் எழுத்தாளர் பிரபஞ்சன், மற்றும் ரவிக்குமார் (தற்போது விழுப்புரம் மாநிலங்களவை உறுப்பினர்) ஆகியோரை நிகழ்ச்சியில் கலந்துகொள்ள ஏற்பாடு செய்தார். பயிற்சி சிறப்பாக நடைபெற்றது.

எனது நண்பர் என்றாலும் எனது படைப்புகள் பற்றி தனது விமர்சனத்தைத் சொல்லத் தயங்கியதில்லை. அவருக்கு யாத்திரை நாவலின் பிரதியைக் கொடுத்து அவரது கருத்தைக் கேட்டேன். வெகுவாகப் பாராட்டியதுடன் அதற்கு முன்னுரையும் எழுதிக்கொடுத்தார். அதுபோல எனது மானிடஇயல் நூலான ‘அருந்ததியர்: வாழும் வரலாறு’ அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. இதிலுள்ள ஐந்து தலைப்பிற்கும் ஐந்து முனைவர் பட்டங்களைப் பல்கலைக்கழகங்கள் உங்களுக்கு வழங்கலாம் என்றார்.

அவரின் மகள் கௌரியின் இறப்பு அவரை வெகுவாகப் பாதித்தது. அதன்பின்பு இவர் அதிகமாக எழுத ஆரம்பித்தார். பல படைப்புகள் அவரிடமிருந்து வெளிவந்தன. ‘சிலுவைராஜ் சரித்திரம்’ என்ற தலைப்பில் தனது சுயவரலாற்றை எழுதியபோது அதில் என்னைப் பற்றிய அத்தியாயத்தின் பிரதியைக் கொடுத்து எனது கருத்தைக் கேட்டார். நான் சுருக்கமாக என்னைப் பற்றிய உங்கள் கருத்து என்றேன்.

சங்க இலக்கியங்களை தலித் பார்வையில் விமர்சித்து எழுதிய அவரது நூல்கள் யாரும் செய்யாத, செய்ய இயலாத, செய்ய முடியாத மிகப் பெரிய முயற்சி. ஆனால் அதற்கேற்ற அங்கீகாரத்தை அரசு அவருக்கு வழங்கவில்லை. சாகித்திய அகாதமி விருதுக்கு அவரின் பெயர் பரிந்துரைக்கப்பட்டும் ஏனோ கிடைக்கவில்லை. தமிழக அரசின் விருதும் கிடைக்கவில்லை. ஆனால் தனிப்பட்ட அமைப்புகளான விளக்கு விருது, பா.ரஞ்சித்தின் நீலம் அமைப்பின் வேர்ச்சொல் விருது, எழுத்தாளர் ஜெயமோகனின் விஷ்ணுபுரம் விருது, விடுதலைச் சிறுத்தைகளின் அயோத்திதாசர் விருது அவருக்குக் கிடைத்துள்ளன. அவருக்கு அரசு அங்கீகாரம் கிடைக்கவில்லை என்று நான் கவலைப்பட்டாலும் அவர் அரசின் அங்கீகாரத்திற்கும் மேற்பட்டவர். அவருக்கு அரசின் அங்கீகாரம் கிடைத்தால் விருதுக்குத்தான் பெருமையே தவிர அவர் விருதுக்கும் மேற்பட்டவர் என்பது எனது தனிப்பட்ட கருத்து.

**பாமாவின் முதல் நூலான ‘கருக்கு’ நாவலை எழுதும்படி நீங்கள்தான் தூண்டியுள்ளீர்கள். இது குறித்து கூற முடியுமா?**

விரிவாகவே கூறுகிறேன். பாமாவின் இயற்பெயர் பாஸ்டினா. நாங்கள் ஒரே கிராமத்தைச் சார்ந்தவர்கள். நான் ஆசிரியராகப் பணியாற்றியபோது பாமா எனக்கு மாணவி. அவர்தான் வகுப்பில் புத்திக் கூர்மையுள்ள மாணவி என்பது எனது கணிப்பு. அதற்கு அவர் வகுப்பில் எழுப்பிய கேள்விகளே காரணம். அதன்பின் நான் சேசு சபையில் சேர்ந்து துறவியானேன். பாமாவுடன் எனக்கு எந்தத் தொடர்பும் இல்லை. ராஜ்கௌதமனுடன் நான் தொடர்ந்து நட்புடன் இருந்தேன். ராஜ்கௌதமனின் தங்கை தான் பாமா.

1984இல் உத்திரமேரூக்கு அருகில் உள்ள ஓங்கூர் பணித்தளத்தில் பொறுப்பேற்றேன். நண்பன் ராஜ்கௌதமன் எனக்கு எழுதிய கடிதத்தில் பாமா துறவியாக விரும்புவதாகவும் அவருக்கு வழிகாட்டும்படியும் கேட்டிருந்தார். நான் சம்மதித்தேன். ஒருநாள் பாமா என்னைப் பார்க்க ஓங்கூர் வந்தார். ஆறு ஆண்டுகள் அனுபவங்கள் உள்ள பட்டதாரி ஆசிரியை அவர் என்று எனக்குத் தெரியும். தனது வாழ்க்கையைச் சுருக்கமாகப் பகிர்ந்த அவர் தான் துறவியாகி ஏழை மாணவ மாணவிகளுக்கு உழைக்க விரும்புவதாகக் கூறினார்.

தலித் கிறிஸ்தவப் பெண் துறவிகளின் நிலையை எடுத்துக்கூறி துறவியாகும் எண்ணத்தைக் கைவிடுமாறு கோரினேன். திருமணம் முடிக்க விரும்பவில்லை என்றால் திருமணம் செய்யாமலே ஏழை மாணவ மாணவிகளுக்கு உதவலாமே என்றேன். ஆனால் அவர் தான் துறவியாவதில் உறுதியாக இருந்தார். எந்தச் சூழ்நிலையையும் தன்னால் எதிர்கொண்டு தனது இலட்சியப்படி துறவியாக வாழமுடியும் என்ற தைரியமும், தெளிவும் இருப்பதாகத் தயமின்றி கூறினார். வியந்த நான் அவருக்கு உதவ வாக்களித்தேன். அவர் விரும்பிய சபையில் சேர உதவியதோடு நானே அவரை துறவு மடத்துக்கு அழைத்துச் சென்றேன்.



ஆரம்பப் பயிற்சிக்குப் பின் துறவியான அவருக்குப் பணக்காரப் பிள்ளைகள் படிக்கும் பள்ளியில் ஆசிரியையாகப் பணிபுரிய சபை அவரைப் பணித்தது. தான் விரும்பியபடி ஏழை மாணவ மாணவிகளுக்கு உதவ முடியவில்லையே என்ற ஏக்கம் அவருக்கு இருந்தது. அங்கு துறவிகளிடையே சாதியப் பாகுபாடு இருப்பதைக் கண்டு வேதனைப்பட்டார்.

இச்சூழலில் நான் பணிமாற்றம் பெற்று மதுரை ஐடியாஸ் மையத்தில் சேசு சபையின் சமூகப் பணிகளின் ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றினேன். பாமாவை காஷ்மீரின் ஜம்முவில் உள்ள ஒரு பள்ளிக்கு பணிமாற்றம் செய்தது சபை. ஜம்முவிலிருந்து பாமா பல பக்கங்கள் கொண்ட கடிதங்களை எனக்கு அடிக்கடி ஆங்கிலம், தமிழ், பேச்சு வழக்குத் தமிழ் ஆகிய மூன்று வடிவங்களிலும் எழுதுவதுண்டு. ஒவ்வொரு கடிதமும் இலக்கியமாக மிளிர்ந்ததை உணர்ந்தேன். ஜம்முவின் அழகு, மக்களின் கலாச்சாரம், மாணவர்களின் இயல்புகள், அங்குள்ள சூழ்நிலை, பணிசெய்யும் ஆசிரியர்களின் மனநிலை, சகோதரிகளின் குணங்கள் என்று அவர் கவனித்தவற்றைச் சுவைபட வர்ணித்து எழுதினார். அவருக்குள் ஓர் இலக்கியவாதி மறைந்திருப்பதை உணர்ந்தேன். கடிதங்களை ஆவணப்படுத்தி அவற்றை வெளியிட்டிருந்தால் இன்று அவை வித்தியாசமான பேரிலக்கியமாகப் போற்றப்பட்டிருக்கும்.

அக்காலத்தில் *(1991)* அலைபேசி கிடையாது. எப்போதாவது பாமாவுடன் தொலைபேசியில் பேசுவதுண்டு. ஒருநாள் மடத்தின் சூழ்நிலையை விளக்கிய பாமா, தன்னால் இனிமேலும் இத்தகைய துறவு வாழ்வைத் தொடர முடியாது என்றும் தான் சபையிலிருந்து விலகப்போவதாகவும் கூறினார். ஒருகாலத்தில் சபையில் சேர வேண்டாம் என்று கூறிய நான், அதற்கு மாறுபட்ட நிலைப்பாடு எடுத்தேன். எந்தச் சூழ்நிலையிலும் சபையிலிருந்து விலகக்கூடாது என்றும், சபையும் ஏழைகள் சார்பாக நிலைப்பாடு எடுத்து மாறும் சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்றும், அங்கு எதுவும் அநீதி நடப்பதாக உணர்ந்தால் துணிந்து இலட்சியத்திற்காகப் போராடத் தயங்கக் கூடாது என்றும் அறிவுரை கூறினேன். ஆனால், அவரோ தன் வாழ்வை மடத்தில் வீணாக்க விரும்பவில்லை என்றார். பிறகொருமுறை தொலைபேசியில் தொடர்புகொண்ட பாமா "நான் சபையிலிருந்து விலகுவது உறுதி. யாருக்கும் தெரியாமல் ஜம்முவிலிருந்து திருச்சிக்குச் செல்லும் ரயிலில் முன்பதிவு செய்துவிட்டேன். திருச்சி வந்து என்னை அழைத்துச் செல்லுங்கள். நான் வீட்டிற்குச் செல்ல விரும்பவில்லை. ஐடியாஸ் மையத்தில் சிறிது காலம் ஏதாவது வேலை செய்ய ஏற்பாடு செய்யுங்கள். மடத்திலிருந்து வெளியேறும் முடிவை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது என்றார். அவரது முடிவு அதிர்ச்சியளித்தது. கட்டாயம் திருச்சிக்கு வருவதாக உறுதியளித்து அதனை நிறைவேற்றினேன்.

மதுரை ஐடியாஸ் மையத்தில் தற்காலிகமாக ஒருசில மாதங்கள் பாமா பணிபுரியவும், அரசரடி இறையியல் கல்லூரியிலுள்ள பெண்கள் விடுதியில் தங்கவும் ஏற்பாடு செய்தேன். ஐடியாசில் பணியாற்றியபோது பாமா என்னிடம் துறவு வாழ்வு தன்னைச் சிதைத்துவிட்டது எனவும், சுதந்திரப் பறவையான தனது சிறகுகளை ஒடித்துவிட்டது எனவும், தற்போது தரையில் வீழ்ந்து நடக்கக்கூடச் சக்தியற்றவளாகத் திகழ்வதாகவும் வேதனையுடன் கூறினார்.

அவருக்கு ஆறுதல் கூறிய அதேவேளையில் அவரை ஒரு படைப்பாளியாக்க முடிவுசெய்தேன். அவரது வாழ்க்கை அனுபவங்களை எழுதும்படிக் கூறினேன். தன்னை ஆற்றுப்படுத்தவே எழுதச்சொல்வதாக பாமா நினைத்திருக்கிறார். அவரிடம் புதைந்திருந்த படைப்பாற்றல் இலக்கியமாக முளையிட்டது. தினமும் எழுதியவற்றை என்னிடம் கொடுப்பார். அவற்றை வாசித்த பின் பத்திரப்படுத்தினேன். ஒன்பது பகுதிகளாக அவர் வாழ்ந்த தலித் கிறிஸ்தவர்களின் வாழ்வையும், அவர்களது கலாச்சாரத்தையும், நம்பிக்கைகளையும், கலகலப்பான வாழ்க்கை முறைகளையும் மிக அழகாகப் பதிவு செய்திருந்தார். நான் படித்து வியந்தேன். இன்னும் சற்று வித்தியாசமாக எழுதினால் மிகச் சிறப்பாக இருக்குமே! அது என்ன என்று தோண்டியபோது அவரது கடிதங்களில் சில தலித் மக்களது மொழியில் எழுதியிருந்ததை

உணர்ந்தேன். அவ்வாறே எழுதும்படிக் கூறினேன். தன்னால் அந்த வடிவில் சிறப்பாக எழுத முடியும் என்ற அவர், அனைத்தையும் தலித் மொழியில் எழுதிக் கொடுத்தார்.

முழுமையாக வாசித்த எனக்கு அது மிகச் சிறந்த இலக்கியப் படைப்பாகத் தோன்றியது. எனவே பாமாவிடம் இதைப் புத்தகமாக வெளியிடப்போகிறேன் என்றேன். அவர் அதிர்ச்சியடைந்தார். "என்னை ஆற்றுப்படுத்தவே எழுதச் சொன்னதாக நினைத்தேன். இதை வெளியிட எனக்குச் சற்றும் விருப்பமில்லை" என்று கோபப்பட்டார். பிரதியை என்னிடமிருந்து பறித்துக் கிழித்துப்போட விரும்பினார். நான் அவரிடம் "இது அம்பேத்கரின் நூற்றாண்டு விழா. தலித் படைப்புகள் வெளிவர ஏற்ற காலம். இது மிகச் சிறந்த வித்தியாசமான படைப்பு. நிச்சயம் மக்களிடையே இப்படைப்பு ஓர் எழுச்சியை ஏற்படுத்தும்" என்றேன். பலமுறை பேசியபின் அவர் சம்மதித்தார். நூலுக்கு 'கருக்கு' என்று பெயரிட்டார். புனைப் பெயரில் வெளிடலாம் என்றேன். அப்படி அவர் தேர்வுசெய்த பெயர்தான் பாமா.

ஏதோவொரு உள்ளுணர்வில் ஐடியாசில் வெளியிட்டேன். முதல் பிரதியை பாமாவிடம் கொடுத்தேன். நீர் நிறைந்த விழிகளுடன் பெற்றுக்கொண்டார். வெளியீட்டு விழா எதுவும் நடத்தவில்லை. கருக்கு நாவல் மிகப்பெரிய வரவேற்பை பெற்றது.

ஒருமுறை பாமாவை சொந்த ஊருக்கு அழைத்த ஊர்க்காரர்கள், பேருந்து நிலையத்திலிருந்த அம்பேத்கர் சிலைக்கு அவரை மாலையிடச் செய்தனர். பின் தாரை தப்பட்டை முழங்க ஊர்வலமாகத் தங்களது தெருவுக்கு அழைத்துச் சென்றனர். ஒவ்வொரு வீட்டின் முன்பும் ஆரத்தி எடுத்து அவரை கௌரவப்படுத்தினர். பொதுக்கூட்டம் நடத்தி கருக்கின் சிறப்பைப் பற்றிப் பேசினர். பிறந்த ஊரில் பாமாவுக்குக் கிடைத்த மிகப் பெரிய அங்கீகாரம் அது. இதுபோன்ற வரவேற்பு மற்ற எழுத்தாளர்களுக்குக் கிடைத்திருக்குமா? தெரியவில்லை.

தலித் கிறிஸ்தவப் பெண்கள் பற்றி ஒரு புத்தகம் எழுதினால் அவர்களது நிலை சமூகத்திற்கு தெரியவரும் என்று பாமாவிடம் கூறினேன். விரைவாக 'சங்கதி' என்ற பெயரில் எழுதினார். ஐடியாசில் வெளியிட்டேன். சங்கதியும் அதிகமாகப் பாராட்டப்பட்டதால் அதன் இரண்டாம் பதிப்பையும் வெளியிட்டேன்.

சில பிரபலமான பத்திரிகைகள் அவரிடம் சிறுகதைகள் எழுதித் தரும்படி கேட்டன. அவையும் நல்ல வரவேற்பைப் பெற்றன. அவற்றைத் தொகுத்து 'கிசும்புக்காரன்' என்ற தலைப்பில் ஐடியாசிலிருந்து வெளியிட்டேன். பாமாவின் பேட்டிகளையும் சில பத்திரிகைகள் வெளியிட்டன. அவர் தமிழகம் அறிந்த படைப்பாளியானார். இவரது கருக்கு நாவலும், சில சிறுகதைகளும் பல இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டன. இவர் நாடறிந்த படைப்பாளியானார்.

மேக்மில்லன் நிறுவனம் 'கருக்கு' நூலினை லட்சுமி ஹோம்ஸ்ராங் என்பவரைக் கொண்டு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து 'கருக்கு' என்ற பெயரிலேயே வெளியிட்டது. அதற்கு ஏற்பாடு செய்தவர் திருமதி மினி கிருஷ்ணன். கிராஸ்வேர்ட் நிறுவனம் சிறந்த ஆங்கில மொழிபெயர்ப்புக்கான விருதை 2000ஆம் ஆண்டில் கருக்குக்கு வழங்கியது. பாமாவுக்கு 1.5 இலட்சம் ரூபாய் பரிசை அறிவித்தது. டில்லியில் நடந்த பரிசளிப்பு விழாவிற்கு பாமாவுடன் நானும் சென்றேன். அதன்பின் கருக்கு நாவல் உட்பட அவரது படைப்புகள் அனைத்தையும் ஆக்ஸ்போர்ட் வெளியிட்டது. இதற்கு ஏற்பாடு செய்ததும் மினி கிருஷ்ணன்தான். கருக்கு உட்பட பாமாவின் அனைத்துப் படைப்புகளும் உலக அளவில் பெரும் வரவேற்பைப் பெற்றன. பாமா உலகம் அறிந்த படைப்பாளியானார்.

கருக்கு நாவலுக்கு வெளியீட்டு விழா நடத்தாத வேதனை இருந்தது. அதனை ஈடுசெய்யும் விதமாக 2017இல் கருக்கின் வெள்ளிவிழாவை மூன்று இடங்களில் (அவர் பணிசெய்த ஓங்கூரின் குப்பையநல்லூர் பள்ளி, பிறந்த ஊராகிய புதுப்பட்டியின் சிறுமலை, சென்னை லொயோலாக் கல்லூரியில்) கொண்டாட ஏற்பாடு செய்தேன். சென்னை லொயோலாக் கல்லூரியில் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. திருமதி மினி கிருஷ்ணன், எழுத்தாளர் பிரபஞ்சன், இயக்குநர் பா.ரஞ்சித் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றியது மறக்க முடியாத அனுபவமாகத் திகழ்ந்தது.

**தமிழ்நாட்டில் பணியாற்றிய ஐரோப்பிய சேசுசபைக் குருக்களில் புனித சவேரியார், ஜான் டி பிரிட்டோ, டி நோபிலி, வீரமாமுனிவர் ஆகியோர் தமிழ்நாட்டில் அறிமுகமான அளவுக்குக் கௌசானல், டிரிங்கால் என்ற பிரான்ஸ் நாட்டுத் துறவியர் இருவரும் அறிமுகம் ஆகவில்லையே. இதற்கான காரணம் என்ன?**

பிரான்சிஸ் சேவியர் என்ற சவேரியார் சேசு சபையை உருவாக்கிய இஞ்ஞாசியாரோடு இருந்தவர். சேசு சபை உருவான காலத்திலேயே 1542இல் இந்தியா வந்து தமிழகக் கடலோரப் பகுதியில் பரதவர் மற்றும் முக்குவர்களை மனம் மாற்றினார். இவரைப் புனிதராகத் திருஅவை அங்கீகரித்ததால் இவர் மிகவும் பிரபலமானார். அதுபோல ஜான் டி பிரிட்டோவும் ஒரு புனிதர். இவர் பண்டார சந்நியாசியாக தன்னை அறிவித்துக்கொண்டு

பிற்படுத்தப்பட்ட மக்களிடம் கிறிஸ்தவத்தைப் பரப்பினார். குறுநில மன்னர்கள் வாழ்ந்த காலத்தில் பணிசெய்தவர். மக்களின் கலாச்சாரத்தை நன்கு புரிந்துகொண்டு அதற்கு ஏற்றபடி பணி செய்தவர். பிற்படுத்தப்பட்ட மக்களை மனந்திருப்பினார். அதோடு வடதமிழகமான உத்திரமேரூர், செஞ்சி போன்ற பகுதிகளில் பணியாற்றியபோது யாருக்கும் தெரியாமல் தலித் மக்களிடம் சென்று கிறிஸ்தவத்தைப் பரப்பினார். இவரும் குறுநில மன்னரால் ஓரியூரில் கொல்லப்பட்டு புனிதர் ஆனார். எனவே புனிதர் என்ற முறையில் இவரும் தமிழகத்தில் பிரபலமானார்.

ஆனால் ராபர்ட் டி நோபிலி என்ற தத்துவ போதகர் தமிழர்களின் கலாச்சாரத்தை நன்கு அறிந்தவர். தமிழையும் நன்கு கற்றார். கலாச்சாரத்திற்கு ஏற்ப வித்தியாசமான அணுகுமுறையைக் கடைப்பிடித்தார். பிராமண சந்நியாசி, பண்டார சந்நியாசி என்ற அமைப்பைத் தொடங்கினார். தமிழை நன்கு கற்றதால் தமிழில் பல நூல்களை எழுதினார். இவரது வித்தியாசமான அணுகுமுறையினாலும், தமிழ் அறிவினாலும் தமிழகத்தில் பிரபலமானார்.

இதுபோல கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி என்ற வீரமாமுனிவரும் தமிழ் கலாச்சாரத்தையும் தமிழையும் நன்கு கற்றார். அதனால் தான் பணிசெய்த இடங்களில் அன்னை மரியாளுக்கு வெவ்வேறு பெயரிட்டு தமிழக மரபுக்கு ஏற்பச் செயல்பட்டார். கோணான்குப்பத்தில் அன்னைக்குப் பெரிய நாயகி அம்மாள் என்று பெயரிட்டார். ஏலாக்குறிச்சியில் அன்னைக்கு அடைக்கல நாயகி என்று பெயரிட்டார். தமிழை நன்கு கற்றதால் தேம்பாவணி உட்பட பல படைப்புகளை உருவாக்கினார். உரைநடையாக 'பரமார்த்தகுரு கதை'யையும் எழுதினார். திருக்குறளின் முதல் இரண்டு பாகங்களை லத்தீனில் மொழிபெயர்த்தார். இவர்கள் நால்வருமே சேசு சபையின் பழைய பணித்தளத்தைச் சார்ந்தவர்கள். அப்போது சேசு சபையினரிடம் எந்த நிறுவனங்களும் இல்லை. பங்குப் பணியாளர்களாக மட்டுமே இருந்தனர். மக்களோடு நேரடி தொடர்பு இருந்தது.

1773இல் சேசு சபை உலகம் முழுவதும் தடைசெய்யப்பட்டது. தமிழகத்திலும் தடைசெய்யப்பட்டது. 1814இல் தடை நீக்கப்பட்டது, 1837இல் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த நான்கு சேசு சபைக் குருக்கள் தமிழகத்திற்கு வந்தனர். இவர்கள் வந்தபோது தமிழகச் சூழல் முற்றிலும் மாறியிருந்தது. இங்கிலாந்து, பிரான்ஸ், போர்ச்சுக்கல், டச்சு போன்ற ஐரோப்பியர்களின் காலனி ஆதிக்கம் இந்தியாவிலும், தமிழகத்திலும் பரவியிருந்தது. எனவே பிரான்ஸ் நாட்டிலிருந்து வந்த சேசு சபையினர் இவர்களோடு எளிதில் உறவு வைத்துக்கொண்டனர். கல்லூரி போன்ற உயர் கல்வி நிறுவனங்களை ஆரம்பித்தனர். பொருளாதார உதவியும் பிரான்சிலிருந்து கிடைத்தது. விளைவு மக்களோடு நெருங்கிய உறவு இல்லாமலும், தமிழைக் கற்காமலும் பணிசெய்யும் சூழல் உருவானது. தமிழே தெரியாமல் தங்களது வாழ்நாள் முழுதும் பலர் தமிழ்நாட்டில் பணி செய்தனர். சமூகத்தில் உயர்ந்த நிலையில் இருந்தவர்களுக்கு உதவும் போக்கு உருவானது. அடித்தட்டு மக்களிடமிருந்து அந்நியப்பட்டவர்களாக வாழ ஆரம்பித்தனர்.

ஆனால் இதற்கு முற்றிலும் மாறாக ஜான் பேப்டிஸ்ட் திரிங்காலும், கௌசானலும் பணிபுரிந்தனர். இவர்கள் அடித்தட்டு மக்களது பிரச்சினையில் தங்களைக் கரைத்துக்கொண்டனர். தற்போதைய விருதுநகர் மாவட்டத்தில் தனியொருவனாக தலித்துகள் சார்பாக நிலைப்பாடு எடுத்து திரிங்கால் பணிபுரிந்தார். அக்காலத்தில் ஜமீன்தார்கள், பண்ணையார்கள் பிரிட்டிஷ் அரசுக்கு வரி செலுத்திவிட்டு தங்கள் நிலங்களில் வேலைசெய்த தலித்துகளை கொத்தடிமைகளாக நடத்தினர். இப்பகுதியிலிருந்த சுமார் 15 ஜமீன்தார்களை திரிங்கால் துணிவுடன் எதிர்த்தார். ஜமீன்தார்களுக்கு எதிராகப் பல வழக்குகளைத் தொடுத்தார். இவரது போராட்டத்திற்கு சபையில் பெரிய அளவில் வரவேற்பு இல்லை. வழக்குக்காக பணத்தை வீணாகச் செலவு செய்கின்றார் என்ற குற்றச்சாட்டு இவர்மேல் இருந்தது. திரிங்கால் தமிழை நன்கு கற்று புதிய ஏற்பாட்டைத் தமிழில் மொழிபெயர்த்ததோடு பல புத்தகங்களையும் தமிழில் எழுதினார். இவரைத் தொடர்ந்து வந்த கௌசானலும் திரிங்காலின் வழியைப் பின்பற்றினார். தீண்டாமையால் பாதிக்கப்பட்ட கழுகுமலை, வடக்கன்குளம் போன்ற இடங்களில் பாதிக்கப்பட்ட அடித்தட்டு மக்கள் சார்பாக துணிவுடன் நிலைப்பாடு எடுத்து சமத்துவத்தை நிலைநாட்டினார்.

இவர்களது பங்களிப்பானது நிறுவனங்களிலேயே மூழ்கிப்போன சேசு சபையினரிடம் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. இவர்கள் அடித்தட்டு மக்களுக்காக உழைத்ததால் இவர்களது பணியை சேசு சபையினர் அங்கீகரிக்கவில்லையோ என்ற ஐயம் எழுகிறது.

நிறுவனப் பார்வையிலிருந்து அடித்தட்டு மக்களின் பார்வைக்கு சேசு சபை வரவேண்டும் என்பது எனது தனிப்பட்ட விருப்பம்.

**இன்றைய இந்திய அரசியல் சூழலில் இந்துமத அடிப்படைவாதிகளுடன் கத்தோலிக்க ஆயர்கள், குருக்கள், கத்தோலிக்க அறிவுஜீவிகள் சிலர் இணைந்து நிற்கிறார்களே. இது குறித்து உங்கள் கருத்து என்ன?**

தமிழகத்தைப் பொறுத்த அளவில் பேராயர்கள், ஆயர்கள், குருக்கள், அறிவுஜீவிகள் யாரும் இந்துமத அடிப்படைவாதிகளுடன் இணைந்து

நிற்கவில்லை என்று என்னால் துணிந்து கூறமுடியும். கிறிஸ்தவத்தைப் பற்றிய சில தவறுதலான புரிதல்களே இக்கேள்விக்கான காரணமாகலாம்.

கிறிஸ்தவத்தில் பல்வேறுவிதமான வழிபாட்டு முறைகள் இருக்கின்றன. தமிழகத்தைப்பொறுத்த அளவில் கிறிஸ்தவர்கள் அனைவரும் லத்தீன் வழிபாட்டு முறையைப் பின்பற்றுகின்றனர். ஆனால் கேரளாவில் அப்படி அல்ல. அங்கு கத்தோலிக்கர்களிடம் சீரோ மலபார், சீரோ மலங்கரா, லத்தீன் போன்ற வழிபாட்டு முறைகள் இருக்கின்றன. இவற்றில் சீரோ மலபார் வழிபாட்டு முறைதான் கேரளாவில் அதிகம். நமது புரிதலுக்காக இரண்டையும் இணைத்து சிரியன் வழிபாட்டு முறை என்று கூறலாம். கேரளாவில் கடலோரம் வாழும் மீனவ கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களும், தலித் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களும் லத்தீன் வழிபாட்டு முறையைப் பின்பற்றுகின்றனர். (இவர்களில் சிலர் சிரியன் வழிபாட்டு முறையிலும் இருக்கின்றனர்.) பெரும்பாலும் இவர்களைச் சிரியன் கிறிஸ்தவர்கள் சமமாக மதிப்பதில்லை. தாழ்ந்தவர்களாகக் கருதுகின்றனர்.

உயர் வகுப்பைச் சார்ந்த சிரியன் கிறிஸ்தவர்கள் சிலர் ரப்பர் தோட்டங்களை வைத்திருக்கின்றனர். ரப்பர் தோட்டங்களில் போதிய வருமானம் இல்லாததால் பெரும்பாலான இளைய தலைமுறையினர் வெளிநாடுகளுக்குச் சென்று விட்டனர். மூத்தவர்கள்தான் நிலத்தைப் பராமரிக்கின்றனர். சிரியன் கிறிஸ்தவர்களுக்குத் தனியாகப் பேராயர்கள், ஆயர்கள், குருக்கள் இருக்கின்றனர்.

சிரியன் கிறிஸ்தவர்கள் பிஜேபியை ஆதரிப்பதற்கு நான்கு காரணங்களை அவதானிக்கலாம். முதல் காரணமாக சனாதனத்தைச் சொல்லலாம். இவர்களில் சிலர் இன்னும் சனாதனத்தைக் கடைப்பிடிப்பதால் சனாதனத்தைக் கொள்கையாக வைத்திருக்கும் பிஜேபியை ஆதரிக்கின்றனர்.

இரண்டாவது காரணம் பொருளாதாரம். ரப்பரின் விலை குறைந்ததால் தங்களது தோட்டங்களில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கு ஊதியம்கூட கொடுக்கமுடியாத சூழல் சிரியன் கிறிஸ்தவர்களுக்கு ஏற்பட்டது. எனவே சிரியன் பேராயர் ஒருவர் ரப்பர் விலையை எக்கட்சி உயர்த்துகிறதோ அவர்களுக்கே எங்களது ஓட்டு என்று அறிவித்தார். இதற்குச் சிரியன் கிறிஸ்தவர்களிடம் பரவலான வரவேற்பு இருந்தது.

மூன்றாவது காரணம் நிறுவனங்களைப் பாதுகாப்பது. சிரியன் கிறிஸ்தவர்கள் நடத்தும் கல்வி நிறுவனங்களில் பல்வேறுவிதமான சிக்கல்கள், முரண்பாடுகள், ஒழுக்கக்கேடுகள் போன்ற பிரச்சினைகள் வெடித்தன. பிஜேபியை ஆதரிக்கவில்லை என்றால் தங்களது நிறுவனங்களை ஒன்றிய பிஜேபி அரசு திடீரென சோதித்துப் பிரச்சினைகளைப் பெரிதாக்கலாம்... நிறுவனங்களை நடத்த முடியாத சூழ்நிலையை உருவாக்கலாம் என எண்ணினர். இதிலிருந்து தப்பிக்க பிஜேபிக்கு ஆதரவு அளிப்பதே ஒரே வழியாகத் தோன்றியது.

இறுதிக் காரணம் இஸ்லாமியர்கள். இவர்களின் பொருளாதாரமும், எண்ணிக்கையும் அதிகரிக்கும் அதேவேளையில் சிரியன் கிறிஸ்தவர்கள் இவை இரண்டிலும் பின்நோக்கிச் செல்லும் போக்கு இருக்கிறது. மேலும் இஸ்லாம் இளைஞர்கள், சிரியன் பெண்களைக் காதலித்து திருமணம் செய்கின்றனர். இதையும் சிரியன் ஆயர் ஒருவர் கண்டித்து அறிக்கைவிட்டார். பிஜேபியினர் இயல்பாகவே இஸ்லாமியர்களை எதிர்ப்பதால் அவர்களைச் சிரியன் கிறிஸ்தவர்கள் ஆதரிக்கின்றனர் என்றும் சொல்லலாம்.

பல்வேறு காரணங்கள் இருந்தாலும் கேரளாவில் சிரியன் பேராயரின் அறிக்கையும். அதன் அடிப்படையில் சிரியன் கிறிஸ்தவர்கள் இந்துமத அடிப்படைவாதக் கட்சியான பிஜேபிக்கு ஆதரவு அளித்ததையும் நான் ஏற்கவில்லை. இதைக் கண்டிக்கிறேன். இது எனது தனிப்பட்ட கருத்து.

**தங்கள் எதிர்காலத் திட்டமாக என்னென்ன இருக்கின்றன. அறிந்துகொள்ளலாமா?**

தமிழகத் திருஅவை மட்டுமல்லாது இந்தியத் திருஅவையே சாதியத் திருஅவையாகத்தான் இருக்கிறது. இது கிறிஸ்தவத்திற்கு மிகப்பெரிய இழிவு. நான் சார்ந்திருக்கும் சேசு சபையினர் சிலரிடமும் சாதியம் இருப்பது வேதனை அளிக்கிறது. சேசு சபையினரை வழிநடத்துவது சபையை உருவாக்கிய இஞ்ஞாசியாரின் ஆன்மீகமே. அவர் 'ஆன்மீகப் பயிற்சிகள்' என்ற அற்புதமான நூலை எழுதினார். அந்த ஆன்மீகப் பயிற்சிகளை இரண்டு முறை விரிவாகச் செய்தாலும் ஒவ்வொரு ஆண்டும் எட்டு நாள்கள் செய்கிறோம். இருப்பினும் சாதி ஒழியவில்லை. இஞ்ஞாசியாரின் ஆன்மீகம் 500 ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்டது. சமத்துவம் பற்றி அதில் கூறியிருந்தாலும் சாதி ஒழிப்பு பற்றி நேரடியாக எதுவும் அதில் இல்லை. இன்றைய இந்திய, தமிழ்ச் சூழலில் சாதி ஒழிப்பே ஆன்மீகம் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இக் கருத்தின் பின்னணியில் இஞ்ஞாசியாரின் ஆன்மீகத்திற்கு புதிய விளக்கத்தை நாவல் வடிவில் கொடுக்க விரும்புகிறேன். விரைவில் எழுத வேண்டும். எப்போது எழுதுவேன்? தெரியவில்லை. இதுதான் எனது இறுதிப் படைப்பாக இருக்கும்.

●

*முன்னட்டைப் படம்*

நன்றி: 'தமிழ் இலக்கியத்தின் திசை வழி' ஆவணப்படம்

திறனாய்வு

# நினைவுச் சின்னங்கள்

பாவண்ணன்




(தமிழ்த் தொண்டாற்றிய சான்றோர்கள் - வரதராஜன், தாமரை பப்ளிகேஷன்ஸ், அம்பத்தூர், சென்னை- 600098)

தமிழ்த் தொண்டாற்றிய சான்றோர்கள் என்னும் முதன்மைத்தலைப்பும் இலக்கியம், இதழ்கள், பதிப்பகம் என வழங்கப்பட்டிருந்த துணைத்தலைப்பும்தான் இப்புத்தகத்தை உடனடியாக வாசிக்கத் தூண்டின. பொருளடக்கத்தில் முப்பத்தொன்று தமிழ்ச்சான்றோர்களின் பட்டியல் காணப்பட்டது. வீரமாமுனிவர், கால்டுவெல், மீனாட்சி சுந்தரம் பிள்ளை, சோமசுந்தர பாரதியார், தேவநேயப் பாவாணர், புதுமைப்பித்தன், கல்கி போன்றோர் அனைவரும் தெரிந்தவர்களாக இருந்தனர். அப்பட்டியலின் இடையிடையே காணப்பட்ட ஈஸ்வர சந்திர வித்தியாசாகர், பேராசிரியர் பி.என்.சீனிவாசாச்சாரியார், இ.மு.சுப்பிரமணியப்பிள்ளை, மோசூர் கந்தசாமி முதலியார், அரிராம் சேட், அப்பா நா.அருணாசலம், மேகலிங்கம் சுப்பிரமணியன் போன்ற பெயர்கள் அனைத்தும் இதுவரை அறியாத பெயர்களாக இருந்தன. அவர்களைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்னும் ஆர்வத்தாலேயே ஒரே மூச்சில் இப்புத்தகத்தைப் படித்து முடித்தேன்.

கால்டுவெல் அவர்களைப் பற்றிய கட்டுரை அவருடைய மொழியார்வத்தை முன்வைப்பதிலிருந்து தொடங்குகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கப்பகுதியில் சமயப்பணிக்காக இந்தியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்ட கால்டுவெல் அயர்லாந்து நாட்டைச் சேர்ந்தவர். கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே கிரேக்கம், இலத்தீன், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தார். இந்தியாவுக்கு கப்பலில் வரும் வழியில் சமஸ்கிருத மொழியைக் கற்றுக்கொண்டார். சென்னைக்கு வந்து சேர்ந்ததும் தமிழ்ப்புலவராக இருந்த துருவர் என்பவருடைய இல்லத்தில் தங்கி தமிழ் மொழியைக் கற்றுக்கொண்டார்.

அதற்குப் பிறகும் அவருடைய ஆர்வம் ஓயவில்லை. அவர்களின் வாழ்க்கைமுறையை அறிந்துகொள்வதற்காகவே சென்னையிலிருந்து நடைப்பயணமாகவே மாயூரம், தரங்கம்பாடி, கும்பகோணம், தஞ்சாவூர் வரைக்கும் சென்றார். சில நாட்கள் அங்கே தங்கியிருந்துவிட்டு, பிறகு நீலகிரிக்குச் சென்று, அங்கிருந்து கோவை வழியாக மதுரையை அடைந்தார். செல்லும் இடங்களில் பல நேரங்களில் அவருக்கு சரியான தங்குமிடம் அமையவில்லை. சில

சமயங்களில் சத்திரங்களில் இடம் கிடைக்கும். சில சமயங்களில் இடம் கிடைக்காது. அவருக்கு உணவும் இருப்பிடமும் கொடுக்க பொதுமக்களின் மனத்தில் ஒருவித தயக்கமும் இருந்தது. பல நேரங்களில் மாட்டுத்தொழுவங்களில் தங்கி ஓய்வெடுத்துக்கொண்டு பயணத்தைத் தொடர்ந்தார். இறுதியாக இடையன்குடி என்னும் ஊரில் நிலையாகத் தங்கி சமயப்பணியைத் தொடங்கினார். காயல் என்னும் இடத்தில் குடில் அமைத்து தமிழாய்வுகளை மேற்கொண்டார்.

கிறித்துவ வழிபாட்டுக்காக தியான மாலை என்னும் நூலை எழுதினார். பதினோராண்டு கால உழைப்புக்குப் பிறகு, பவர் என்பவருடன் இணைந்து எளிய முறையில் பைபிள் புத்தகத்தை தமிழில் மொழிபெயர்த்தார். அரசின் உதவியோடு அகழ்வாராய்ச்சி செய்து, அந்த இடத்தில்தான் மண்ணுக்கடியில் கொற்கைத்துறைமுகம் புதையுண்டிருப்பதைக் கண்டறிந்து தெரிவித்தார். திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை எழுதினார். ஐம்பதாண்டுகளுக்கும் மேலாக தமிழ்ப்பணி புரிந்த கால்டுவெல் 77 வயது வரைக்கும் தமிழகத்திலேயே வாழ்ந்து கொடைக்கானலில் மறைந்தார்.

என்.சீனிவாசாச்சாரியார் என்னும் அறிஞரின் வாழ்க்கை வரலாறு பல திருப்பங்களைக் கொண்டதாக இருக்கிறது. காஞ்சிபுரத்தைச் சேர்ந்த கடல்மங்கலம் என்னும் கிராமத்தில் அவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் பிறந்தார். வறுமையின் காரணமாக அவருடைய பெற்றோர் மைலாப்பூரில் வசித்துவந்த நரசிம்மாச்சாரியாருக்கு தத்து கொடுத்துவிடுகின்றனர். சென்னை-யிலேயே ஒரு பள்ளியில் மெட்ரிகுலேஷன் படிப்பை முடித்துவிட்டு ஆசிரியர் பணியை மேற்கொள்கிறார் சீனிவாசாச்சாரியார். திருமணமும் செய்துகொண்டு குடும்பவாழ்வில் ஈடுபட்டார். அக்காலத்தில் எழுத்தாளரான ராஜம் ஐயர் அவருடைய நண்பர். விவேகானந்தரின் சொற்பொழிவுகளைக் கேட்டு ஆன்மிகத்தில் நாட்டம் கொண்டு வேலையையும் குடும்பத்தையும் துறந்து திருக்கழுக்குன்றத்தில் துறவியாகத் திரியத் தொடங்கினார் சீனிவாசாச்சாரியார். இதை அறிந்த சுவாமி ராமகிருஷ்ணானந்தா அவரைச் சந்தித்து மீண்டும் இல்லறத்தின்பால் திசைதிருப்பினார். கல்லூரியில் சேர்ந்து தத்துவத்தில் பட்டப்படிப்பை முடித்துவிட்டு, கேரளத்திலும் சென்னையிலும் கல்லூரிப் பேராசிரியராக பணியாற்றினார் சீனிவாசாச்சாரியார்.

பேராசிரியர் பணிக்கு நிகரான சிரத்தையோடு அவர் இன்னொரு பணியிலும் ஈடுபட்டிருந்தார். அதுவே அவரை பிற பேராசிரியர்களிடமிருந்து வேறுபடுத்தி தனித்துவம் கொண்டவராக சமூகத்தின் முன் நிலைநிறுத்தியது. பேராசிரியர் சாதிமத வேறுபாடுகளைப் பெரிதாகக் கருதாதவர் . அவர் வாழ்ந்த மைலாப்பூர் பகுதியில் யாராவது இறந்துவிட்டால், சவ அடக்கத்துக்கு அவர்தான் முதல் ஆளாக நிற்பார். அனாதைப் பிணங்களைத் தோளில் சுமந்துசென்று மயானத்தில் தகனம் செய்வார். தம் வாழ்நாளில் நூற்றுக்கும் மேற்பட்ட அனாதைப் பிணங்களை சீனிவாசாச்சாரியார் தகனம் செய்தார். ஊர் மக்கள் அவருடைய தொண்டுணர்ச்சியைப் பாராட்டி ‘மைலாப்பூர் காந்தி’ என்னும் பட்டப்பெயருடன் அழைக்கத் தொடங்கினர்.

விவேகானந்தரின் தூண்டுதலால் தொடங்கப்பட்ட வேதாந்தகேசரி என்னும் இதழின் ஆசிரியர் பொறுப்பை ஏற்று தத்துவம் சார்ந்த ஏராளமான கட்டுரைகளை எழுதி வெளியிட்டார். மைலாப்பூரிலேயே ஓர் ஆசிரமத்தை நிறுவி, அதையே தன் தங்குமிடமாகவும் நூலகமாகவும் வைத்துக்கொண்டார் பேராசிரியர். ஒருமுறை லேடி சிவசாமி மகளிர் உயர்நிலைப்பள்ளியை விரிவுபடுத்துவதற்காக நிலம் தேவைப்பட்டபோது, பேராசிரியர் தன் ஆசிரமம் அமைந்திருந்த இடத்தை அன்பளிப்பாக வழங்கிவிட்டார். பிறகு தன் நூலகத்தையும் ராமகிருஷ்ண மடத்துக்குக் கொடுத்துவிட்டார். தாம் எழுதி வெளிவந்த புத்தக விற்பனை உரிமையையும் மடத்துக்கே வழங்கிவிட்டார்.

தமிழ்ச் சான்றோர்கள் வரிசையில் எழுத்தாளர் விந்தன் அவர்களுக்கும் இடமளித்திருக்கிறார் நூலாசிரியர். விந்தன் விளம்பரங்களை வெறுத்தவர். கடைசிவரை தனியாக ஒரு புகைப்படம் கூட எடுத்துக்கொள்ளாதவர். எப்போதும் முரட்டுக்கதரணிந்திருப்பவர். புராணத்தத்துவங்கள் அனைத்தும் சரியானவையே என்னும் பார்வையை நிலைநாட்டும் வகையில் இராஜாஜி அவர்கள் பஜகோவிந்தம் என்னும் தலைப்பில் ஒரு புத்தகத்தை எழுதியபோது, படிப்பவர்கள் சிந்திக்கும் வகையில் பசிகோவிந்தம் என்னும் தலைப்பில் வேகவேகமாக எழுதி ஒரு நூலை வெளியிட்டார் விந்தன்.

இளமையில் பள்ளிப்படிப்பை முடிக்கக்கூட வசதியற்ற சூழலின் விளைவாக பகலில் பொற்கொல்லப்பட்டறையில் வேலை செய்தபடி, இரவு நேரங்களில் இலவசப்பள்ளியில் சேர்ந்து கல்வி கற்றார் விந்தன். அவருக்கு ஓவியக்கலையில் ஆழ்ந்த திறமை இருந்தது. அந்தத் திறமை ஜெமினி ஸ்டுடியோவில் விளம்பரப்பிரிவில் ஒரு வேலையை அவருக்குப் பெற்றுத் தந்தது.

பிறகு அச்சகத்தொழிலாளியாக மாறினார் விந்தன். முதலில் தமிழரசு அச்சகத்தில் வேலை செய்தார். பிறகு ஆனந்தபோதினி பத்திரிகைக்கு இடம் மாறினார். அந்த அனுபவத்தோடு ஆனந்தவிகடன் இதழில் வேலைக்குச் சேர்ந்தார். கல்கி இதழ் தொடங்கியபோது, அவ்விதழில் துணையாசிரியராகப் பணிபுரிந்தார் விந்தன்.

விஜி என்னும் புனைபெயரும் கோவிந்தன் என்னும் இயற்பெயரும் கொண்டிருந்த அவருக்கு கல்கி அவர்களே விந்தன் என்னும் பெயரைச் சூட்டினார். பாலும் பாவையும் என்னும் நாவலையும் பல நல்ல சிறுகதைகளையும் எழுதிய விந்தன், பிற்காலத்தில் திரைத்துறைக்குச் சென்று கதைப்பிரிவில் பணிபுரிந்தார். சில படங்களுக்கு வசனமும் பாடல்களும் எழுதினார். தன் சொந்தப் பணத்தை முதலீடாகப் போட்டு மனிதன் என்னும் பத்திரிகையைத் தொடங்கி சிறிது காலம் நடத்தினார். ஏராளமான பொருளிழப்பின் காரணமாக மனமுடைந்திருந்த அவருக்கு சாவி இன்னொரு புதிய வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்து நிலைத்து நிற்க உதவியாக இருந்தார்.

வரதராஜனின் கட்டுரை வரிசையில் உள்ள இன்னொரு முக்கியமான பெயர் வ.ராமசாமி. கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே வந்தே மாதரம் என முழக்கமிட்டதற்காக கல்லூரி முதல்வரால் தண்டிக்கப்பட்டவர் அவர். சிறு வயதிலேயே பழைய நடைமுறை, பழக்க வழக்கங்களை உதறிவிட்டு புதிய பாதையில் நடக்கத் தொடங்கிவிட்டார் வ.ரா. ஒருமுறை அவர் வாழ்ந்த பகுதியில் ஒருவர் இறந்துவிட்டார். அவர் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர். ஆயினும் அவருடைய பிணத்தை பிறருடன் இணைந்து சுடுகாடு வரைக்கும் வ.ரா.வும் சுமந்து சென்றார். பிராமணர்கள் வசிக்கும் தெரு வழியாக அந்த இறுதி ஊர்வலத்தை அவர் வழிநடத்தி வந்தார். அதனால் அக்கிரகாரத்தில் வசிக்கும் பிற பிராமணர்களுக்கும் அவருக்கும் இடையே வாக்குவாதம் நிகழ்ந்தது. வ.ரா. கூறிய நியாயங்கள் எதுவும் அந்த இடத்தில் எடுபடவில்லை. பிற பிராமணர்களால் அவர் உடனடியாக சாதி நீக்கம் செய்யப்பட்டார். பிறரைப்போல சொல் வேறு, செயல் வேறாக இல்லாமல் தான் சொல்வதைத் தானே கடைப்பிடிக்கும் குணம்கொண்ட வ.ரா. சாதியின் அடையாளச்சின்னமாக விளங்கிய பூணூலை அறுத்தெறிந்தார்.

அதன் பிறகு காங்கிரஸ் இயக்கத்தில் ஈடுபட்டு புதுச்சேரிக்குச் சென்றுவிட்டார். தேசபக்தி, பெண் விடுதலை, சமூக சீர்திருத்தம் ஆகிய தளங்களில் அவர் தொடர்ந்து ஈடுபட்டு உழைத்தார். வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகத்தில் ஈடுபட்டதால் ஆறுமாத காலம் சிறைத்தண்டனை அனுபவித்தார். இலங்கையில் வீரகேசரி இதழில் அவர் பணிபுரிந்தபோது, அங்கு சந்திக்க நேர்ந்த ஒரு பஞ்சாபிப் பெண்ணை மணந்துகொண்டார். பாரதியார் பாடல்களை நாட்டுடைமை ஆக்கவேண்டும் என்று குரல் கொடுத்தவர்களில் அவரும் ஒருவர்.

தமிழ்ச் சான்றோர்கள் வரிசையில் இடம் பெற்றிருப்பவர்களில் குறிப்பிடத்தக்க இன்னொரு சாதனையாளர் மேகலிங்கம் சுப்பிரமணியன். அவருடைய சாதனை பதிப்பகத்துறை சார்ந்தது. இளம்பிள்ளைவாத நோயால் இரு கால்களும் செயலிழந்த நிலையிலும் தம் அறிவாலும் உழைப்பாலும் உயர்ந்து, இந்தியாவின் முன்னணிப் பதிப்பகங்களில் ஒன்றான நியூ செஞ்சுரி புக் ஹவுஸில் செயலாளராகப் பணியாற்றினார். அவர் பள்ளியில் படிக்கத் தொடங்கிய காலத்தில் அவருடைய வீட்டிலிருந்து பள்ளி வரைக்கும் அவரை முதுகில் சுமந்து சென்ற நண்பர்களின் உதவியால்தான் அவர் தன் பள்ளிப்படிப்பை முடித்தார். அவருடைய அன்புக்கும் பேச்சுத்திறமைக்கும் மாணவர்களிடமிருந்து கிடைத்த வெகுமதி அது.


தூத்துக்குடி வ.உ.சி.கல்லூரியில் வணிகவியல் படிப்பை முடித்த நிலையில் அவருக்கு சென்னையில் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தில் 120 ரூபாய் சம்பளத்தில் எழுத்தராகப் பணிபுரியும் வாய்ப்பு கிடைத்தது. தன் உழைப்பு, நேர்மை, திறமை ஆகியவற்றின் காரணமாக பதவிநிலையில் மெல்ல மெல்ல உயர்ந்து பொதுமேலாளரானார். பணிமாற்றலின் காரணமாக உத்தரப்பிரதேசத்திலும் சில ஆண்டுகள் பணிபுரிந்தார். புத்தக விற்பனை சார்ந்த ஒரு பயிற்சிக்காக ரஷ்யாவுக்கும் சென்று திரும்பினார். உடற்குறையை ஒரு பொருட்டாக நினைக்காமல் உழைப்புக்கு முக்கியத்துவம் அளித்து ஒரு முன்னோடியாக வாழ்ந்த அவருக்கு இந்திய அரசு மிகச்சிறந்த பணியாளர் என்னும் விருதை அளித்து கௌரவித்தது. கடைசிவரைக்கும் தன் ஊதியத்தில் ஒரு பகுதியை உடற்குறையுற்றோர் கல்வி மையங்களுக்கு அன்பளிப்பாக அளிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

வரதராஜனின் கட்டுரைகள் சுருக்கமானவை என்றபோதும் மிக முக்கியமானவை. ஒருவகையில் அச்சான்றோர்களுக்கு அவர் எழுப்பிய நினைவுச்சின்னங்கள் என்றும் சொல்லலாம். இச்சான்றோர்களைப் பற்றி மேலும் அறிந்துகொள்ள விழைபவர்கள், மேலதிகமான தகவல்களுக்காக தேடிச் செல்லும் வகையில் ஒரு வழிகாட்டி நூலாகவும் இது அமைந்திருக்கிறது.


●

**கட்டுரையாளர், எழுத்தாளர்**


# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 200/-





₹ 190/-





₹ 120/-




₹ 290/-




₹ 120/-




₹ 280/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎ 044 - 26251968, 26258410, 48601884 www.ncbhpublisher.in | email: info@ncbh.in

கட்டுரை

# சீர்திருத்தச் செம்மல்
# சொ.முருகப்பா



டாக்டர் சு.நரேந்திரன்

**சொ.முருகப்பா (1893 – 1956) தமிழறிஞரும், இதழியலாளரும், பதிப்பாளரும், தமிழிசை இயக்க முன்னோடிகளில் ஒருவராகவும், சொற்பொழிவாளராகவும், எழுத்தாளராகவும், சமூக சீர்திருத்தவாதியாகவும் திகழ்ந்தவர்.**

**வாழ்க்கை**

1893 ஆம் ஆண்டு காரைக்குடியில் சொக்கலிங்கம் செட்டியார் - விசாலாட்சி ஆச்சி ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். தமது தொடக்கக் கல்வியை திண்ணைப் பள்ளி வழியே கற்றார். காரைக்குடியில் உயர்நிலைக் கல்வி பயின்றார். தமிழ் இலக்கண இலக்கியங்களை, மதுரை தமிழ்ச் சங்கத்தில் பட்டம் பெற்ற சிதம்பரம் ஐயரிடம் கற்றுத் தேர்ந்தார். 05.06.1912 இல் காரைக்குடி முத்துப்பட்டினத்தில் அம்மான் மகளாகிய பொற்கொடியாள் ஆச்சியை திருமணம் செய்து கொண்டார். இவர் மலாயாவில் உள்ள ஈப்போ நகரத்தில் 1913 முதல் 1916 வரை தொழில் செய்து வந்தார். அங்கிருந்து ஊர் திரும்பி வந்தபின் தமிழ்க்கடல் ராய சொக்கலிங்கம் உள்ளிட்ட 20 அறிஞர்களைக் கொண்டு 1917 இல் காரைக்குடியில் விவேகானந்தரின் புரட்சிக் கருத்துக்களை பரப்பவும், நாட்டிற்கும் மொழிக்கும் பாடுபட இந்து மதாபிமான சங்கத்தைத் தோற்றுவித்தார். மகாகவி சுப்பிரமணிய பாரதியார் 1919 இல் இச்சங்கத்துக்கு வருகை புரிந்ததுடன் சங்கப் பணிகளைப் பாராட்டி சில வாழ்த்துப் பாக்களை இயற்றியுள்ளார்.

**தன வைசிய ஊழியர் சங்கம்**

இதனைத் தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் கழித்து தனவணிக சமூகத்தின் குறைபாடுகளையும் சமூக முன்னேற்றம் கருதியும் “தன வைசிய ஊழியர் சங்கம்” என்ற ஒரு சங்கத்தைத் தொடங்கினார். மேலும் அதற்கென “தன வைசிய ஊழியன்” என்ற பெயரோடு ஒரு வார இதழையும் ஆரம்பித்தார். இச்சங்கத்தின் சார்பில் தொண்ணூற்றாண்டுக் கூட்டம் எனும் தன வணிக மாநாட்டைக் கோவிலூரில் 1921 இல் கூட்டி பல சீர்திருத்தத் தீர்மானங்களை நிறைவேற்றினார். அவற்றுள் மிக முக்கியமானது பெண்ணுக்கு பணம் வாங்குதல், பெண்ணைப் பெற்றவர் மணம் செய்து கொடுப்பதற்கு 35 ஆயிரம் ரூபாய் வரை பெற்றுக் கொள்ளும் வழக்கம் அன்று இருந்தது; அதனை ஒழிப்பதற்கு தன வைசிய ஊழியர் சங்கம் பெருமுயற்சி எடுத்துக் கொண்டது. ஆனால் தற்பொழுது அம்முறை தலைகீழாக நடைமுறையில் உள்ளது நினைக்கத்தக்கது. ஆனால் இதனைத் தடுக்க முயற்சி எடுக்க ஒரு சொ.மு இல்லை.

**குமரன் இதழ்**

1922 இல் தன வைசிய ஊழியன் பொறுப்பை ராய சொக்கலிங்கத்திடம் கொடுத்துவிட்டு சொ.மு. விலகி காரைக்குடியிலிருந்து ‘குமரன்’ என்ற இதழை 1932 இல் வெளியிட்டார். இதன் இலட்சியம் ஆரம்பத்தில் நாட்டு விடுதலை, அகிம்சா தருமம், கதரியக்கம் என்று இருந்தாலும் பிற்காலத்தில் சமூக சீர்திருத்தத்தை மிகுதியாக வலியுறுத்திக் கட்டுரைகள் வெளிவந்தன. நீதிக்கட்சிக்குச் சார்பாகவும் செய்திகள் வெளியிடப்பட்டது. காங்கிரசிலிருந்து பெரியார் விலகியபின் சுயமரியாதை இயக்கத்தையும் சமூகச் சீர்திருத்தச் சிந்தனைகளையும் தன் இதழின் நோக்கங்களாக இணைத்துக் கொண்டதுடன் நீதிக்கட்சியின் தலைவர் டி.எம்.நாயரின் வாழ்க்கை வரலாற்றையும் தொடராக வெளியிட்டு வந்தது. குமரன், நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம்

நடத்திய மாநாடுகளைப் பற்றிய செய்திகளையும் பார்ப்பனரல்லாத இளைஞர் மாநாடு (1929) செய்திகளையும் வெளியிட்டது.

குமரன் இதழ் பல வகையில் சிறப்பு பெற்றதாகும். தமிழ் பத்திரிகை உலகில் முதன் முதலாக ஆண்டுமலர் வெளியிட்டது 'குமரன் இதழ்' என்று அறிஞர் சோமலெ குறிப்பிடுகிறார். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் முதற் கவிதை இவ்விதழில் இடம் பெற்றது. இது போல இலங்கை விபுலானந்தரின் கட்டுரைகளை வெளியிட்டு அவரைத் தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்தினார். மறுமலர்ச்சி எழுத்தாளர்களான வ.ரா, ஊழியனிலும், பி.ஸ்ரீ குமரனிலும் பணியாற்றினார்கள்; புதுமைப்பித்தன் போன்றோர் இவ்விரு இதழ்களிலும் பணியாற்றி உள்ளார்கள்.

**கிராப்பு வைத்துக்கொள்ள போராட்டம்**

செட்டி நாட்டில் முருகப்பா நடத்திய போராட்டங்களில் மிக முக்கியமானது, கிராப்பு வைத்துக் கொள்ள வேண்டும் என்று நடத்திய போராட்டம். இதற்காக ஒன்றரை ஆண்டுகள் போராட்டம் நடத்தினார் செட்டியார். மக்கள் தலையை முழுக்க மழித்துக் கொள்வது அக்கால வழக்கம். அவ்வழக்கத்திற்கு மாறாக முருகப்பாவும் கானாடுகாத்தான் சண்முகனாரும் துணிந்து கிராப்பு வைத்துக் கொண்டார்கள். அந்நாளில் இராமசுப்பிரமணியம் (நீலாவதி அம்மையாரின் கணவர்) மறைந்த கவிஞர் பேராசிரியர் க.தேசிகனார் போன்றோர் கிராப் வைத்ததன் காரணமாக வீட்டிற்குள்ளே அனுமதிக்கப்படாமல் ஒன்றரை மாதம் திண்ணையிலே இருக்கும்படி ஆனது.

**விதவா விவாகம்**

கணவனை இழந்த காரணத்திற்காக விதவை பெயர் கொடுத்து ஒதுக்கி வைக்கும் தவறான முறையை சொ.முருகப்பா கடுமையாக எதிர்த்து வந்தார். இதன் காரணமாக விதவைகள் மறுமணம் செய்து கொள்வதை அவர் ஆதரித்து தீவிரமாக பிரச்சாரம் செய்து வந்ததோடு தன் கருத்துக்களை எழுதியும் வந்தார். 1929 இல் செங்கல்பட்டு முதல் சுயமரியாதை மாநாட்டை அடுத்து பட்டுக்கோட்டையில் நடந்த சுயமரியாதைத் தொண்டர்கள் மாநாட்டைத் திறந்து வைத்து சொற்பொழிவு ஆற்றும்போது மாதர் மறுமணத்தை வெகுவாக வற்புறுத்திப் பேசினார். இதனை கேட்ட கைம்பெண்ணாயிருந்த மரகதவள்ளி என்ற பெண் தம்மை வாழ்க்கைத் துணைவியாக ஒப்புக் கொள்வதாக இருந்தால் இவரைத் திருமணம் செய்ய விரும்புவதாகத் தெரிவித்தார். ஏற்கனவே சொ.மு. மணமானவர் ஆதலின் இதற்கு பெரியார் ஈ.வெ.ரா. இசைவளிக்கவில்லை. கி.ஆ.பெ விசுவநாதம் தலையிட்டு பெண்ணும் பிள்ளையும் விரும்பும்போது நாம் ஏன் தடையாய் இருக்க வேண்டும் என்று பெரியாரை இணங்கவைத்து திருமணத்தை முடித்து வைத்தார். இத்திருமணம் பற்றி பெரியார் ஈ.வெ.ரா. 7-7-1929 குடியரசு இதழில் துணைத் தலையங்கம் எழுதி சொ.மு.வை பாராட்டி "இச்செயல் பெருத்த தியாகபுத்தியும் வீரமான காரியமும்" என்று எழுதினார். 29.06.1929 அன்று திருப்பரங்குன்றத்தில் தந்தை பெரியாரின் தலைமையில் இவர்களது வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது.

இதனால் சொ.மு இந்து மதாபிமான சங்கத்தை தோற்றுவித்திருந்தாலும் மத மூடநம்பிக்கைக்கு மாபெரும் வேட்டுவைத்து மறுமணம், கலப்பு மணம் - காதல் மணம் - சடங்கொழித்து மணம், சிக்கன மணம் என்ற அய்வகைத் தன்மை கொண்ட திருமணத்தை தமிழ் நாட்டிலேயே முதன் முறையாக நிறைவேற்றிய பெருமையை ஈட்டிக் கொண்டார். ஆரம்பத்தில் காங்கிரஸ் இயக்கத்தோடு இணைந்து செயல்பட்டார். சொ.முருகப்பா பின்னர் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டார் அவ்வியக்கத்தை பரப்புரை செய்யும் பொருட்டு குமரன் இதழ் வெளியிடுவதை நிறுத்திவிட்டு திருச்சியிலிருந்து 1932 இல் சண்டமாருதம் என்ற இதழ் தொடங்கப்பட்டது. சொ.மு அதன் நிர்வாக ஆசிரியராக இருந்து செயல்பட்டார். இதனைத் தொடர்ந்து மாதர் மறுமண சகாய சங்கத்தைத் தொடங்கினார். இச் சங்கம் கைம்பெண் மணம் செய்ய முன் வருவோருக்கு உதவிகள் செய்ததுடன், கைம்பெண் மணத்தை ஆதரித்துப் பல நூல்களையும், பிரசுரங்களையும் வெளியிட்டது. இச்சங்கத்தின் சார்பில் "மாதர் மறுமணம்" என்ற மாத இதழ் ஆரம்பிக்கப்பட்டது இவ்விதழின் ஆசிரியர் மு.மரகதவள்ளி, மாதர் மறுமணம் என்பதை மையப் பேசுபொருளாகக் கொண்ட இவ்விதழ் கைம்பெண்களின் மறுமணத்தை ஆதரித்துத் தமிழில் வெளியான முதல் மற்றும் ஒரே இதழ், கைம்பெண் திருமணத்தை ஆதரிக்கும், ஆசிர்வதிக்கும் காந்தியின் படமே இதழின் முகப்புப்படமாக இடம் பெற்றது. ஒரு கைம்பெண் மண்டியிட்டு காந்தியை வணங்க, காந்தி அவளை ஆசிர்வதிப்பது போன்ற ஓவியம் ஒவ்வொரு இதழின் முகப்பு அட்டையிலும் இடம் பெற்றது.

இவ்விதழைக் குறித்து அம்பை குறிப்பிடுகையில் 1936இல் ஆரம்பிக்கப்பட்ட மாதர் மறுமணம் பெண்கள் பிரச்சினை சம்பந்தப்பட்ட பத்திரிகை என்றாலும் அது பெண்களுக்கான பத்திரிகை மட்டுமல்ல, அது ஒரு இயக்கத்தின் குரலாக விழிப்புணர்வூட்டும் கருவியாக உருவான பத்திரிகை. மாதர் மறுமணம் என்ற அச்சு இயக்கத்தின் நோக்கம் பெண்ணுக்கு ஆண்துணை, ஆண் பாதுகாப்பு என்ற அன்றாடத் தேவைகளின் அடிப்படையில் அமைந்திருந்தாலும் தொடர்ந்து நம்பிக்கையுடனும் உறுதியுடனும் செயலாற்றி,

அச்சு மூலம் சேதிகளைத் தொடர்ந்து பரப்பி, அறைகூவல் விடுத்து விடாப்பிடியாக இயங்கி அது வெற்றி பெறுகிறது, 1937 இல் நடந்த முதல் விதவை மறுமணம் அதன் வெற்றி எனலாம். அதைத் தொடர்ந்து பல திருமணச் செய்திகள் வருகின்றன. ஒரு இயக்கத்தின் நோக்கம் அச்சு ஊடகத்தின் எல்லாவித உபயோகங்களையும் பயன்படுத்தி, வெளிப்பட்டு, இத்தகைய வெற்றிகளை ஈட்டித் தந்தது மாதர் பத்திரிகையின் நோக்கத்தின் ஈடேறல் என்று உறுதியாகக் கூறலாம்'' என மதிப்பிடுகிறார்.

மாதர் மறுமணம் இதழின் நோக்கம் விதவைகளின் கண்ணீர் துடைக்கப்பட வேண்டும் என்பது. விதவை மணமே விடுதலை அளிக்கும் என்று அச்சிட்ட மஞ்சள் வர்ணப் பென்சில் (எழுதுகோல்) தயாரிக்கப்பட்டு இவ்விதழ் விற்பனை செய்தது. ''கணவனிழந்து வருந்தும் பெண்ணின் தொகை இந்திய நாட்டில் இரண்டரை கோடிப்பேர் என்று சொன்னால் யாரும் திடுக்கிடாதிருக்க முடியாது, இவர்களின் கண்ணீர் துடைக்கப்பட வேண்டும். ஆனால் பொது ஜன வழக்கமானது இச்செயலை ஒரு விளையாட்டாக மதித்து வருகிறது. இப்படியே இப்பெண்களை வதைத்து வயிறெரிந்து கொண்டிருப்பது மத சமுகக் கடமையென்று கருதுவார் தொகையும் குறைவடையவில்லை. இந்நிலையில் இப்பெண்களின் கூட்டத்திற்கு விடுதலை நல்க வேண்டுமென்பதை அடிப்படையாகக் கொண்டுதான் நமது பத்திரிகை தோன்றியிருக்கின்றது'' என இதழின் நோக்கத்தை ஆசிரியர் மு.மரகதவள்ளி குறிப்பிடுகிறார்.

இவ்விதழில் பாரதிதாசன், அம்மு சுவாமிநாதன், ப.நீலகண்டன், சாமி சிதம்பரனார், ஆ.எஸ். ராஜலெட்சுமி, கமலாதேவி, சுத்தானந்த பாரதி, மாயாண்டி பாரதி, முத்துலெட்சுமி ரெட்டி, எஸ்.சத்தியமூர்த்தி, நீலாவதி ராமசுப்பிரமணியம், வித்வான் அரு.சோமசுந்தரம் செட்டியார் வித்வான் எஸ் உமைதாணுப்பிள்ளை, வி.ஆர் பாமே அவாள் பிள்ளை, தென்னாப்பிரிக்கா டர்பன், ச.முனிசாமிப்பிள்ளை, ச.மு.பார்வதிபிள்ளை போன்றோர் பல சீர்த்திருத்தக் கட்டுரைகளை எழுதினர்.

மாதர் மறுமணம் என்னும் ஒரே கருத்தை வலியுறுத்தி பல்வேறு இலக்கிய வடிவங்களில் இவ்விதழின் கட்டுரைகள் அமைந்தன. மாதர் மறுமணம் பற்றிப் பேசத் தயங்கிய காலகட்டத்தில் இவ்விதழ் தன் ஒவ்வொரு பக்கத்திலும் மாதர் மறுமணம் பற்றிய செய்திகளையும் விதவைத் திருமணத்திற்கு உதவும் மகளிர் இல்லங்கள், நிறுவனங்கள் குறித்தும் குறிப்பிட்டு முழுக்க முழுக்க ஒரு மாதர் மறுமண ஆதரவு இதழாகத் திகழ்ந்தது குறிப்பிடத்தக்கது. சொ.முருகப்பாவும் அவரது மனைவி மு.மரகதவள்ளியும் இணைந்து காரைக்குடியை அடுத்துள்ள அமராவதி புதூரில், மகளிருக்கான இல்லம் ஒன்று நிறுவினர். இளம் கைம்பெண்களுக்கு கல்வி கற்பித்து கைத் தொழில் பயிற்றுவித்து, மறுமணம் செய்து வைப்பது இதன் நோக்கம். இந்த இல்லம் ஏப்ரல் 14, 1938 இல் அப்போதைய கல்வி அமைச்சர் டாக்டர் சுப்பராயனால் திறந்து வைக்கப்பட்டது. ஆகஸ்ட் 30, 1939இல் சொ.முருகப்பா பெயரில், அமராவதி புதூரில் மழலையர் பள்ளி ஒன்று தொடங்கப்பட்டது. இதனை சுவாமி விபுலானந்த அடிகள் திறந்து வைத்தார்.

இதுபோல காரைக்குடியில் ''இராம கிருஷ்ண கலாசாலை'' என்ற அமைப்பை ஏற்படுத்தி அதில் தனது ஆசான் சிதம்பரம் ஐயரையே ஆசிரியராக நியமித்து பலரும் தமிழ் கற்றுக் கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தார் சொ.முருகப்பா.

இது தவிர உயிர்க் கொலைகளைத் தடுப்பதற்கு ஊர் ஊராகச் சென்று சொற்பொழிவாற்றினார். ஆண்டுதோறும் தமிழிசை வளர்ச்சிக்கு முன்னிலைத் தலைவராக வீற்றிருந்து தமிழிசை மூவருள் ஒருவரான முத்துத் தாண்டவர் விழாவைச் சிறப்புற நடத்தி வந்தார்.

பெண் கல்வி வளர்ச்சி, கைத்தொழில், கைம்பெண் மறுமணம் என சமூகம் சார்ந்த பல செயல்பாடுகளில் பல்வேறு எதிர்ப்புகள் வந்த போதும் கூட சொ.முருகப்பா உறுதியாக நின்று உழைத்தார். இவரைப் பற்றி சமூக சேவகி டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி ''சமூக சீர்திருத்த ஊழியத்தில் ஈடுபட்டு உழைத்து வருபவர்களில் ஸ்ரீ மான் முருகப்பா அவர்களும் ஒருவர். இவர் மாதர் மறுமண சகாய சங்கத்தை ஏற்படுத்தி நான்கு வருஷமாக அதன் விருத்திக்காகப் பெரும் பாடுபட்டு வருகிறார், பிரசங்கம் மூலமாகவும் விதவா விவாகத்தைப் பரவச்செய்யப் பிரயத்தனப்படுவதில் அவருக்குச் சமானமாக யாரும் இல்லையென்று சொல்லலாம். தென்னிந்தியாவில், தமிழ் நாட்டில் ஸ்ரீமான் முருகப்பனைப் போல் புருஷர்கள் ஸ்திரீகளுடைய குறைகளை நிவர்த்தி செய்ய முன்வந்திருப்பது நாம் எல்லோரும் மெச்சத் தகுந்தது'' என்று பாராட்டியுள்ளார்.

இது தவிர இவர் சமூக சேவையைப் பாராட்டி ''சீர்திருத்தச் செம்மல்'', செட்டிநாட்டின் ராஜாராம் மோகன்ராய் என்ற பட்டங்களும் அளிக்கப்பட்டன. பல சமூக சீர்திருத்தங்கள் செய்த சொ.முருகப்பா திடீர் உடல் நலக்குறைவு காரணமாக ஜுன் 20, 1956 இல் இயற்கை எய்தினார்.

●

கட்டுரையாளர், எழுத்தாளர், சென்னை டாக்டர்
எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக
சிறப்புநிலைப் பேராசிரியர்.



கட்டுரை

# மக்களாட்சியில் வன்முறை

**க.பழனித்துரை**

இந்திய நாட்டில் உள்ள ஒரு மாநிலத்தில் ஒரு மாவட்டத்தில் மட்டும் 366 கொலைகள் நடந்துள்ளன ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில். அந்தக் கொலைகளில் தொடர்புடைய அல்லது தொடர்புபடுத்தப்பட்ட நபர்கள் 998 பேர் சிறையில் இருக்கின்றனர். ஒரு மாணவரை, மற்ற மாணவர் ஒருவர் அமைப்பு ஒன்றில் உறுப்பினராகச் சேர அழைக்கின்றார். என்னால் முடியாது என்கிறார் அழைக்கப்பட்ட மாணவர். உடனே அந்த மாணவரை கொலை செய்கின்றனர். அந்த மாவட்டத்தில்தான் இந்தியாவிலேயே அதிகமான அரசியல் கொலைகள் நடந்தன. இவையெல்லாம் ரகசிய புள்ளி விபரங்கள் அல்ல. அனைத்தும் செய்தித் தாள்களில் வந்தவைகள்தான். அந்த மாவட்டம் அரசியல் விழிப்புப் பெற்ற மாவட்டம் என்று போற்றப்பட்டதும் உண்டு. அதற்கும் காரணம் ஒன்று உண்டு. அங்குதான் எந்த அரசியல் நிகழ்வுக்கும் அதிக எண்ணிக்கையில் கட்சிக்காரர்களும் பொதுமக்களும் பங்கெடுப்பார்கள் என்ற காரணத்தால். தமிழகத்திலும் அப்படி ஒரு மாவட்டத்தில் 264 கொலைகள் நடந்துள்ளதாகவும் அந்தக் கொலைகள் அரசியல் கொலைகள் அல்ல, சாதிய வன்மத்தால் நடந்துள்ளது என ஒரு அரசியல் கட்சி தெரிவிக்கின்றது. அதையும் மறுக்க இயலாது. மக்களாட்சி நடைபெறும் ஒரு நாட்டில் இந்தச் சம்பவங்களை எப்படி விளக்குவது, எப்படிப் பார்ப்பது என்பதுதான் முக்கியமான கேள்வி.

மக்களாட்சியின் மூலக்கூறுகள் பல. அவற்றின் அடிப்படைகள் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பதுதான். அடிப்படையில் மக்களாட்சி வன்முறையைத் தூண்டும் ஒரு கருவி அல்ல. மாறாக அது சமூகத்தில் அமைதியை பக்குவத்தைக் கொண்டுவரும் கருவி. அப்படி என்றால் நாம் 75 ஆண்டுகளை மக்களாட்சியில் கழித்திருக்கின்றோம். நாம் பக்குவம் பெற்றிருக்க வேண்டும். மேம்பட்டு இருக்க வேண்டும் மனித உறவுகளைப் பேணுவதில். 75 ஆண்டுகால மக்களாட்சியில் மக்கள் பக்குவம் பெற்றார்களா அல்லது பக்குவத்தை இழந்தார்களா என்ற கேள்விக்கு நாம் இன்று பதில் தேட வேண்டிய சூழலுக்குத் தள்ளப்பட்டுள்ளோம். பொதுவாக மக்களாட்சி மானுடத்தின் பிரச்சினைகளுக்கு அமைதி வழியில் தீர்வுகாணும் ஆற்றல் பெற்றது. மக்களாட்சியில் ஆளுகைக்கும் நிர்வாகத்திற்கும் உருவாக்கப்பட்டிருக்கும் அமைப்புக்கள் விவாதத்திற்கான விரிவான இடத்தை உருவாக்கி வைத்திருக்கின்றன. அறிவார்ந்த விவாதத்தை நடத்த நம் சமூகம் தயாராக இருக்கும்போது அங்கு வன்முறைக்கு வாய்ப்பேது. மக்களாட்சியில் நியாயம், நேர்மை, உண்மை என்பதெல்லாம் அடிப்படையாக இருக்கும்போது அங்கு வன்முறைக்கு இடமேது.

இன்று இருக்கும் மக்களாட்சி எண்ணிக்கை அடிப்படையில் அதிகாரத்தைப் பிடிப்பது, அதை தக்க வைக்க அந்த அதிகாரத்தையே பயன்படுத்துவது என்ற நிலையில், நம் மக்களாட்சி தேர்தலை விட்டு சிறிதும் நகரவில்லை. தேர்தலை மையப்படுத்தியதாகவே இந்த மக்களாட்சியை கட்டமைத்து விட்டனர்.

தற்போதைய தேர்தலில் அதிக கலவரங்களைச் சந்தித்த அல்லது கடுமையான அரசியல் வன்முறைகள் நடந்த மாநிலம் ஒன்றில் அதிக சதவிகிதம் வாக்குகள் பதிவாகின. அதிக மக்கள் தேர்தலில் வாக்குச் செலுத்தியுள்ளனர். அது ஒரு உயர்ந்த செயல்தான். அங்கு எப்படி வன்முறை நிகழ முடியும். இந்த அதிகாரம் மையப்படுத்தப்பட்டதால் தான், வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது. தேர்தலைக் கடந்த சமூக ஜனநாயகத்தில் அதற்கு வாய்ப்புக்கள் குறைவு. ஆனால் சமூகம் ஜனநாயகப்படுத்தப்படவில்லை. இதை அரசியல் கட்சிகள் செய்ய வேண்டும். செய்யவில்லை என்பது கசப்பான உண்மை. மேற்கூறியவைகளிலிருந்து இரண்டுவிதமான வன்முறைகளை நாம் பார்த்துள்ளோம். ஒன்று சமூகம் கட்டவிழ்த்துவிடும் வன்முறை. இரண்டு அரசியல் கட்சிகள் நடத்தும் அரசியல் வன்முறை. சமூகத்திலும், அரசியலிலும் வன்முறை என்பது ஒரு கலாச்சாரமாக மாறி-விட்டது. அடுத்து ஒரு வன்முறை நடைபெறுகிறது அதை தற்போது பார்ப்போம்.

கடந்த 30 ஆண்டுகளில் சிறிதும் பெரிதுமாக சுமார் 30,000 போராட்டங்களை குடிமைச் சமூக அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் தொடர்பில்லாமல் இந்தியாவில் நடத்தியுள்ளன. தினசரிப் பத்திரிகைகளில் வந்த செய்தியைத் தொகுத்து ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது ஒரு நிறுவனம். ஒரு அரசியல் கட்சியின் தூண்டுதலின் பேரில் வன்முறை நடைபெற்றால் அதற்கு ஒரு அரசியல் காரணம் அல்லது பின்புலம் இருக்கும். ஆனால் சாதாரண மக்கள் தங்கள் பிரச்சினைகளுக்குப் போராடும்போது அங்கு வன்முறை நிகழ்வதில்லை. அரசியல் கட்சிகள் போராட்டங்களை கைவிட்ட காரணத்தால் மக்களே போராட வந்துவிட்டனர். மக்கள் தங்கள் பிரச்சினைகளுக்குப் போராடும்போது அவர்கள் அமைதி வழியில்தான் போராடுகின்றனர். அந்தப் போராட்டங்களெல்லாம் அரசியல் கட்சிகள் வழிநடத்திய போராட்டங்கள் அல்ல. எனவே மக்கள் போராடும்போது அவர்களுக்குத் தெரியும் அரசாங்கத்தின் அசுர சக்தியை. ஆகையால் அவர்கள் அரசாங்கத்திடம் தங்களின் நியாயத்தை உணர்த்திடத்தான் போராடுகின்றனரே தவிர அரசாங்கத்தை எதிர்க்கவோ பலவீனப்படுத்தவோ அல்ல. ஆனால் அரசாங்க அமைப்புக்கள் அனைத்தும் மக்களின் குறைகளைக் களைவதைவிட மக்களை அடக்குவதுதான் தங்கள் வேலையாகக் கருதி செயல்படுகின்றன.

பொதுமக்களை அரசாங்கத்தை எதிர்க்கும் எதிர்சக்திகளாகவே பார்த்து, பழகிவிட்ட அரசு அதிகாரிகளுக்கு அரசாங்கத்தை வன்முறையில் ஈடுபட வைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்குக் கொண்டு வந்து விடுகின்றனர் நம் அரசாங்க அதிகாரிகளும், காவல்துறையும். சமூகத்தின் நண்பனாக அரசு அதிகாரிகளும் காவல்துறையும் செயல்படும் என்ற உணர்வை மக்களிடம் ஏற்படுத்தி இருந்தால் இவர்களால் போராடும் மக்களிடம் ஒரு விவாதத்தை முன்னெடுத்து பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். அது மட்டுமல்ல அரசாங்கம் குடிமைச் சமூக அமைப்புக்களை மக்களுடன் கலந்துரையாட பயன்படுத்திக் கொள்ளும் ஒரு கலாச்சாரத்தை வளர்த்துக் கொள்ளவில்லை. மாறாக குடிமைச் சமூக அமைப்புக்களையே அரசாங்கத்தின் எதிரிகளாக பாவிக்கும் நிலையில் ஓர் உளவியல் கட்டமைக்கப்பட்டு விட்டது. ஒரு சுதந்திரமான மக்களாட்சி நடைபெறும் நாட்டில் பொதுமக்கள் தங்கள் அரசாங்க அமைப்புக்கள் மேல் நம்பிக்கை இழந்தவர்களாக ஆக்கப்பட்டு விட்டனர். அரசும் சமூகமும் ஒருவரையொருவர் சந்தேகப்படுவதும், நம்பிக்கையற்றுச் செயல்படுவதும் நாட்டில் அரசாங்கத்தையும் சமூகத்தையும் சுரண்டி வாழும் ஒரு கூட்டத்திற்கு மிகவும் ஆதரவுச் சூழலை உருவாக்கியுள்ளது.

சுதந்திரம் அடைந்த நாடு எல்லோருக்குமானது. சுதந்திரத்திற்காக அனைவரும் ஒன்று திரண்டனர். அனைத்துத் தரப்பும் போராடின. ஒன்று திரண்டு போராடி வாங்கிய சுதந்திர நாட்டில் மக்களை அரசியலுக்காக அந்த நாட்டின் மதிப்புமிக்க குடிமகன் என்ற அடையாளத்திலிருந்து சிறிய அடையாளங்களுக்குள் புகுத்தி ஒருவரையொருவர் மோதிக்கொள்ள தயார் செய்து விட்டோம். இதைச் செய்தது நம் அரசியல் கட்சிகள். மக்களின் அறியாமைதான் இந்த அரசியலுக்கு பெரும் மூலதனம். இன்று அரசாங்கமும், அரசியல் கட்சிகளும் பலம் பெற்றதாக மக்களுக்கு காட்டப்படுகின்றன. உண்மையில் மக்கள்தான் மக்களாட்சியில் பலம் பெற்றவர்கள், அதிகாரம் பெற்றவர்கள், இறையாண்மை பெற்றவர்கள். அதிகாரத்தில் யார் அமர்ந்திருந்தாலும் அவர்கள் பெற்ற அதிகாரம் மக்களிடமிருந்து வந்தது. அது மக்களுக்கானது. அந்த அதிகாரம் மக்களுக்காகச் செயல்படாமல் ஒரு சில குறிப்பிட்ட சமூகத்திற்காகவும், கட்சிக்காரர்களுக்காகவும், சந்தைக்காகவும் செயல்பட்டால், அது ஒரு

சுரண்டல்தான், அந்த மக்களாட்சி ஒரு சுரண்டலுக்கான மக்களாட்சி என்றுதான் பொருள் கொள்ள வேண்டும்.

மணிப்பூரில் கலவரம், இரண்டு சமூகங்கள் போரிடுகின்றன. இரண்டு சமூகங்களுக்கும் அரசின் மேல் நம்பிக்கை இல்லை. அரசியல் கட்சிகளின் மேலும் நம்பிக்கை இல்லை. காரணம் இருவரும் போரிடுவதற்குக் காரணமே நம் அரசியல்தானே. இங்கு ஒரு கேள்வி, இந்த இரு சமூகங்களிடமும் அமைதியை ஏற்படுத்த அரசாங்கத்தைத் தவிர வேறு அமைப்புகளே கிடையாதா? பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பணிகள் செய்யக்கூட குடிமைச் சமூக அமைப்புக்களுக்கு தடை போடுகின்றன அரசாங்கம். சமீபத்தில் நடந்த கலவரங்களிலேயே அதிக அளவில் மக்களை புலம் பெயர வைத்த கலவரம் மணிப்பூர் கலவரம் என்பதை பன்னாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இன்றுவரை அந்த இரண்டு சமூகத்தையும் உரையாட வைக்க முடியவில்லை. அந்த அளவுக்கு ஆழமான நச்சுச் சிந்தனையை வளர்த்து வைத்துவிட்டனர் அந்த இரண்டு சமூகங்களுக்கிடையில். இந்த நிகழ்வு மக்களாட்சிக்கு ஒரு அவமானம்.

இந்த நாட்டில் மக்கள் சக்தியை, அகிம்சை வழியில் திரட்டி போராடி சுதந்திரத்தைப் பெற்றனர் நம் தலைவர்கள். பதினான்கு ஆண்டுகள் கால்நடையாக இந்தியா முழுவதும் பயணித்து மக்களின் அன்பைப் பெற்று மக்களிடமிருந்து நிலமில்லா ஏழைகளுக்கு பகிர்ந்து கொடுக்க நிலத்தைப் பெற்றார் வினோபாபாவே. தன் அறவழிச் செயல்பாட்டின் மூலம் கொள்ளைக்காரர்களை மாற்றி சமூகத்தில் இணைத்தார் ஜெயப்பிரகாஷ் நாராயணன். இந்தப் பணிகளையெல்லாம் மக்களின் நம்பிக்கையையும், அன்பையும் பெற்ற மாமனிதர்களால் இது சாத்தியமானது. அரசைவிட நீ பெரிய ஆளா என்று இவர்களிடம் யாரும் கேட்கவில்லை. இவர்கள் செய்த பணிகளை அரசு ஆமோதித்தது. இன்று அரசு அப்படி யாரையும், எந்த அமைப்பையும் பயன்படுத்த முனையவில்லை. அப்படியே சிலர் முயன்றாலும் அவர்களை அரசுக்கு எதிராக செயல்படுபவராக பார்க்கும் சூழலை உருவாக்கி விட்டனர்.

அது மட்டுமல்ல. வன்முறையைப் பார்த்து வாழ, சகித்துக்கொள்ள மக்களைப் பழக்கப்படுத்தி விட்டனர். இதைப்பற்றி விவாதிக்க ஊடகங்கள் தயாரில்லை. இவைபற்றி ஒரு விவாதத்தை முன்னெடுக்க பொதுக் கருத்தாளர்கள் தயாரில்லை என்பதுதான் நாம் பார்க்கும் ஒரு சோகம். அரசியல் கட்சிகளோ மக்களுக்காகப் போராடுவதை நிறுத்தி முப்பது ஆண்டுகளாக ஆகிவிட்டன. இலங்கையில் நடந்த படுகொலை தமிழர்களின் காதுகளுக்கே எட்டவில்லை. இன்றும் இஸ்ரேல் பாலஸ்தீனத்தில் காசாவில் நடக்கும் உயிரிழப்பைப் பற்றி உலகம் கவலைப்படவில்லை. காரணம் இவைகளைப் பற்றி கவலையற்று இருக்க மக்களைத் தயார் செய்து விட்டனர் நம் ஊடகங்களின் மூலம். இன்று மக்களுக்கு சந்தை மயக்க மருந்து கொடுத்துக் கொண்டேயிருக்கிறது. கல்வியில் சமூகம் சார்ந்து சிந்திப்பதை முற்றிலும் அகற்றிவிட்டு பொருள் ஈட்டத் தேவையான அறிவையும் ஆற்றலையும் வளர்த்து சுக வாழ்வுக்கு வழிவகை செய்துள்ளது.

இன்று விவாதிக்கப்படுவது இந்தியா மிகப்பெரிய பொருளாதார வல்லமை பெற்ற நாடு. ஐந்தாவது இடத்திலிருக்கும் பொருளாதாரத்தை மூன்றாவது இடத்திற்குக் கொண்டுவருவது. இந்தியா உலகால் மதிக்கப்படும் நாடு. பணக்காரர்களை எப்படி உருவாக்கியிருக்கிறது என்பதுதான் விவாதப் பொருள். இப்படி வேகமாக பொருளாதாரம் வளர சுரண்டப்படுவது நம் இயற்கை வளங்கள். அதைப் பற்றி எவருக்கும் கவலை இல்லை. வளர்ச்சி என்ற பெயரில் இயற்கையுடன் ஓர் போரை சந்தை செய்கிறது. அதற்கு அரசு வழிவகுக்கிறது. அதைத் தட்டிக்கேட்டால் அவர்கள் வளர்ச்சிக்கு எதிரானவர்கள், அரசுக்கு எதிரானவர்கள் என்று அரசு சித்தரிக்கிறது.

சென்னையைச் சுற்றி கடந்த 20 ஆண்டுகளில் கொலையுண்ட பஞ்சாயத்துத் தலைவர்களின் எண்ணிக்கை 164 என்று ஒரு புள்ளி விபரத்தை அளித்தது ஒரு நிறுவனம். அதனை ஆய்வு செய்யச் சென்றபோது எந்த இடத்திலும் இதன் பின்னணி என்று விபரம் அறிய முடியவில்லை. இந்தப் புள்ளி விபரங்களை முழுமையாக சேகரிக்க முடியாது. அந்தந்த காவல் நிலையங்களில் அல்லது நீதிமன்றத்தில்தான் இவைகள் பற்றிய விபரங்களைச் சேகரிக்க முடியும். இவற்றிற்கான காரணத்தை ஓர் உயர் அதிகாரி கூறும்போது "இதன் பின்னணி மண், தண்ணீர், நிலம், கல் இவைகள்தான் காரணம். இதற்குப்பின் இவைகளின் மாபியாக்கள் இருக்கின்றனர். அதன் பின்னணியில் அரசியல் கட்சிகள் இருக்கின்றன." இவை அனைத்தும் சந்தையால் கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்த சந்தையால்தான் இவர்கள் கொலையுண்டனர், அந்தக் குடும்பங்களே அந்த வழக்குகளை முன்னெடுக்கவில்லை. அரசும் அதில் கவனம் செலுத்தா வண்ணம் ஓர் அரசியல் நம் நாட்டில் கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதை விளக்கினார்.

இன்றைய நிலையில் அரசியலும், அரசாங்கமும் மக்களிடமிருந்து வெகுதூரத்திற்குச் சென்று விட்டன. மக்கள் மேய்க்கப்படுகிறார்கள். அரசாங்கம் மக்களை மிரட்டுகின்றது. அரசாங்கத்திற்கு மக்கள் அஞ்சுகின்றார்கள். மக்களை அரசாங்கம் சுதந்திரமாக வாழ இயலாத சூழலுக்கு கொண்டு வந்து நிறுத்தியுள்ளது. அதே நேரத்தில் மக்களுக்கு சேவை

செய்வதாக மக்கள் நலத் திட்டங்களைத் தருகின்றது அரசாங்கம். காரணம் அவர்கள் வெகுண்டெழாமல் இருப்பதற்காக.

அந்தப் பயன்களையும் தகுதியுள்ளோரால் பெற இயலவில்லை. மாறாக அந்தப் பயன்களை முடிந்தவர்கள் பிடித்துக் கொள்கின்றனர். இன்று பதவிகளும், பயன்களும் ஒரு சில சமூகக் குழுக்களால் பிடித்துக் கொள்ளப்படுகின்றன. இதன் விளைவுதான் அரசின் மீது மக்களுக்கு இருந்த நம்பிக்கை தகர்ந்ததற்கான காரணம். 75 வருடங்களாக தேர்தல்கள் நடக்கின்றன, ஆளுகை, நிர்வாகம் நடைபெறுகின்றன. திட்டங்கள் போடப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன. கொள்கைகள் வகுக்கப்படுகின்றன. நாட்டில் அடிப்படை வசதிகள் மிகப்பெரிய அளவில் உருவாக்கப்பட்டுள்ளன. பொருளாதாரம் உலகம் வியக்கும் வண்ணம் வளர்ந்துள்ளன. விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சி மேற்கத்திய நாட்டுடன் போட்டி போடும் அளவுக்கு மேம்பட்டு விட்டன. ஆனால் இந்த அசுர வளர்ச்சி பெரும்பான்மை மக்களை கைதூக்கி விடவில்லை என்று எண்ணும்போது, நமக்கு ஒரு கேள்வி எழுகின்றது.

இந்த வளர்ச்சி யாருக்கானது? இந்த வளர்ச்சி ஏன் அனைவருக்கும் பங்கிடப்படவில்லை? பங்கீட்டு நீதி (Distributive Justice) ஏன் வழங்க முடியவில்லை? வளர்ச்சியின் பெரும் பகுதியை யார் கொண்டு சென்றது? போன்ற கேள்விகளுக்குப் பொறுப்புள்ளவர்கள் பதில் கூற வேண்டும். நாட்டில் உள்ள 142 கோடி மக்களில் 82 கோடி மக்கள் தங்கள் உணவுப்பாதுகாப்பை அரசாங்கம் தரும் விலை இல்லா உணவு தானியங்களில் வைத்திருக்கும்போது வளர்ச்சியை யாரோ கொண்டு சென்று விட்டார்கள் என்றுதான் நாம் எண்ண வேண்டியுள்ளது. மக்களாட்சியில் சமத்துவம் என்பது அடிப்படைக் கூறு. ஆனால் எல்லை-யில்லா ஏற்றத்தாழ்வு மக்களிடையே வந்துவிட்டது என்பதை அரசே ஏற்றுக்கொள்கிறது. முன்பு சமூக சமத்துவம் இல்லாமல் இருந்தது, தற்போது பொருளாதார சமத்துவமும் எல்லையில்லாத அளவுக்கு இல்லாமல் போய்விட்டது. இந்த இரண்டும் இல்லாமல் அரசியல் சமத்துவத்தால் எதுவும் நடைபெறப்போவது இல்லை.

அதன் விளைவாகத்தான் வாழ்க்கை மேம்பாட்டுக்கான அடிப்படைச் செயல்பாடுகளை அரசாங்கம் உரிமைகளாக்கி மக்களுக்குத் தந்து பொதுமக்கள் அந்த உரிமைகள் கிடைக்கவில்லை என்றால் நீதிமன்றத்தை நாடி பெற்றுக் கொள்ளலாம் என்ற சூழலை உருவாக்கியுள்ளது. எத்தனை ஏழைகள் நீதிமன்றத்தை நாடமுடியும். முடியாது என்பதால்தான் உள்ளாட்சியில் இந்தக் குறைகளைக் களைந்திட ஏழை மக்கள் பங்குபெற புதிய வாய்ப்புகளை கிராமப் பகுதிகளில் கிராமசபை மூலமும் நகர்ப் பகுதிகளில் பகுதி சபை மூலமும் உருவாக்கியுள்ளன நம் மத்திய, மாநில அரசாங்கங்கள். சட்டங்களும், திட்டங்களும் இன்று மக்களுக்கு கிடைத்திருக்கும் வாய்ப்புக்கள். இந்த வாய்ப்புக்களை புறம் தள்ளப்பட்டவர்களும் ஒடுக்கப்பட்டவர்களும், ஒதுக்கப்பட்டவர்களும், விளிம்புநிலை மக்களும் பயன்படுத்தி தங்கள் உரிமைகளை மீட்டெடுக்கத் தயாராக வேண்டும். அதற்கு நம் படித்த நடுத்தர வர்க்கம் அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் விளிம்புநிலை மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அவர்களுக்குக் கிடைத்த பெரிய ஆயுதம் உள்ளாட்சி அரசாங்கம். அதன் மூலம் அவர்கள் தங்களுக்கான அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும். மக்களாட்சி தந்துள்ள மிகப்பெரிய வாய்ப்பு அது. எனவே மக்களாட்சி என்ற ஆயுதத்தை உபயோகப்படுத்த சாதாரண மக்களை நாம் தயாராக்க வேண்டும். அதுதான் இன்றைய தேவை.

●

கட்டுரையாளர், காந்திகிராமிய பல்கலைக்கழக ராஜீவ் காந்தி பஞ்சாயத்து ராஜ் ஆராய்ச்சி இருக்கைத் தலைவர் (ஓய்வு)

**புத்தகங்கள் அச்சிட அற்புதத் தீர்வு**

**குறைந்த செலவு அதிகபட்ச தரம்**

அதிகபட்ச தரத்தில் மிகக்குறைந்த செலவில் புத்தகங்கள் அச்சிடுவதற்கு ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் (PRINT ON DEMAND) முறை ஒரு வரப்பிரசாதமாகும். ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் முறையில் நேர்த்தியான தாள், அச்சு மற்றும் பைண்டிங்குடன் மிகக்குறைந்த விலையில், தரமாக அச்சிட்டுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**REAL IMPACT SOLUTIONS, CHENNAI**

தொடர்பு கொள்ள

**98412 93503**

திறனாய்வு

# கம்பன் கவி உள்ளம்




முனைவர் யாழ் சு.சந்திரா

கம்பர் கவியின் செந்தமிழ் இன்பம் | தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான்
தொகுப்பும் பதிப்பும்: கிருங்கை சேதுபதி | வெளியீடு: என்சிபிஎச், சென்னை | விலை: ரூ.325/-

கம்பனை எப்படிக் கற்பது? பணி ஓய்வு பெற்ற பிறகு எழுத்தெண்ணிப் படிக்கத் திட்டமிடுவர் தமிழ் ஈடுபாடும், கம்பனில் ஆராக் காதலும் உடையவர்கள் பலரும் உண்டு. ஆனால் வேலைப்பளு, இல்லக்கடமை, இன்ன பல இத்யாதி என நேரமின்மையில் சிக்கித் தவிப்பவர்களுக்கு தொ.மு.பாஸ்கர தொண்டைமான் எழுதிய கம்பராமாயணக் கட்டுரைகள் ஒரு வழிமுறை என்றே சொல்லலாம். ஆம், கிட்டதட்ட தொண்ணூற்று மூன்று ஆண்டுகளுக்கு முன்னால்; தொ.மு. பாஸ்கர தொண்டைமான் நமக்குக் கம்பராமாயண கடலிலிருந்து கவி அமிழ்தத்தை கடைந்து தந்தார். இதனை, இரண்டாயிரத்து இருபத்து நான்கில் கிருங்கை சேதுபதி தொகுத்துப் பதிப்பித்திருக்கிறார்.

பாலகாண்டத்தில் நாட்டுப்படலத்தோடு கம்பர் தொடங்கிய ராமகாதை நாடென்ப நாடாவளத்தென எனக் குறளோடு ஒப்பிட்டு அமைகிறது. வள்ளுவரின் வரையறைகளுக்கு – குறளின் இலக்கணத்திற்குக் கம்பரின் படைப்பு இலக்கியமாக அமைந்தமையை பாஸ்கர தொண்டைமான் விளக்குகிறார்.

ஆயிரத்தில் ஒருவராய் நின்று உயர்ந்த வெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளலைக் கம்பர் கவியின் வழி விவரிக்கிறது இரண்டாம் கட்டுரை. தன்னை ஆதரித்த வெண்ணெய் அண்ணலுக்கு ராமனது மௌலி புனையும் மரபினராய்ப் பெருமை சேர்க்கிறது இரண்டாவது கட்டுரை.

கோசல நாட்டு மக்களால் இறைவனாகவே போற்றப்படும் தசரதன் தண்ணளியை மூன்றாவது கட்டுரை விவரிக்கிறது. மக்களிடத்து முறை செய்து காப்பாற்றும் மன்னவனாக மட்டுமின்றி தண்ணளியுடையவனாய்த் தன் நாட்டு மக்களையும் காக்கின்ற பான்மையை தயரதன் தண்ணளி எனும் எழுத்துரை விவரிக்கிறது.

பிறந்து மொழி பயின்ற பின் வசிஷ்டரிடம் கல்வி கற்றுத் தேறிய பிறகு இராமனின் வீரச்செயல் வெளிப்படுவது தாடகை வதத்திலேதான். ஆனால், பெண்ணை வென்ற இச்செயல் சற்றே குறைவாகவே கருதப்படுகிறது. இதனை, "வயதின் இளமையாலும் போரின் முதன்மையாலும், போருக்கு இலக்காய் நின்ற அரக்கியின் ஆற்றலாலும், இராம சரிதத்திலேயே இராமனது புகழிற்கு முக்கியமான ஒரு சான்றாய் இவ்வெற்றி அமைந்திருக்க, இவ்விராம காதையில் வரும் மற்ற பாத்திரங்கள் பலரும் இவ்வெற்றியை எடுத்தியம்பாதே செல்கின்றார் என்பது குறிக்கத்தக்கது.

அரக்கரில் ஒன்றிரண்டு பேர் இப்போரைப் பற்றிப் பேசுவார்களானால் அதுவும் ஆத்திரத்தால் பேசும் சொற்களேயன்றி இராமனது ஆற்றலைப் புகழ்ந்து பேசும் சொற்களாக அமையவில்லை என்று விவரிக்கும் பாஸ்கர தொண்டைமான் புகழ்பொருந்திய இராமனுக்கு இது புகழ்பொருந்திய செயலில்லை என அறுதியிட்டு உரைக்கிறார்.

விசுவாமித்திரரோடு மிதிலை மாநகரம் செல்லும் இராமனது மெய்வண்ணத்தையும் சொல் வண்ணத்தையும் சுட்டுகிற கட்டுரை ஆனந்தபோதினி இதழில் 1931 ஜூலையில்

வெளிவந்தமையை பதிப்பாசிரியர் குறிப்பிடுவது தமிழ் கூறும் நல்லுலகம் மறந்த ஒரு நெறியாகும்.

கண்ணோடு கண்ணினை நோக்கும் தமிழர்தம் அகக் காதலை அடியொற்றி ராமனும் சீதையும் கொள்ளும் காதலை கம்பர் வழி நின்று திருக்குறளைக் களமாக்கி ஆசிரியர் விளக்குகிறார்.

சம்பந்தக் குழந்தையின் உள்ளம் கவர் கள்வனையும் குறிஞ்சிக் கலி நகைக் கூட்டம் செய்த கடைக்கண் கள்வனையும் இணைத்து பேசும் பாஸ்கர தொண்டைமான் வாசகர்களாகிய நமக்கு இலக்கிய விருந்தை இந்த ஆய்வுரையில் படைத்து விடுகிறார். கேகயர் கோமகளின் அறநெறியைத் தசரதனிடம் பெற்ற வரம் என்ற விளக்கம் அமைந்த ஆய்வுரை சோமசுந்தர பாரதியாரின் தசரதன் குறையும் கைகேயி நிறையும் என்ற நூலினை அடியொற்றி எழுதப்பட்டதான குறிப்பு இன்றைய திறனாய்வுலகில் காணக் கிடைக்காத ஒரு நேர்மையாகும்.

இலக்குவன், குகன், பரதன், சடாயு, அங்கதன் என இராமகாதையில் பாத்திரங்களைத் துலக்கிடும் ஆய்வுரைகள் கம்ப காதையின் வழிமுறையை அடியொற்றி அமைவது பதிப்பாசிரியரின் தொகுப்பு நெறிக்குச் சான்றாகிறது.

அடுத்ததாக கிஷ்கிந்தையிலிருந்து கிளம்பும் அனுமனோடு இலங்கையின் இராவணனை நூலில் நாம் சந்திக்கிறோம். தமையனுக்கு நன்னெறி புகட்டும் விபிஷ்ணனையும், செஞ்சோற்றுக் கடன் தீர்க்கும் கும்பகர்ணனையும், தந்தைக்காக தன்னுயிர் நீக்கவும் துணிந்த இந்திரஜித்தையும் காண்பதோடு மண்டோதிரியின் மாண்பும், சீதையின் சீலமும் பகுதி-1 ல் விளக்கமுறுகின்றன.

கம்பனது கவிதையைப் படலம் படலமாகக் கண்டால் கவி இன்பம் தீர்ப்பது எளிமை என்பதை சூர்ப்பனகை என்ற படலத்தின் வழி ஆசிரியர் விளக்குவது அற்புதமே. ஓதிமமும் போதகமுமாய் அன்னையும் அண்ணலும் விளங்கும் அரிய காட்சியை ஆசிரியர் விளக்குவது வாசகர்களாகிய நமக்கும் படலம் படலமாய்க் கம்பரை கற்றுத் தேற வழியாகிறது.

உலா என்பது சிற்றிலக்கிய வகையின் கூறுகளாய் காப்பியங்களில் உலாப்பகுதிகள் அமைவதுண்டு. அப்படி இராமனது உலாவினைக் கம்பன் கவி வழி பாஸ்கர தொண்டைமான் நிகழ்த்திக் காட்டுகிறார்.

ஒன்பான் சுவையில் ஒருசுவையாய் அமைவது நகைச்சுவை. இந்தக் கட்டுரையில் இலக்குவனால் மூக்கறுப்பட்டு மூளியான சூர்ப்பனகை "மேக்கு உயரும் நெடு மூக்கும் மடந்தையர்க்கு மிகை அன்றோ" எனக் கூறுவது நகைச்சுவை எனப் பல சான்றுகளை அடுக்கிக் கூறி கம்பனை கற்பதற்கு நம்மைத் தூண்டுகிறார் ஆசிரியர். மண்டோதரியின் மாண்புடை கற்பும் ஆசிரியரின் விவரணைக்கு உட்படுவது சிறப்பேயாகும்.


கம்பன் கவியின் செந்தமிழ் இன்பம் எனும் கட்டுரை நூலின் தலைப்பாக அமைந்து சிறக்கிறது. கம்பரது பல நுட்பங்களையும் நயங்களையும் மிக விரிவாக எடுத்துரைக்கும் பாஸ்கர தொண்டைமான் வால்மீகியினும் கம்பர் தனித்துச் சிறக்கும் பான்மையை இந்தக் கட்டுரையில் கவி நுட்பம் புலப்பட எடுத்துரைக்கிறார். இந்த நூலின் மூன்றாம் பகுதி கம்பன் கவியின் செந்தமிழ் இன்பம் என்ற கட்டுரைக்கரு கோபால திருமலை என்பவர் எழுதிய மறுப்புரையாக அமைகிறது. இந்த மறுப்புரையை வாசிக்கிறபோது முரண்பாடுகளைக் கூட நயத்தக்க நாகரிகத்தோடு எடுத்துரைக்கும் பண்பு நமக்கெல்லாம் பாடமாக இருக்கிறது.

மறுப்பின் மேலான குறிப்பாக கம்பனது மண் சார்ந்த விழைவும் தமிழர்தம் பண்பை வெளிப்படுத்தும் முறையும் காரணமாகும் என ஆணித்தரமாகச் சொல்லும் ஆசிரியர், இம்மாதிரியான மாறுபட்ட கருத்துக்கள் ஆய்வை ஊக்குவிக்கும் வழி என்றும் உரைக்கிறார். இந்த நூலின் நான்காம் பகுதியில் அமையும் நான்கு ஆளுமைகள் பற்றிய எழுத்துரைகள் கம்பனில்; தோய்ந்த தமிழறிஞர்களை நமக்கு வெளிச்சமிடுகின்றது. மேலகரம் சுப்ரமணியக் கவிராயர், வெள்ளக்கால் சுப்ரமணிய முதலியார், டி.கே.சிதம்பரனார், ஏ.சி,பால்நாடார் எனக் கம்பன் திறனிகளை பாஸ்கர தொண்டைமானின் எழுத்தோவியம் நமக்குக் காட்சிப்படுத்துகின்றது.


காலம் கடந்த கட்டுரைகளைப் பதிப்பிக்கும் நெறிமுறைகள் இந்த பதிப்பாசிரியரின் எழுத்துரையில் குறிப்பிடப்படுவது பதிப்பின் நெறிமுறையாக அமைகிறது. ஆனந்த போதினியில் அமைந்த இக்கட்டுரைகள் நாளும் மாதமும் குறிப்பிடப்படுகிறது. பாட வேறுபாடுகளை அடிக்குறிப்பில் தருவது பதிப்பின் நெறிமுறையாக மிளர்கிறது. ஒரு சில கட்டுரைகளில் நாள் குறிப்புகள் விடுபட்டிருப்பது ஏன் என்று தெரியவில்லை. நாட்டுடைமையாக்கிய நூல்களைப் பதிப்பிக்கும் பல பதிப்பகங்கள் எந்த நெறிமுறையுமின்றி முதல் பதிப்பு எனக் குறிப்பிட்டுப் பதிப்பாண்டைப் போடும் முறைமைகள் தவிர்க்கப்படுவது தமிழ் ஆய்வுலகிற்கு பெருநன்மை. இந்த நூலின் முதல் பகுதியில் அமையும் ஜெகத்ரெட்சகனின் வாழ்த்துரை பதிப்பாசிரியரை அறிமுகப்படுத்துகிறது என்றால் கம்பன் கவி ஊட்டும் கலைமணி என்ற பகுதி பாஸ்கர தொண்டைமானின் பின்புலத்தை நமக்குக் காட்டுகிறது. காலம் கடந்த காரணனை கம்பன் வழி கற்பதற்குக் கைப்பிரதியாய் இந்நூல் அமைகிறது. ●

**கட்டுரையாளர், தமிழ்த்துறைத் தலைவர், மதுரை மீனாட்சி மகளிர் கல்லூரி, மதுரை.**


# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் விற்பனை சாதனை நூல்கள்...





**வெகுளி**
ஃபியோதர் தஸ்தயேவ்ஸ்கி
தமிழில்: ச.வின்சென்ட்
**₹ 750/-**





**அன்னா கரீனினா**
லியோ டால்ஸ்டாய்
தமிழில்:: நா.தர்மராஜன்
₹ 1500/-
(இரண்டு பாகங்கள்)




**லேவ் தல்ஸ்தோய்**
சிறுகதைகளும்
குறுநாவல்களும்
தமிழில்: நா.தர்மராஜன்
**₹ 550/-**




**பெரியார்: ஆகஸ்ட் 15**
எஸ்.வி.ராஜதுரை
₹ 1100/-




**பெரியார்**
சுயமரியாதை சமதர்மம்
எஸ்.வி.ராஜதுரை - வ.கீதா
**₹ 1050/-**




**மஹத்**
முதல் தலித் புரட்சியின் உருவாக்கம்
ஆனந்த் டெல்டும்ப்டே
தமிழில்: கமலாலயன்
₹ 800/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎: 044-26251968, 26258410, 48601884 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in



நன்றி: தமிழ் இந்து திசை

# ஓவியர் நடேஷ் மறைந்தார்

**ஷங்கர்ராமசுப்ரமணியன்**

1990களில் பிற்பகுதியில் படிப்பை முடித்து சென்னையில் வேலைகளில் சேருவதும் விடுபடுவதுமாக இருந்த காலகட்டத்தில் நவீன ஓவியனாய், தன் கலை ரீதியான சிந்தனையின் நீட்சியாகவே பார்ப்பவர்களிடமும் உடனடியாக மோதி உரையாடல் நிகழ்த்தும் கலைஞனாக, நண்பராக கொந்தளிப்பும் உற்சாகமுமாய் அறிமுகமானவர் நடேஷ். நண்பர் சி. மோகனுக்கு பிரியத்துக்குரிய வட்டத்தில் நானும் இருந்த நிலையில் அவருக்கு ஏற்கெனவே செல்லமாக இருந்தவர் நடேஷ். 1999 காலகட்டத்தில் என் கோடம்பாக்கம் அறைக்கு வருமளவுக்கு நடேஷ் நெருக்கமாகிவிட்டார்.

புலி, பூனை, நாய் எல்லாமே நேச்சுரலான யோகா மாஸ்டர்ஸ் மாமு, மனுஷனோட பரிணாமத்தில் சீக்கிரம் மூக்கில் ஸ்ட்ரா வளர்ந்துவிடும், நிலத்தடி நீர் எல்லாம் கீழ போய்க்கிட்டிருக்கு என்பது போன்ற கண்டுபிடிப்புகளை நிகழ்த்தியபடியேதான் அறைக்குள் நுழைவார்.

அலியான்ஸ் பிரான்சேஸ் கலாசார மையத்தின் நுழைவுக் கூரையில் நடேஷ் பிரமாண்டமாக வரைந்த யானை ஓவியம் பல ஆண்டுகளாக அங்கே பாதுகாக்கப்பட்டு வந்தது. சைக்கிள் ஓட்டும் யானை என்று ஞாபகம். எம் எப் ஹுசைன் போல பரந்த வெளிகளை கலைக்குப் பயன்படுத்தும் உத்வேகம் நடேஷ் உடையது.

இலக்கிய நண்பர்கள் பத்துபேர் மட்டுமே பங்குகொண்ட எனது பதிவுத் திருமணத்தை ஒட்டிய நிகழ்ச்சியில் சீக்கிரம் குட்டி போட்டுடு ராஜா என்று ஆசீர்வாதம் செய்தார். எனது முதல் கவிதைத் தொகுப்புக்கு யார் பதிப்பாளர் என்பது தெரிவதற்கு முன்னரே அவரது ஓவியக் கித்தான்கள் மூன்றை நான் எனது பேக்கில் வைத்து ஓவியம், இலக்கியம் தெரியாத எனது உறவினர்களிடமும் விரித்து விரித்துக் காட்டியது எனக்கு இப்போது ஞாபகத்தில் உள்ளது.

ந. முத்துசாமியின் மகனாக இருப்பினும் இலக்கியவாதிகளின் நண்பர்களாக இருந்தாலும் குறைவான புத்தக அட்டைகளிலேயே அவர் ஓவியம் இடம்பெற்றிருக்கிறது. அவரது சித்திரங்கள் நிறைய பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இன்றைக்கும் எனது பெயர் பலருக்கு ஞாபகமாக இருப்பதற்குக் காரணமான ‘சிங்கத்துக்குப் பல் துலக்குபவன்’ கவிதையைக் கொண்டாடி அவர் வரைந்து தந்த சித்திரம் அந்தப் படைப்புக்கு கூடுதல் வலுவைத் தந்தது. தீராநதி இதழில் அந்தப் படத்துடன் சேர்ந்தே வெளியானது.

2001இல் வெளிவந்த எனது முதல் தொகுப்பான மிதக்கும் இருக்கைகளின் நகரம் தொகுதியின் அட்டையும் என் கவிதைகளின் பயணமும் அவருடைய ஓவியத்திலிருந்தும் தொடங்கியது எனது பேறுதான். தமிழின் அபூர்வமான சிறுகதைத் தொகுதியான ந. முத்துசாமியின் நீர்மை தொகுதிக்கு நடேஷ் வரைந்த கோட்டோவியம் இன்றும் வலுவான உணர்வை அளிப்பது. தந்தையின் உள்குணத்தையும் சேர்த்து ந.முத்துசாமிக்கு ஆதர்சமாக தத்துவஞானி குர்ஜிஃப்பின் முகமும் உள்ளே இருக்க வரைந்திருப்பார். சாரு நிவேதிதாவின் நேனோ சிறுகதைத் தொகுதிக்கு வரைந்த அட்டைப்படமும் வலுவானது. மௌனியின் சிறுகதைத் தொகுப்புக்கு அவர் வரைந்த அட்டைப்படமும் முக்கியமானது.

நடேஷ் எனக்கு அறிமுகமானதற்குப் பிறகுதான் ந. முத்துசாமியும் அவர் மனைவியும் எனக்கு அவர்கள் வீட்டில் அறிமுகமானார்கள்.

ந. முத்துசாமி, நடேஷ், கோணங்கி, நான் நால்வரும் ஒரு மாருதி வேனில் நகரத்தில் குடித்துக் கொண்டே பேசியபடி அலைந்து திரிந்த ஒரு இரவு மறக்க இயலாதது. 2004-2005 ஆக இருக்கலாம். வள்ளுவர் கோட்டம் அருகே வேலு மிலிட்டரி ஹோட்டல் பாரில் எங்கள் சாயங்காலம் தொடங்கியது. அதற்குப் பிறகு மகாத்மா காந்தி சாலையில் உள்ள காவேரி ஒயின்ஸுக்கு வந்துசேர்ந்தோம். ந. முத்துசாமிக்கேயுரிய ஆகிருதியும் கம்பீரமும் போதையில் அதிகரித்திருந்தது. சொல்லுங்க என்பது போன்ற தொனியில் மாருதி காரின் சீட்டை ஒரு அரியணையாக அந்த இரவில் மாற்றியிருந்தார்.

வேளச்சேரியில் இயங்கிவந்த எம்.டி.முத்துக்குமாரசாமியின் தேசிய நாட்டார் வழக்காற்றியல் உதவி மைய வளாகத்தில், எம்டிஎம்மின் நெருங்கிய தோழர் என்பதால், நடேஷின் வருகை அடிக்கடி நிகழ்ந்ததும் அவருடனான நெருக்கத்தை அதிகப்படுத்தியது.

ஆங்கிலத்தில் துண்டுதுண்டாக கவிதை மொழியில் தனது அவதானிப்புகளை டைரிக் குறிப்புகளைப் போல எழுதியவர். முத்துசாமியின் நாடக மொழி உச்சம் கொண்ட, அதேநேரத்தில் நேர்கோட்டுத் தன்மையில்லாத உரைநடை அது. அவற்றில் சிலவற்றை மொழிபெயர்த்து நான் மணல் புத்தகம் இதழிலும் பிரசுரித்துள்ளேன். புலிகளைத் தொடர்ந்து ஓவிய வரிசையாக இட்டபோது புலி என்ற உருவத்தின் மீது எனக்கும் பெரிய மயக்கம் ஏற்பட்டது. அப்போது 'புலிதான் எனது படிமம்' என்ற கட்டுரையை மணல் புத்தகத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டேன்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அவரது கோட்டுச் சித்திரங்களை ஆங்கிலத்தில் *'Before becoming blind'* என்ற நூலை வெளியிட்டு அது எனது கைகளுக்கு புத்தம்புதிதாக வந்து சேர்ந்தபோது அதன் தலைப்பு அதிர்ச்சியாக இருந்தது. கடந்த 10 ஆண்டுகளில் நடேஷுடனான பழக்கம் குறைந்தநிலையில் எம் டி முத்துக்குமாரசாமிதான் அவருக்கு நீரிழிவால் கண் பார்வை வேகமாகக் குறைந்துவருவதைச் சொன்னார்.

அந்த நூலை முன்னிட்டு ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் இடம்கேட்டு சி. மோகன், எம் டி முத்துக்குமாரசாமி, ஏ எஸ் பன்னீர்செல்வம், அபராஜிதன் எல்லாரையும் ஒருங்கிணைத்து *'Before becoming blind'* நூலுக்கு ஒரு நண்பர்கள் சந்திப்பைக் கூட்டம்போல நான் ஏற்பாடு செய்ததுதான் எனக்குக் கடைசியாக இருக்கும் ஒரு நிறைவு. ஓவியனுக்கு கண் தெரியாமல் போகும் வேதனை எப்படியானது?

ஓவியர் நடேஷைக் கடைசிவரை எம்.டி.முத்துக்குமாரசாமி பார்த்துவந்தது எனக்குத் தெரியும். கூத்துப்பட்டறைக்காக தனது கவிதைகளை அக்காலகட்டத்தில் நாடகமாக்கமும் செய்துகொண்டிருந்தார் எம்.டி.எம். அவருக்கு நடேஷின் மறைவு பெரும் இழப்பு.

ஆதிமூலம் போல, மருது போல ஒரு பெரிய கலை ஆளுமையாக இன்னும் அதிகமாக பொதுவெளியில் அறியப்பட்டிருக்க வேண்டியவர் நடேஷ். நவீன நாடகங்களுக்கு லைட்டிங் அமைப்பதில் முக்கியமான ஆளுமையாகப் பார்க்கப்படுபவர். புதிய கலைவடிவமான இன்ஸ்டாலேஷன் என்னும் நிர்மாணக் கலையில் நடேஷ் இங்கே முன்னோடி.

முத்துசாமி இறந்துபோய், அம்மாவும் இறந்துபோய் அவர்கள் ஆதரவிலேயே இருந்துவந்த நிலையில் பாதி சீவன் போன நிலையிலேயே நான் நடேஷை இரண்டு வருடங்களுக்கு முன்னால் பார்த்தேன். ஒரு காலையும் எடுத்திருந்தார்கள். அவர் வரைந்து வைத்திருந்த சில கோட்டுச் சித்திரங்களை அனுமதி பெற்று பொறுக்கி வந்தேன். நன்றி நடேஷ். போய் வாருங்கள்.


'இந்து தமிழ் திசை' நாளிதழில் பணியாற்றிய போது ஆசையுடன் செய்த நேர்காணல்களில் ஒன்று நடேஷ் உடையது... அதில் அவர் தனது முழு குணம், மணத்துடன் சிரித்துக் கொண்டிருக்கும் புகைப்படம் உள்ளது. அதுவே இன்றைய ஆறுதல்.

"எனது சித்திரம் என் வாழ்வை நடத்த நான் அனுமதித்தேன். படைப்புக் காரியத்தில் அடைக்கல உணர்வே கிடையாது. வேலை முடிந்தவுடன் அங்கே உரிமைத்துவம் போய்விடுகிறது" என்று சொன்ன நடேஷ் தனது வாழ்க்கையிலிருந்தும் உரிமையைப் பறித்துக் கொண்டு போய்விட்டார்.

●

**கட்டுரையாளர், கவிஞர், கட்டுரையாளர்**

கட்டுரை




# லெனின் தேர்வு நூல்கள்

## ஓர் அறிமுகம்

**ப.கு.ராஜன்**

மார்க்சியம் ஒரு சமூக அறிவியல். அது மார்க்சும் எங்கல்சும் அருளிச் சென்றதல்ல. மார்க்சும் எங்கல்சும் தொடங்கி வைத்ததே. மார்க்சையும், மார்க்சியத்தையும் ரசியப் பாட்டாளி மக்களுக்கு அறிமுகம் செய்து வைக்கும் நோக்கில் மாமேதை லெனின் *மார்க்சியத்தின் மூன்று தோற்றுவாய்கள் - மூன்று உள்ளடக்கக் கூறுகள்* என்ற ஒரு சிறு வெளியீடாக எழுதினார். (*லெனின் தேர்வு நூல்கள்* தொகுப்பின் முதல் தொகுதியில் உள்ளது) அளவில் சிறியது மட்டுமல்ல; அதன் நோக்கமும் எளியது. ஆனால் இந்தச் சிறு கட்டுரையிலும் கூட "மார்க்சியம் இறுகிப்போன ஒரு வறட்டுக் கருத்தியல் அல்ல. உலக நாகரிக வளர்ச்சியின் ராஜபாட்டையின் வழியே வராமல், அதனின்றும் விலகி வேறொரு வழியே முளைத்த கருத்தியல் அல்ல. மாறாக, மனித குலத்தின் முன்னணிச் சிந்தனையாளர்கள் ஏற்கெனவே எழுப்பியிருந்த கேள்விகளுக்கு மார்க்ஸ் விடையளித்தார் என்பதில்தான் அவரது மேதாவிலாசம் குறிப்பாக அடங்கியுள்ளது" என்று கூறுவார் லெனின்.

மார்க்சியத்தை அறிமுகம் செய்து வைக்கும் போதே, அது செழுமையான ஐரோப்பியச் சிந்தனை மரபின் ஆகச் சிறந்த உருவாக்கங்களை உள்வாங்கி உருவானது; அவற்றை உண்டு செழித்து வளர்ந்தது. அவற்றின் தொடர்ச்சியாகவும், அதிலிருந்து எழும்பிய பாய்ச்சலாகவும் இயங்கியல் ரீதியாக உருவானது என்பதை லெனின் விளக்குவார். எளிமைப்படுத்துகிறேன் என்ற பெயரில் மலினப்படுத்துவது; அல்லது சிக்கல்களைச் சொல்லாமல் விடுவது என்ற அணுகுமுறையை லெனினிடம் பார்க்கவியலாது.

அத்தோடு மார்க்சியத்தை ஒரு வறட்டுச் சூத்திரமாகக் குறுக்கும் இடது திரிபுவாதத்தையும் அதனை நீர்த்துப் போகச் செய்யும் வலது திரிபுவாதத்தையும் எதிர்த்து மார்க்சியத்தை அறிவியல்பூர்வமாக வளர்த்தெடுக்க அவர் வாழ்நாள் முழுவதும் போராடினார். மார்க்சியம் ஒரு மூடுண்ட தத்துவமல்ல என்பதில் அவருக்கு ஒருபோதும் ஐயம் இருந்ததில்லை. பேராசான்களான மார்க்சும் எங்கல்சும் எழுத நினைத்து, திட்டமிட்டு, எழுதாமல் போனது உண்டு; எழுத ஆரம்பித்து முடிக்காமல் போனது உண்டு; எழுதி முடித்த பிறகும் பதிப்பிக்கப்படாமல் போனதும் ஏராளம் உண்டு. மார்க்ஸ் அவர்களே தத்துவம் குறித்து எழுத விரும்பி அதற்கான ஒரு கோட்டுச் சித்திரமாக எழுதியதே *ஃபாயர்பாக் குறித்த தேற்றங்கள்* என்ற பதினோரு சிறிய பத்திகள் மட்டுமே கொண்ட அவரது சிறு நூல். 'எனக்குத் தேவையான நேரம் கிட்டினால் நான் ஹேகல் கண்டறிந்து மாயாவாத தோல்போர்த்திக் கூறிச் சென்றுள்ள முறைபாடு குறித்து எழுத வேண்டும் என்று உள்ளேன். அது சில பக்கங்களில் சாதாரண மக்களுக்கும் புரியும் வகையில் ஹேகலின் முறைபாட்டில் உள்ளார்ந்து இருக்கின்ற கரணியம் பற்றி விளக்குவதாக இருக்க வேண்டும்.' (மார்க்ஸ் எங்கல்ஸுக்கு எழுதிய கடிதத்தில்... ஜனவரி 1858) என்று கூறியுள்ளார். ஆனால் அந்தச் சில பக்கங்கள் மார்க்சால் என்றும் எழுதப்படவில்லை.

அதுவரையில் இருந்த மிகவும் வளர்ச்சியடைந்த ஜெர்மானிய கருத்து முதல்வாத தத்துவத்தை விளக்கும், விமர்சிக்கும் *ஜெர்மானியக் கருத்தியல்* மார்க்ஸ் எங்கல்ஸ் அவர்களால் 1847ஆம் ஆண்டே எழுதி முடிக்கப்பட்டது. அது *ஃபாயர்பாக் குறித்த தேற்றங்களி*ல் ஒரு பகுதியின் விவரிப்பு என்றாலும், அது மார்க்ஸ், எங்கல்ஸ் காலத்தில் பதிப்பிக்கப்படவில்லை. அந்த நூலின் முதன்மையான நோக்கமான 'சுய தெளிவு என்பதை சாதித்து விட்டபடியால், நூலின் கையெழுத்துப் படியை இடைவிடாத திறனாய்வுக்கு எலிகளிடம் உளப்பூர்வமாக ஒப்படைத்து விட்டோம்' என மார்க்சே பின்னர் தனது *அரசியல் பொருளாதாரத்தின் விமர்சனத்திற்கு ஒரு பங்களிப்பு* நூலின் முகவுரையில் 1859 ஆம் ஆண்டு எழுதினார். ஆனால் அவர் கூறியபடி பிரதி எலிகளால் தின்னப்பட்டுவிடவில்லை. மாஸ்கோவின் முன்னேற்றப் பதிப்பகம் மற்றும் லண்டனின் லாரென்ஸ்- விஷார்ட் பதிப்பகம் ஆகியோரால் மார்க்ஸ் எங்கல்ஸ் மறைவிற்குப் பல ஆண்டுகள் கழித்து பதிப்பிக்கப்பட்டது.

மார்க்சிய தத்துவத்தை முழுமையாக விளக்கும் முயற்சியில் எங்கல்ஸ் *இயற்கையின் இயங்கியல்* நூலை இரண்டு ஆண்டு காலமாக எழுதிக் கொண்டிருந்தபோது, மார்க்ஸ் கேட்டுக் கொண்டதன் பேரில் அதை கொஞ்சம் மனத்தாங்கலுடன் நிறுத்தி வைத்து விட்டு *டூரிங்கிற்கு மறுப்பு* நூலை எழுதினார். அது 1878ஆம் ஆண்டு வெளியானது. அதன் பிறகு தனது *இயற்கையின் இயங்கியல்* நூலை சில ஆண்டுகள் விட்டுவிட்டு எழுதியுள்ளார். ஆனால் மார்க்ஸின் மறைவிற்குப் பின் எங்கல்ஸ் *மூலதனம்* நூலின் தொகுதி 2, 3 பதிப்புப் பணிகள், ஏனைய அமைப்புத்துறைப் பணிகள் ஆகியவற்றில் மூழ்கிப் போனார். எனவே அவரது *இயற்கையின் இயங்கியல்* நூலும் முடிக்கப்படவில்லை. முழுமையற்ற நிலையில் இயற்கையின் இயங்கியல் நூல் அவர் மறைந்து பல ஆண்டுகள் கழித்து, ஐன்ஸ்டீனின் பரிந்துரையின் அடிப்படையில் எட்வர்ட் பெர்ன்ஸ்டைன் முயற்சியில் பதிப்பிக்கப்பட்டது.

அதைப்போல மார்க்ஸ் அவர்களால் எழுதப்பட்டு 1859ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்ட *அரசியல் பொருளாதாரத்தின் விமர்சனத்திற்கு ஒரு பங்களிப்பு* நூல். அதன் முதல் வரியிலேயே, 'நான் முதலாளித்துவப் பொருளாதார அமைப்பினை பின்வரும் வரிசையில் பகுப்பாய்வு செய்ய உள்ளேன்' என்று கூறி, அந்த வரிசையையும் 'மூலதனம், நிலஉடைமை, கூலிஉழைப்பு, அரசு, வெளிநாட்டு வர்த்தகம், உலகச் சந்தை' என்று காட்டியிருப்பார். அத்தோடு, அதில் முதலாவதாக உள்ள மூலதனம் குறித்து, அது "...பின்வரும் மூன்று அத்தியாயங்களை உள்ளடக்கி இருக்கும்" என்று கூறி, "1. சரக்கு, 2. பணம் அல்லது எளிய சுற்றோட்டம், 3. பொதுவாக மூலதனம்" என்று வரிசைப்படுத்தியிருப்பார். பிறகு அவரது இணையற்ற பெருநூலான மூலதனம் நூலின் முன்னுரையில், "1859இல் பதிப்பிக்கப்பட்ட *அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கு ஒரு பங்களிப்பு* என்ற நூலின் தொடர்ச்சியாக இந்நூல் அமைகிறது" என்பார். ஆனால் *மூலதனம்* நூல், நிலஉடைமை, அரசு, வெளிநாட்டு வர்த்தகம்,



உலகச் சந்தை ஆகியவற்றை முழுமையாகப் பகுப்பாய்வு செய்துள்ளதாகக் கூறவியலாது.

அப்படி மார்க்சும் எங்கல்சும் தங்கள் காலத்தில் தனியாக எழுதாது விட்ட பகுதிகளை எழுதி, மார்க்சிய சமூக அறிவியலை முழுமையும் ஆழமும் அடையச் செய்யும் பணியை அவருக்குப் பின் வந்த அவரது மாணக்கர்கள் செய்தனர். அத்தோடு மார்க்ஸ், எங்கல்ஸ் காலத்தோடு உலக வரலாறும் முதலாளித்துவ இயக்கமும் அதன் செயல்பாடுகளில், நடைமுறைகளில் ஏற்படும் மாற்றங்களும் நின்றுவிடவில்லை. அது குறித்தும் அசலான மார்க்சியப் பகுப்பாய்வுகளை அவர்கள் எழுதியுள்ளனர். மார்க்சும், எங்கல்சும் எழுதாததை எழுதுவதோடு அவர்கள் நிற்கவில்லை. மார்க்ஸ், எங்கல்ஸ் எழுத்துகள் பெருமளவிற்கு மேற்கு ஐரோப்பிய நிலைமைகள் குறித்த திட்டவட்டமான ஆய்வுகளையே அடித்தளமாகக் கொண்டிருந்தன. பிளகனோவின் குழுவைச் சேர்ந்த புரட்சியாளரான வேரா சசூலிச் மார்க்சுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதில் ரசியாவின் கிராமப்புறங்களில் நிலவிய நிலத்தின் மீதான சமூக உடைமையை எடுத்துக்கூறி, சோசலிசக் கட்டுமானத்தின்போது இது எவ்வாறு கையாளப்படும் என்று கேட்டிருந்தார். ரசியாவின் சோசலிசம் நோக்கிய பயணம் ஏனைய மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பயணத்திலிருந்து மாறுபட்டிருக்கும் என்பதற்கு மேலாக மார்க்ஸ் எதையும் கூறிவிடவில்லை.

அடிப்படையற்ற மேலோட்டமான அனுமானங்கள், ஊகங்களுக்கு மார்க்சிடமோ, எங்கல்சிடமோ இடமில்லை. தமது சமூகத்திற்கு உரிய வழிமுறையை அந்த எதார்த்தத்தில் காலூன்றி நிற்பவர்கள் உருவாக்க வேண்டும் என்பதில் அவர்களுக்கு சந்தேகமிருந்ததில்லை என்று நாம் கூறலாம். மண்ணுக்கேற்ற மார்க்சியம் என்பது புதிய கருத்துருவாக்கம் அல்ல. அது மார்க்சிய பகுப்பாய்வு, மார்க்சிய கோட்பாட்டாக்கம், மார்க்சிய நடைமுறை ஆகியவற்றின் உள்ளார்ந்த பண்புதான். அந்தப் பணியின் பகுதியாகவும் ரசியா, சீனா, இந்தியா, வியட்நாம், கியூபா ஆகிய சமூகங்களுக்கு பொருத்தமாக மார்க்சியத்தை வளர்க்கும் முகமாகவும் பலரும் எழுதியுள்ளனர்.

இப்படி பல வகைகளிலும் தேவைப்படும் வரலாற்றுப் பூர்வமான பணிகளை பலரும் செய்ய முனைந்துள்ளனர். முதலாளித்துவ உற்பத்தி முறையின் மிக முக்கியமான அம்சமான மூலதனத் திரட்டல் (Accumulation) என்பதை மையமாகக் கொண்டு அதனை விளக்கிய ரோசா லக்சம்பர்க் நிதிமூலதனம், ஏகாதிபத்தியம் ஆகிய கருத்தாக்கங்களின் உருவாக்கங்களில் பெரும் பங்காற்றிய ருடால்ஃப் ஹில்ஃபர்டிங், புகாரின்; தேசிய இனப் பிரச்சினையில் மார்க்சிய நிலைபாட்டை உருவாக்கப் பங்களித்த புகாரின், ஸ்டாலின்; சீனா போன்ற நாட்டின் புரட்சிக்கான கட்சி, வழிமுறைகளை வகுத்த மாவோ; சீனா போன்ற பின்தங்கிய நாட்டில் சோசலிசக் கட்டுமானம் குறித்த புரிதலை ஆழமாக்கிய தெங் ஷியாவ் பிங்; மேலாதிக்கம், மேல் கட்டுமான, அடிக்கட்டுமான இயங்கியல் குறித்த அசலான புரிதலை ஏற்படுத்திய அண்டோனியோ கிராம்ஷி; பெண்ணியம் குறித்து காத்திரமான புரிதலுக்கு அடித்தளமிட்ட அலெக்சாண்ட்ரா கொலந்தாய்; கலை, இலக்கியக் கோட்பாடுகளில் லூனா சார்ஸ்கி, எர்னஸ்ட் ஃபிஷர், ஜார்ஜ் லூகாஸ், ரேமண்ட் வில்லியம்ஸ், டெரி ஈகிள்டன், பிரக்டோல்ட் பிரக்ட், வால்டர் பெஞ்சமின்; பின் நவீனத்துவம் குறித்து ஃபிரடெரிக் ஜேம்ஸன்; இன்னும் ஹோசிமின், லியோ-ஷாவ்-சி, காஸ்ட்ரோ, பி.சி.ஜோஷி, ஈ.எம்.எஸ் நம்பூதிரிபாட் என இந்தப்

பட்டியல் தொடர்ந்து கொண்டே போகும். இந்த வகைப்பாட்டில் தன்னிகரில்லாத பெயர் லெனின்.

கட்சி அமைப்பு, ரசியப் புரட்சிக்கான திட்டம், ரசிய முதலாளித்துவம், அரசு, ஏகாதிபத்தியம், தேசிய இனம், பின்தங்கிய விவசாய நாட்டின் சோசலிசக் கட்டுமானம் (முழுமையாக இல்லையென்றாலும்), அறிவியலின் தத்துவம் எனப் பல முனைகளிலும் மார்க்சியத்தையும் அறிவியல் பூர்வமான சோசலிசத்திற்கான கோட்பாட்டாக்கத்தையும் இற்றைப்படுத்தி, ஆழப்படுத்தி, விரிவாக்கியவர். அத்தோடு மார்க்சியம் எனும் சமூக அறிவியலின் வளர்ச்சி எந்த அடிப்படையில் நடக்க வேண்டும் என்பதை விளக்கமாகவும் செயல் மூலமும் நடத்திக் காட்டியவர். அவரது *ரசியாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி* இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு. திட்டவட்டமான சூழல் குறித்த திட்டவட்டமான பகுப்பாய்வு என்பதற்கு அவரது இந்த நூலும் *ஏப்ரல் தேற்றங்களும்* நல்ல எடுத்துக்காட்டுகள் ஆகும்.

எந்தவிதமான திரிபுவாதத்திற்கும் இடம் தராமல் ஒரு மார்க்சிஸ்ட்டுக்கு இருக்க வேண்டிய படைப்பூக்க இளகு தன்மையோடு அவர் கடைசி வரையில் இருந்தார். இந்த பண்பும் திட்டவட்டமான சூழல் குறித்த திட்டவட்டமான பகுப்பாய்வும் அவரை புதிய நடைமுறைகளை வகுக்க வைத்தது. அதனை, தான் உருவாக்கிய கோட்பாடுகள், நடைமுறைகள் ஆகியவற்றின் உள்ளார்ந்த தர்க்கரீதியான கோர்வை, அவற்றின் அறிவியல்பூர்வமான எதார்த்தம் ஆகியவற்றின் மீதிருந்த நம்பிக்கையில், தனது நம்பகத்தன்மை, தனது நாவன்மை, சிக்கலான கோட்பாடுகளையும் எளிமையாக முன்வைக்கும் திறமை ஆகியவற்றின் அடிப்படையில் சக தோழர்களை, தலைவர்களை, கட்சி அணிகளை, பொதுமக்களை வென்றெடுப்பது அவருக்கு சாத்தியமாக இருந்தது.


ஒரு தனிநாட்டில், அதுவும் ஒரு பின்தங்கிய விவசாய நாட்டில் சோசலிசக் கட்டுமானம் குறித்து, மார்க்சும் எங்கல்சும் ஏதும் எழுதாத நிலையில் திட்டவட்டமான சூழல் குறித்த பகுப்பாய்வின் அடிப்படையில் திட்டவட்டமான கொள்கைகளை அவர் உருவாக்கினர். ஆனால் சூழல் மாறியபோது அந்த கொள்கைகளையும் மாற்றினார். 1917 இல் செயல்படுத்தப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளை, தொடரும் உள்நாட்டுப் போருக்கு முகங்கொடுக்கும் விதமாக போர்க்கால கம்யூனிசக் (War Communism) கொள்கைகளாக 1918இல் மாற்றம் செய்தார். பின்னர் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வரும்வேளையில் போர்க்கால கம்யூனிச கொள்கைகளை மக்கள் இனிமேலும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பதை உணர்ந்து புதிய பொருளாதாரக் கொள்கை 1921-இல் அவரால் கொண்டுவரப்பட்டது. அதைப் போல, ஜார் மன்னனின் கொடுங்கோல் ஆட்சிக் கட்டத்தில் அதற்கு ஈடு கொடுக்கும் வகையிலான கட்சி அமைப்பை பெருமளவு முழுநேர புரட்சிக்காரர்களின் இறுக்கமான அமைப்பாக 1903-இல் முன்மொழிந்து முன்மாதிரி இல்லாத ஓர் அமைப்பைக் கட்டினார். ஆனால் பின்னாளில் கட்சியில் அதிகாரப் போக்கு தலை தூக்கியபோது, கட்சியை மேலும் ஜனநாயக பூர்வமாக மாற்ற 1923, 24இல் முயற்சி செய்தார்.

இப்படி பல்வேறு வகையிலும் மார்க்சியக் கருத்தியலை எளிய முறையில் பாமரருக்கும் புரியும் வகையில் அறிமுகம் செய்து எழுதப்பட்ட கட்டுரைகள், சிறு நூல்கள் ஒரு புறம்; கட்சி அமைப்பு, அது செயல்படும் விதம் குறித்த கட்டுரைகள், ரசியப் புரட்சியை நோக்கிய செயல்பாடுகள், இயக்கங்கள், திட்டங்கள் குறித்த கட்டுரைகள், தேசிய இனச் சிக்கல் குறித்த அசலான கருத்தாக்கங்கள், ஏகாதிபத்தியம் குறித்த கோட்பாட்டு ஆக்கம், அரசு குறித்த மார்க்சியப் புரிதலுக்கான விரிவான எழுத்துகள், புரட்சி முடிந்த ரசியாவில் உள்நாட்டுப் போரின் போதும், சோசலிசக் கட்டுமானத்தின்போதும் எடுத்த முடிவுகளைக் குறித்த விளக்கவுரைகள், வலது, இடது திரிபுவாதங்களுக்கு எதிரான கருத்துப் போராட்டங்கள், அவர் அமைத்த மூன்றாவது அகிலத்தின் உரைகளிலும் செயல்பாடுகளிலும் அவர் காட்டிய பாட்டாளி வர்க்க சர்வதேசியம் என லெனினையும் லெனினிய அணுகுமுறைகளையும், ஏகாதிபத்திய கால கட்டத்திற்கான மார்க்சியக் கோட்பாடுகளையும் அறிந்து கொள்ள இன்றியமையாத லெனினது எழுத்துக்களையும் உரைகளையும் கடிதங்களையும் உள்ளடக்கியவை 12 தொகுதிகளில் பதிப்பிக்கப்பட்ட *லெனின் தேர்வு நூல்கள்.*

லெனின், 20-ஆம் நூற்றாண்டின் இணையற்ற மார்க்சிய சிந்தனையாளர்; கோட்பாட்டாளர்; அதுவரை கருத்தாகவும் கனவாகவும் இருந்து வந்த பாட்டாளி வர்க்கப் புரட்சியை தலைமை தாங்கி நடத்திய புரட்சித் தலைவர்; ஒரு பின்தங்கிய விவசாய நாட்டில் சோசலிசத்தை கட்டமைக்கத் தேவையான கோட்பாடுகளுக்கு வித்திட்டவர். அந்த மாமேதையின் சிந்தனைகளையும் உள்ளத்தையும் புரிந்து கொள்ள உதவும் தொகுப்பு *லெனின் தேர்வு நூல்கள்.* 21ஆம் நூற்றாண்டில் சோசலிசத்திற்காக பணியாற்றும் அனைவரும் கட்டாயம் வாசித்து உள்வாங்க வேண்டிய அடிஉரமான எழுத்துகள் அடங்கியது *லெனின் தேர்வு நூல்கள்* தொகுதி.

●

**கட்டுரையாளர், மார்க்சிய ஆய்வாளர், எழுத்தாளர்**



கட்டுரை

# கவி கா.மு. ஷெரீபின்
## கவிதைகளில் தமிழும் தமிழ்நாடும்

ப. முத்துபாண்டியன்
உ.அலிபாவா

கவி கா.மு. ஷெரீப் கவிஞர், திரைப்படப் பாடலாசிரியர், நாவலாசிரியர், சிறுகதையாசிரியர், நாடகாசிரியர், கட்டுரையாளர், கடித இலக்கியம் படைத்தவர், பயண நூலாசிரியர், நுட்பமான வரலாற்று நூலாசிரியர், மிகச் சிறந்த உரையாசிரியர், நேர்த்திமிகு அரசியல்வாதி எனப் பன்முக ஆளுமையுடையவர்.

“தமிழகத்தின் முன்னணிக் கவிஞர் வரிசையில் நாட்டுப் பற்றார்வத்துடன் சமதர்ம சமுதாய ஆக்க ஆர்வமும் குழைத்தூட்டும் தமிழ்க்கவிவாணராகக் கவிஞர் கவி கா.மு. ஷெரீபைத் தமிழகம் நன்கறியும். அத்துடன் அவர் தேசியக்கவி பாரதி, பாரதிதாசனைப் போலத் தேசத் தொண்டராகவும், சொற்பொழிவாளராகவும், தமிழார்வலராகவும் மக்களிடையே பீடுநடை போட்டு வருபவர் ஆவார்” என்பதுடன் “தமிழர் வாழ்க்கை மரபில் தோன்றி மறையும் கவிஞர், எழுத்தாளரைப் போலத் தமிழ் மரபில் வேரூன்றி நின்றே புத்துலகப் பேரொளியில் புதுமை மலர்ச்சி காணத் தக்க ஒரு காலங் கடந்த உயர் மரபுக்கவிஞர் எழுத்தாளராக இலங்குகிறார்” என்று பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார் மதிப்பிடுகிறார்.

தமிழுக்கும் தமிழ்ச் சமுதாயத்துக்குமாகவுமே வாழ்ந்து சிறந்த கவிஞரின் கவிதைகளில் தமிழ் பற்றிய பதிவுகளும் தமிழ்நாடு பற்றிய பதிவுகளும் நிறைந்துள்ளன. 1939 ஆம் ஆண்டு 'சந்திரோதயம்' எனும் ஏட்டில் எழுதி,

"கமழ்தே னினுங்கனிப் பாகினுமே
காய்ச்சிய பாலினும் சுவைமிகுந்த
தமிழே உனக்கு இணையாகத்
தரணியி லுண்டோ வேறுமொழி?"

என்று வினாத் தொடுக்கும் கவிஞர்,

"எந்தாய் மொழிநீ என்பதினால்
இயம்பினே னில்லை உனைப்புகழ்ந்து
முந்த உரைப்பேன் நீஉலக
மொழிகட் கெல்லாம் தாயாவாய்!"

எனப் போற்றி மகிழ்கிறார். மகாகவி பாரதியார் 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம், உண்மை வெறும் புகழ்ச்சியில்லை' என்று பாடியிருப்பதை எதிரொலிப்பதைப் போலக் கவிஞரும் பாடுகிறார். இயல்பிலேயே தமிழ் மீது மாறாத அன்பும் பற்றும் கொண்டு திகழும் கவிஞருக்குச் சீனிப்பாகு கசக்கிறது.

"சீனிப் பாகுஞ் செழிய தமிழுஞ்
சேர்த்தே உண்டு பார்த்திட்டேன்; - நான்
சேர்த்தே உண்டு பார்த்திட்டேன்!
சீனிப் பாகு கசந்தது; எனது
செழிய தமிழ்தான் இனித்தது - என்
செழிய தமிழ்தான் இனித்தது! "

எனப் பாடும் கவிஞர் சுகந்த மலரும் தூய தமிழுக்கு இணையில்லை என்கிறார். இயற்கை அழகும் தமிழுக்கு இணையான அழகில்லை எனப் பாடுகிறார். வேற்று மொழியின் இனிய பாட்டையும் நம்முடைய வெற்றுத் தமிழையும் ஒப்பு நோக்கினால் - அதிலும் நம்முடைய வெற்றுத் தமிழ்தான் வெல்கிறது எனக் கவிஞர் பாடிக் களிக்கிறார். அதனால் நலன்களெல்லாம் அளிக்கும் தமிழை நாளும் வாழ்த்தல் நம்முடைய கடமை எனக் குறிப்பிடுகிறார். தமிழை அன்னையா கன்னியா என்று வினாத் தொடுக்கிறார்.

"எத்தனை காப்பியம் ஈன்றவள் அன்னைநீ
இன்னமும் கன்னிதானா?
எத்தனை வித்தகப் பிள்ளைகள் பெற்றவள்
எந்தாய் கன்னியாநீ?
என விளக்குமுறக் கேட்கிறார். முடிவிலே அவரே,
"மன்னிய கன்னியாய்ச் சொன்னவர் உன்றனை
வளர்க்க உரைத்ததல்லால்
மண்ணில் பலபிள்ளை பெற்றவள் பெறுபவள்
மாதாநீ யாவருக்கும்!

எனும் பாடலில் மாதா - அன்னை என முடிவு தருகிறார்.

'நேயமிகு வையத்தில் நிலைபெற்ற மொழி பலவுள் நிமிர்ந்து நிற்கும் தூயமனம் கொண்டவரே! தொல்மொழிகள் ஆய்ந்தவரே! சுடர்தமிழ்போல் ஆயஒரு மொழியதனை யாங்கேனும் கண்டதுண்டோ? ஆதலாலே ஏயவரும் அறியும்படி இயம்பிடுவோம் தமிழிற்கிணை எதுவுமில்லை!' எனப் பாடும் கவிஞர், தமிழைக், " காலத்தை வென்றமொழி கணக்கற்ற புலவர்தமைக் கண்டு மேலாம் சீலத்தை உலகினருக் கீந்தமொழி சீர்த்திமொழி சிறுமை தன்னை ஆலமென ஒதுக்குமொழி அறிவுலகம் வியக்குமொழி ஆற்றலுள்ள கோலமொழி கொன்றொழிக்க இயலாத ஜீவமொழி தமிழா மன்றோ! " எனப் பாடித் தமிழை என்றைக்கும் நின்று நிலைக்கும் ஜீவமொழி எனக்கூறி மகிழ்கிறார்.

தமிழைப் பாடிய கவிஞர் தமிழ்ப் புலவர்களையும் வியந்து பாடி மகிழ்கிறார்.

"தெள்ளமு தனைய தேவர்தம் குறளை
உள்ளினேன் மனத்தால் உயர்தமிழ் வளத்தால்
உள்ளம் பறிபோனதே! - என்
உள்ளம் பறிபோனதே!

என்று வள்ளுவர்செய் திருக்குறளில் உள்ளத்தைப் பறிகொடுத்த கவிஞர்,

"தீஞ்சுவை செந்தமிழ் மாந்தினேன் நானே
வாழ்க்கை செழித்ததையே - என்றன்
வாழ்க்கை செழித்ததையே!
வள்ளுவன் தந்த இன்னமு துண்டேன்
வான்புகழ் வாச்சுதையே
வான்புகழ் வாச்சுதையே!
பாரதி கீதம் பாடினேன் நாட்டில்
பசிப்பிணி போச்சுதையே - நாட்டில்
பசிப்பிணி போச்சுதையே!
சிலப்பதி காரம் மேகலை யணிந்த
செல்வியாம் தமிழரன்னை - புவியில்
செல்வியாம் தமிழரன்னை! "

என்று வள்ளுவருடன், பாரதி, இளங்கோ, சாத்தனார் எனும் புலவர்களையும் பாடுகிறார். தமிழை எந்த அளவிற்குக் கவிஞர் நேசித்தாரோ அதே அளவிற்குத் தமிழ்நாட்டையும் தமிழ் இனத்தையும் தமிழ்ப் பெரு மக்களையும் கவிஞர் சேர்த்தே நேசித்தார்.

"ஆன்றோர்கள் போற்றுகின்ற நல்லநாடு - தமிழ்
அன்னைகொலு வீற்றிருக்கும் எங்கள்நாடு!




சான்றோர்கள் வாழுகின்ற இன்பநாடு - கடல்
தன்னையுங் கடந்துபுகழ் கொண்டநாடு! "
ஜீவநதி யோடுகின்ற கன்னிநாடு - கலையைத்
தெய்வமாக எண்ணுகின்ற பொன்னிநாடு!
சாவுதனைக் கண்டஞ்சிப் பொய்கள் கூறி-வாழும்
தன்மையை வெறுக்குமக்கள் உள்ளநாடு! "

*என்று நாட்டையும் மக்களையும் கவிஞர் போற்றுகிறார். 'தாய்த் தமிழ்நாடு கமழ்தேனாம் அமுதூறும் பொன்மேடு!' என்கிறார். எந்தாய் நாடு செந்தமிழ் நாடு என்றென்றும் வாழியவே! எல்லைகள் மீண்டு தொல்லைகள் தீர்ந்து இன்பமாய் வாழியவே!" என்று கவிஞர் தமிழக எல்லை மீட்புப் போராட்டமான திருத்தணி மீட்சிக்காகப் போராடிச் சிறைப்பட்டுச் சென்னைச் சிறைச் சாலைக்குள் தமிழரசுக் கழகப் போராட்ட வீரர்கள் இருந்தபோது, அவர்களை உற்சாகப்படுத்தும் பொருட்டு காலையிலும் மாலையிலும் ஒன்றுகூடிப் பாடும் நாட்டுவாழ்த்துப் பாடலாக 11.11.1956இல் இயற்றினார். இப்பாடல் சாட்டை இதழில் அந்நாளிலேயே வெளிவந்தது.*

*தமிழக எல்லை மீட்புக்காகப் போராடிய இயக்கம் தமிழரசுக் கழகம். அதன் பொதுச் செயலாளராக இருந்து பாடுபட்டும் தமிழக எல்லை மீட்புக்காகப் போராடியும் பலமுறை சிறை சென்றவர் கவிஞர் கவி கா.மு.ஷெரீப்.*

*ஆந்திரம் அகன்று, கருநாடகம் அகன்று, கேரளம் அகன்று 11.11.1956 அன்று தாய்த்திருநாடான தமிழகம் தனிமாநிலமாக உருப்பெற்றது. அப்போது கவிஞர் பாடிய பாடல்தான்,*

"தமிழகம் தனியாட்சி ஏற்றதுபார் - நமது
சங்கடம் யாவுமே ஓடுதுபார்!
அமிழ்தான தமிழ்அர சேறிடும்பார் - இனி
அன்னிய மொழிமோகம் அகன்றிடும்பார்!
குறள்வழி அரசியல் வளர்ந்திடும்பார் - நாட்டில்
குற்றங்கள் குறைந்திடும் நிச்சயம்பார்!
இருள்மனக் காரரும் திருந்துவர்பார் - நல்ல
ஈடேற்றம் நாட்டிலே தோன்றிடும்பார்!
உழைப்பிற்கு உயர்வினி வந்திடும்பார் - மக்கள்
உண்மையை மதித்திட முந்துவர்பார்!
பிழைப்பற்றோர் என்னும்சொல் தீய்ந்திடும்பார்
- வாழ்வில்
பிற்பட்டோர் என்பது மாறிடும்பார்!
கலைகளில் புதுமைகள் மலர்ந்திடும்பார் - தமிழ்
கற்றவர் வாழ்வெலாம் சிறந்திடும்பார்!
நிலையற்ற சாதீய வாதங்கள்தான் - இனி
நில்லாது சரிந்திடும் பொய்யில்லைபார்!
மூவேந்தர் கொடிபறந் தாடுதுபார் - நல்ல
முச்சின்னம் உச்சியில் விளங்குதுபார்!
பாவேந்தர் பாடிய குமரிமுனை - வந்து
பழந்தமிழ் நாட்டிலே சேர்ந்ததுபார்!
வேங்கடம் மீட்டிடும் வேலையைப்பார் - இனி
வீண்காலம் கழிக்காதே தோழனேவா!
ஓங்கிடும் தமிழின உயர்வினக்கே - தினம்
உழைத்திட உறுதியும் ஏற்போம் நீவா! "

*எனும் பாடல்.*

*தனித் தமிழகம் அமைந்த பிறகும் கவிஞர் நம்முடைய எல்லைகள் பறிபோனதை எதிர்த்துக் கிளர்ந்து எழுந்து போராடினார். பலமுறை சிறை சென்றார். கவிதைகளையும் பத்திரிகைத் தலையங்கங்களையும் கட்டுரைகளையும் எழுதிக் குவித்தார். உணர்வோடும் உயிர்ப்போடும் போராடி வாழ்ந்த கவிஞர் பெருமகனார் தம் வாழ்நாள் முழுவதும் தமிழுக்காகவும் தமிழ் இனத்திற்காகவும் தமிழ்நாட்டிற்காகவும் குரல் கொடுக்கத் தவறவே இல்லை. இருந்தபோதும் தமிழ்நாட்டாலும் தமிழ் மக்களாலும் மறக்கப்பட்டராகவே கவிஞர் அறியப்படுகிறார் என்பதுதான் உண்மை.*

●

*<u>கட்டுரையாளர்கள்</u>*

ப. முத்துபாண்டியன்
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல்துறை,
பாரதிதாசன் பல்கலைக்கழகம் திருச்சிராப்பள்ளி

பேராசிரியர் உ. அலிபாவா
நெறியாளர், தலைவர், தமிழியல்துறை பாரதிதாசன்
பல்கலைக்கழகம் திருச்சிராப்பள்ளி

கட்டுரை



# பேராசிரியர் ஆறு. இராமநாதன்

## நாட்டுப்புறவியல் ஆய்வில் 50 ஆண்டுகள்

முனைவர் மு. ஏழுமலை

பேராசிரியர் ஆறு. இராமநாதன் நாட்டுப்புறவியல் சார்ந்த ஆய்வுகளில் இன்றும் தொடர்ச்சியாகத் தன்னை அர்ப்பணித்து வரக்கூடிய அறிஞர்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவர். இவர் கடலூர் மாவட்டம், புவனகிரி வட்டம், மஞ்சக்கொல்லை கிராமத்தில் ஆறுமுகப் படையாட்சி - சீதாலட்சுமி தம்பதியருக்கு மகனாக *03.08.1950*இல் பிறந்தவர். தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நாட்டுப்புறவியல் பேராசிரியர், மொழிப்புலத் தலைவர், பதிப்புத்துறை இயக்குநர், தொலைநிலைக் கல்வி இயக்குநர் போன்ற பணிகளை செவ்வனே செய்தவர். பன்னாட்டு மாநாடுகள், கருத்தரங்குகள், செயலரங்குகள் போன்றவற்றை பொறுப்பேற்று நடத்தியவர், பணி ஓய்வுக்குப் பிறகு பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்திலும், தமிழ்ப் பல்கலைக்கழகத்திலும் தகைசால் பேராசிரியராகப் பணியாற்றியவர், 50க்கும் மேற்பட்ட நாட்டுப்புறவியல் சார்ந்த ஆய்வு நூல்களை எழுதியும் பதிப்பித்தும் வெளியிட்டவர். தமிழ்நாடு அரசு மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை உள்ளிட்ட நிறுவனம்சார் பரிசுகளைப் பெற்றவர்.

இத்தகைய பன்முக அடையாளம் கொண்ட பேராசிரியர் ஆறு. இராமநாதன் அவர்களை *16.08.2021* அன்று சென்னையில் உள்ள அவருடைய இல்லத்தில் சந்தித்தேன். என்னுடன் நண்பர் முனைவர் க. வினாயகமும் உடன்வந்து உதவினார்.

### பேராசிரியரின் கல்விப் பயணமும் வாசிப்பும்

தமிழகத்தில் நாட்டுப்புறவியல் என்னும் துறை தொடக்கக் காலத்தில் ஒரு ஆய்வுத் துறையாகத் தொடங்கவில்லை. எல்லா நாடுகளிலும் உருவானதைப் போன்று தொடக்கக் காலத்தில் நாட்டுப்புற வழக்காறுகள் குறித்து அறிந்தவர்கள் அவற்றில் ஆர்வம்கொண்டு சேகரிக்கத் தொடங்கினர். கி.வா.ஜகந்நாதன், பெ.தூரன், அன்னகாமு, மு. அருணாசலம் உள்ளிட்ட பலர் இப்பணியைச் செய்தனர். இப்பணியில் பெர்சிவல் பாதிரியார் உள்ளிட்ட அயல்நாட்டவர்களின் பங்களிப்பும் உண்டு. இவற்றைத் தொடர்ந்து நாட்டுப்புற வழக்காறுகளைக் கொண்டு ஒரு குறிப்பிட்ட சமூகத்தைப் புரிந்துகொள்ளும் முயற்சியும் உருவானது. இவற்றை பேராசிரியர் நா. வானமாமலை *1960*இல் தம்முடைய பாடல் தொகுப்பு முயற்சியின் வாயிலாகத் தொடங்கி வைத்தார். இதற்குப்பின்பு, வழக்காறுகளைக் கள ஆய்வு அடிப்படையில் சேகரித்து ஆய்வு செய்யும் ஆய்வாளர்கள் உருவாயினர். இவ்வாய்வுப் போக்கு கல்விப்புலம் சார்ந்து 1970களில் தொடங்கியது. இத்தொடக்கக் காலத்தில் உருவான ஆய்வாளர்களில் குறிப்பிடத்தக்கவர் பேராசிரியர் ஆறு. இராமநாதன். அவருடன் உரையாடினோம்.

என்னுடைய குடும்பம் சாதாரண விவசாய குடும்பம்தான். எனது தந்தை ஐந்தாம் வகுப்புவரை

திண்ணைப் பள்ளியில் பயின்றவர். அம்மா இரண்டாம் வகுப்புவரை படித்தவர். எனது பெற்றோருக்கு ஏழு குழந்தைகள். நான்கு பெண் பிள்ளைகளும் மூன்று ஆண் பிள்ளைகளும் ஆவர். பெரிதான கல்விப் பின்புலம் எங்கள் பெற்றோருக்கு இல்லை. இந்த நிலையில் பிள்ளைகள்தான் முதல் நிலை பட்டதாரிகள். என் தந்தையின் நண்பர் பக்கத்து ஊரின் ஊராட்சி மன்றத் தலைவர். அவர் அலுவலகத்தில் சிறு நூலகம் உண்டு. நான் அங்குச் சென்றால் எனக்கு வேண்டிய புத்தகங்களைக் கொடுப்பார். நானும் தொடக்கத்தில் புதினங்களைத் தேடித்தேடி எடுத்துப் படித்தேன். என்னுடைய தந்தைக்குத் தெரியாமல் மர்ம நாவல்களை வரவழைத்தும் படித்தேன். இப்படிதான் என்னுடைய தொடக்கால வாசிப்புத் தொடங்கியது.

நான் ஐந்தாம் வகுப்புவரை என்னுடைய கிராமத்தில் இருக்கும் பஞ்சாயத்து போர்டு பள்ளியில்தான் படித்தேன். ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை மூன்று கிலோமீட்டர் நடந்து சென்று பின்னலூரில் படித்தேன். உயர்நிலைக் கல்வியை சேத்தியாத்தோப்பு என்ற ஊரிலும் எங்கள் ஊரிலும் படித்தேன். இப்படி மற்ற ஊர்களுக்கு படிக்கச் செல்லும்போது வயல் வரப்புகளில் நடப்பதும், ஓடிவருவதும் மகிழ்ச்சியான அனுபவம். இப்படிதான் என்னுடைய பள்ளிக்கல்வி முடிந்தது. புதுமுக வகுப்பு (PUC) கல்வியை அறிவியல் பாடத்தில்தான் படிக்க விரும்பினேன். ஆனால் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் என்னுடைய மதிப்பெண் அடிப்படையில் மூன்றாம் பிரிவு (Third Group) வகுப்பில்தான் இடம் கிடைத்தது. அவற்றைப் படித்து முடித்தபின், நான் இளங்கலையில் தமிழ் பாடத்திற்கும், உளவியல் பாடத்திற்கும் விண்ணப்பித்திருந்தேன். இரண்டும் கிடைத்தது. அந்த நேரத்தில் தமிழகத்தில் தி.மு.க. ஆட்சி நடைபெற்றுக்கொண்டு இருந்ததால் தமிழ் படித்தால் எளிதாக வேலை கிடைக்கும் அதனால் தமிழைப் படி என்று எனது தந்தை இளங்கலை தமிழைப் படிக்கச் சொன்னார். இளங்கலை, முதுகலைத் தமிழ் இலக்கியத்தை என்னுடைய தாய்மாமன் புலவர் குப்புசாமி அவர்களின் ஊக்கப்படுத்துதலோடு மிகுந்த ஆர்வத்தோடு படித்தேன்.

தமிழ் இலக்கியம் படித்தபோது மிகுந்த ஆர்வம் உருவானதற்கு எனக்குப் பாடம் கற்பித்த பேராசிரியர்களான பெரும் ஆளுமைகளும் மிக முக்கியமான காரணமாகும். நான் பாடம் கற்ற ஆளுமைகளில், பேராசிரியர் வ.சுப. மாணிக்கம், க.வெள்ளைவாரணனார், இராமசாமிப்பிள்ளை, ந.வீ. செயராமன், சோ.ந. கந்தசாமி, ஆறு. அழகப்பன், ச. மெய்யப்பன், திருநாவுக்கரசு, க. தியாகராசன், சுவாமி ஐயா, ச. வைத்தியலிங்கம், தாமோதரன், உளுந்தூர்பேட்டை சண்முகம் முதலான சிறந்த பேராசிரியர்கள் குறிப்பிடத்தக்கவர்களாவர். இந்த ஆளுமைகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் மிகுந்த ஆழங்கால் பட்டவர்கள். இவர்கள் பாடம் நடத்தும்முறை அந்தந்தப் பாடத்தில் மிகுந்த ஈடுபாடு உருவாகக் காரணமாக அமைந்தது. 1973இல் முதுகலைத் தமிழ் இலக்கியம் முடித்தேன்.

முதுகலை முடித்தவுடன் பணியேதும் கிடைக்காத நிலையில் ஆண்டு வீணாகக் கூடாது என்று 1974இல் மொழியியல் பட்டத்தில் சேர்ந்தேன். அப்போது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியல் துறையில் பேராசிரியர்களாக இருந்தவர்கள் செ.வை. சண்முகம், ச.அகத்தியலிங்கம், சீனிவாசவர்மா, பாலசுப்பிரமணியன், ராஜா உள்ளிட்ட பேராசிரியர்கள் இருந்தனர். இவர்கள் மொழியியல் பாடம் நடத்தும் முறைமை, மொழியியல் பாடத்தின் மீது மிகுந்த ஈடுபாட்டைத் தூண்டியது.

**முனைவர்பட்ட ஆய்வும் நாட்டுப்புற ஆய்வாளனாதலும்**

நான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதுகலை முடித்தவுடன் முனைவர்பட்டம் மேற்கொள்ளும் எண்ணம் இல்லை. நான் அடிப்படையில் ஒரு நவீன இலக்கியப் படைப்பாளி. நவீன இலக்கியங்களான புதினம், சிறுகதை, முதலான இலக்கிய நூல்களைத் தேடித்தேடி படித்ததைப் போல பல சிறுகதைகளையும் படைத்திருக்கிறேன். ஒருமுறை பேராசிரியர் பொற்கோ அவர்கள் நடத்தும் "மக்கள் நோக்கு" என்கின்ற இதழில், சிறுகதைப் போட்டி அறிவிப்புச் செய்யப்பட்டது. அப்போது தீவிரமாக சிறுகதைகளை படித்துக்கொண்டும் எழுதிக் கொண்டும் இருந்ததால் ஒரு சிறுகதையை எழுதி அந்த இதழுக்கு அனுப்பியிருந்தேன். நான் எழுதிய சிறுகதை முதல் பரிசும் பெற்றுவிட்டது. முதல்பரிசுத் தொகை ரூபாய் 25 என்று எனக்கு அறிவித்தார்கள். எனக்கு வழங்கவிருக்கும் ரூபாய் 25ஐ தங்களுடைய இதழின் மேம்பாட்டிற்குப் பயன்படுத்திக் கொள்ளுமாறு பேராசிரியர் பொற்கோ அவர்களுக்குக் கடிதம் எழுதினேன். இதைப் பார்த்த பேராசிரியர் என்னைப் பாராட்டிக் கடிதம் எழுதினார்.

மேலும், "மக்கள் நோக்கு" இதழின் முதலாமாண்டு நிறைவு விழாவை பேராசிரியர் பொற்கோ அவர்கள் தன்னுடைய இரும்புலிக்குறிச்சி கிராமத்தில் ஏற்பாடு செய்திருந்தார். தனக்கு அறிமுகமானவரிடம் இந்த விழாவுக்கு சிறப்பு விருந்தினராக என்னை அழைக்குமாறும் கூறியிருந்தார். நானும் அந்த அழைப்பை ஏற்று விழாவுக்குப் போயிருந்தேன். பிறகுதான், என்னுடைய நண்பர்கள் பேராசிரியர் பொற்கோ அவர்களிடம் நீ முனைவர்பட்டம் செய்யலாம் என்று ஆலோசனை கூறினார்கள். பொற்கோ அப்போது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பணி செய்துகொண்டிருந்தார். நானும் ஒருமுறை பேராசிரியரை அணுகி முனைவர்பட்டத்திற்கான வாய்ப்பைக் கேட்டேன். பேராசிரியரும் எவ்வித

தயக்கமும் இன்றி முனைவர்பட்ட ஆய்வு மாணவராக சேர்ந்துகொள்ளுமாறு ஒப்புதல் அளித்தார். எதைப் பற்றி ஆராய்ச்சி செய்யப்போறீங்க என்று கேட்டார். நான் சங்க இலக்கியம், நவீன இலக்கியம், நாட்டுப்புறப் பாடல்கள் என்ற மூன்று களங்களைக் கூறினேன். ஆனால் பேராசிரியர் பொற்கோ அவர்கள் நீ 'திராவிட மொழிகளில் நாயன்மார் கதைகள்' என்ற தலைப்பில் ஆய்வு செய் என்று கூறி தலைப்பையும் முடிவு செய்தார். ஆனால், எதிர்பாராதவிதமாக வேறொன்று நடந்தது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அப்போது இயக்குநராக இருந்த ச.வே.சுப்பிரமணியன் அவர்களிடம் என்னை அறிமுகப்படுத்தும் நோக்கில், அவருடைய அறைக்கு என்னை அழைத்துச் சென்று, முனைவர்பட்டம் செய்வதற்காக வந்திருக்கிறார் என்று சொல்லிவிட்டு பொற்கோ வெளியில் சென்றுவிட்டார். பேரா. ச.வே.சு. என்னுடைய ஆய்வு ஆர்வம், ஊர் முதலான விவரங்களைக் கேட்டுவிட்டு நீங்கள் "தென்னார்க்காடு மாவட்ட நாட்டுப்புறப் பாடல்கள்" குறித்து ஆய்வு செய்யுங்கள். நான் ஏ.என். பெருமாளிடம் கூறுகிறேன். நீங்கள் அவரிடம் ஆய்வாளராகச் சேர்ந்துகொள்ளுங்கள் என்றார். பேராசிரியர் பொற்கோ அவர்களும் என்னிடம்தான் ஆய்வு செய்ய வந்திருக்கிறார் என்று சொல்லவில்லை. பெரும் பேராசிரியர் கூறுவதை எப்படி மறுத்துக் கூறுவது என்று நானும் தயங்கிக் கொண்டு பேராசிரியர் பொற்கோஅவர்களிடம்தான் நான் முனைவர்பட்டம் செய்வதற்காகச் சென்னைக்கு வந்திருக்கிறேன் என்று கூறவில்லை. இப்படியாகத்தான் பேராசிரியர் ஏ.என் பெருமாள் அவர்களிடம் முனைவர்பட்ட ஆய்விற்காக முதல் மாணவனாக 1976இல் சேர்ந்தேன்.

**தொடக்ககால நூல்களும் பேராசிரியர் மேற்கொண்டச் செயல்பாடுகளும்**

1970களுக்குப் பிறகுதான் தமிழ்நாட்டிலும் கேரளத்திலும் நாட்டுப்புறவியல்துறை சார்ந்த ஆய்வுகள் கல்விப் புலங்களில் தொடக்கம் பெறுகின்றன. கேரளப் பல்கலைக்கழகத்தில் பி.ஆர். சுப்பிரமணியம், மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தில் சரசுவதி வேணுகோபால், மு.இராமசாமி, சென்னைப் பல்கலைக்கழகத்தில் சு. சண்முகசுந்தரம் முதலான பலர் நாட்டுப்புறவியல் சார்ந்த தலைப்புகளில் ஆய்வை மேற்கொண்டிருந்தனர். இந்நிலையில் தமிழில் ஆய்வுக்கு உதவக்கூடிய அளவில் பெரிதாக நூல்கள் இல்லை. ஆங்கில மொழியில் பல நூல்கள் கிடைக்கப்பெற்றன. பேராசிரியர் நா.வானமாமலை எழுதிய நூல்கள், பேராசிரியர் க.ப.அறவாணன் ஞானப்பிரகாசம் ஆகியோர் இணைந்து எழுதிய 'நாட்டுப்புற இலக்கியப் பார்வைகள்' என்ற நூல், 1975இல் பேராசிரியர் சு. சண்முகசுந்தரம் எழுதிய நாட்டுப்புறவியல் அறிமுகம், பேராசிரியர் தே.லூர்து எழுதிய நாட்டார் வழக்காற்றியல் அறிமுகம் முதலான நூல்களும்தான் தமிழில் நாட்டுப்புறவியல் ஆய்வுக்கான அறிமுக நூல்களாக அக்காலத்தில் இருந்தன. கள ஆய்வு சார்ந்து பேராசிரியர் மு.இராமசாமி மற்றும் பேராசிரியர் சரசுவதி வேணுகோபால் இருவரும் இணைந்து எழுதிய "கள ஆய்வில் சில அனுபவங்கள்" என்ற நூல் முதல் கள ஆய்வு நூலாக அப்போது கிடைத்தது.

பேராசிரியர் பொற்கோவும் பேராசிரியர் நா. வானமாமலையும் மிகச் சிறப்பாக மாணவர்களை ஊக்கப்படுத்துவார்கள். என்னுடைய நெறியாளர் நாடகத்தில் மிகப் பெரும் ஆளுமை கொண்டவர். நாட்டுப்புறவியலில் அப்போது பரிச்சயம் இல்லாதவர். அதனால் பெரும்பாலும் என்னுடைய ஆய்வு தொடர்பாக பொற்கோவிடம்தான் கலந்துரையாடல் செய்வேன். அதே நேரத்தில் என் நெறியாளர் என்மீது காட்டிய அன்பும் நம்பிக்கையும் எனக்களித்த சுதந்திரமும் என் ஆய்வுப் பணியைச் சிறப்பாக முடிக்க உதவின என்பதை இங்குக் குறிப்பிட வேண்டும். பேராசிரியர் நா. வானமாமலையிடமும் என் ஆய்வு குறித்து உரையாடியுள்ளேன். 1976இல் நான் வெளியிட்ட என்னுடைய குமுறல் என்ற சிறுகதைத் தொகுப்பை அவருக்கு அனுப்பியிருந்தேன். படித்துவிட்டுப் பாராட்டினார். தமிழர் நாட்டுப் பாடல் நூலுக்கு பேராசிரியர் நா.வா எழுதியிருந்த குறிப்புகளைச் சுட்டிக்காட்டி விமர்சித்தபோது, நீதான் என் நூலை நுட்பமாக வாசித்திருக்கிறாய் என்றும் பாராட்டினார். மேலும், அவர் தார்வாட்ல இருந்தபோது அவர் எழுதிய *"The Interpretation of Folk Creations"* என்ற நூலும் என் நாட்டுப்புறவியல் ஆய்வுக்கு பயன்பட்ட நூல்களில் ஒன்று.

நாட்டுப்புறவியல் ஆய்வில் ஒரு சரியான முறையியல் இல்லாத சூழ்நிலையில் 1976இல் நான் முனைவர்பட்டத்திற்கு உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் சேர்ந்தவுடன் ச.வே.சுப்பிரமணியம் அவர்கள் ஒரு அற்புதமான வாய்ப்பைக் கொடுத்தார். அதாவது, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் நாட்டுப்புறவியல் சார்ந்து ஒரு கருத்தரங்கத்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருந்தார். அதன் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. கல்விப் புலத்தில் நடைபெற்ற முதல் நாட்டுப்புறவியல் கருத்தரங்கு இதுதான். அந்தக் கருத்தரங்கத்திற்கு பேராசிரியர் தே. லூர்து, ஆ. சிவசுப்பிரமணியன், பேரா. சரசுவதி வேணுகோபால், மு.இராமசாமி சு.சண்முகசுந்தரம் முதலானவர்கள் கலந்துகொண்டனர், பேராசிரியர் நா. வானமாமலையும் இந்திய நாட்டுப்புறவியலாளர் ஜவஹர்லால் ஹண்டுவும் இக்கருத்தரங்கத்திற்கு வந்திருந்தனர். நாட்டுப்புறவியல்/நாட்டார் வழக்காற்றியல் சார்ந்த ஆளுமைகளையெல்லாம் பார்ப்பதற்கும், அவர்களின் உரைகளைக் கேட்பதற்குமான நல்ல வாய்ப்பாக இந்தக் கருத்தரங்கம் அமைந்தது.

இதேபோன்று பேராசிரியர் முத்துசண்முகம் முயற்சியால் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் ஒரு செயலரங்கம் நடைபெற்றது. பதினைந்து நாட்கள் பேரா. ஜவஹர்லால் ஹண்டு அவர்கள் வகுப்பு எடுத்தார். இச்செயலரங்கில் என்னுடன் என் நெறியாளர் ஏ.என் பெருமாள், மு.இராமசாமி, சும்மார் சூண்டல், வேலுசாமி முதலானவர்களும் பங்கேற்றனர். இத்தகைய செயல்பாடுகள் நாட்டுப்புறவியல் ஆய்வில் முழு ஈடுபாடு உருவாகக் காரணமாக அமைந்தன. மேலும், மார்க்சியம் சார்ந்த நூல்களையும் தேடிப் படிக்க ஆரம்பித்தேன். ஏங்கல்ஸ் எழுதிய குடும்பம், அரசு, தனிச்சொத்து என்னும் நூலும், நா.வானமாமலையின் நூல்களும் என்னுள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி, தொடர்ச்சியாக நாட்டுப்புறவியல் ஆய்வில் ஈடுபட வைத்தது. இவ்வாறு தான் ஒரு முழுமையான நாட்டுப்புறவியல் ஆய்வாளராக உருவான சூழலை மகிழ்ச்சியோடு பகிர்ந்துகொண்டார்.

**தமிழ்ப் பல்கலைக்கழகப் பணியும் மேற்கொண்ட ஆய்வுகளும்**

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நான் 1982இல் முதுநிலை ஆய்வாளராகச் சேர்ந்தேன். அப்போது, மாணவர்களுக்கு கற்பிக்கும் வாய்ப்பு இல்லை. அப்போது துணைவேந்தராக இருந்தவர் வ.அய். சுப்பிரமணியம். நாட்டுப்புறவியல் ஆய்வுகள் தென்னிந்தியாவில் தொடக்கம் பெறுவதற்கும் வளர்ச்சி பெறுவதற்கும் காரணமானவர்களில் இவரும் ஒருவர். இவர் முதுநிலை ஆய்வாளர்களிடம் தாங்கள் செய்ய விரும்பும் ஆய்வுகள் குறித்து எழுதி அனுப்புமாறு கேட்டிருந்தார். நான் நாட்டுப்புறப் பாடல்களைப் பதிப்பித்தல் குறித்து ஆய்வுத் திட்டம் அளித்தேன். இந்த ஆய்வுத் திட்டம் முதுகலை மாணவன் ஆய்வு போன்றது என்று மறுத்துவிட்டார். பிறகுதான் அவருடைய ஆய்வுகளையெல்லாம் வாசிக்கத் தொடங்கினேன். அதிலிருந்து "நிட்டூரி கதைகள்" என்ற தலைப்பில் ஒரு கதையை எடுத்துக்கொண்டு, அந்தக் கதையின் பல்வேறு வடிவங்களைச் சேகரித்து ஆய்வு செய்வது என்று முடிவெடுத்து வரலாற்று நிலவியல் ஆய்வுமுறை குறித்தத் திட்டத்தை அனுப்பியபோது அதனை ஏற்றுக்கொண்டார். இந்த ஆய்வு தொடர்பாகத் தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் தோட்டத் தொழிலாளர்கள் தொடங்கி பலரிடம் என் ஆய்வை மேற்கொண்டேன். கடிதம் எழுதிப் பல இடங்களிலிருந்தும் கதையின் 25 வடிவங்களை சேகரித்து ஆய்வு செய்து முடித்தேன். இந்த வரலாற்று நிலவியல் ஆய்வை துணைவேந்தர் வ.அய். சுப்பிரமணியத்திடம் அளித்தேன். மிகவும் மகிழ்ச்சியடைந்தார். சிறப்பாகப் பாராட்டினார். ஒரு வாரம் யார் வந்தாலும் இராமநாதன் ஆய்வைப் போல் செய்யுங்கள் என்று பேசும் அளவிற்கு என் ஆய்வு சிறப்பானதாகக் கருதப்பட்டது. வ.அய்.சு அவர்களை அவ்வளவு எளிதில் திருப்திபடுத்த முடியாது. அவரிடமே நல்ல ஆய்வாளனாக பெயரெடுத்தது நற்பேறுதான்.

பேராசிரியர் ச.அகத்தியலிங்கம் துணைவேந்தராக இருந்தபோது தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 1987இல் நாட்டுப்புறவியல் துறையை உருவாக்கினார். அமெரிக்க நாட்டுப்புறவியல் அறிஞர் ஆலன்டண்டிசின் உரையினால் ஈர்க்கப்பட்டவர் இவர். இதற்கு முன்பாக 1986இல் நாட்டுப்புறவியல் ஆய்வு முறைகள் என்ற தலைப்பில் கருத்தரங்கம் ஒன்று நடத்த வ.அய்.சு அனுமதி வழங்கியிருந்தார். அப்போது நான் சமூகவியல் துறையில் பணியாற்றினேன். இக்கருத்தரங்கம் மிகவும் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்ட கருத்தரங்கமாகும். பல நாட்டுப்புறவியல் அறிஞர்கள் கட்டுரைகள் படித்தனர். பின்பு இக்கருத்தரங்கக் கட்டுரைகள் நாட்டுப்புறவியல் ஆய்வு முறைகள் என்ற நூலாகவும் வெளிவந்தது. பேராசிரியர் ச.அகத்தியலிங்கமே 1987இல் இந்தியத் தமிழ் நாட்டுப்புறவியல் கழகத்தின் முதல் மாநாட்டைப் பொறுப்பேற்று நடத்தச் செய்தார். இந்த மாநாடு தமிழக நாட்டுப்புற ஆய்வாளர்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்த மாநாட்டுக் கட்டுரைகள் நாட்டுப்புறவியல் ஆய்வுக் கோவை என்ற பெயரில் இரண்டு தொகுதிகளாக வெளிவந்தன. இத்தகைய ஆய்வுச் செயல்பாடுகள் தமிழகத்தில் நாட்டுப்புறவியல் ஆய்வாளர்கள் உருவாகவும், நாட்டுப்புறவியல் சார்ந்த ஆய்வுத் தெளிவு பெறவும் பெரிதும் காரணமாக அமைந்தன. துறைத்தலைவறாகப் பொறுப்பேற்ற பின்னர் நான் நடத்தும் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் பங்கேற்கும் ஆய்வாளர்கள் நிலையிலும், உரையாளர்கள் நிலையிலும் மிகுந்த கவனம் செலுத்துவேன். முனைவர்பட்ட மாணவர்கள் ஆய்வு மேம்பாட்டிற்காகப் பல்வேறு செயல்பாடுகளைச் செய்தேன். திட்டமிடப்பட்ட பயிற்சியாக நாட்டுப்புறவியல் செயலரங்குகள் அமையும்.

**பேராசிரியரின் சவாலான கள ஆய்வுகள்**

பாளையங்கோட்டையில் உள்ள நாட்டார் வழக்காற்றியல் துறையில் போர்டு பவுண்டேசன் நிதி பெற்று சர்வதேசப் பயிலரங்கம் நடைபெற்றபோது, அதில் பேராசிரியர் பங்கேற்றிருக்கிறார். அந்தப் பயிலரங்கத்தின் இறுதியில் பங்கேற்றவர்கள் அனைவரும் ஏதேனும் ஒரு கள ஆய்வு மேற்கொண்டு ஆய்வு செய்து ஒப்படைக்க வேண்டும் என்பது அந்தப் பயிலரங்கின் திட்டம். இதற்கிடையே பேராசிரியர் "காளி திருநடனம்" நிகழ்வைப் பார்த்திருக்கிறார். மறுநாள் காலையில் அந்தக் காளிவேடமிட்ட கலைஞரின் முகவரியைக் கண்டுபிடித்து அவர் வீட்டிற்குச் சென்று இரவு ஆடிய காளியாட்டத்தைப் பற்றிக் கேட்டிருக்கிறார். அந்தக் கலைஞர் தன்னுடைய வீட்டிற்குத் தெரியாமல் நிகழ்த்திய நிகழ்த்துதல் அது என்பதால் நேர்காணல் செய்ய ஒத்துக்கொள்ளவில்லை.

அதனால் அன்றைய நாளில் நேர்காணல் செய்ய முடியாமல் போனது. மறுநாள் அந்தக் கலைஞரைச் சமாதானப்படுத்தி, சென்ற ஆண்டு நீங்கள் நிகழ்த்திய நிகழ்த்துதல் பற்றிக் கேட்பதுபோல என்னுடைய கேள்வியைக் கேட்பேன். நீங்கள் முதல்நாள் நிகழ்த்திய ஆட்டத்தைப் பற்றிக் கூற வேண்டும் என்ற உடன்படிக்கையோடு நேர்காணல் நடத்தியிருக்கிறார். குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சனைகள் ஒருவர் காளியாட்ட நிகழ்த்துதலில் ஈடுபட்டுப் பின்னர் அந்நிகழ்த்துதல் கலைஞராக மாறுவதையும் பின்னர் அக்கலையை நிகழ்த்துவதால் அவர் மன நிம்மதி அடைந்து அக்கலையை வளர்த்தெடுப்பதையும் தன்னுடைய ஆய்வின் மூலமாக நிறுவியுள்ளார். அமெரிக்க நாட்டுப்புறவியல் அறிஞர் ஸ்டுவர்ட் அவர்கள் இந்த ஆய்வு ஒரு "முன்மாதியான ஆய்வு" என்று பாராட்டியிருக்கிறார். இதே போன்று ஏ.கே. இராமநுஜம் அவர்களும் 'உங்களுக்கென தனித்த ஆய்வு முறையியல் இருக்கிறது. நீங்கள் தமிழிலேயே எழுதுங்கள். உங்களுடைய தனித்த ஆய்வு முறையியலை பாதுகாத்துக் கொள்ளுங்கள்' என்று பாராட்டியிருக்கிறார். தமிழகத்தில் திரௌபதி வழிபாடு குறித்து ஆய்வு செய்த அல்ப் ஹில்த்தபெய்தல் அவர்களும் பேராசிரியரைப் பாராட்டியுள்ளது பேராசிரியரின் ஆய்வு முறையியலுக்குக் கிடைத்த வெற்றியாகும்.

பேராசிரியரின் கள ஆய்வில் தீப்பாய்ந்தம்மன் குறித்த கள ஆய்வும் மிக முக்கியமான ஆய்வாகும். கடலூர் மாவட்டம் சேத்தியாத் தோப்பு அருகிலுள்ள தீப்பாய்ந்தம்மன் குறித்த ஆய்வை மேற்கொண்டபோது பூதங்குடி என்ற ஊரில் 1973 வரை குலதெய்வமாக இருந்த 'தீப்பாஞ்சாயி' பிறகு, தீப்பாய்ந்த நாச்சியராக மேல்நிலையாக்கம் பெற்றுள்ளது. தீப்பாஞ் சாயி என்ற குலதெய்வம் தீப்பாய்ந்த நாச்சியராக மாற்றம் பெற்றது என்பதை தன்னுடைய கள ஆய்வுத் தரவுகளால் மிக நுணுக்கமாக ஆராய்ந்து நிறுவியுள்ளார் பேராசிரியர். இவை மட்டுமின்றி, ஆப்பி வழிபாடு குறித்த ஆய்வு, கார்த்திகை தீபம் குறித்த ஆய்வு, நாட்டுப்புற தெய்வங்கள் குறித்த ஆய்வு, மாட்டுப் பொங்கல் குறித்த ஆய்வு, இடப்பெயர்வு குறித்த ஆய்வு என பல ஆய்வுகள் இவருடைய மிக நுட்பமான, திட்டமிடப்பட்ட, கள ஆய்வுத் தரவுகளால் மேற்கொள்ளப்பட்ட முன்மாதிரி ஆய்வுகளாகக் குறிப்பிடலாம்.

### இன்றைய காலத்தில் நாட்டுப்புறவியலின் ஆய்வுப் போக்குகள்

இன்றைய காலத்தில் நாட்டுப்புறவியலில் ஆய்வு செய்வதற்குத் தமிழ் படித்தவர்கள்தான் பெரும்பாலும் வருகிறார்கள். அவர்களும் நாட்டுப்புறவியலில் ஆய்வு என்றால் மிக எளிதாக முடித்துவிடலாம் என்ற நினைப்போடுதான் வருகிறார்கள். ஆனால் அந்த அளவிற்கு எளிதானது இல்லை நாட்டுப்புறவியல் ஆய்வு. நாட்டுப்புறவியல் ஆய்வு என்றால் கள ஆய்வு மேற்கொள்ள வேண்டும். களத்திற்குப் போவதற்கு இன்றைய இளைஞர்கள் தயங்குகிறார்கள். களத்திற்குச் சென்று தகவல்களைச் சேகரித்து அந்த தகவல்களின் அடிப்படையில் ஆய்வு முடிவுகளைக் கொண்டுவருவதுதான் நாட்டுப்புறவியல் ஆய்வு. என்னுடைய ஆய்வின் சிறப்பம்சம் இதுதான். கள ஆய்வுத் தரவுகள் வழி ஆய்வு முடிவுகளைக் கொண்டுவருவது. சில ஆய்வாளர்கள் களத்திற்குச் செல்லாமலேயே யூகங்களின் அடிப்படையிலும் ஆய்வின் முடிவை முன்வைக்கின்றனர். சில ஆய்வாளர்கள் மற்றவர்களின் தகவல்களைத் தன்னுடைய தகவல்களாக வைத்து ஆய்வு செய்கின்றனர். சில ஆய்வாளர்கள் நாட்டுப்புற ஆய்வில் தான் மேற்கொண்டுள்ள ஆய்வுத் தலைப்பு தொடர்பாக நிகழ்ந்துள்ள ஆய்வுகளைப் பற்றி அறியாமலேயே, ஏற்கனவே செய்யப்பட்டுள்ள ஆய்வுகளை மீண்டும் செய்கின்றனர். அவையும் முறையான கள ஆய்வு இல்லாமல் செய்வதுதான் வேதனைக்குரியது.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நாட்டுப்புறவியல் ஆய்வுக்கு வருகின்ற ஆய்வாளர்களை முதலில் நாட்டுப்புறவியல் சார்ந்து வந்துள்ள ஆய்வுகளைக் குறித்துத் தெரிந்துகொள்ளவும், முக்கியமான ஆய்வு நூல்களை வாசிக்கவும் செய்வேன். பிறகு, நானே நாட்டுப்புறவியல் சார்ந்த அடிப்படைகளைக் குறித்து கற்பிப்பேன். இவ்வாறு பல படிநிலைகளில் ஆய்வாளர்களை தயார்படுத்திய பிறகுதான் ஆய்வுக்குள் பயணிக்கச் செய்வேன். இப்படித்தான் என்னுடைய பல மாணவர்கள் உருவாகியுள்ளனர். இவ்வாறுதான் ஆய்வாளர்களை உருவாக்க வேண்டும். என்னுடைய மாணவர்களில் அருட்தந்தை பிரிட்டோ வின்சென்ட், அருட்தந்தை சேவியர் அந்தோனி, ச.பிலவேந்திரன், வசந்தா, கவிஞர் எழிலவன், கவிஞர் இரத்தின புகழேந்தி, அப்துல் காதிர், அய்யாப்பிள்ளை, பே.சக்திவேல், அறிவழகன், செந்தில்குமார், தமிழ்ச் செல்வி முதலான பல மாணவர்கள் சிறப்பான ஆய்வாளர்களாக உருவாகி தமிழ்ச் சமூகத்திற்கு தங்களுடைய ஆய்வுகளால் சிறப்பு சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

இன்றைய முனைவர்பட்ட நெறியாளர் களிடத்திலும் குறையுண்டு. நாட்டுப்புறவியல் சார்ந்த புலமை இல்லாமலேயே ஆய்வாளர்களை நாட்டுப்புறவியலில் ஈடுபடச்செய்யும் போக்கு இன்று காணப்படுகிறது. சமூகவியல் படிக்காதவர்கள் சமூகவியலில் ஆய்வு செய்ய முடியாது. மானிடவியலைப் படிக்காதவர்கள் மானிடவியலில் ஆய்வு செய்ய முடியாது. மொழியியல் படிக்காதவர்கள் மொழியியலில் ஆய்வு செய்ய முடியாது ஆனால் நாட்டுப்புறவியல் பற்றி ஒன்றுமே படிக்காதவர்களும் நாட்டுப்புறவியலில் ஆய்வு செய்யலாம் என்ற எண்ணம் இன்று உள்ளது. இந்த எண்ணம் மாற வேண்டும். நாட்டுப்புறவியல் என்பது பிற துறைகளைப் போன்று

உலகளாவிய நிலையில் சீரிய கோட்பாடுகளையும் முறையியலையும் கொண்டு வளர்ந்து வருந்துறை தமிழகத்திலும் முன்னெடுக்கப்பட வேண்டும். அத்தகைய சூழல் தமிழ்க் கல்விப் புலத்தில் உருவாக வேண்டும். ஒரு சில ஆய்வாளர்கள் சிறந்த ஆய்வுகளை வெளியிடுகிறார்கள். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் ஆ.சிவசுப்பிரமணியன், சரசுவதி வேணிகோபால், இ.முத்தையா, ஆ.தனஞ் செயன், ஞா. ஸ்டீபன், நா.இராமச்சந்திரன், சி.மா. இரவிச்சந்திரன், ஆ.திருநாகலிங்கம், தே.ஞானசேகரன் முதலியோர். நாட்டுப்புறவியல் கல்விக்கு அரசு ஆதரவு தர வேண்டும்; வேலை வாய்ப்பு தர வேண்டும். இவ்வாறு செய்தால் இத்துறை சார்ந்த பணிகள் மக்கள் மேம்பாட்டுக்கு உதவக் கூடியதாக இருக்கும். மொழி வளர்ச்சிக்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் உதவக் கூடியதாக இருக்கும். சமூக வரலாற்றைக் கட்டமைக்கவும், இசை, நடனம், நாடகம் போன்ற பல துறைகள் மேம்படவும் உதவும். இவற்றை மனதில் கொண்டு இளைய நாட்டுப்புறவியல் ஆய்வாளர்கள் இத்துறையை வளர்த்தெடுக்கவும் அதன்வழி சமூகத்தை மேம்படுத்தவும் முன்வர வேண்டும்.

**நாட்டுப்புறவியல் ஆய்வுக்கு முன்னெடுக்க வேண்டிய செயல்பாடுகள்**

தமிழகத்தில் நாட்டுப்புறவியல், நாட்டார் வழக்காற்றியல், மக்கள் வழக்காற்றியல், வழக்காற்றியல் என பல சொற்கள் புழக்கத்தில் உள்ளன. ஒவ்வொரு சொல்லும் சில குறைபாடுகளைக் கொண்டுதான் உள்ளது. பல அறிஞர்கள் ஒன்றுகூடி *Folklore* என்பதற்கு உரிய ஒரு சொல்லை தேர்ந்தெடுத்து ஒரே சொல்லைப் பயன்படுத்தலாம்.

செவ்விலக்கிய ஆய்வுகளுக்குக் கொடுக்கக் கூடிய அளவிற்கு நாட்டுப்புற ஆய்வுகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். செம்மொழி நிறுவனத்திலும் நாட்டுப்புறவியல் ஆய்வுகளை மேற்கொள்வதற்கான சூழலை உருவாக்க வேண்டும்.

தமிழில் இலக்கிய வரலாறுகளை எழுதும்போது செவ்விலக்கியங்களுக்கான வரலாறாக மட்டும் அவை உள்ளது. ஆனால் எழுத்திலக்கியங்கள் உருவாவதற்கு அடிப்படையான வாய்மொழி வழக்காறுகள் குறித்தோ, வாய்மொழி வழக்காறுகள் குறித்த ஆய்வுகள் குறித்தோ இலக்கிய வரலாற்றில் இடம்பெறுவதில்லை. இலக்கிய வரலாற்று நூல்களில் நாட்டுப்புறவியல் ஆய்வுகள் குறித்த வரலாறுகளும் இடம்பெற வேண்டும்.

எழுத்திலக்கியம் சார்ந்த படைப்பாளிகளும், எழுத்திலக்கியங்களைக் கொண்டு ஆய்வு செய்யும் ஆய்வாளர்களும் அரசால் கொண்டாடப்படுதல், விருது வழங்குதல் நிலை உள்ளது. இவர்கள் மட்டும் தமிழ் அறிஞர்களாகக் கொள்ளும் போக்குக் காணப்படுகிறது. ஆனால், நாட்டுப்புற ஆய்வாளர்கள் பெரும் பொருட்செலவிட்டுக் கள ஆய்வு செய்து தகவல்களைச் சேகரித்தல், தொகுத்தல், பகுத்தல், ஆவணப்படுத்தல், ஆய்வு செய்தல் என்ற பல படிநிலைகளில் உழைப்பைச் செலுத்துபவர்கள். நாட்டுப்புறவியல் ஆய்வாளர்கள், அறிஞர்கள் எழுத்திலக்கிய ஆய்வாளர்களைப்போல, படைப்பளிகளைப்போல கொண்டாடப்பட வேண்டியவர்கள் என்பதை அரசும் அறிஞர்களும் உணர்ந்து செயல்பட வேண்டும்.

அயல்நாட்டவர் உருவாக்கிய கோட்பாடுகளை முற்றாக ஒதுக்காமல், வேண்டிய நிலையில் பயன்படுத்தியும், தமிழக வழக்காறுகளிலிருந்து சில கோட்பாடுகளை உருவாக்கியும் நாட்டுப்புறவியல் ஆய்வுகள் வளர்ச்சியடைய வேண்டும்.

இவ்வாறு பல மாற்றங்கள் நாட்டுப்புறவியல் சார்ந்து உருவாக வேண்டியது இன்றியமையாததாகும் என்ற பேராசிரியரின் பதிவு மிகவும் கவனம் கொள்ளத்தக்கப் பதிவுகளாகும்.

**பேராசிரியரின் படைப்புகள் வாசிப்புக்கு உட்படுத்த வேண்டும்**

பேராசிரியர் ஆறு. இராமநாதன் ஐயா அவர்களின் ‘நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல்’, ‘வரலாற்று நிலவியல் ஆய்வுமுறை’, ‘தமிழில் புதிர்களும் காதலர் விடுகதைகளும்’, ‘தமிழர் கலை இலக்கிய மரபுகள்’, ‘தமிழர் வழிபாட்டு மரபுகள்’, ‘நாட்டுப்புறப் பாடல் களஞ்சியம் (முதன்மைப் பதிப்பாசிரியர்) (பத்து தொகுதிகள்)’, ‘நாட்டுப்புறக் கதைக் களஞ்சியம் (முதன்மைப் பதிப்பாசிரியர்) (15 தொகுதிகள்)’, ‘கார்த்திகைத் திருவிழா’ , ‘எழுத்திலக்கியங்களும் வாய்மொழி இலக்கியங்களும்’, ‘மாட்டுப் பொங்கல்’, ‘இராமனும் தீயில் இறங்கியிருந்தால்’ , ‘தேசிங்குராசன் கதைப்பாடல்’, முதலான ஒவ்வொரு நூலும் சிறந்த ஆய்வு முறையியலோடு தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றை, பண்பாட்டைப் பதிவு செய்துள்ள ஆவணப் பெட்டகங்களாகும். இன்னும் பேராசிரியரின் நூல்களை முழுமையாக வாசிப்புக்கு உட்படுத்தப்படவில்லை. ஆய்வாளர்களால் பேராசிரியரின் நூல்களை முழுமையாக வாசிப்புக்கு உட்படுத்தும்போது பேராசிரியரின் கடினமான உழைப்பையும், அந்த உழைப்பினால் வெளிப்பட்டுள்ள ஆய்வு முறையியலையும் அறிய முடியும். தமிழ்ச் சமூக வரலாற்றையும், பண்பாட்டு நிலைகளையும் புரிந்துகொள்ள அவை உதவுவதையும் அறிந்துகொள்ள இயலும்.

●

கட்டுரையாளர், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர்,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, து.கோ.வைணவக்
கல்லூரி, அரும்பாக்கம், சென்னை.

கட்டுரை



# பதின் பருவ சிறார் இலக்கியம் ஒரு பார்வை

**சுகுமாரன்**

"குழந்தை இலக்கியம் படைப்பதிலும் அவற்றைப் புத்தகமாக்குவதிலும் வயது பிரிவுகளை (by age category) கவனத்தில் கொள்வது முக்கியமானது. தமிழில் அதற்கான கவனமும் சிரத்தையும் குறைவாக உள்ளது."

மேற்கூறிய வரிகளை நான் 2014-ஆம் ஆண்டு 'உங்கள் நூலகம்' இதழில் 'குழந்தை இலக்கியத்தில் கதைகள்' என்ற கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறேன்.

10 வருடங்கள் ஓடிவிட்டன. சிறார் இலக்கியத்தில் வயது பிரிவுகளை கவனத்தில் கொண்டு படைப்புகளை எழுதுவதிலும் வெளியிடுவதிலும் என்ன முன்னேற்றம் வந்துள்ளது என்பதைப் பார்க்க வேண்டும். பதின் பருவ சிறார்களுக்கென இதழ்கள் தேவை. நிறைய வாசிக்கவும் நிறைய எழுதவும் வாய்ப்புள்ள பருவத்தில் அவர்கள் இருக்கிறார்கள். துரதிர்ஷ்டம் என்னவென்றால் அவர்களுக்கு அதிக இதழ்கள் இல்லை என்பதுதான்.

பதின் பருவ சிறார்களை ஈர்க்கும் இதழாக அம்புலிமாமாவும் ஓரளவு கோகுலமும் இருந்தன, இப்போது அவை இல்லை. சிறார்களின் படைப்புகளுக்கு இடமளித்து வந்த றெக்கை, குட்டி ஆகாயம், பஞ்சுமிட்டாய் ஆகிய இதழ்களெல்லாம் நின்று போயின. கல்வித் துறையிலிருந்து 6 முதல் 9 ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு 'தேன்சிட்டு' எனும் இதழ் வருவது ஓரளவு ஆறுதலான செய்தி.

மழலை, சிறார், பதின் பருவத்தினருக்கென்று கலவையான படைப்புகளைக் கொண்டதாக 'பொம்மி' சிறார் இதழ் வருகிறது. 'பெரியார் பிஞ்சு' பகுத்தறிவு, அறிவியல் கருத்துக்களைக் கொண்ட இதழாக வருகிறது. பதின் பருவத்திற்கான செய்திகள் அவ்விதழில் உள்ளன.

அமெரிக்கப் பள்ளிகளில் பதின் பருவ மாணவர்களுக்கென்று 8 பக்க அளவிலான வார இதழ்கள் இலவசமாகத் தரப்படுகின்றன. அவ்விதழ்களில் இலக்கியம், அறிவியல், சுற்றுச்சூழல், விளையாட்டு, புதிய கண்டுபிடிப்புகள் தொடர்பான செய்திகள் நிறைந்துள்ளன.

நமது பதின் பருவ மாணவர்களுக்கும் இம்மாதிரியான இதழ்கள் தமிழில் தேவை என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பாரதியின் முரசுப் பாடல், புதிய ஆத்திசூடி, பாரதிதாசனின் இளைஞர் இலக்கியம், ஆத்திசூடி, தமிழ்ஒளியின் குட்டிக் கதைகள், பட்டுக்கோட்டையின் சில பாடல்கள் பதின் பருவத்தினருக்குரியது.

கவிஞர் ஆசி.கண்ணம்பிரத்தினத்தின் அன்புச்சிறகு (கதைப்பாடல்கள்), குறளின் குரல், முனைவர் வாசுகி ஜெயரத்தினத்தின் பூச்சரம், பூஞ் சிறகு, பூங்குயில், பாடும் பறவைகளே ஆகிய பாடல் நூல்கள் பதின் பருவத்தினருக்கானவை.

கவிஞர் மோ.கணேசன் எழுதிய டும் டும் டும் தண்டோரா, ஓடி வா... ஓடி வா.. சின்னக்குட்டி ஆகிய நூல்களிலுள்ள பாடல்களில் இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் நலம், தேசியத் தலைவர்களின் பெருமை, தமிழரின் அரும்பெரும் சாதனைகள் போன்ற பொருள்களிலுள்ளவை மட்டும் பதின் பருவத்தினருக்குரியன.

பதின்பருவ சிறார்கள் சாகசக் கதைகளை மிகவும் விரும்புகின்றனர். ஜெயமோகன் எழுதிய 'பனி மனிதன்', எஸ்.ராமகிருஷ்ணன் எழுதிய 'எலியின் பாஸ்வேர்ட்', பா.ராகவன் எழுதிய 'புதையல் தீவு', 'ஐஸ்க்ரீம் பூதம்', ஜி.காசிராஜன் எழுதிய 'ஆரம்ப அதிசயம்' ஆகிய நாவல்கள் அப்படிப்பட்டவை. ஞா.கலையரசி எழுதிய இரு நாவல்கள் பூதம் காக்கும் புதையல், நீலமலைப் பயணம் இளையோருக்காகவே எழுதப்பட்டவை.

பதின் பருவ சிறார்கள் நால்வருடன் ஆதிரை என்ற பதின் பருவ சிறுமி தனியாக பயணம் செய்வதை சமூகம் எப்படிப் பார்க்கிறது என்பதை நீலமலைப் பயணம் பேசுகிறது. பதின் பருவ பெண் பிள்ளைகளின் சுதந்திரத்தையும் வலியுறுத்துகிறது. மந்திரக் கிலுகிலுப்பை, கடலுக்கடியில் மர்மம் என்று ஆர்வமூட்டும் தலைப்புகளில் இரு நாவல்களை சரிதா ஜோ எழுதியுள்ளார்.

மந்திரக் கிலுகிலுப்பை நாவலின் உள்ளடக்கம் இளையோருக்கானது. ஆனால் கதைநாயகி பாத்திரமாக வரும் ரதிக்கு ஏழு வயது தான் ஆகிறது. ஏழு வயதுக் குழந்தை மந்திரக் கிலுகிலுப்பை செய்யும் மாயங்களை கற்பனை செய்ய முடியும். விலங்கின உரிமை, உயிரின உரிமை போன்ற கருத்துகளை சிந்திக்க முடியாது.

'கடலுக்கடியில் மர்மம்', நாவலும் உள்ளடக்கத்தில் பதின் பருவத்தினருக்கானது. ஆனால் கடலில் வாழும் மீன்கள் பாத்திரங்களாக கற்பனை செய்யப்பட்டுள்ளன. சமீபத்தில் எழுத வந்திருக்கும் துரை ஆனந்த் குமார் துவக்கத்திலிருந்தே சிறார்களின் வயதுப் பிரிவுகளுக்கேற்ற படைப்புகளை எழுதுவதிலும் வெளியிடுவதிலும் கவனம் செலுத்துபவராக இருக்கிறார்.

ச்சூ மந்திரக்காடு, வேற்றான் நீலக் கழுகு, இரண்டாம் மெட்ராஸ் ஆகியவை இளையோர் நாவல் என்றே குறிப்பிடப்பட்டு வந்திருக்கின்றன. ஏப்ரல் 14, நம்மில் ஒருவர் ஆகியவை இளையோருக்கான சிறுகதைத் தொகுப்புகளாகும். 'நம்மில் ஒருவர்' நூலில் மாற்றுத் திறனாளிகள் மட்டுமே பாத்திரங்கள், இத்தொகுப்பிலுள்ள 'பார்சலில் எதிர்காலம்' நல்லதொரு கதை. துரை ஆனந்தகுமாரின் நூல்கள் பெரும்பாலும் தமிழ், ஆங்கிலம் என இரு மொழிகளில் அமைந்து ஒரு கல்லில் இரண்டு மாங்காய்கள் அடிக்கின்றன.

'ஆயிஷா' நடராஜனின் 'விஞ்ஞான விக்கிரமாதித்தன் கதைகள்' (பதின் பருவத்தினருக்கானது) 2014-ஆம் ஆண்டின் பாலபுரஸ்கார் விருது பெற்றது. 1729 என்பது இவருடைய சமீபத்திய சிறார் நாவல் புற்று நோயால் அல்லற்படும் சிறார் உலமைப் பற்றியது, இந்நாவலில் கணக்குப் புதிர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பதின் பருவத்தினரே இப்படைப்பை படிக்க முடியும். 'தன்வியின் பிறந்த நாள்' யூமா வாசுகி எழுதியது. 2024-ஆம் ஆண்டின் பால புரஸ்கார் விருது பெற்றது. இந்நூலிலுள்ளவை பதின் பருவத்தினருக்கான சிறுகதைகளாகும். யூமா வாசுகி மலையாளத்திலிருந்து 'மீளும் நிறங்கள், மாத்தன் மண் புழுவின் வழக்கு, விடுபடும் சுடர், குட்டி இளவரசன், ஒரு நாயின் கதை ஆகிய நாவல்களையும் சார்லிசாப்ளின், பாபா ஆம்தே, பஷீர், உலகை குலுக்கிய பத்து நாட்கள்' ஆகிய கட்டுரை நூல்களையும் பதின் பருவத்தினருக்காகத் தந்துள்ளார்.

தமிழ்ச் சிறார் இலக்கியத்திற்கு நிறைய படைப்புகளைத் தந்தவர் உதயசங்கர். வடிவமைப்பிலும் உள்ளடக்கத்திலும் வித்தியாசத்தைத் தந்த 'மாயக் கண்ணாடி' (சிறுகதைகள்) நூல் குறிப்பிடப்படாவிட்டாலும் அது பதின் பருவத்தினருக்கானது.

அவருடைய 'ஆதனின் பொம்மை' இளையோர் நாவல் என்றே குறிப்பிடப்பட்டு வந்தது. இந்நாவல் 2023-ஆம் ஆண்டின் பாலபுரஸ்கார் விருது பெற்றது.

கீழடி தொல்லியல் ஆய்வை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. ஏகலைவன், குட்டி இளவரசனின் குட்டிப் பூ ஆகியன அவரது பதின் பருவத்தினருக்கான நூல்களாகும்.

யெஸ். பாலபாரதியின், மரப்பாச்சி சொன்ன ரகசியம், 2020-ஆம் ஆண்டின் பால புரஸ்கார் விருது பெற்ற பதின் பருவத்தினருக்கான நாவலாகும். இது குழந்தைகளின் மீதான பாலியல் அத்து மீறலைப் பற்றி பேசுகிறது. 'பூமிக்கு அடியில் ஒரு மர்மம்' (இளையோர் நாவல்) சாகச வகை கதையாகும்.

சிறார்களுக்கு ஏராளமான நூல்களை எழுதி வருபவர் விழியன். பதின்பருவ மழலைச் செல்வங்களை ஊக்கப்படுத்துகிற விதமாக அவரது 'மலைப்பூ' நாவல் அமைந்துள்ளது. 1650 (முன்னொரு காலத்திலே) நாவலும் ஜாலியன் வாலாபாக் படுகொலை பற்றிய வரலாற்றுப் புனைவாகும்; விழியன் எழுதிய 'காரா பூந்தி' சிறார் சிறுகதைகளில் பெரும்பான்மை பதின் பருவத்தினர் படிப்பதற்குரியது. தேன்கணி (கணிதக் கட்டுரைகள்), பதின் பருவத்தினருக்கானது.

விஷ்ணுபுரம் சரவணன் எழுதிய ஒற்றைச் சிறகு ஓவியா நாவலின் பாத்திரங்கள் பதின் பருவத்தினர். ஓவியா 7-ஆம் வகுப்பில் படிக்கிறாள். எண்ணெய் கம்பெனியால் நிலத்தடி நீரும் விவசாயமும் பாதிக்கப்படுவது தொடர்பான சுற்றுச் சூழல் பிரச்சனையைப் பேசுகிற நாவல். அவருடைய 'நீலப்பூ' நாவலும் பதின் பருவத்தினருக்கானது. பாத்திரங்கள் பதின் பருவத்தினர். சாதியம் தொடர்பான கருத்துகளும் பதின் பருவத்தினருக்கானவை.

சிறார்களுக்கு சிறுகதைகள், நாவல்கள், மொழிபெயர்ப்புகள் என்று ஏராளமாக எழுதி வருபவர் கொ.மா.கோ இளங்கோ. பதின் பருவத்தினருக்காக இவர் எழுதிய சஞ்சீவி மாமா, பச்சை வைரம் ஆகிய நாவல்கள் பேசப்பட்டவை. 'சஞ்சீவி மாமா' சாதி மறுப்பு கருத்தை அடிப்படையாகக் கொண்டது.

ஆதி வள்ளியப்பன் சுற்றுச்சூழல் தொடர்பான நூல்களை பதின் பருவத்தினருக்காகத் தந்துள்ளார். 'நீ கரடி என்று யார் சொன்னது?' என்ற மொழிபெயர்ப்பு நாவல் காடுகளுக்குள் தொழிற்சாலைகள் ஏற்படுத்தும் கேடுகளை சுட்டிக்காட்டும் படைப்பாகும்.

சுகுமாரன் எழுதிய நம்பிக்கை இல்லம், சூப்பர் சிவா, கடற்கன்னி கயல் ஆகிய மூன்றும் பதின்பருவத்தினருக்கான நாவல்களாகும். பாந்திரங்களாக பதின் பருவத்தினரே உள்ளனர். பொதுவாக பதின்பருவத்தினர் எதிர்கொள்ளும் வாழ்க்கைச் சிக்கல்களிலிருந்து மீண்டு வருவது பற்றிய கதைகளாகும். கடற்கன்னி கயல் அதி புனைவுடன் கூடிய சாகசக் கதையாகும். ஆங்கில மொழியில் வெளிவந்த சிறார் செவ்வியல் நாவல்களான அதிசய உலகில் ஆலிஸ், சிண்ட்ரல்லா, புதையல் தீவு, கருணைத் தீவு, குட்டி இளவரசி, சின்னஞ் சிறு பெண், கிரீன் கேபின்ஸ் ஆனி, டாம்சாயரின் சாகசங்கள், இரகசியத் தோட்டம் ஆகியவற்றை தமிழில் தந்துள்ளார்.

எழுத்தாளர் ஆர்.வி.பதியின் 'கண்ணன் வழி காந்தி வழி' நாவல் 9-ஆம் வகுப்பு படிக்கும் மாணவன் கண்ணனைச் சுற்றி நடைபெறும் கதையாகும். இதுவே, ஆர்.வி.பதியின் முதல் நாவல் என்பது குறிப்பிடத்தக்கது.

லூர்து எஸ்.ராஜ் எழுதிய 'மனித நேய மரங்கள்', 'அறிவியல் விருந்து' ஆகியவை இளையோருக்கான அறிவியல் சிறுகதைகளைக் கொண்டதாகும். இயற்கை சார்ந்த சிந்தனை, அறிவியல் பார்வை, மண் சார்ந்த சிந்தனை இவற்றை பொருண்மையாகக் கொண்ட ஈரோடு சர்மிளாவின் 'எவன் சொன்னது ராஜான்னு' சிறுகதைத் தொகுப்பு பதின் பருவத்தினருக்குரியது.

கல்வியாளர் ச.மாடசாமியின் 'வித்தியாசம் தான் அழகு' நூல் இளையோர் படிப்பதற்கானது, 'கடைசி இலை, ஆறடி நிலம், ஆகிய இரு நூல்களும் இளையோர் வாசிப்பதற்கு ஏற்றவை. பிரபலமானவர்களால் பெரியோருக்கு எழுதப்பட்ட பிரபலமான சிறுகதைகளை இளையோருக்கு மறு ஆக்கம் (retold) செய்து வெளியிடப்பட்ட நூல்கள் இவை இந்த மறு ஆக்கங்களை எழுத்தாளர் ச.தமழ்ச்செல்வன் தொகுத்துள்ளார். ஒவ்வொரு கதையின் இறுதியிலும் விவாதத்திற்கான விளக்கங்களையும் தந்துள்ளார். இத்தகைய நூல்கள் பதின் பருவத்தினரின் சிந்தனையை வளர்த்தெடுக்க உதவும். அவர்களின் படைப்பாற்றலையும் தூண்டும்.

உமையவன் தொகுத்திருக்கும் 'தற்கால சிறார் கதை' நூலில் பதின் பருவத்தினருக்கான கதைகள் உள்ளன.

காலநிலை மாற்றம், புவி வெப்பமயமாதல் ஆகிய சூழல் பிரச்சினைகள், காடுகள், உயிரினங்கள் தொடர்பான நூல்கள் சமீப காலமாக தமிழில் நிறைய வந்துள்ளன. இவை பதின் பருவத்தினருக்கானவை.

பொதுவுடைமை (குழந்தைகளுக்காக) பீனி அடம்ஸாக், தமிழில் எம்.பாண்டியராஜன் மொழி பெயர்த்த நூல், பொதுவுடைமை, முதலாளித்துவம், உழைப்பு, சந்தை பற்றிய கருத்துகளை பதின் பருவத்தினர் புரிந்து கொள்ளும் விதமாக எளிமையாகத் தந்துள்ளது.

இத்திசை வழியில் இன்னொரு நூல் குழந்தைகளுக்கான பொருளாதாரம், ரங்க நாயகம்மா தெலுங்கில் எழுதியது, தமிழில் கொற்றவை தந்துள்ளார். மார்க்சின் மூலதனத்தின் அடிப்படைக் கருத்துக்கள் பதின் பருவத்தினருக்கு பாடங்களாக எழுதப்பட்டுள்ளது.

கிழக்குப் பதிப்பகம் - ப்ராடிஜி - ஆங்கில சிறார் இலக்கியத்தில் உள்ளது போல் வயது வாரியாக நூல்கள் வெளியிடுவதில் கவனம் செலுத்தி பதின் பருவத்தினருக்கு 300 தலைப்புகளில் முன்பு நூல்களை வெளியிட்டது. பழநியப்பா பிரதர்ஸ் பதிப்பகமும் 'நாட்டுக்குழைத்த நல்லவர்கள்' வரிசையில் தலைவர்கள், விஞ்ஞானிகள் பற்றிய நூல்களை பதின் பருவத்தினருக்காக வெளியிட்டது.

தமிழ்நாடு அறிவியல் இயக்கமும் 350க்கும் மேற்பட்ட தலைப்புகளில் தமிழில் அறிவியலை பரப்புவதற்கான சிறந்த நூல்களை வெளியிட்டது. இந் நூல்களில் அறிவியல் அறிஞர்கள், கண்டுபிடிப்புகள் குறித்த நூல்கள், மனிதகுலம் தோற்றம், வளர்ச்சி குறித்த நூல்கள் பதின் பருவத்தினருக்குரியதாக உள்ளன.

என்.சி.பி.எச் நிறுவனம், நெஸ்லிங் புக்ஸ் பப்ளிஷிங் மூலமாக பதின் பருவத்தினருக்காக ஏராளமான மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிட்டுள்ளது. சிறார் இலக்கியத்தில் வயதுக்கேற்ற படைப்புகள் வெளியாக வேண்டும் என்ற உத்வேகத்தோடு ஓங்கில் கூட்டம், புக்ஸ் பார் சில்ட்ரன் பதிப்பகங்கள் இணைந்து வெளியிட்ட 17 நூல்கள் முற்றிலும் பதின் பருவத்தினருக்கானவை, தமிழ்ச் சிறார் இலக்கிய வளர்ச்சிக்கு உதவுகிற முனைப்பிற்குக் காரணமாக இருக்கிற 'பஞ்சுமிட்டாய்' பிரபுவும் துணையாக இருக்கிற கமலாலயனும் பாராட்டுக்குரியவர்கள்.

ந.பெரியசாமியின் கடைசி பெஞ்ச், ராஜேஸ் கனக ராஜனின் சாக்லேட்டி ஆகிய இளையோருக்கான கவிதை நூல்களை வாசித்த போது, ஆஹா! தமிழ்ச்சிறார் இலக்கியத்தில் புதிய திறப்பு வந்துவிட்டது என்று உளம் பூரித்தேன். பதின் பருவத்தினரின் உவகை, உணர்வை, பிரச்சனைகளைப் பேசும் இந்தப் புதுக் கவிதைகள் புதியவை. நான் ஏன் நாத்திகன்? என்ற பகத்சிங்கின் நூலை பதின் பருவத்தினருக்கான நூலாக புதிய உத்தியுடன் மறு ஆக்கம் செய்திருக்கிற சிவசுப்பிரமணியன் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறார்.

சலீம் அலி (ஆதி வள்ளியப்பன்), சார்லஸ் டார்வின் (அன்பு வாகினி), தோபா தேக்சிங் (உதயசங்கர்) ஹம்போல்ட் (ஹேமா பிரபா), ஸ்டீபன் ஹாகிங் (கமலாலயன்) பல்வங்கர் பலூ (கி.பா.சிந்தன்) ஜானகி அம்மாள் (கி.பா.சிந்தன்) ஆகிய ஆளுமைகளைப் பற்றிய நூல்கள் பதின் பருவத்தினரை எளிமையாகச் சென்றடையும் வகையில் உள்ளன.

17 நூல்களில் சுல்தானாவின் கனவு (ரொக்கேயோ பேகம் - தமிழில் திவ்யா பிரபு), போக்கிரி இளவரசி (கேத்லீன் எம்.முல்டூன் - தமிழில் கொ.மா.கோ இளங்கோ) ஆகிய மொழிபெயர்ப்பு நூல்கள் முக்கியமானவை.

நேரடி படைப்புகளாக சோசோவின் விசித்திர வாழ்க்கை (இளையோர் நாவல்) உதயசங்கர் எழுதியது. வாழ்க்கை பற்றிய ஒரு தரிசனத்தை கதை வேடிக்கையாக சொல்லியிருக்கிறது.

கொ.மா.கோ இளங்கோ எழுதிய வாசிக்காத புத்தகத்தின் வாசனை (இளையோர் குறு நாவல்) கதை நாயகனின் துயரத்தை வாசனையாக நுகர முடிகிறது. விஷ்ணுபுரம் சரவணனின் கயிறு (இளையோர் சிறுகதை) பரவலாக கவனம் பெற்ற கதை. ஆழ்கடல் (நாராயணி சுப்பிரமணியன்) தண்ணீர் என்றோர் அமுதம் (சி.வி.ராமன், தமிழில் கமலாலயன்) ஓரிகாமி (தியாக சேகர்) ஆகிய நூல்களும் இளையோரின் கவனத்திற்குரிய படைப்புகளாகும். பதின் பருவ சிறார்களே எழுதிய படைப்புகள் தமிழில் வந்துள்ளது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.


ஹிட்லரின் இனப்படுகொலைக்கு எதிராக வந்த ஆனிபிராங் (வயது 13) எழுதிய ஆனி பிராங்கின் டைரிக் குறிப்புகள், இளம் பாகிஸ்தானிய சிறுமி மலாலா (வயது 16) வின் கடைசிக் குறிப்புகள், முக்தா சால்வே (வயது 14) மகர்கள் மற்றும் மாங்கர்களின் துயரங்கள், பருவ நிலை மாற்றம் குறித்த நூல், ரஸ்கின் பாண்டே (வயது 16) எழுதிய சிறுகதைகள், நாவல்கள், எஸ்.அபிநயாவின் (வயது 13) குரங்கும் கரடிகளும் புலிப்பல்லும் நரிக்கொம்பும் (கதைகள்), ந.க.தீப்ஷிகா (வயது 13) எழுதிய வானவில் (சிறார் பாடல்கள்) ஆகியன இளையோரே எழுதிய படைப்புகளாக சிறப்பு பெற்றுள்ளன.

ஆங்கில மொழியில் மழலையர், சிறார், பதின் பருவத்தினர் என்று வயதிற்கேற்ப பகுத்து சிறார் இலக்கியம் படைக்கின்றனர். முன்பும் ஏன் இப்போதும் கூட தமிழச் சிறார் எழுத்தாளர்கள் சிறார்களின் வயதுப் பிரிவிற்கேற்ப எழுதுவதில் போதிய பிரக்ஞை உடையவர்களாக இல்லை, எழுதுவதில் இல்லாத பிரக்ஞை நூல் வெளியிடுவதிலும் வந்துவிடாது.

சிறார்களின் வயதிற்கேற்பவே அவர்களின் உலகமும் அனுபவமும் மொழியும் புரிந்து கொள்ளுதலும் அமைந்திருக்கும். இதைக் கருத்தில் கொள்ளும் போதுதான் இயல்பான, பொருத்தமான படைப்புகள் வர வாய்ப்பு இருக்கிறது. சிறார்களின் வயதுப் பிரிவிற்கு ஏற்ப எழுதுவதில் இப்போது முன்னேற்றம் வந்திருக்கிறது என்பதை இக்கட்டுரை கோடிட்டுக் காட்டுகிறது.

●

**கட்டுரையாளர், சிறார் எழுத்தாளர்**




# சிவக்கும் கவிதைகளும் கவிஞர் சிவசேகரமும்

மு. அஜித்குமார்

சிவசேகரம் கவிதைகள் (1973-2020)
முழுத் தொகுப்பு | சமூகம் இயல் பதிப்பகம், லண்டன்
விலை: ரூ.500 (இந்தியா)

இயந்திரத் துவக்கை மத்தாய் நிறுத்தி
இனவெறிப் பாம்பைக் கயிறாய்ச் சுற்றி
அரசதிகார அமுதம் வேண்டி
அரசியல் கடலடிச் சேற்றைக் கடைந்த
அமரர் எவரோ அசுரர் எவரோ
அமுது விளைந்ததோ ஆர் கொண்டனரோ
அறியேன் ஆயினும் நஞ்சு மட்டும்
நன்றாய் விளைந்தது நாடு பரவலும்
ஆலகாலம் அருந்திக் கறுத்த
நீலகண்டனார் ஒதுங்கி நிற்கவும்
நாட்டு மக்கள் நஞ்சே உண்டனர்

(மகேசருக்குத் தீர்ந்தது; 106)

ஒரு கவிஞரை அவரது கவிதையின் வழியே அறிமுகப்படுத்துவதன்றி, வேறென்ன சிறப்பு இருக்கக்கூடும். மேற்கண்ட இக்கவிதையே சிவசேகரம் தன் படைப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கும் கச்சாப்பொருள் குறித்து விளக்கிவிடும். பேராசிரியர் சிவசேகரம் இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல் துறை மற்றும் இலண்டன் இம்பீரியல் கல்லூரி இயந்திரப் பொறியியல் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். 1970கள் முதலே கலை, இலக்கிய, அரசியல் தளங்களில் இயங்கித் தனது எழுத்துகளால் களமாடிய ஒரு படைப்பாளி. கவிதைப் படைப்பாற்றலுடன் சிறுகதை, விமர்சனம், நாடக ஆசிரியர், மொழிபெயர்ப்பாளர் என பன்முகத் தன்மையுடையவர். சுமார் அரை நூற்றாண்டு காலம் தான்சார்ந்து இயங்கும் துறைக்கும் தமிழ்மொழி இலக்கியத்திற்கும் அவராற்றிய பங்களிப்பு அளப்பரியது எனலாம். சிவசேகரம்

அடிப்படையிலேயே இடதுசாரிச் சிந்தனை கொண்டவர். கடந்த ஐம்பது வருடங்களாக இலங்கை அரசியல், சமூக அவலம், ஒடுக்கப்படும் மக்களின் துயரம், வல்லாதிக்க எதிர்ப்பு, சாதி - மதம் - இனம் - பால் - பொருளாதார வேற்றுமை போன்ற மனித சமூகத்தைப் பாகுபடுத்தும் அத்தனை கருத்தியல்களுக்கும் எதிராகவே தனது படைப்புகளை அமைத்துக் கொண்டார். குறிப்பாக, ஒடுக்கப்படும் மக்களின் குரலாய் ஒலிப்பதே இவர் கவிதைகளின் உள்ளீடு. அவ்வகையில் சிவசேகரத்தின் பெரும்பாலான கவிதைகள் அரசியல் உள்ளடக்கம் பொதிந்தே காணப்படும்.

தனது கவிதைகளில் மக்கள் பிரச்சினைகளை கவனப்படுத்திய அதேவேளையில், மக்களையே சாராது இயங்கும் அறிவு மேதமை கொண்ட புத்திஜீவிகளையும் கண்டித்துச் செல்லும் போக்கு அவரது நிலையை இயல்பாக வெளிக்காட்டிவிடும். உதாரணமாக: "புதரின் இருளில் மின்னும் மின்மினிகள், கடலின் தொலைவில் தெரியும் தோணியின் விளக்கொளி; இவையிரண்டைப் போல வானின் பெருந்தொலைவில் பலகோடி தாரகைகள் (நட்சத்திரங்கள்) மின்னிக் கொண்டிருக்கும். சூரியனை விட அளவில் பெரிய அத்தனை தாரகைகள் ஒருசேர்ந்தும், இரவல் ஒளியினால் ஒளிரும் நிலவின் ஒளியில் சிறு அளவைக் கூட உலகினுக்குத் தர முடியவில்லை. அப்படித்தான் நம் மக்களுக்கு அருகிலில்லாது அறிவுலகத்தில் இயங்கும் அறிஞர் பெருமக்களும் தாரகைகளைப் போன்றவர்கள்" (மக்களைச் சாராத புத்திஜீவிகள்; 7) எனச் சாடுகிறார்.

யாதொன்றையும் விமர்சிக்கும் சமரசமற்ற துணிவுப் போக்கினை, தான் சார்ந்தியங்கிய இடதுசாரி இயக்கம் வழியாகவே பெறுகிறார். ஓரிடத்தில் அவ்வியக்கத்தின் சிறப்பை,

**எங்கள் இயக்கம்**
**ஓரிரு வழிகளில்**
**காலை வானில் காரிருள் பிளந்து**
**செங்கொடி எழும்பும் சூரியன் போன்றது**
**தொடரும் விடிவை வருமுன்கூறும்**
**இத்துணை மங்கிய ஒளியில் உலகம்**
**விடியுமோ எனச் சிலர் ஐயுறினும்**
**உறுதி கொண்டு வளர்ந்து புதிய**
**நாள் செயும் வகையில்**
**எங்கள் இயக்கமும் எழும் சூரியனும்**
**ஒன்று போல்வன!**
**ஒன்று போல்வன!! (எங்கள் இயக்கம்; 9)**

என்ற கவிதையில் விளக்குகிறார். அத்துடன் தன்னைக் கவிதை எழுதத் தூண்டியதும் மார்க்சியச் சிந்தனையே என 'நதிக்கரை மூங்கில்' எனும் புத்தகத்தின் முன்னுரையில் கூறியதாக இத்தொகுப்பின் முன்குறிப்பில் எம்.ஏ. நுஃமான் சுட்டியுள்ளார். குறிப்பாக, எனது கவிதைகள் எவரையும் மகிழ்விக்கும் நோக்குடையன அல்ல; என் கருத்துடன் எவரும் உடன்பட வேண்டியதும் தேவையல்ல என்கிறார் சிவசேகரம்.

இலங்கை, தமிழகம் மற்றும் புகலிடமாகச் சென்ற சில நாடுகளில் வசித்து வந்தவர், அங்கு வெளியாகிவரும் சிறு சஞ்சிகைகளில் தனது பங்களிப்பைச் செலுத்தியுள்ளார். கட்டுரைகளின்வழி காத்திரமான விமர்சனங்களை எழுப்பியதைப் போலவே கவிதைகளையும் இயற்றி வந்துள்ளார். தீவிரமான சமூகநீதி அரசியலே இவர் கவிதையின் பாடுபொருள் என்றாலும் அதனை அணுகும் உத்திகளில் மட்டும் பல்வேறு மாற்றங்கள் காணப்படும். அவ்வகையில் வரலாறு காட்டும் தொன்மப் படிமங்களை விமர்சித்து, வரலாற்றைக் கட்டுடைக்கும் பாணியிலும் சில கவிதைகள் அமைந்துள்ளன. மகேசருக்குத் தீர்ந்தது (106), அகலிகை (26), ஏகலைவ பூமி (140) போன்ற கவிதைகள் அவ்வகைமையைச் சார்ந்தவையாகும். இதுபோன்ற தொன்மக் கட்டுடைப்புகள் சிவசேகரத்தின் சமூகவியல் பார்வைக்குச் சான்றாகி நிற்கின்றன.

அதிசயங்கள் (38) எனும் தலைப்பிட்ட கவிதை, நகர்மயமாக்கலால் கண்ட புதுமைகளையும் விளைவுகளையும் பேசுகிறது. அதேவேளை உன் மண்ணும் என் மண்ணும் (41) என்ற கவிதை, சொந்த மண்ணில் காணப்படும் பிரிவினை குறித்துப் பேசுகிறது. இங்ஙனம் தமிழ்ச் சமூகத்தின் ஒற்றுமையைப் பறைசாற்றிய ஜல்லிக்கட்டுப் போராட்டத்தை நினைவு கூரலாம். அதுநாள் வரையிலும் இது 'எனது மண்' எனப் பிரிவினை பேசியவர்கள் பொதுவானதொரு பிரச்சினை வரும்போது, இது 'நமது மண் - ஒன்றிணைவோம்' என்பர். மாடு பிடித்தல் தமிழனின் வீரத்திற்கு அடையாளம்; அதைக் காக்க ஒன்றிணைவோம் எனக் கூக்குரலிட்டு அனைத்துத் தமிழர்களையும் ஒருசேர அழைத்தவர்கள், சாதிப் படிநிலையில் கீழ்நிலையிலுள்ள சாதியைச் சேர்ந்தவன் மாட்டை அடக்கிவிட்டான் என்றதும் அவனைக் கொலை செய்யும் அளவிற்கும் துணிவதுதான் மிகப்பெரும் அபத்தம். அதுபோலத்தான் இம்மண் யாருக்கானது எனக் கேட்கிறார்.

**நீ கூறும் மண்**
**அதனை உழுபவனின் மண்ணென்றால்**
**அவனுக்கே சேரட்டும்**
**முன்னாலே நிற்கிற ஆண்டைகளின் பங்கென்ன?**

ஒரு கவிதையின் சிறப்பு என்னவென்றால், மிக இயல்பாக நம்முடன் பொருந்திப்போவது தான். அவ்வகையில் உழுபவனே நிலத்திற்குச் சொந்தக்காரன் எனப் பொதுவுடைமை பாடிய கவிஞர் தமிழ்ஒளி போன்றே சிவசேகரமும் தனது கவிதையைக் கட்டமைக்கிறார். நபர்கள் வெவ்வேறாயினும் இருவரின் சிந்தனை ஒன்றுபட்டதற்கு அவர்கள் பின்பற்றிய இடதுசாரி இயக்கமே முக்கியக் காரணமாகும்.

பெரும்பாலும் இயற்கை வர்ணனைகளின் ஊடாகவே வாழ்வின் அர்த்தப்பாடுகளைப் பேசுகிறார். கவிதையை வாசிக்கும்போது, இயற்கை அழகு பற்றி பேசுவது போலத் தெரிந்தாலும் அதன் உள்ளே பூடகமான அரசியல் பதிவினையே கையாண்டிருப்பார். மேலும் 'பகடி' வகைக் கவிதைகளும் இதனுள் அடக்கம். பேரில் என்ன இருக்கிறதாமோ (45), பாட்டன் பரம்பரை (48), காரணங்கள் (53) போன்றவை அவ்வகையின. அதற்கு ஓர் எடுத்துக்காட்டாய்,

**பலநூறு ஆண்டுகள் முன் பண்ணிவைத்த**
**கோபுரத்தை**
**அண்ணாந்து பார்த்து அதை அதிசயித்து**
**உன் மனதுள்**
**பாட்டனுக்குப் பாட்டனுக்குப்**
**பாட்டனுக்குப் பாட்டனெவன்**
**பண்ணியவன் என்றெண்ணிப் பரவசித்து நிற்பவனே**
**பழைய பரம்பரையில் பாட்டன்மார் பலபேர் காண்**
**கல்லுடைத்த பாட்டன்மார் கல்சுமந்த பாட்டன்மார்**
**பேருனக்குத் தெரியாது**
**ஆராரோ தேரேறி வீதிவலம் வருவதற்காய்க்**
**கையிழந்த பாட்டன்மார் கண்ணிழந்த பாட்டன்மார்**
**காலொடிந்த பாட்டன்மார் கதையுனக்குத் தெரியாது**
**கதைமுடிந்த பாட்டன்மார் கணக்குனக்குத் தெரியாது**
**கோபுரத்தில் பேர்பொறித்துக்**
**கொலுவிருந்த மன்னரிடை**
**பாட்டன் உனக்கொருவன் எவனிருப்பான்**
**எண்றெண்ணிச்**
**செல்லரித்த ஏடுகளைத் தேடுகிற பைத்தியமே!**
**பணக்கார உறவுகளைப் பழமையிலும் நாடுகிறாய்**

(பாட்டன் பரம்பரை; 48)

என்ற கவிதையைக் குறிப்பிடலாம்.

1983 - 1997 வரை புலம்பெயர் இலக்கியங்களின் முக்கியமான காலகட்டமாகக் குறிப்பிடப்படுகிறது. அவ்வேளையில் உருவான இலக்கியங்களை மதிப்பீடு செய்கையில், தனது படைப்புகளின்வழி சிவசேகரம் தவிர்க்க முடியாததொரு ஆளுமையாகத் திகழ்வார். இவரது கவிதைகள் அங்கதம், கேலி, துயரம், ஆற்றுப்படுத்தல், இயற்கை வர்ணனை, அதனூடான அரசியல் பேச்சு, ஆதிக்கத்திற்கெதிரான கோபம், விடுதலை உணர்வு, மனிதம் பேசுதல், தீண்டாமை எதிர்ப்பு எனப் பல கருப்பொருள்களைத் தாங்கி நிற்கிறது. இப்புத்தகத்தின் முன்னுரையில் கூட, சிவசேகரம் கவிதைகளின் அழகியல் குறித்து விரிவாகப் பேசப்படவில்லை எனக் குறைபட்டுள்ளனர். இனிவரும் காலங்களில் அக்குறையை நீக்குவதற்கு இத்தொகுப்பு முழுமையாக உதவிபுரியும்.

மதத்தின் பெயரால் நடக்கும் பல்வேறு வன்முறைகளையும் சில கவிதைகள் எடுத்துரைக்கின்றன. அதற்கு உதாரணமாக நத்தார் நாள் வெறுவயிற்றில் பெரிய வெள்ளிக்கிழமை நினைவுகள் (78) எனும் கவிதையின் ஒருபகுதி பின்வருமாறு:

**ஒரு கன்னத்தில் அறைந்தவனுக்கு**
**மறு கன்னத்தைக் காட்ட**
**நம் குழந்தைகளின் முகத்தில் கன்னங்கள் இல்லை -**
**குழிகள் இருக்கின்றன**
**சிலுவை ஏறி அலுத்ததனால்**
**சிலுவை ஏற்றுகிறவர்களைச்**
**சிலுவை ஏற்றப் போகிறோம்**
**பரமபிதாவுக்கு**
**இனி ஒரு நாளும் தன் குமாரன் எவனையும்**
**சிலுவையில் அறைபடப்**
**பூமிக்கு அனுப்பும் அவசியம் ஏற்படாது**

என்பதன்வழி தனது தலைமுறைக் கோபத்தை வெளிப்படுத்துகிறார். போர்ச் செயல்பாட்டை வெறுத்து மனிதத்தை நிலைநாட்டுவதே அவரின் இயல்பாக இருந்துள்ளது. போரினால் கண்ட பல்வேறு துயரங்களும் அதன்மீதான ஆற்றாமையும் கோபமுமே அவரது பல கவிதைகளிலும் வெளிப்படுகிறது. ஏனெனில் போரின் கோரமுகத்தைக் காட்டாத ஈழத் தமிழ்ப் படைப்பாளிகளைக் காண்பது அரிது; அவர்களுள் சிவசேகரமும் விதிவிலக்கல்ல. அவ்வகையில்,

**புத்தரைக் காண விஹாரைக்குப் போனேன்**
**கண்களை ஏன் தாழ்த்தியிருக்கிறீர்கள்**
**எனக் கேட்டேன்**
**என் பேரால் நடக்கும் எதையுமே**
**காண மனமில்லை என்றார்**
**கைகளைக் கட்டியிருந்தால் ஆகுமோ என்றேன்**
**விரித்த கைகளில்**
**அரசாங்கம் துவக்கை வைத்துவிடுமே என்றார்**

(199)

என்ற கவிதை இடம்பெற்ற 'போரின் முகங்கள்' என்கிற கவிதைத் தொகுதி முக்கியமான இடம் வகிக்கிறது. இது ஈழத் தமிழர்களின்

போர்க்கால வலிகளை எடுத்தியம்புகிறது. அதைப்போலவே போரும் அமைதியும் (208) என்ற கவிதையும் 'முட்கம்பித் தீவு' என்கிற கவிதைத் தொகுப்பும் போரின் பல்வேறு அவலங்களைப் பேசுகிறது. இத்துடன் ஆள்வோரின் அதிகாரச் சார்பை விமர்சித்தல், விடுதலைப் புலிகளின் அரசியற் செயல்பாடு குறித்த கவிதைகளும் இடம்பெற்றுள்ளன.

சட்டமும் சமுதாயமும் (266) எனும் கவிதையில், பஸ் மோதி பெண் ஒருத்தி இறந்ததால் மக்கள் ஒன்றுசேர்ந்து பஸ்களை அடித்து நொறுக்கினர். இதனை அதிகாரப் பின்புலம் சார்ந்தவர்கள், "மக்கள் சட்டத்தைத் தம் கையிலெடுப்பது தவறு" என கண்டிக்கின்றனர். ஆனால், உண்மையிலேயே மக்கள் சட்டத்தைக் கையிலெடுத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என அதிகாரத்தின் ஒருபக்கச் சார்பைக் கோடிட்டுச் செல்கிறார். மேலும் உலக நாடுகளின் போக்குகள், வல்லாதிக்க எதிர்ப்பு, நுகர்வுப் பொருளாதாரச் சிந்தனை, இயற்கைப் பேரிடர்களான சுனாமி, கொரோனா குறித்த கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. இவைதவிர காதல் குறித்த பதிவுகளாக இன்னும் ஒரு காதலின் கதை (182), நினைவழித்தல் (256) போன்ற கவிதைகளைக் கூறலாம். ஆனால், இது நாம் வழக்கமாக எதிர்பார்க்கும் காதல் கவிதைகளிலிருந்து மாறுபட்டது.

இத்தகைய போக்குகளினூடே பெண் விடுதலை, பெண் சுதந்திரம் முதலிய பெண்ணியக் கருத்துகளையும் பேசத் தவறவில்லை.

**அச்சம் அணிகலனோ**
**மடமை மணிமுடியோ**
**நாணுதலே பெண்மையோ**
**தளர்நடையும் மருள்விழியும்**
**துடியிடையும் கொடியுடலும்**
**ஆண்குலத்தின் வேட்கைக்காய் அமைந்ததுதான்**
**பெண்குலமோ**
**கற்பும் அறநெறியும் எல்லார்க்கும்**
**பொதுவென்போம்..**

(புதிய படிமம்; 88)

என்ற மேற்காணும் சில வரிகள் பெண் என்பவள் எவ்வகை இலக்கணங்களுக்கு உட்பட்டவளாய் இருத்தல் வேண்டுமெனச் சமூகம் இதுவரை கட்டமைத்திருந்த பார்வையைத் தகர்த்தெறியும். கற்பு என்ற கருவியால் பெண்ணை அடக்கியாளும் தன்மையை மாற்றி, அதனைப் பொதுவில் வைப்போம் என்கிறார். இனி பெண்களைக் கற்பினை வைத்து ஆண் சமூகம் சோதிக்க முற்பட்டால்,

**உடன்கட்டை ஏற எவனாவது ஆண்பிள்ளை**
**ஆயத்தமா என்று கேளுங்கள்**
**அவனது கற்பைப் பரீட்சிப்போம்**

(கற்பு பற்றிய ஒரு பாடம்; 181)

என்கிற பழமைவாதச் சிந்தனையை அதன்போக்கிலேயே அடித்து விரட்டுகிறார். மேலும் காதல், பாசம், அன்பு எனும் பெயரில் பெண்ணை அடக்குவதை, அவன் என்னை நேசிக்கிறான் (173) என்ற கவிதையில் விமர்சிக்கிறார். அதில் எப்போதும் கண்ணே, மணியே, கரும்பே எனக் கொஞ்சினாலும் சிறகு செதுக்கிக் கூண்டில் இருத்தி அழகு பார்க்கும் கிளி போல பண்பாட்டுப் பாடம் எடுக்கும் ஆண்களின் இயல்பை ஒரு பெண்ணின் குரலாகவே விவரிக்கிறார். இது ஒருபுறமிருக்க, பெண்ணியக் கருத்தினால் ஆண்களின் அடக்குமுறையை விமர்சித்த அதேவேளையில் பெண்ணியவாதி என்பவரது நிலைப்பாடு எத்தகையதாக இருக்க வேண்டும் எனவும் சுட்டிச் செல்கிறார். தொழிற்பெயர் (290) எனப் பெயரிட்ட கவிதையில், விபச்சாரிக்குப் பாலியல் தொழிலாளர் என்று தொழில்முறையில் பெயரிட்டழைக்க வேண்டும். ஒரு பெண்ணியவாதி, அத்தொழிலாளியைத் தனது கணவனுடன் உறவிலோ அல்லது தனது மகனுக்கு மனைவியாகவோ இருக்கச் சம்மதிப்பாரா என்று வினவவும் தவறவில்லை. இப்படியான காத்திரமான எழுத்துகளைத் தான் சிவசேகரத்தின் இக்கவிதைத் தொகுப்பு வெளிக்காட்டுகிறது. பொழுதுபோக்கிற்கு எழுதியதாக எதுவொன்றையும் அவரது படைப்புகளில் சுட்டிச் செல்ல முடியாது. தான் கண்ட வலிகளையும், காண வேண்டிய மாற்றங்களையுமே முழுக்க முழுக்கப் பாடுபொருளாக்கியுள்ளார்.

இவ்வாறான நவீன கவிதை வடிவங்களோடு, பிற வடிவ முயற்சிகளையும் தனது கவிதைகளில் கையாண்டுள்ளார். அவற்றுள்,

- சந்த நயம் வருமாறும் (சுற்றாடலுக்கு ஒரு எழுச்சிப் பாடல்; 153) சிந்து, கும்மி போன்ற பாடல் (குன்றத்துக் கும்மி; 155, பௌத்தத் திருநாடே; 302) வகையைச் சார்ந்தவையாகவும் சில உள்ளன.
- பஞ்சமர் பாட்டு (92), நாடற்றார் பாடல்கள் (359) போன்றவை நாட்டார் இலக்கியத்தின் பாடல்களைத் தழுவியது போல் அமைந்துள்ளன.
- கட்டுரை வகைமையினதாக பணங்காய்ச்சி மரம் (215), துருவன் (243), கடத்தல் பற்றிய ஒரு கதையாடல் (259), மயிர்க் கொட்டி (288), அமைதி வரும் போது (300), வாக்குக் கடதாசியைச் சரிவரப் பயன்படுத்துவது எப்படி? (374), ஆட்டமும் விதிகளும் (406) போன்ற கவிதைகளைக் குறிப்பிடலாம்.

- *பரிசோதித்தல் முயற்சியாக, பச்சோந்தி: ஒருபுறம் (232), பச்சோந்தி: மறுபுறம் (234) என்ற கவிதைப் பகுதி இடம்பெறுகிறது. இது தமிழ் இலக்கியச் சூழலில் சிறந்தது மரபுக் கவிதையா? புதுக்கவிதையா? என்கிற சிக்கல் எழுந்த வேளையில் முதலில் மரபாக எழுதப்பட்டு, அதன் பின் சொற்களைப் பிரித்து புதுக்கவிதையாக்கித் தோற்றமளிக்குமாறு உருவாக்கப்பட்டுள்ளது.*

இதுபோன்ற பல வடிவங்களில் ஆதிக்கத்திற்கெதிராகத் தனது கவிதைகளைப் படைத்தளித்துள்ளார் பேராசிரியர் சிவசேகரம். தேசிய கலை இலக்கியப் பேரவையின் முயற்சியினாலே வெளிவந்துள்ள இக்கவிதைத் தொகுப்பு தமிழ்க் கவிதைப் பரப்பில் பெரும் தாக்கத்தை உண்டாக்கக் கூடியது. இவ்வாறு அடக்குமுறைக்கு எதிராக வலிமைமிக்க ஆயுதமாக ‘எழுத்தினை’க் கையாண்ட சிவசேகரம், பின்வரும் (இந்த எழுத்து; 134) கவிதையில் அதன் உயிர்ப்பினை அடிக்கோடிடுகிறார். ஒருவகையில் அதுவே அவரையும் அவரது அரசியல் நிலைப்பாட்டையும் விளங்கிக் கொள்ள வெளிப்படும் சிறந்த குறிப்பாக இருக்கிறது.

ஓ மதிப்பீட்டாளரே
பிறப்பவை யாவும் இறப்பது உறுதி
எனவே மீண்டும்
அடித்துச் சொல்கிறேன்
இந்த எழுத்து
கற்பகதருவிற் காகிதஞ் செய்து
அமிர்தங் குழைத்து அச்சிற் பதித்த
அமரகாவியம் இல்லவே இல்லை
மனித இனத்தின் மேன்மை பேண
ஒடுக்குமுறைக்கு எதிராய் இணைந்து
ஓங்கி உயருங் கைகளில் வாளாய்
நீளுந் துவக்காய்
அல்லது அதனுட் சின்னத் துணிக்கையாய்
விரையுங் கால்களிற் செருப்பின் தோலாய்
கொடுமைக் கெதிராய்க் கிளர்ந்தெழும் போரிற்
கோபக் கனலின் சிறுபொறி ஒன்றாய்
ஒரு கணப் பொழுதே உயிர்த்து மரிப்பினும்
இந்த எழுத்தின் அச் சிறு உயிர்ப்பு
எந்த அமர நிலையினும் உயரும்..

●

கட்டுரையாளர், முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் இலக்கியத்துறை, மெரினா வளாகம்,
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை

**உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!**








**உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

**அக்டோபர் மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5403 | 2668 | 3997 | 4091 | 5366 | 1911 | 6347 | 5802 | 2664 | 7792 |
| 2444 | 4094 | 4076 | 4092 | 5367 | 2442 | 6346 | 5801 | 2663 | 7793 |
| 5509 | 7977 | 4078 | 4093 | 1910 | 2443 | 2564 | 5803 | 2665 | 2071 |
| 4098 | 3984 | 4079 | 4095 | 5505 | 2445 | 7978 | 5804 | 2446 | 2661 |
| 5503 | 3985 | 4080 | 4096 | 3728 | 3729 | 7835 | 5808 | 2070 | 1533 |
| 1536 | 3986 | 4081 | 4097 | 5402 | 1912 | 7833 | 5807 | 2170 | 1534 |
| 1537 | 3987 | 4082 | 2069 | 979 | 2439 | 7834 | 5805 | 2171 | 1542 |
| 2385 | 3988 | 4083 | 5361 | 1703 | 5508 | 6338 | 5806 | 2172 | 1543 |
| 5362 | 3989 | 4084 | 6872 | 2437 | 128 | 6339 | 2565 | 2173 | 1544 |
| 1535 | 3990 | 4085 | 3999 | 2438 | 6342 | 6340 | 8813 | 2174 | 1545 |
| 3998 | 3992 | 4086 | 2795 | 4099 | 6343 | 6341 | 8814 | 2175 | 7836 |
| 1540 | 3993 | 4087 | 4268 | 4000 | 6344 | 1541 | 1704 | 2176 | |
| 1539 | 3994 | 4088 | 4270 | 2387 | 6345 | 2667 | 1705 | 2177 | |
| 2441 | 3995 | 4089 | 4269 | 2388 | 6348 | 5810 | 1706 | 2178 | |
| 2440 | 3996 | 4090 | 986 | 4100 | 6349 | 5809 | 2666 | 7791 | |

தனி இதழ் ₹ **45.00** / ஆண்டு சந்தா ₹ **540.00**
மாணவர்களுக்கு ₹ **500.00**, / ஆயுள் சந்தா ₹ **5400.00**
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ **4050.00**

*சந்தாத் தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

**கிளைகள்**

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 2344106, 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஒசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 - 234990.



கட்டுரை

# வைணவப் பெருஞ்சமய நெறியில் கரைந்த நாட்டார் மரபு

த. குணாநிதி

மனித இனம் தோற்றம் பெற்றது முதலே தான் எதற்கெல்லாம் பயந்தானோ அதனை வணங்கும் நிலைக்கு ஆட்பட்டுள்ளான். இயற்கையாக நிகழும் இடி, மின்னல், மழை, புயல், காற்று ஆகிய அச்சம் தரும் ஆற்றலிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளத் துவங்கிய கால முதலே நம்பிக்கை சார்ந்த மரபுகள் இழையோடிள்ளன. மனித இனத்தவரிடையே சமயம் பற்றிய நம்பிக்கை முதன் முதலில் ஏற்பட்டிருக்குமாயின் அது இயற்கைப் பொருள்களின் ஆற்றலில் நம்பிக்கை கொண்டு, அப்பொருள்களை வழிபட்டதன் மூலமே ஏற்பட்டது என்கிறார் ஜெர்மானிய அறிஞர் மாக்ஸ்முல்லர். *(பக்தவத்சல பாரதி : 2005: 263)*

புராதன கால மனித சிந்தனைகளின் மாறுவேடங்களாகத் தொன்மக் கதைகள் விளங்குகின்றன. புராதன கால மனிதர்கள் இயற்கை ஆற்றல்களான மழை, காற்று போன்றவற்றைப் பற்றிய தங்கள் புரிதல்களைச் சடங்குகளாக வெளிப்படுத்தினர். இச்சடங்கிற்குத் துணை செய்யும் பேச்சுக்களே தொன்மக் கதைகள் என்று ஜார்ஜ் தாம்சனின் கருத்தை எடுத்தாளும் முத்தையா சடங்குகளிலிருந்தே பெருஞ் சமய நெறி உருப் பெற்றதாகக் கருதுகிறார். *(முத்தையா: 2013: 77)*

தொன்மைச் சமயமானது ஆவி வழிபாட்டிலிருந்தே உருவானது என்கின்றனர் மானிடவியலாளர்கள். ஆவிகளின்பால் ஏற்பட்ட நம்பிக்கையிலிருந்து சமயம் தோன்றியது என்கிறார் டைலர். *(பக்தவத்சல பாரதி : 2005: 253)* இன்றுள்ள பெருஞ்சமயங்கள் அனைத்தும் ஆவியுலக நம்பிக்கை என்னும் நிலையைக் கடந்தே வளர்ச்சி பெற்று வந்துள்ளன.... ஆவி வழிபாடு என்ற அடிநிலையில் தோன்றிய சமய நம்பிக்கை, அதன் படிமலர்ச்சி நிகழ்வில் இறுதியாக ஒரு கடவுள் வழிபாடு என்ற நிலையை அடைந்தது. *(பாரதி: 256: 257)*

சமயத்தைப் பற்றிப் பேச வந்த துர்க்ஹைம், சமயமானது சமூகம் சார்ந்தது என்றும் சமயத்திற்கான நடத்தை முறைகள், வழிபாட்டு முறைகள், சடங்குகளை, உணர்வுகளை மக்கள் சமூக வாழ்க்கையிலிருந்தே பெற்றார்கள் என்கிறார். *(பாரதி : 2005: 264)* தமிழர்களின் சமய நம்பிக்கை இன்றும் இடைப்பட்ட நிலையிலேயே உள்ளது. சமயம் என்று தோன்றியது குறித்த ஆராய்ச்சிகளும் முடிந்த முடிபுக்கு வரவில்லை. எனினும், தொல்லியலாளர்களின் முடிவின்படி 70,000 - 10,000 ஆண்டுகளுக்கு முன்னரே இந்நம்பிக்கை வேர்விட்டுள்ளது என்கின்றனர். *(பாரதி : 2005: 251)*

தமிழகத்தில் மட்டுமல்லாமல் உலகின் பல இடங்களிலும் ஆவி வழிபாடு - பல கடவுள் வழிபாடு - ஒரு கடவுள் வழிபாடு என்ற மூன்று பருவ நிலையிலான படிமலர்ச்சியில் கடவுள் வழிபாட்டினைக் கொண்டுள்ளார்கள். மேலும், இதில்

இரண்டு அடிப்படையான போக்குகள் உண்டு. ஒன்று வைதிக நெறி. மற்றொன்று நாட்டார் நெறி. வெகுசன மக்களின் சமய நம்பிக்கையில் தாந்திரீகம் ஒரு முக்கியக் கூறாக உள்ளது. தாந்திரீகத்தில் மதுவும் பெண் தெய்வங்களும் சடங்குகளும் இன்றியமையாதன. வைதிக நெறியின் செல்வாக்கின் காரணமாக சமஸ்கிருத வயமாக்கல் ஏற்பட்டு மதுவுக்குப் பதிலாகப் பால் அந்த இடத்தைப் பெற்றுள்ளது. மதுவின் எச்சமாகவே பால் இடம்பெறுகிறது. மந்திரத்தின் தன்மைகளை அறிவதற்குச் சடங்குகளை நோக்க வேண்டும். பெரும்பாலும் சடங்குகள் வாயிலாகவே மந்திரம் செயல்படுகிறது. (பாரதி: 2005 :250) இந்தப் புரிதலை அந்தந்தப் பகுதிகளில் நிலவிய பூர்வகுடி மக்களிடமிருந்தே பெருஞ்சமயங்கள் உறிஞ்சியுள்ளது.

விவசாயப் பெருக்கத்தின் காரணமாகத்தான் நம்மிடையே பலதரப்பட்ட வழிபாட்டு மரபுகள் உருப்பெற்றன. புராதன சமுதாயத்தில் மண் வெட்டி உழுகின்ற பணியானது பெண்களுக்கே உரித்தானதாக இருந்துள்ளது. அங்கிருந்தே வழிபாட்டு மரபுகள் உருப்பெற்றன என்று அறிந்த வேளையில் மேய்ச்சல் பகுதியிலிருந்தே கடவுள் கோட்பாடு உருவாகியதையும் உணர முடிகிறது. (கோசாம்பி: 2011:101) இந்தப் படிநிலை வளர்ச்சியிலேதான் உருவ வழிபாடு தோற்றம் பெற்றுள்ளது. இப்படி உருவான தொல்தெய்வ மரபில் நிறுவன சமயமான வைணவப் பெருஞ்சமயத்தில் பல நாட்டார் மரபுகள் கரைந்துள்ளதைச் சுட்டிக் காட்டுவதாக அமைகிறது இக்கட்டுரை.

சிந்துவெளி நாகரிகத்திலும் பெண் தெய்வக் கோட்பாடு மேலோங்கியுள்ளன. தந்தை வழிச் சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் வேதங்களில்கூட உஷை, மேனகை, அப்சரசுக்கள் (தேவ மாதர்) உள்ளிட்ட மரபுகள் இருந்துள்ளன. அடிப்படையில் அதிகமான மக்களால் வழிபடப்படுகின்ற தெய்வமாகப் பெண் தெய்வங்கள் இருந்துள்ளன. முதலாம் இராசராசனின் காலத்திலேயே தஞ்சாவூர்ப் பகுதியில் காணப்பட்ட பல பெண் தெய்வங்கள் சிவனோடு தொடர்புபடுத்தப் பட்டதோடு, இராசேந்திரன் காலத்தில் வட்டாரத் தெய்வங்கள் அம்மன் தெய்வங்களாக மாற்றப்பட்டன. அம்மன் கோயில்களில் சிவன் புகுத்தப்பட்டது. (முத்தையா: 2013: 194, 50) சைவ, வைணவ சமயங்கள் இறைச்சி உண்கின்ற தெய்வங்களை உண்ணாதிருக்கும் முயற்சி மேற்கொள்கையில் நாட்டார் சமயம் வைதிகச் சமயத்தைப் பலி கேட்கிற, இறைச்சி உண்கிற சுடுகாட்டில் பிணம் தின்னும் தெய்வமாகக் காபாலிக மரபாகச் சிவனை மாற்றியது. அங்கு வழங்கப் படுகின்ற திருநீறு நாட்டார் மரபில் எல்லாத் தெய்வ வழிபாட்டிலும் இடம் பெறுகிறது என்கிறார் தொ. பரமசிவன். மும்மூர்த்திகளில் ஒருவனான பிரம்மாவை விருமாண்டியாக மதுரை மாவட்ட மக்கள் வழிபடுகின்றனர்.

**குலக்குறிகள்**

குலக்குறி பற்றிய நம்பிக்கை பெரும்பாலும் பழங்குடிச் சமுதாயங்களில் அதன் முழுத் தன்மையுடன் காணப்படுகிறது. பழங்குடியல்லாத சமூகங்களில் இத்தன்மை முழுமையானதாகவோ எச்சங்களாகவோ காணப்படுகிறது. (பாரதி.265) இங்கு குலக்குறியானது தாவரமாகவோ, விலங்காகவோ, இயற்கைப் பொருளாகவோ அமைந்துள்ளது. தன்னைச் சுற்றியிருக்கும் அஃறிணை உயிர்களையும் தெய்வமாக, தன்னைக் காக்கும் சக்தி பெற்றதாக நம்பியுள்ளான். இது தமிழகத்தின் தொல்குடி மரபான வேளிர் குடிகளுக்கும் பொருந்துவதாக உள்ளது. முல்லைக்குத் தேர் கொடுத்ததும் மயிலுக்குப் போர்வை அளித்ததுமான செயல்பாடுகளை நோக்கும்பொழுது அவை அனைத்தும் அவர்களின் குலத் தெய்வமாக இருந்துள்ளன. முல்லை, மயில், நெல்லி ஆகியவை இனக்குழு மரபினரால் வணக்கத்திற்குரியவையாக இருந்துள்ளன என்கிறார் பேரா. தோதாத்ரி. (2010: 4) இயற்கைப் பொருளை வணங்கியதிலிருந்து குலக்குறி தோன்றியுள்ளது. (பாரதி: 267) துர்க்ஹைமின் என்ற மானிடவியலாளர் சமய வாழ்வின் தொடக்க நிலைகள் என்னும் நூலில் *(The Elementary Forms pf Religious Life)* சமயத்தைப் பற்றிக் கூறும்போது, 'இன்றுள்ள சமய நம்பிக்கைகள் அனைத்தும் குலக்குறி *(Totem)* நம்பிக்கையிலிருந்து வளர்ச்சி பெற்றவையாகும்' என்கிறார். (பாரதி: 264)

திருமாலுக்குப் பாம்பு படுக்கையாக உள்ளது. இது ஓர் இனக்குழுவினரின் அடையாளமாக உள்ளது. ஆடு மாடுகளை வளர்த்து, திருமாலை வழிபடு தெய்வமாகக் கொண்ட மக்கள் நாகத்தை வழிபடும் மக்களை வெற்றி கொண்டதைக் காட்டுகிறது. (வானமாமலை: 2020: 90) பாம்பு வணக்கம் எனப்பட்ட நாக வழிபாடு பழங்காலம் முதலே உலகம் முழுவதிலும் காணப்படுகிறது. நாகம் அச்சுறுத்துவதாகவும் செழிப்புத் தெய்வமாகவும் வழிபடப்பட்டுள்ளது. காலனியாதிக்க சமயமான பௌத்த சமயத்தில் புத்தர் நாகர் பழங்குடிகளைத் தன்னுடைய மதங்களுக்குள் இழுத்துள்ளார். (கோசாம்பி: 2008: 258) வேதகாலத்தில் நாக வணக்கம் திராவிடரிடையே இருந்தது என்பதை கில்பர்ட் ஸ்லேட்டரும் சுட்டுகிறார். (1976: 70)

**குலக்குறிகளின் தேவை**

பேராசிரியர் வேலுப்பிள்ளையின் கருத்துப்படி குறிப்பிடுவோமானால் இயற்கை நெறிக் காலத்தில் வாழ்ந்த மனிதன் ஒரு விலங்கின் ஆற்றல் தனக்கும் கிடைத்திட வேண்டும் என்ற இயல்பான எண்ணத்திலேயே இருந்திருப்பான். எனவே, அந்த அடிப்படையிலே அதனைக் குலக்குறியாக ஏற்றுக் கொண்டிருப்பான். மற்றொன்று குலத்தில் ஒற்றுமை ஏற்படுத்துவது. மீனைப் போல தங்கள் குலம் பெருக வேண்டும் என்பதற்காக மீனை வழிபட்டார்கள். உலக முழுவதிலும் நம்பிக்கை சார்ந்து இயங்கிய வேட்டைச் சமூகத்திலும் பயிர்த் தொழிலில் ஈடுபட்டோரிடமிருந்தும் குலக்குறிகள் வளர்ந்துள்ளன. மிகுதியான ஆற்றலும் விருப்பமுமே குலக்குறியின் தன்மைகளாக அமைகின்றன. முல்லை நிலத்தை மையமாகக் கொண்டியங்கிய இனக்குழு மக்கள் மாட்டையும் பசுவையும் குலக்குறியாகக்

கொண்டுள்ளனர். பசவ வணக்கம் மைசூரில் உள்ளது. காளைக்குத் தனிக்கோயில்களும் உள்ளன. (வானமாமலை: 2020: 54)

சிலப்பதிகாரம் எனும் பேரிலக்கியமே பல தொல்தெய்வ வழிபாட்டைப் பறைசாற்றுவதாக அமைந்துள்ளது. ஆய்ச்சியர் குரவை திருமாலின் கூத்து மரபுகளை வெளிப்படுத்துவதைக் காணும்பொழுது அங்கிருக்கிற காடுவாழ் மக்களின் பண்பாட்டியலை உள்வாங்கியவதாகப் புரிந்துகொள்ள முடிகிறது. மக்களின் வழக்காறுகளிலிருந்தே தெய்வப் படிமங்கள் உருப்பெற்று பின்னாளில் பௌராணிக மரபாக ஆக்கப்பெறுவதையும் உற்றுநோக்கமுடிகிறது. சங்க காலத்திலேயே வைதிக, சமண, பௌத்த சமயங்கள் ஆளுமை செலுத்திய கட்டமாகத் திகழ்ந்துள்ளது என்கிறார் மாதையன். (2017: 24)

**அவதாரங்களின் ஆக்கம்**

திருமாலின் பத்து அவதாரங்களுமே பத்து நாட்டார் மரபை உள்வாங்கிய, பழங்குடி மரபினரிடமிருந்து பெற்ற வழிபாடாகவே அறியப்படுகிறது. அடிப்படையில், வைணவ சமயம் என்பது முல்லை நில இனக்குழுத் தலைவன் மாயோனான கண்ணனையும் நீர்மேல் உறங்குகின்ற நீர்த்தெய்வமான நாராயணனையும் விண்ணுலக அதிபதி விட்டுணுவையும் வேளாண் கடவுள் பலராமனைக் கொண்டியங்கிய மரபாகத் திகழ்கிறது. பஞ்ச பூத சக்திகளில் நீராகவே விஷ்ணு கருதப்படுகிறார். பழங்குடித் தெய்வங்களும் அவற்றிற்கான வழிபாட்டு முறைகள், சடங்குகள், நம்பிக்கைகள் உள்ளிட்டவை சமூக வளர்ச்சிப் போக்கில் ஒன்று கலந்துள்ளன. இப்படியான நிலைகளில் இயங்கிய பழங்குடி சமூகம் அரசுகளாக உருவானபோது அவர்களிடம் காணப்பட்ட வழிபாடுகளும் பெருஞ் சமய நெறிக்குள் வந்துள்ளன. (சசிகலா: 2021: 115) சைவ, வைணவ, உள்ளிட்ட பெருஞ்சமய நெறிகள் வளர்ந்தபோது ஆங்காங்கு நிலவுகிற பழங்குடிகளின் வழிபாட்டை உள்ளிழுத்துக் கொண்டன. இதற்கு சமண, பௌத்த சமயங்களும் விலக்கல்ல.

**பாகவதத்தில் இணைந்த அடையாளங்கள்**

கண்ணனின் கதையை விவரிக்கக்கூடிய பாகவதம் திருமால் பத்து அவதாரங்கள் எடுத்தார் என்கிறது. இந்த அவதாரங்கள் பழம்பண்பாட்டில் நிலவியிருந்த பலவித வழிபாட்டு மரபையும் இனக்குழுக்களின் குலக்குறிகளையும் நம்பிக்கைகளையும் இணைத்து உருவாக்கப்பட்டது. தசாவதாரம் என்ற சட்டகத்தை உருவாக்கி திருமாலோடு இணைத்தது வால்மீகி இராமாயணத்திற்கு பிறகு என்று அறிய முடிகிறது. (வானமாமலை: 2020: 57) பழங்குடிகளின் குறியீடுகளான மீன், ஆமை, வராகம்(பன்றி), சிம்மம் போன்றவை வைணவ வழிபாட்டில் இணைத்து விஷ்ணு என்கிற பெருந்தெய்வமாக உருவாக்கப் பெற்றது. யது வம்சத்தில் பிறந்த கிருஷ்ணன் பல இனக்குழுக்களை வென்றதால்தான் பாகவதக் கதைகள் எழுதப்பட்டன என்கிறார் வானமாமலை (2020: 57) எனினும், ஆமை, மீன் ஆகியவற்றிற்குத் தனிக்கோயில்கள் இல்லை. ஆனால், பழங் காலத்திலேயே வராகத்திற்கும் மிகப் பிற்பட்ட காலத்திலேயே நரசிம்ம மூர்த்திக்கும் கோயில் ஏற்படுத்தப்பட்டன. பல்லவ மன்னன் நரசிம்மவர்மன் காலத்தில் வராகப் பெருமாளுக்கு திருவுருவங்கள் புடைப்புச் சிற்பங்களாக அமைக்கப்பட்டன. (வேங்கடசாமி: 2014: 10) இந்த வராகம் பூமியைத் தோண்டும் இயல்புடையது என்றும் வராகத்திடமிருந்தே ஆதிமனிதன் வேளாண்மையைக் கற்றிருக்கிறான் என்பதையும் அறிய முடிகிறது. (சசிகலா: 2021: 115)

கானமர்செல்வி, காடுகிழாள், பழையோள் என்ற அறியப்பட்ட எயினர்கள் வழிபட்ட கொற்றவை சிலப்பதிகாரக் காலத்தில் வடநாட்டு துர்க்கையின் மரபோடு கலந்துள்ளது. சமணர்கள் கொற்றவையை இசக்கி வடிவமாக மாற்றினர். சப்த கன்னிமார்களில் ஒருத்தியான பிராமியையும் சமணம் இழுத்துள்ளது. (சசிகலா: 92)

பௌத்த மரபிலும் சிந்தாதேவி, தாராதேவி, மங்களாதேவி போன்ற தெய்வங்கள் வழிபடப் பெறுகின்றன. உருவ வழிபாட்டை வெறுத்த பௌத்தர்கள் திருவடியையும் தரும சக்கரத்தையும் அடையாளமாகக் கொண்டியங்கினர். பின்னாளில், இந்து சமயத்தைப் பின்பற்றிப் பல பல இனக்குழுக்களுக்குத் தெய்வ வரிசையில் இடங்கொடுத்துள்ளனர். (வானமாமலை : 57)

சங்கப் பிரதிகள் உருப்பெறுவதற்கு முன்பாகவே ஆரிய மயமாதலும் யக்ஞங்களும் தமிழ்ப் பண்பாட்டில் கலந்துவிட்டன. இதிலிருந்து தமிழர்களின் பூர்வீக வழிபாட்டைத் தேடுவது என்பது அவ்வளவு எளிதானதல்ல. தமிழ்த் தேசியம் பேசுபவர்களும் அவைதிக மரபைக் கொண்டு ஆய்வுசெய்பவர்களும் அவரவர்களுக்கான முன்னெடுப்பை முதன்மையாகக் கொண்டு சான்று பகர்கின்றனர். தமிழர்களின் வழிபாடு தாய்த்தெய்வ வழிபாடே என்று நிலை நிறுத்தினாலும் தொல்லிலக்கணப் பிரதியான தொல்காப்பியமும் ஆண் தெய்வங்களை முதன்மையாகக் குறிப்பிடுகிறது. கொற்றவைநிலை அவ்வளவாகக் கண்டு கொள்ளப்படவில்லை. தொல்காப்பியர் காலத்திலேயே தந்தைவழிச் சமூகம் முதன்மைபெறத் தொடங்கிவிட்டது. திணை மரபைப் பலமாகக்கொண்ட செய்யுள்களும் வழிபாட்டு மரபைப் பெரிதாகக் குறிப்பிடவில்லை. மாலிய சிவனிய நெறிகளைக் கலித்தொகை, பரிபாடல் உள்ளிட்டவையே பரக்கக் குறிப்பிடுகின்றன. மேற்குறிப்பிட்ட இப்பிரதிகளின் காலத்தில் ஆரிய மயமாதலோடு சமய நிறுவனமாகச் செயல்படத் துவங்கிய காலமாக நிலை பெற்றுவிட்டன. இக்காலத்தில்தான் விஷ்ணு என்கிற ஆரியத் தெய்வம் தமிழில் திருமால் என்றே அழைக்கப்பட்டார். விஷ்ணுவை மழைத்தெய்வமாகவே வர்ணித்து மேகம், மழை, அருவி, கடல் போன்றவற்றோடு ஒப்புமைபடுத்தி தமிழ்ப் புலவர்கள் பாடியுள்ளனர். திருமாலின் நின்ற கோலம் மேகம்போல இருப்பதாகச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. (சிலம்பு. காடுகாண் காதை. 13-21)

வேதகால விலங்குப் பலி மறைவுற்ற காலத்தில் ஆரியரல்லாத தொல்குடி மக்களினின்றும் புதியதொரு குருதிப் பலிமுறை இடைக்காலத்தில் பரவியது என்றும் அதனை வைணவ சமயத்தினரும் ஆற்றினர் என்கிறார் பசாம். (2016: 459)

தமிழகத் தொல்குடி மக்களின் வளத்தெய்வமாய் இருந்த கண்ணன் வழிபாடானது நாடோடி இடையர் தெற்கிலிருந்து வட நாட்டுக்குச் சென்றபோது கண்ணன் கதை பரவியிருக்கிறது என்ற கருத்து பலமாகவே உள்ளது. (பசாம்: 2016: 459)

தந்தை வழிச் சமுதாயத்தை உணர்த்தும் ரிக் வேதத்திலேயே உஷை, ஊர்வசி, ரோதஸீ உள்ளிட்ட தாய்த் தெய்வங்கள் காணப்படுகின்றன. ஆங்காங்கு நிலவுகிற பெண் தெய்வங்கள் ஆண் தெய்வத்தால் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டு மணமுடிக்கிற வேலையும் நடந்துள்ளது. திருமாலும் சிவனும்கூட இந்த வேலையைச் செய்துள்ளனர். தேவாரப் பதிகங்களில் அதற்கான பல தரவுகள் இருப்பதாகத் தொல்லியல் அறிஞர் பூங்குன்றன் குறிப்பிடுகிறார்.

**கிருஷ்ணனும் தொல் பெண் தெய்வங்களும்**

கிருஷ்ணன் மணந்த பெண்மணிகள் அனைவரும் ஆங்காங்கு நிலவிய தாய்த் தெய்வங்களே என்ற கோசாம்பியின் கருத்து (2011: 83) நோக்கத் தக்கது. தன் கணவனையே பலிகொடுக்கும் தேவதைகளும் இருந்துள்ளன என்பது வியப்பாகவே உள்ளது. கோசாம்பியும் பூங்குன்றனும் இதனைத் தெளிவாகக் குறிப்பிடுகின்றனர். (கோசாம்பி: 2011: 179) காஞ்சிப் புராணம் பார்வதி சிவனைக் கொல்வது பற்றிக் குறிப்பிடுகிறது என்றும் திருவாலங்காட்டில் கணவனைக் கொல்லும் நிகழ்வு நடைபெற்றதைத் தேவாரப் பதிகங்கள் சுட்டுவதாகப் பூங்குன்றன் குறிப்பிடுகிறார். (ரவி வைத்தீஸ்வரன் : 294) இவ்வாறு இந்தியாவில் பரவலாக அறியப்படும் பெண் தெய்வங்கள் அனைத்தும் பல்வேறுபட்ட புராதன நாடோடி மரபுகளிலிருந்து வந்தவை என்பதை அறியமுடிகிறது. ஆரியர்களுக்கு முன்பாகவே அதாவது சிந்துவெளி வாழ்விடங்களை ஆய்வு செய்த சர் ஜான் மார்ஷல் அங்கு தாய்த் தெய்வங்கள் வணங்கப்பட்டு வந்ததற்கான ஆதாரங்களும் உள்ளன என்கிறார். (2011: 83)

**திருமகளும் லட்சுமியும்**

விஷ்ணுவின் மனைவியான லட்சுமி கடலில் பிறந்தவள். அவளுக்கு ரமா, மா (தாய்-லோகமாதா) என்றெல்லாம் பெயர்கள் உண்டு. இவளின் சகோதரன் ஜாலந்தர். ஜாலந்தரின் மனைவி துளசி பிருந்தா. கிருஷ்ணன் பிருந்தாவை மணப்பது பின்னர் வந்த முறையாகும். கால்நடை மேய்ப்பவர்கால தெய்வத்துடன் பெண் தெய்வக் காலத்தை இணைக்கும் ஒரு வழியாக இருக்கலாம் என்கிறார் கோசாம்பி. (2011: 83) கந்தன் தாரகாசூரனை அழிக்கும்போது தேவையான வீரர்களைப் பூத கணங்களிலிருந்து தேர்வு செய்தான். கந்தனுடன் 192 தாய்மார்கள் அப்போரில் கலந்து கொண்டனர். அவர்களில் ஒருத்தி பூதனை. கிருஷ்ணன் அவளுக்கு விஷப்பால் கொடுக்கும்போது கொன்றதாகக் கூறப்படுகிறது. இந்தப் பூதனை அப்பகுதி மக்களால் வழிபடப்பட்ட பெண் தெய்வம் என்று அறிய முடிகிறது. (கோசாம்பி: 2011: 99) ஜாம்பவதி என்பவள் கரடி குலத் தலைவனின் மகளாவாள். போஜர் குலத்திலிருந்து வந்தவள் ருக்மணி. இவ்விருவருமே பழங்குடி சமூகங் களிலிருந்து வந்தவர்கள் (கோசாம்பி: 2018: 203) மாசோபன் என்கிற மகிஷாசுரன் என்ற எருமை அரக்கன் துர்கா பார்வதியால் கொல்லப்பட்டான். (கோசாம்பி: 2018: 102)

ஆரிய தெய்வமான இந்திரனுக்கு எதிராக, மாற்றாகக் கருப்புத் தெய்வமான கிருஷ்ணனைத் திராவிட மரபு முன்னிறுத்தியது. வேதத்தில் இந்திரனுக்குப் பகைவனாக கிருஷ்ணன் கருதப்படுகிறான். பாணினியின் கூற்றுப்படி ஆரியருக்கு முந்தைய இனத்திலிருந்து தோன்றியவன் கிருஷ்ணன் என்று அறிய முடிகிறது. (கோசாம்பி: 2018: 39) கண்ணன் என்ற பிராகிருதச் சொல்லே வடமொழியில் கிருஷ்ணன் என்று அழைக்கப்பட்டதாக வையாபுரிப்பிள்ளை குறிப்பிடுகிறார். (1993: 127) இந்தக் கண்ணன் சரித்திரத்தில் பல பகுதிகளையும் தங்களுக்கு உரியனவாகக் கொண்டு கிருஷ்ணனை ஜைன முனிவனாகவும் அரசனாகவும் ஆக்கினர் என்கிறார்.(1993.133) ஆநிரைகளைக் காத்து மேய்ச்சல் நிலத் தலைவனாகக் கருதப்படுபவன் கிருஷ்ணன். சங்க இலக்கியப் பிரதிகள் ஆநிரைகளைக் காக்கும் போரில் ஈடுபட்டு உயிர் துறந்தவனுக்கு நடுகல் எழுப்பும் மரபையும் குறிப்பிடுகிறது. (பூங்குன்றன், ராஜ் கௌதமன்) எனவே, நடுகல் வழிபாடும் வைணவத்தோடு தொடர்புடையதாக உள்ளது. திருவண்ணாமலை ஈஸ்வரன் கோயில் நடுகல் வழிபாடே என்கிறார் பூங்குன்றன். (ரவி வைத்தீஸ்வரன்: 283) அசோகர் காலந்தொட்டே தூணை வழிபடுகின்ற மரபு இருந்துள்ளது. பழங்குடி மக்கள் வானத்திற்கும் பூமிக்குமான வழியென்று நம்பியுள்ளனர். வேள்வித்தூணும் யூபத்தூணும் வைணவ நெறியில் மட்டுமே உண்டு. இங்கிருந்தே நரசிம்ம வழிபாடு உருவானது. (சசிகலா: 116) ஆந்திரப் பழங்குடிகள் வழிபட்ட தெய்வமே நரசிம்மர் எனவும் அறியப்படுகிறது. (செந்தீ நடராசன்:55)

கோயில் எழுப்புவதற்கு முன்பாக மரத்தை வழிபட்டனர். அதனால் ஒவ்வொரு கோயிலும் மரங்களை ஒட்டியே எழுந்ததால் அங்கு ஸ்தல விருட்சங்கள் முக்கியமானதாகப் படுகிறது. மரங்களில் நான் அரச மரம் என்று பகவத் கீதையில் கண்ணன் குறிப்பிடுவதால் அரச மரம் வைணவத்தில் போற்றப்படுகிறது.

**திருமகள் வழிபாடு**

திருமாலின் வலது மார்பில் உறைபவளாக இலக்குமி என்ற திருமகள் கருதப்படுகிறாள்.

அதனால் திருமால் திருவுறை மார்பன் என்றும் ஸ்ரீ வாசம் புரிவதால் ஸ்ரீநிவாசன் என்றும் ஸ்ரீபதியான எம்பெருமான், திருமகள் கேள்வன் என்றெல்லாம் அழைக்கப்படுகிறார். ஆழ்வார்களே திருமகளைப் பாசுரங்களால் போற்றியுள்ளனர். பல்லவர் காலத்திலேயே தாமரைப் பூவில் திருமகள் அமர்ந்திருப்பது போல வராக மண்டபத்தில் சிற்பம் அமைத்துள்ளனர். குப்தர் காலத்திலேயே விஷ்ணுவோடு இலக்குமி இணைக்கப்பட்டதற்கான அடையாளங்கள் உள்ளன. (இராமானுஜ தாதாத்சாரியர்: 226) அடிப்படையில் வளமையின் குறியீடாக, பூமியின் செழிப்புக்குரிய தெய்வமாகவே இலக்குமி ஸ்ரீசூக்தத்தில் குறிப்பிடப்படுகிறாள். ஆங்காங்கு வழிபடப்பட்டுவந்த தெய்வங்கள் இலக்குமி என்ற அடையாளத்துடன் இணைந்து அஷ்டலட்சுமியாக மாற்றப் பட்டிருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. மகிஷாசுரமர்த்தினி, மகாகாளி, ரோகிணி, துர்க்கா, பீமா ஆகியவை இலக்குமியின் அவதாரங்களாகவே திகழ்கின்றன. வேறு வேறு உருவத்திலுள்ள பெண் தெய்வங்கள் இலக்குமியின் அம்சமே என்பது பழைய கருத்தாக நிலவி வருகிறது. அஷ்ட லட்சுமி என்ற தத்துவத்தை இது உருவாக்கியது. மத்தியப் பிரதேசத்தில் இலக்குமியையும் துர்க்கையையும் ஒருவராகவே வைத்து வழிபடுகின்றனர். புத்த ஜாதகக் கதைகளில்கூட இவளை வழிபட்ட செய்தியைக் காணமுடிகிறது. வேதக் கருத்துகளோடு பல்வேறுபட்ட வழிபாட்டு மரபுகள் கலந்ததால் உருவம், ஆயுதங்கள், வாகனங்கள் முதலியன சொல்லப்பட்டுப் பெருந்தெய்வ நெறியான மும்மூர்த்திகளோடு இணைந்து பிரம்மாவின் சக்தி சரஸ்வதி, விஷ்ணுவின் சக்தி இலக்குமி, சிவனின் சக்தி பார்வதி என்று கலந்தன. மொத்தத்தில் பெண் தெய்வ வழிபாடுகள் நிறுவன சமய நெறிக்குள் வந்ததைக் காட்டுகிறது. தற்போது அது வைணவத்தோடு இணைந்த தத்துவமாக மாறியுள்ளது.

பதிற்றுப்பத்து தொடக்கமான இலக்கியம் முதலே திருமகள் திருமாலோடு இணைத்துக் கூறப்பட்டுள்ளாள். களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலுக்கு முற்பட்ட காலத்தில் திருமகள் தனித்தெய்வமாய் இருந்ததற்குச் சான்றுகள் உள்ளன என்கிறர் மாதையன். இந்திய மரபில் ஸ்ரீ தனித் தெய்வமாகவும் பின்னர் சோமன், கந்தன், குபேரன், இந்திரன், பலி, தருமன் போன்ற தெய்வங்களுடன் இணைத்தும் இறுதியில் விஷ்ணுவுடன் ஐக்கியமானாள் என்ற டேவிட் கின்ஸ்லேவின் கருத்து இங்கு எண்ணத்தக்கது. (ஆரோக்கியசாமி: 2019: 44)

**திராவிட மரபில் தாயார் சன்னிதி**

வைணவம் பெண் தெய்வத்தைத் தாயார் சன்னிதி என்று அழைக்கிறது. திருமகளை மார்பில் கொண்ட சோழர் காலத்துச் செப்புப் படிமங்கள் காணப்படுகின்றன. படிமங்களில் 108 வைணவத் தலங்களிலும் அன்னைக்கு முதன்மை கொடுத்து கோயில்களில் வழிபடும் மரபானது பெரிதாகவே உள்ளது. இராமானுசரின் விசிட்டாத்துவிதத் தத்துவத்தில் ஸ்ரீ என்ற அன்னைத் தத்துவம் உள்ளது. அவர்களை ஸ்ரீவைஷ்ணவர் என்றே அழைக்கின்றனர். அன்னை தத்துவத்தைத் தாயார் என்றே வைணவர்கள் அழைத்து வருகின்றனர். அனைத்து வைணவக் கோயில்களிலும் இருக்கும் பெண் தெய்வங்களைப் பெயர் குறிப்பிட்டு அழைக்காமல் தாயார் சன்னிதி என்றே அழைக்கின்றனர். அனபாயினி என்று திருமகளை இராமானுசர் அழைத்துள்ளார். (சசிகலா: 121) அன்னையின் அருளில்லாமல் ஆண் கடவுளிடம் செலுத்தும் வேண்டுதல் செல்லாது என்றும் திருமகள் வழியாகத் திருமாலிடம் சென்றால் கோரிக்கை நிறைவேறும் என்ற நம்பிக்கை பலமாகவே உள்ளது. இதிலிருந்து திருமாலுக்கு இணையாகப் பெண் தெய்வத்தை வணங்கும் மரபு இருக்கிறது. இன்றும் வைணவக் கோயில்களில் ஆசாரியன், தாயார் ஆகியோரை வழிபட்டபிறகே மூலவரான திருமாலைத் தொழுகின்ற மரபு தொடர்கிறது. பெண்கள் பஞ்ச சமஸ்கார என்ற வைணவ தீட்சையின்போது திருமகளின் பெயர்களில் ஒன்றை சூட்டிக்கொள்கின்றனர். ஏழு கன்னிமார்களில் ஒருத்தியாக வைணவி என்ற தெய்வமும் உண்டு. இன்றும் அழகர்கோயில் போன்ற வைணவ ஆலயங்களில் நாட்டார் மரபிற்கான பூசை முறைகள் நடைபெறுகின்றன என்கிறார் தொ. பரமசிவன். சிலப்பதிகாரம்கூட திருமாலின் நின்ற கோலத்தை மேகம் நின்றிருப்பது போன்றதாக உள்ளது என்கிறது. (காடுகாண் காதை 13-21) அழகர் கோயில் மண்டபத்தில் கருட வாகனத்தில் காணப்படும் திருமால் உருவச்சிலை மழையின் குறியீடாக உள்ளது. (முத்தையா: 72) ஆண்டாளும் திருமாலை மேகத்திற்கு உவமைப்படுத்தி வளத்தெய்மாகவே பாடுகிறார். சூரிய நாராயணன் என்று மக்கள் போற்றி வழிபடுவதைக் காணும்போது சூரியனாகத் திருமால் அறியப்படுகிறார்.

வளர்ந்து வந்த குப்தப் பேரரசு சிற்றரசர்களை வென்று பேரரசாக வளர்ந்தபோது விஷ்ணுவோடு கிருஷ்ணன், நாராயணன் ஆகிய தெய்வங்களை இணைத்தனர். பின்னாளில் விஷ்ணு புராணமும் பாகவத புராணமும் எழுதப்பட்டன. சமுதாய இயக்கத்தின் திசை வழி இனக்குழுக்கள் பல இணைந்து நிலத்தில் நிலையான வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முயன்றன. ஆற்றோரங்களில் பெருமளவில் நிலங்களில் நீர்பாய்ச்சி உழவுத் தொழில் நடந்தது. மன்னர்களும் படைத்தலைவர்களும் நிலத்தைக் கைப்பற்றிக்கொண்டு தனி நிலவுடைமை முறையை உருவாக்கினர். பலவிடங்களில் தனியரசுகள் தோன்றின. இப்படியான மரபுகளிலிருந்து உருவானபோது அவர்களின் பண்பாட்டுக் கூறுகள் ஒற்றை அடையாளத்தோடு இணைந்தன என்ற வானமாமலையின் கருத்து நினைக்கத் தகுந்ததாக உள்ளது. (2020: 22)

**துணை நின்றவை**

1. ஆரோக்கியசாமி, சி. 2019. தமிழர் மரபில் தாய்த் தெய்வ வழிபாடும் பெரியாரும், கோவை: விடியல் பதிப்பகம்.
2. இராகவன், அ. சாத்தன்குளம். 2014. தமிழர் பண்பாட்டில் தாமரை, சென்னை: சந்தியா பதிப்பகம்.
3. கில்பர்ட் ஸ்லேட்டர். 1976. இந்திய நாகரிகத்தில் திராவிடப் பண்பு, சென்னை: கழக வெளியீடு.
4. கோசாம்பி, டி. டி. 2011. மாயையும் யதார்த்தமும், சென்னை: அலைகள் வெளியீட்டகம்.
5. .................. 2008. பண்டைய இந்தியா, சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
6. சசிகலா, கோ. 2021. தாய்வழிச் சமூகம்: வாழ்வும் வழிபாடும், சென்னை: தடாகம்.
7. சண்முகம் பிள்ளை, மு. 1996. சங்கத் தமிழர் வாழ்வும் வழிபாடும், சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
8. தனஞ்செயன், ஆ. 2012. குலக்குறியியலும் மீனவர் வழக்காறுகளும், சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
9. தோதாத்ரி, எஸ். 2010. வைணவம் மார்க்சியப் பார்வை, சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
10. நிர்மலா, பெ. 2012. தமிழகச் சிற்பங்களில் பெண் தொன்மம், சென்னை: அலைகள் வெளியீட்டகம்.
11. பசாம், ஏ. எல். 2016. வியத்தகு இந்தியா, கோவை: விடியல் பதிப்பகம்.
12. பரமசிவன், தொ. 2018. தெய்வம் என்பதோர், நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம்.
13. பாண்டுரங்கன், அ. 2018. சங்க இலக்கியம் (சமயம், வழிபாடு, அரசு, சமூகம்), சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
14. பாலுசாமி, சா. 2013. நாயக்கர்காலக் கலைக் கோட்பாடுகள், நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம்.
15. நடராசன், செந்தீ. சிற்பம் தொன்மம், சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
16. பாரதி, பக்தவத்சல. 2005. மானிடவியல் கோட்பாடுகள், புதுவை: வல்லினம்.
17. பூங்குன்றன், ர. 2009. தொல்குடி வேளிர் வேந்தர் சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
18. ................... 2022. வேளிர் வரலாறு, சென்னை: தடாகம்.
19. மாதையன், பெ. புதிய ஆராய்ச்சி, சூலை 2017
20. முத்தையா, இ. 2013. அடித்தள மக்களின் குறியீட்டுப் பயண வெளிகள், சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
21. ரவி வைத்தீஸ்வரன், ஸ்தனிஸ்லாஸ். (தொகுப்பு) 2016. தமிழ்ச் சமூகத்தில் சமயம், சாதி கோட்பாடு. சென்னை: மேன்மை வெளியீடு.
22. ராமானுஜ தாதாசாரியார், 1973. வரலாற்றில் பிறந்த வைணவம், கும்பகோணம்: சார்ங்கபாணி சுவாமி தேவஸ்தானம்.
23. ராஜ்கௌதமன். 2018. ஆகோள் பூசலும் பெருங்கற்கால நாகரிகமும், சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
24. வானமாமலை, நா. 2020. தமிழர் பண்பாடும் தத்துவமும், சென்னை: அலைகள் வெளியீட்டகம்.
25. வையாபுரிப்பிள்ளை ,எஸ். 1993. தமிழர் பண்பாடு கம்பன் காவியம். சென்னை: வையாபுரிப்பிள்ளை நினைவு மன்றம்.
26. வேங்கடசாமி, மயிலை. சீனி. 2014. ஆய்வுக் களஞ்சியம் - தொகுதி 12. சென்னை: இளங்கணிப் பதிப்பகம்.


●


**தமிழ் உதவிப் பேராசிரியர், தருமமூர்த்தி இராவ்பகதூர் கலவல கண்ணன் செட்டி இந்துக் கல்லூரி. சென்னை.**





23.08.2024 அன்று எஸ்.ஆர்.எம். கல்லூரி வளாகத்தில் எஸ்.ஆர்.எம். தமிழ்ப்பேராய விருது வழங்கும் விழா நடைபெற்றது. இதில் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடான 'சிலுவை' எனும் நாவலுக்காக எழுத்தாளர் சுப்ரபாரதிமணியனுக்கு புதுமைப்பித்தன் படைப்பிலக்கிய விருது வழங்கப்பட்டது. எழுத்தாளருக்கு நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.




அக்கானி | ஆசிரியர்: இலா வின்செண்ட் |
வெளியீடு: பாரதி புத்தகாலயம் | விலை: ரூ. 330/-

# சமுதாய மாற்றத்துக்கான நாவல்

இரவீந்திரபாரதி

அக்கானி என்பது சுண்ணாம்பு தடவிய கலயத்தில் வடியும் கள் பனையேறிகள் தொழில்படுவதால் அது சுவைமிக்க பானமாக நமக்குக் கிடைக்கிறது. அக்கானியைக் காய்ச்சி, கருப்பட்டியாக்கிக் கடைகளிலும் சந்தையிலும் விற்பார்கள். இந்த வரும்படியை வைத்தே துன்ப துயரங்களோடு அவர்கள் வாழ்வு நகர்கிறது. இவர்களோடு நெசவு, காய்கறி பயிரிடுதல், மரச்சீனிக் கிழங்கு சாகுபடி செய்வோரும் அவ்வூரில் உண்டு

கத்தோலிக்கக் கிறித்தவப் பின்புலமே முதன்மையாக இருப்பினும், அய்யா வைகுண்டர்சாமி பக்தர்கள் இந்து நிலவுடைமை நாயர்கள், ஆசாரி ஒடுக்கப்பட்டோர். நாவிதர், வண்ணார் என இந்திய கிராமத்தின் பன்மைத்துவத்தைப் பாத்திரப் படைப்பில் காணமுடிகிறது. இத்தகு உற்பத்தி முறைக்கும். சமூக முரண்பாடுகளுக்கும் இடையே இயங்கும் ஊர்தான் பூட்டேற்றி. அது குமரி மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் உள்ளது. அவ்வூரே அக்கானி நாவலின் கதைக்களம். 50 ஆண்டுகளுக்கு முந்தைய பூட்டேற்றி மக்களின் வாழ்வியலை மண் வாசனை கமழ ஒரு வரலாறுபோல் படைத்து, படிப்போரைப் பிரமிக்க வைக்கிறார் இலா வின்செண்ட்.

அங்கு வாழும் மக்கள் சரளமாகப் பயன்படுத்தும் கொப்பன், கொம்மை, மோள குட்டியே மூம்பிலு, செல்லிச்சினம், வந்தினம், போச்சினம், எம்பிடு விளிச்சி, மிருக்குத்தடி திளாப்பு, அருவாத்தி, பயினி பத்தை, தட்டு, வெறுங்கறி, அரச்சியது, சக்கை, வெள. கண்டம் குண்டு, படுவால், கையாலை, சிம்மாடு போன்ற ஏராளமான சொற்கள் இடம்பெற்றுள்ளன. நாயர் மாந்தர்கள் மலையாள மொழியில் பேசுகின்றனர். இம்மொழிநடைகள் மூலம் இருமொழி பேசும் பகுதி பூட்டேற்றி என்பதை அடையாளப்படுத்துகிறார் நாவலாசிரியர். கூடுதலாக அங்கு புழுங்கும் சொலவடைகள். ‘பனையேறப் போனவனும் கடல்ல மீனுபிடிக்கப் போனவனும் திரும்பி உயிரோட வந்தாத்தான் உண்டு’. ‘கல்லிடெ கெழங்கும் எல்லிடெ எறச்சியும் ருசியானது, நாங் எல்லுமுறிய வேலசெய்யணம் நீ பல்லுமுறிய தின்னணம்’ போன்றவை நாவலில் விரவிக்கிடக்கின்றன

குரல்வளை நெரிக்கப்படும் நெருக்கடியிலும் தங்களுக்குப் பிறக்கும் குழந்தைகளைப் படிக்க வைப்பதில் பெற்றோர் விடாப்பிடியாக இருக்கிறார்கள். எதிர்வினை புரிவதன் மூலமே வாழ்வின் ஒவ்வொரு கட்டத்தையும் முன்னெடுத்துச் செல்கிறார்கள். இந்த நகர்வுகளினூடே விடுதலை இறையியலும், இடதுசாரி கொள்கைகளும் இளைஞர்களை ஈர்க்கின்றன. அதன் விளைவுகளை மிக இயல்பாக நாவலில் படிக்க முடிகிறது. இனி கதைக்குள் செல்வோமா?

ஞானமுத்து தெரசம்மாள் தம்பதிக்கு. ரபேக்கா, மைக்கேல் உட்பட நான்கு குழந்தைகள். பனையேறும் ஞானமுத்து உச்சியிலிருந்து விழுந்து இறந்துவிடுகிறார். குடும்பம் நிலைகுலைகிறது. ரபேக்கா படிப்பை நிறுத்திவிட்டு அண்டி ஆபீஸ்

செல்கிறாள். மைக்கேலும் பள்ளி செல்ல முடியாத சூழல். அவனுக்கு உதவிக்கரம் நீட்டுகிறார் ஆசிரியர் ஜோசப்.

தங்கையன் நேசம்மாள் தம்பதிக்குக் கிளாரா, அமலா என இரண்டு பெண்கள். அக்கானி காய்ச்சுவதால் அடுப்பின் புகையும், நெருப்பின் அனலும் நேசம்மாளை ஆஸ்துமா நோயாளியாக்குகின்றன. கிளாரா பள்ளியை மறந்து தாய்க்கு உதவுகிறாள். அமலா தொடர்ந்து படிக்கிறாள்.

சசிகலா ஆதிக்கச் சாதியான நாயர் குடும்பத்துப் பெண். அவளது தாய்மாமன் வாசுதேவன். அவர் வீடு திருவனந்தபுரம். அங்குள்ள கம்யூனிஸ்ட் கட்சியில் இவர் பிரபலமானவர். இவர் மூலம்தான் அம்பேத்கர் மார்க்ஸ் நூல்களைப் படிக்கும் ஆர்வம் மைக்கேலுக்கு ஏற்படுகிறது. சசிகலா மைக்கேலைக் காதலிக்கிறார் இவர்களின் காதல் தென்றலாய் வீசி வாசக உணர்வை மென்மையாக்குகிறது. இந்தக் குடும்பங்களுக்கிடையே நிலவும் அன்பு மகிழ்ச்சி துயரம், கோவம். எதிர்வினைகள் ஆகியவற்றைப் பின்னிப் பிணைத்துச் செல்கிறது நாவல்.

அமலா மைக்கேல், சசிகலா மூவரும் பள்ளிக்குச் செல்லும் நெடுவழி வருணனைகள் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றன நாம் அறிந்திராத செடிகள் கொடிகளில் பூத்துக் குலுங்கும் பூக்களின் வாசனையை நுகரும் அனுபவம் வாசிப்பில் கிடைக்கிறது. வாய்க்கால், குளம், பறவைகள், மீன்கள் பற்றிய சித்தரிப்பில் அழகியல் மிளிர்கிறது. மழை வெள்ளம் பெருக்கெடுக்கும்போது மாணவர்கள் கரையைக் கடக்க முடியாது தவிக்கின்றனர். வெள்ள ஓட்டத்தின் நடுவே நின்றுகொண்டு, மாணவர்களை ஒவ்வொருவராகத் தோளில் சுமந்து செல்கிறார்கள் ஒடுக்கப்பட்ட உழுகூலிகள். அவர்களின் தீண்டலை ஏற்காத குழந்தைகள் இல்லை.

நாவலில் ஆளுமை செலுத்தும் மாந்தர் கிளாரா. காவல்துறையின் முறையற்ற கைது நடவடிக்கைக்கு எதிராக வீதியில் இறங்கிப் போராடி பனைத் தொழிலாளர்களை மீட்கிறாள். தங்கை வயதுக்கு வந்தும் தான் வயதுக்கு வராது, நாட்களை நகர்த்தும் கிளாராவின் மனஉளைச்சல் வாசகர் மனதை உருக்கிவிடுகிறது முகம் தெரியாத ஒருவனால் கருவுற்றுத் தன்மானம் கேள்விக்குறியாகும்போது, பாதிரியாரிடம், "கருவுல கலஞ்சுபோன சிசுக்களும், அப்பன் அம்மா பேரு தெரியாத அனாத பிள்ளெயளும் மனித சமூகத்துக்கு ஆண்கள் செய்த துரோகத்தின் அடையாளங்க" என்று வாதிடுகிறாள். தனித்து வாழ்ந்து. குழந்தை பெற்று, தலைநிமிர்ந்து நடக்கும் அவளது துணிச்சல் அசாத்தியமானது. பனைத்தொழிலாளர்கள் போராட்டத்தில், குழந்தையை முதுகில் சுமந்தபடி முழக்கமிடும் கிளாராவின் ஆவேசம் இன்றைய பெண்களின் குருதியில் கொப்பளிக்க வேண்டிய ஒன்று.

மைக்கேலின் சமூக அக்கறையும், மார்க்சிய வாசிப்பும் இடதுசாரி அமைப்பை நோக்கி அவனைத் திருப்புகிறது. வேனிற்காலத்தில் குடிநீர் தேடியலையும் நாடார் மக்களுக்கு நீர்தர மறுக்கும் நாயர்களின் கிணற்று மதில்களை நண்பர்களோடு சென்று தகர்க்கிறான். பனைத்தொழிலாளர் போராட்டத்தை நடத்துவதிலும், பஞ்சாயத்துத் தேர்தலில் கிளாராவை வெற்றி பெற வைப்பதிலும் மைக்கேல் புரட்சிகர உணர்வோடு செயல்படுகிறான்.

ஆசிரியர் ஜோசப்பின் மரணம் மைக்கேலை தடுமாற வைக்கிறது. அவரது குடும்பத்தையும் தன் தோள் மீது சுமக்கும் கட்டாயம் ஏற்படுகிறது. சசிகலாவின் வற்புறுத்தலால் அவன் வங்கித் தேர்வு எழுதி வெற்றி பெறுகிறான். வங்கிப் பணியில் சேர வேண்டிய அதே நாளில் மறியல் போராட்டம் ஒன்றுக்குத் தலைமையேற்கும் கட்டாயம். எதைத் தேர்ந்தெடுப்பான்? பணியில் சேர்வானா, போராட்டத்துக்குத் தலைமை ஏற்பானா?

பூட்டேற்றி கட்சிக்கிளை பொறுப்பாளர் சேவியர், "ஏழைங்க மேலயும், பாட்டாளிங்க மேலயும் அன்பும் அக்கறையும் வச்சிருக்கிய ஒருத்தரு மார்க்சியத்தையும் லெனினியத்தையும் படிச்சாத் தீப்பிழம்பாயிடுவாரு. அதெக் கூடப்பிறப்புகளின் கரைச்சலோ, காதலியின் கண்ணீரோ தணிக்க முடியாது. ஒரு புரட்சியில் முங்கி எழும்பினாத்தான் தீரும் பாத்துக்களுங்க" என்கிறார். 1970களின் அக்னி முட்டையை நம் நெஞ்சக் கூட்டில் அடைகாக்க வைக்கிறார் இலா வின்சென்ட். அதுவே நாவலின் முடிவு என்னவாக இருக்கும் என்பதை ஊகிக்கவும் வைக்கிறது.

சார்லஸ் எழுதிய 'தோழர் இயேசு நாடகம் கிறித்தவத்தில் ஊடுருவியுள்ள சாதியத்தைத் தோலுரிக்கிறது. "யூதர்கள் இயேசுவெ சிலுவெயில அறஞ்சி கொன்னுனம் இந்திய கிறித்தவங்க அவரெ சாதியில அறஞ்சி கொல்லினம்" என்பதே அதன் கரு.

இவர்களோடு, சாதிமறுப்புத் திருமணம் செய்யும் வில்சன் பிலோமினா முதிர்கன்னிகள் கமலம், ரஞ்சிதம், வர்ம வைத்தியர் மனுவேல் ஆசான் தன்னலவாதியான அமலா பஞ்சாயத்து மெம்பர் போன்றோர் ஊரின் பல்வேறு பண்பாட்டுக் கூறுகளைப் பிரதிபலிக்கின்றனர்.

பனைத்தொழிலாளர்களின் அன்றாட பாடுகளையும் காலமாற்றத்தால் விளையும் பண்பாட்டு அசைவுகளையும் இந்நாவலில் மிக அருமையாகப் பதிவு செய்துள்ளார் இலா வின்சென்ட். அவரது அக்கானி நாவலைச் சமுதாய மாற்றத்துக்கான நாவல் என அடையாளப்படுத்துகிறேன்

●

**கட்டுரையாளர், எழுத்தாளர்**

கட்டுரை



# புறநானூற்றில் ஔவையும் அதியனும்

முனைவர் சு. சதாசிவம்

பழந்தமிழரின் அகப் புற வாழ்வியலை நம் கண்முன் நிறுத்துவன சங்க இலக்கியங்கள். மன்னர்களின் வாழ்வை மட்டுமல்லாது மக்கள் வாழ்வையும் சங்கப் புலவர்கள் அதிகம் பாடியுள்ளனர். களவில் தொடங்கி கற்பில் நிறைவுறும் அகவாழ்வையும் நாட்டு நலனிலும் மக்கள் நல்வாழ்விலும் அக்கறை செலுத்தும் மன்னர்களின் புறவாழ்வையும் நமக்குப் பறைசாற்றும் சங்கப் பாக்களில் தகடூர் மண்ணை ஆண்ட அதியமானை பலர் பாடியிருப்பினும் ஔவையின் பாடல்களே அவனது பெருமைகளை நமக்கு அதிகம் எடுத்தியம்புகின்றன. ஔவை வரலாற்றையும் அதியமானின் வரலாற்றையும் முன்வைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

**ஔவை எனும் புலமையாளர்**

ஔவை என்பதற்குத் தவப்பெண், தாய், சகோதரி என்றும் பாட்டி, முதியவள் என்றும் பொருள் கொள்ளப்படுகிறது[1]. தமிழில் மட்டுமல்லாது துளு, கன்னடம் ஆகிய மொழிகளிலும் ஔவைக்கு அம்மை என்றே பொருள் வழங்கம் உள்ளது. ஔவை குறித்து மாலதி மைத்திரி,

**"ஔவை என்பது அரசியல், சமூகவியல், நாட்டுப்புறவியல் நாடோடியியல், கவிதையியல் எனப் பல தளங்களில் சங்கம் தொட்டு இன்று வரை திகழ்ந்து வரும் ஒரு உருவகமாகும். இப்படி ஒரு கவிதையில் உருவகம் இரண்டாயிரம் ஆண்டுகளின் வரலாற்றில் எந்த ஒரு மொழியிலும் எந்த ஒரு காலச் சாத்திரத்திலும் உருவாகவில்லை"[2]**

என்று கூறுகிறார், ஔவை என்னும் பெயர் சங்க காலம் தொட்டு இன்று வரையிலும் இயற்பெயராக இல்லாமல் ஒரு குறியீடாகவே புலவர்களாலும் மக்களாலும் கையாளப்பட்டு வருவதை உணரமுடிகிறது. இதனை பழ. அன்பு மீனாள்,

"பெண் புலமைக்கு ஒரு குறியீடாக அவ்வையார் என்னும் பெயர் ஆளப்படுவதே, அவரது ஒப்பற்ற சிறப்புக்குச் சிறந்ததொரு சான்றாகும்"[3]

என்று விளக்குகிறார். மேலும்,

"ஔவை என்னும் பெயர் நமது பண்பாடு முழுவதையும் உளவாங்கி ஊடுறுத்தி அதன் சின்னமாக-ஒரு குறியீடாக - பயன்படுத்தப்படுகிறது"[4]

என்பதை கா. சிவத்தம்பி 'ஔவையார் கவிதைக் களஞ்சியம்' என்னும் நூலின் முகப்புரையில் கூறுகின்றார்.

ஔவையாரை உலகப் பெண்பாற் புலவர்களோடு ஒப்பீடு செய்து ஆராய்ந்த பெ.சு.மணி,

"சங்ககால ஔவையாரின் ஆளுமையின் விளைவே பிற்கால பல ஔவையார்களின் தோற்றத்திற்கு மூல காரணமாகும்"[5]

எனக் கூறுகின்றார். சங்க காலத்திற்கு அடுத்து கல்விவிற் சிறந்தோங்கிய பெண்பாற் புலவர்கள் சிலர் தமது இயற்பெயரை விடுத்து தமக்கு முன்பு பெருமைமிக்க ஆளுமையாக விளங்கிய சங்க கால ஔவையின் பெயரைத் தமக்குச் சூட்டிக்கொண்டனர் என்பது மிகையில்லை.

ஔவையாரின் வரலாறு குறித்து ஞானாமிர்தம், திருவள்ளுவர் கதை, கபிலரகவல், புலவர் புராணம், விநோதரச மஞ்சரி, பன்னிரு புலவர் சரித்திரம் முதலான பல நூல்கள் கதைகளாகக் கூறுகின்றன. கபிலரகவல், ஞானாமிர்தம், புலவர் புராணம் ஆகிய மூன்று நூல்களும் ஔவையாரோடு உடன் பிறந்தவர்களின் எண்ணிக்கை ஏழு எனப் பகர்கின்றன. கபிலர், உப்பை, அதிகமான், உறுவை, வள்ளி, வள்ளுவர், சேரமான் போன்றோர் அவ்வெழுவராவர். ஔவையாரின் பிறப்புப் பற்றி வி.கிருஷ்ணமாச்சாரியார் பன்னிரு பன்னிரு புலவர் சரித்திரம் என்னும் நூலில்,

"பூர்வத்தில் தமிழ் நாட்டில் ஆதி என்றவருக்கும் பகவன் என்னும் ஒரு பிராமணனுக்கும் பெண் மக்கள் நால்வரும் ஆண் மக்கள் மூவரும் பிறந்தனர். இவருடைய தம்பிமார்தான் குறள் எழுதிய திருவள்ளுவ நாயனாரும், அகவல் எழுதிய கபிலர் ஆவார்"[6]

என்று கூறுகின்றார். இவ்வாறு ஔவையாரைப் பற்றி இன்னும் பல கதைகள் பேசப்படுகின்றன. இக்கதைகள் யாவும் பிற்காலத்தவரால் சங்க இலக்கியங்களை அடியொற்றிப் படைக்கப்பட்டவையாகும். இவை படிப்பதற்குச் சுவை தருவதாக இருப்பினும் நம்பத்தகுந்தவைகளாக இல்லை. ஔவையாருக்குக் கூறப்படும் புனைகதைகளைப் போன்று வேறு எந்த பெண்பாற் புலவருக்கும் கூறப்பட்டதாகத் தொயவில்லை.

ஔவையார் சங்கப் பெண்பாற் புலவர்களில் தலைமைச் சான்றவர். இவர் பாடியனவாகத் தொகை நூல்களில் ஐம்பத்தொன்பது பாடல்கள் காணப்படுகின்றன. இப்பாடல்கள் அனைத்தும் அகவற்பாவல் பாடப்பட்டவை. ஔவையாரின் பாடற்திறம் பற்றி வ.சுப. மரணக்கம், "இவர் புறம் பாடுவதில் வல்லவர் என்பதனைப் பலர் அறிகுவர். இவர்தம் புறப்பாடல்கள் 33: அகப்பாட்டுகள் இருபத்தாறே. களவிற்கு உரியவை 8: கற்பிற்கு உரியவை 18: அகம் பாடுவதிலும் வல்லுநர் ஔவையார் என்பதனைக் கூறவிரும்புகிறேன்"[7] என்று கூறுவதன்வழி அறியலாம். ஔவையார் சங்கப் புலவர்களில் ஒப்பற்றவராகவும், உலகியல் ஞானமும் அரசியல் அறிவும் ஒருங்கே பெற்றவராகவும் திகழ்கின்றார். இவர் முடிவேந்தர் மூவரைப் பற்றியும் பாடியுள்ளார். சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு, பல்லவநாடு, நாஞ் சில் நாடு போன்றவற்றையும் அங்கிருந்த பல ஊர்களையும் அங்கு ஆட்சி புரிந்த மன்னர்களையும் தமது பாடல்களில் சிறப்பித்துள்ளார்.

அதியமான் மட்டுமல்லாது, அதியமானது மகன். பொகுட்டெழினி, நாஞ்சில் வள்ளுவன், தொண்டைமான், பாரி, உக்கிரப்பெருவழுதி, சேரமான் மாவெண்கோ, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, கிள்ளி வளவன், முடியன், நன்னன் உள்ளிட்ட பதினொரு மன்னர்கள் குறித்து ஔவையார் பாடியுள்ளார்.

மன்னர்களைப் போன்றே பரணர் (புறம்.96), கபிலர் (புறம்.303), வெள்ளி வீதியார் (அகம்.147) ஆகிய புலமைச் சான்ற புலவர்களையும் பாடிச் சிறப்பித்துள்ளார், தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும் பொறையின் காலத்தைக்கொண்டு ஔவையாரின் காலம் கி.பி.முதல் நூற்றாண்டின் பிற்பகுதி அல்லது இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதி எனக் கணக்கிடப்படுகிறது.

ஔவையார் அதியமானிடம் நெல்லிக்கனி பெற்று உண்ட வரலாறு நாடறிந்தது. அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனி கொடுத்ததை சிறுபாணாற்றுப்படை கூறுகின்றது. அதியமான் கொடுத்த நெல்லிக் கனியைத் தாம் பெற்று உண்டதை ஔவையார் தமது பாடல் ஒன்றில் (புறம். 91) குறிப்பிடுகின்றார். கிடைத்தற்கரிய

நெல்லிக் கனியை உண்டதால் ஔவையார் பல காலம் வாழ்ந்தார் என்றும் கூறப்படுகிறது. இது குறித்து உ.வே.சா,

“அதிகன் கொடுத்த நெல்லிக் கனியைத் தின்றதால் ஔவையார் சிரஞ்சீவியாக இருந்திருக்கக் கூடும் என்பது சில பெரியோர் கருத்து”[8]

என்று கூறுகின்றார். அதியமான் ஔவைக்குக் கொடுத்த நெல்லிக் கனியானது அமுதம் போன்றது என்பதைப் பரிமேலழகர்,

“இனிய கனிகளென்றது, ஔவையுண்ட நெல்லிக்கனி போல அமிழ்தாவனவற்றை”[9]

என்று இனிய உளவாக (குறள்.100) என்னும் குறளின் உரையில் கூறிச் சிறப்பித்துள்ளார். இவ்வாறு ஔவையின் புகழ் சங்க காலம் முதல் சம காலம் வரை நின்ற நிலைப்பேறுடையதாக இருந்து வருகிறது.

**அதியமான் நெடுமான் அஞ்சி**

சங்க காலத்தில் இருந்த சிறப்புற்ற நகரங்களில் ஒன்று தகடூர். சேரர் மரபைச் சார்ந்த அதியமான் அஞ்சி இந்நகரைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செலுத்தினான். தகடூர் பல மாடமாளிகைகளைக் கொண்டிருந்தது. அன்பர் என்பவர்க்கு மட்டுமே அங்கு இடமிருந்தது. பகைவர் எவரும் உள்நுழைய முடியாத அளவிற்கு வீரர்களால் காவல்செய்யப்பட்டு வந்தது. இத்தகைய சிறப்பு மிக்க, இந்நகரை ஔவையார்,

"ஆர்வலர் குறுகி னல்லது காவலர்
கனவினுங் இறுகாக் கடியுடை வியனகர்
மலைக்கணத் தன்ன மாடஞ் சிலம்ப"[10]

என்று காட்சிப்படுத்துகிறார்.

அதியமான் “அதிகர்” மரபில் தோன்றியவன். அஞ்சி என்னும் இயற்பெயரை உடையவன். தனது பெயரையும் தான் தோன்றிய குலமரபையும் இணைத்து ‘அதியமான் நெடுமானஞ்சி’ என அழைக்கப்பட்டான். இவனது பெயர்,

"கடுமான் றோன்ற னெடுமா னஞ்சி”[11]

என்றும்,

“அணிபூணணிந்த யானை யியறேர் ரஞ்சி
அதியமான் …...”[12]

என்றும்,

“மடவர் மகித்துணை நெடுமானஞ்சி”[13]

என்றும் ஔவையாரால் குறிப்பிடப்பட்டுள்ளது. அதியமான் சேரர் மரபைச் சார்ந்தவன் ஆகையால் பனம்பூ மாலையை அணிந்திருந்தான் என்பதை ஔவையார்,

“ஈகையங் கழற்காலிரும் பனம் படையல்”[14]

எனக் குறிப்பிடுகிறார்.

அதியமான் தகடூர் பகுதி முழுவதையும் ஆட்சிச் செலுத்தியதோடு மட்டுமல்லாது, இறும்பொறையூர், ஆரைக்கால் என அழைக்கப்பட்ட இன்றைய நாமக்கல் பகுதியையும் ஒருசேர ஆண்டு வந்தான் எனக் கல்வெட்டுகள் சான்றளிக்கின்றன.

பண்டையத் தகடூராகத் திகழ்ந்த இன்றைய தருமபுரியில் இன்றளவும் அதியமான் கோட்டை என்னும் ஓர் ஊர் அதியமானின் புகழைப் பறைசாற்றிய வண்ணம் இருந்து வருகிறது. இவனது வாழ்வியல் குறிந்துப் பெ. கோவிந்த மூப்பனார்,

“வடிவார் குழலி என்ற மங்கையை மணந்து உடலும் உயிரும் போல ஒன்றி இல்லறம் நடத்தினான். அவன் தன் தந்தை விண்ணுலகடைந்த பின்தான் தன்னுடைய நாட்டை அரசாண்டு வந்தான். அதியமான் குடையும், அவன் தன்னிடத்தே முறை வேண்டினர்க்கு நடுநிலையறிந்து கூறும் விடையும் அவன்நாட்டு மக்களை மகிழ்வித்தன”[15]

என்று கூறுவதால் மேலும் அறியப்படுகிறான்.

**அதியமான் பண்பு நலன்**

அதியமான் தன் குடிமக்களைச் சிறப்புடன் போற்றிப் பாதுகாத்தான். பொருள் இருந்த காலத்து அனைவருக்கும் உணவளித்தும், அவை இல்லாத காலத்து தம்மிடம். இருப்பதைக் கொண்டு பலரோடு பகிர்ந்து உண்டும் வாழ்ந்தான். இத்தகைய குணமுடைய அதியமான் வறியவராகிய சுற்றத்திற்கெல்லாம் தலைவனாகவும் திகழ்ந்தான். இதனை,

“உண்டாயிற் பதங்கொடுத்
தில்லாயி னுடனுண்ணும்
இல்லோ ரொக்கற் தலைவன்”[16]

என்று வரும் புறப்பாடலடிகள் சுட்டுகின்றன. அதியமான் மிகுந்த வீரமுடையவனாக இருந்தபோதும் அறம் தவறி போர் புரிந்ததில்லை. தீக்கடைக்கோல் கடையாதபோது தீயை வெளிப்படுத்துவதில்லை. அதுபோல் அதியமான் தன் வலிமையை அடக்கிவைத்தும், போர் உண்டானபோது தீக்கடைக் கோலிலிருந்து வெளிப்படும் தீ போல் தன் வலிமையைப் பலரும் அறியும்படி வெளிப்படுத்தும் பண்புடையவன். இதனை,

“இல்லிறைச் செரீஇய ஞெலிகோல் போலத்
தோன்றா திருக்கவும் வல்லன் மற்றதன்
கான்றுபடு கனையெரி போலத்
தோன்றவும் வல்லன்றன் தோன்றுங் காலே”[17]

என்று வரும் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

**அதியனின் கொடைத் திறம்**

கைமாறு கருதாமல் பொழியும் மழைபோல் அதியமான் தன்னை நாடிவரும் வறியவர்க்குக் காலமும் இடமும் தகுதியும் பாராது கொடையளிக்கும் பண்புடையவன். இவனிடம் பரிசில் வேண்டி ஒருநாள் சென்றாலும் இருநாள் சென்றாலும், அவரே பலநாள் பலரோடு கூடிச் சென்றாலும் முதல்நாள் எவ்வாறு முகமலர்ச்சியுடன் வரவேற்று இரவலர்

வேண்டிய பொருட்களை விரும்பிக் கொடுத்தானோ, அதேபோல் விருப்பத்துடன் கொடையளிக்கும் தன்மையுடையவனாக இருந்தான். இதனை ஔவையார்,

**“ஓவா தீயுமாரி வண்கைக்**
**கடும்பகட்டியானை நெடுந்தேரஞ்சி”[18]**

என்றும்,

**“ஒருநாட் செல்லல மிருநாட் செல்லலம்**
**பலநாள் பயின்று பலரொடு செல்லினும்**
**தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ”[19]**

என்றும் வரும் பாடலடிகள் எடுத்தியம்புகின்றன.

### ஔவைக்கு நெல்லிக்கனி ஈதல்

அதியமான் ஆண்டு வந்த தகடூர் உயர்ந்த மலைப்பகுதிகளைக் கொண்டது. அத்தகைய மலைப் பிளவின் உச்சியில் விளைந்த கருநெல்லிக்கனி ஒன்றை அதியமான் பெற்றான். அக்கனி உண்பவரின் வாழ்நாளை நீட்டிக்கும் தன்மையுடையது. இதனை அறிந்த அதியமான் தான் உண்டு நீண்டகாலம் ஆட்சி செலுத்தி உலக இன்பங்களைப் பெறவேண்டும் என நினைக்காமல் புலமைச் சான்ற தனது அவைக்களைப் புலவர் ஔவைக்கு ஈந்து உண்ணச் செய்தான். உண்ட பின்பு அக்கனியின் அருமை உணர்ந்த ஔவை சிவபெருமான் தான் நஞ்சினை உண்டு அமிழ்தத்தைத் தேவர்களுக்குக் கொடுத்ததுபோல் இறப்பினை உண்டாக்காத கனியைத் தந்து ஆயுளை நீட்டிக்கச் செய்த அதியமான் பிறையை தலையில் சூடியிருக்கும் சிவனைப்போல் நெடுங்காலம் வாழவேண்டும் என வாழ்த்தினார். இதனை,

**“நீலமணிமிடற் றொருவன் போல**
**மன்னுக பெரும நீயே**
………………………………………
**சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா**
**தாத னின்னகத் தடக்கிச்**
**சாத னீங்க வெமக்கீந் தனையே”[20]**

என வரும் ஔவையின் பாடலடிகள் சுட்டுகின்றன.

அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனி கொடுத்த செய்தியைச் சிறுபாணாற்றுப்படை,

**“……..…………………… மால்வரைக்**
**கமழ் பூஞ்சாரல் தீம்கனி ஔவைக்கு ஈந்த**
**உரவுச் சினம் கனலும் ஒளிதிகழ் நெடுவேல்**
**அரவக் கடல்தானை அதிகனும்”[21]**

என்று உறுதிப்படுத்துகிறது. ஔவைக்கு நெல்லிக்கனி கொடுத்த நிகழ்வே அதியமான் கடையேழு வள்ளல்களில் ஒருவனாகத் திகழக் காரணமாக இருந்தமைப் பெறப்படுகிறது.

### அதியமானின் மறைவு

பெருஞ்சேரலிரும்பொறையுடன் நடைபெற்ற போரில் அதியமான் கொல்லப்பட்டான். அவன் இறந்தபோது, பெற்ற தாயினால் கைவிடப்பட்ட குழந்தையைப் போல் சுற்றங்கள் அனைத்தும் வருந்தின. அதியமானின் மார்பில் தைத்து அவனது உயிரைப் போக்கிய வேலானது, பாணரது உண்கலத்தைத் துளைத்து இரந்து வாழ்பவரின் கையிலும் தைத்து, அவனால் பாதுகாக்கப்பட்ட சுற்றத்தாரின் கண்ணொளியை மழுங்கச் செய்து இறுதியில், சொல்லாராய்ச்சியுடைய புலவர் நாவில் சென்று தைத்தது. அதனால் இனி பாடுவோரும் இல்லை. அவ்வாறு பாடினாலும் அன்பு பாராட்டிப் பொருள் கொடுப்பாரும் இல்லை என்பதை ஔவையார்,

**“அருந்தலை யிரும்பாண ரகன் மண்டைத்**
**துளையுரீஇ**
**இரப்போர் கையுளும் போகிப்**
**புரப்போர் புன்கண் பாவைசோர**
**அஞ்சொனுண் தேர்ச்சிப் புலவர் நாவில்**
**சென்று வீழுந்தன்று அவன்**
**அருநிறத்து இயங்கிய வேலே**
**ஆசாகு எந்தை யாண்டு உளன் கொல்லோ**
**இனிப் பாடுநரும் இல்லை பாடுநர்க்கு ஒன்று**
**ஈகுநரும் இல்லை”[22]**

என்று தமது துயரினை வெளிப்படுத்துகிறார். அதியமான் மாய்ந்தபின் அவனால் பாதுகாக்கப்பட்ட சுற்றங்கள் அனைத்தும் ஆதரவின்றித் தவித்தன என்பதும், அவனது மறைவால் புலவர், வறியவர் எனப் பலரும் மீளாத் துயருக்கு ஆளாயினர் என்பதும் அறியப்படுகிறது.

அதியனின் உடல் ஈமத்தீக்கு இரையானபோது உடல் அழிந்து சிதைந்தாலும், அழியாமல் போனாலும் வானில் தோன்றும் சந்திரனைப் போன்ற குளர்ச்சியையும், ஞாயிற்றைப் போன்ற ஒளியையும். உடையவனின் புகழ் என்றும் அழி-வில்லாதது என்பதை ஔவையார்,

**“திங்க ளன்ன வெண்குண்ட**
**ஒண்ஞாயி றன்னோன் புகழ்மா யலவே”[23]**

என்று பாடுகிறார்.

அதியமான் மறைவிற்குப் பிறகு அவனுக்கு நடுகல் எடுக்கப்பட்டது. அப்போது அதியமான் விரும்பி உண்ட கள்ளுணவு வைத்து வழிபாடு செய்யப்பட்டதனை ஔவையார்,

**“நடுகற்பீலி சூட்டி நாரரி**
**சிறுகலத் துகுப்பவுங் கொள்வன் கொல்லோ”[24]**

என்று பாடுகிறார். நாடு முழுவதையும் கொடுத்தாலும் வேண்டாதவன் அதியமான். இங்குப் படைக்கப்பட்ட கள்ளுணவை ஏற்பானோ, மாட்டானோ என ஔவையார் வினவுவதாக அமைகிறது அவரது பாடற்கருத்து.

### நிறைவுரை

சங்கப் பெண்பாற் புலவர்கள் ஐம்பதுபேரில் ஐம்பத்தொன்பது பாடல்களைப் பாடி ஔவையே

தலைமைச்சான்ற புலவராகத் திகழ்கிறார். பதினோரு மன்னர்களைப் பற்றிய குறிப்புகள் ஔவையின் பாடல்களில் காணக்கிடைக்கின்றன. சங்கம் மருவிய காலத்திற்குப்பின் வந்த பெண்புலமையாளர்கள் பலர், ஔவையை தமது முன்னோடியாகக் கொண்டு அவரது பெயரைத் தமக்கும் சூட்டி மகிழ்ந்தனர். முடிவேந்தர்களைக் காட்டிலும் அதியமான் இன்றுவரை தமிழ்ச் சான்றோர்களின் மனதில் நிலைத்து நிற்பதற்குக் காரணம் ஔவையின் காலத்தால் அழியாத பாடல்களே எனலாம். முடிவேந்தர்களுக்கு நிகரான புகழுடைய அதியமான் வீரத்திலும். கொடையிலும் தன்நிகரற்ற தகைமையாளனாகத் திகழ்கிறான். அதியமானின் புகழ் ஈராயிரம் ஆண்டுகளாகத் தொடர்வதைப்போல் சந்திரனும் சூரியனும் உள்ளளவும் இருந்துவரும். இருக்கும் என்பதில் மாற்று கருத்திற்கு இடமில்லை.

**குறிப்புகள்**



1. நா.கதிரைவேற்பிள்ளை, தமிழ்மொழி அகராதி, ப.967.
2. மாலதி மைத்திரி, விடுதலையை எழுதுதல், பக்.89-90
3. பழ. அன்பு மீனாள் (ப.ஆ)., இலக்கியத் தரவுகளில் மகளிர் பதிவுகள், ப.20.
4. ப. சரவணன், ஔவையார் கவிதைக் களஞ்சியம்,ப.7.
5. பெ.சு.மணி, சங்ககால ஔவையாரும் உலகப் பெண்பாற் புலவர்களும், ப.309.
6. வி.கிருஷ்ணமாச்சாரியார், பன்னிரு புலவர் சரித்திரம், ப.167.
7. வ.சுப.மாணிக்கம், தமிழ்க்காதல், ப.366.
8. உ.வே.சா., சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும், ப.107.
9. பரிமேலழகர் உரை, திருக்குறள்,ப.40.
10. புறம்.390:5-7
11. புறம்.206:6
12. புறம்.101:4-5
13. புறம்.315:3
14. புறம். 99:5
15. பெ.கோவிந்த மூப்பனார், சங்க காலத்து வேந்தகும். வேளிரும், ப. 106.
16. புறம். 95:6-8
17. புறம்.315:4-7
18. குறுந். 91:5-6
19. புறம்.101:1-3
20. புறம். 91:6-11.
21. சிறுபாண். 99-103.
22. புறம். 235:10-17
23. புறம். 231:5-6
24. புறம். 232:3-4


●



கட்டுரையாளர், உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை, சென்னை கிறித்தவக் கல்லூரி
(தன்னாட்சி) தாம்பரம், சென்னை



**நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்**




₹ 225/-




₹ 55 /-

Article

# Chthulucene Sensibility Demonstrated *by* Malayali Tribe of the Eastern Ghats of Tamil Nadu



**Dr. S. J. Kala**

**Ms. Sajoe Monica.**

**Note:** This paper is largely an outcome of the Research Project sponsored by the Indian Council of Social Science Research (ICSSR). However, the responsibility for the facts stated, opinions expressed, and the conclusions drawn is entirely that of the authors.

**Abstract:**

The increasing and alarming need to preserve planet earth from depletion, directs scientists and scholars of environmental studies to turn to traditional methods of conservation. This paper focusses on exploring Donna J. Harraway's Chthulucene concerns evident in the Malayali tribes who inhabit the hills of Kalvarayan Hills, Kolli Hills, Javadi Hills, Shevroy Hills and Pachaimalai Hills in the Eastern Ghats of Tamil Nadu. It attempts to delve into the interconnectedness with nature and shared kinship exhibited by the Malayali tribe. It also aims to analyse the oral traditions that are inclusive of the species other than human beings. The study seeks to unveil the sustainable traditions and culture of the Malayali tribe that aids in protecting the earth.

Key words: Malayali tribe, Chthulucene, Tribal Culture, Eastern Ghats, Kalvarayan Hills, Kolli Hills, Javadi Hills, Shevroy Hills, Pachaimalai Hills

India known for its diversity encompasses people with a multitude of cultures and traditions that are unique to them. The tribal population of India accounts to 8.6% of the total population according to the census of 2021. The tribes native to India also exhibit variegate and distinct characteristics that define them. Most of the Indian tribes inhabit regions that serve as ecological reserves like forests and mountainous regions. Their life amidst nature instills in them the value of respecting and protecting nature. They follow their own set of practices that bringout their exclusiveness. The environment friendly and sustainable lifestyle of the tribal community has drawn the attention of many, especially researches in the recent times. Their lifestyle bears testimony to the peaceful existence of human beings and the non-human entities of nature.

Tribal lifestyle is being widely explored by naturalists, ecologists and environmental scientists. The undisclosed and rich culture and traditions of Indian tribes are also observed by sociologists and anthropologists. The increasing attention towards tribal community and their practices can be seen as an impact of frequent and intense natural disasters and pressing need for conservation of natural resources. People have developed the understanding that traditional ways of living is the key for sustainable livelihood. This understanding encourages them to turn their attention to the tribal community that advocates inclusive living in the face of modernity. Realising the inevitability, many governmental and non-governmental organisations have stepped in uncover the traditions of the tribes.

ICSSR (Indian Council for Social Science Research), a governmental organisation has undertaken to facilitate enhanced and enriched study on the tribes of India through a "Special call for Studies of the Culture, History and Geography of the Scheduled Tribes of India." In accordance with this call, the project titled "Resuscitating the Tribal Heritage of the Malayali Tribes in the Eastern Ghats of Tamil Nadu" was sanctioned. As part of the project, field visits were undertaken on three hills namely Kalvarayan Hills, Kolli Hills and Jawadi Hills of the Eastern Ghats by the Project Team to uncover the practices and art forms of the Malayali Tribes.

**Chthulucene**

A close observation of the lifestyle of the Malayali Tribes of the Eastern Ghats of Tamil Nadu revealed their striking practices that place the ecosystem at the centre. Their life revolves around the idea that they are a small part of nature and that nature consists of other beings that also play their roles respectively for a harmonious living on this Planet Earth. The ideals of the Malayali Tribes of the Eastern Ghats resonate the idea of chthulucene proposed by the American Critic Donna J. Harraway. The Malayali tribes strongly believe the symbiosis of organisms where every organism is dependent on the other as well as earth for its survival. They also advocate self-regulation of non-human beings as the earth possesses the ability to maintain its balance. Their view of earth as an extension of the God they worship reveal their high regard for it.

Donna J. Harraway coined the term 'chthulucene' a neologism that represents the present condition of earth and its inhabitants. The term chthulucene is derived from the Greek words 'khthon' and 'kainos' that outline the struggles of living in a highly adulterated earth. Chthulucene is the view of life beyond the existing conceptions of it. It attempts at dethroning the central position of human being and establishing an environment in which all the beings occupy equal position. It also essentially highlights the responsibilities of human being in realising their position on earth.

**Objectives**

Donna Harraway's chthulucene points out the importance of co-habiting earth. The concept of co-habitation forms an integral part of the way of living of the Malayali tribes of the Eastern Ghats of Tamil Nadu. The objectives of the study are:

- To bring out the elements of chthulucene evident in the Malayali Tribes of the Eastern Ghats of Tamil Nadu
- To explore the interconnectedness of human and non-human entities evident in the Malayali Tribes of Tamil Nadu.
- To unveil the struggles of the tribe due to increased modernisation and their efforts to combat them.
- To examine the myths of the tribe and their significance through Harraway's chthulucene
- To analyse the necessity of understanding tribal lifestyle for the betterment of the human civilisation.
- To bring to limelight the sustainable way of life followed by the tribe.

**Origin of the Malayali Tribes**

Malayali tribes are prominently found in the southern part of the Indian sub-continent. They are spread along the hills of the Eastern Ghats stretching across the districts of Vellore, Namakkal, Salem, Kallakurichi, Dindigul and Perambalur. It is a discontinuous range of hills and consists of the five prominent hills of Kalvarayan hills, Kolli hills, Shevroy hills, Pachaimalai hills and Javadi hills. The Malayali tribes continue to hold on to their heritage in the face of development. The origin of their name is a blend of two words 'malai' that translates to mountains and 'ali' that refers to rulers. The history of the Malayali tribe is distinct from the other tribes found in India. They are not the native inhabitants of the hills. Rather, they have migrated to these hills across a period of two centuries. These settled tribes understand the soul of nature due to their direct interaction and proximity with nature. There are a number of narratives stating their time of settlement regarding which Edgar Thurston documents their settlements as "… the Malaiyalis originally belonged to the Vellala Caste of cultivators and emigrated from the sacred city of Kanchipuram (Conjeevaram) to the hills about ten generations ago, when Muhammadan rule was dominate in Southern India" (407). There are also other narratives about the settlement of the tribe comprising legends legend associated with the tribal settlement in each of these hills.

The multifaceted nature of the Malayali tribes gives rise to the exploration of chthulucene concerns that can be observed in them. Chthulucene offers the present condition of the earth in which it exhibits its wrath through calamities. It is a representation of pre-apocalyptic earth that can be saved from the destruction by decentring the position of man. Harraway suggests that chthulucene has moved beyond anthropocene that priorities man

and capitalocene that focusses on capitalism. Chthulucene disperses the hierarchy established by human beings and asserts the equal involvement and collaboration of all the elements of nature both living and non-living.

**Oneness with Nature**

The life of the Malayali tribes is closely knitted with nature and they see themselves as a part of it throughout ages. The primary occupation of the tribe spread across the Eastern Ghats of Tamil Nadu is agriculture. They follow the traditional methods of farming that results in healthy and organic food. Hard physical labour and their millet-based dietary practices are said to be the hallmarks of the commendable health that the previous generations of the Malayali tribe are attributed with. However, the present generation have deficiency due to their greatly altered lifestyle adopted from modernisation.

The Malayali tribes not only lead a peaceful life and nature but also find solutions to their everyday struggles in it. Herbs that grow in and around their habitation serve as medicines for the ailments. They use it to treat common sickness like cold, headache, pains in leg and hands and also to treat grave accidents like insect bites and snake bites. The medicinal herbs of the hills are also under threat as these alternative medicines have been commercialised. The members of the tribe have thorough knowledge about the uses of the herbs and the ways of extracting them. Their undue reverence for nature makes them careful in using them only for their need and not otherwise. They consciously avoid over exploitation.

**Interconnectedness and Kinship**

The life of the Malayali tribe entangled with nature also paves way to the understanding of kinship stated by Harraway. She puts forth that the non-human entities also become agents. In line with the sustenance of earth Harraway uses the term "companionship" to establish relationship between two entities. The term signifies that both the entities are interdependent and acquire equal positions. Harraway also highlights the association of human being with other beings through the term companion species: "'Companion species' is a bigger and more heterogenous category than companion animal and not just because one must include such organic beings as rice, bees, tulips, and intestinal flora, all of whom make life for humans what it is – and vice versa" (15). The Malayali tribe through their traditional and religious beliefs promulgate companionship. They have myths that consider animals and resources of earth as God. They are as stated herein:

- The Malayali tribes celebrate Pongal the harvest festival of Tamil Nadu for ten days thanking the animals and earth that have been of help in the successful cultivation and harvest.
- The tribal community has always respected the boundary of nature.
- They cleared a part of the hill to cultivate crops like Little millet (Panicum sumatrense), Finger millet (Eleusine coracana), the tubers and vegetables essential for their survival.
- According to the testimony of the members of the tribe, they treat other animals, plants and resources as they treat themselves and other human beings.
- This reveals that the Malayali tribe advocates the human affinity towards earth and elements of it.

Harraway's conception of kinship does not only represent the connect among different species but also between human beings. She points out that co-existence and co-operation of human beings can aid in the betterment of human species. She calls human interconnectedness as the art of living on earth owing to the benefits that can be achieved the through it. Harraway's concept of interrelation throws light on the need for human beings to shed their differences to build a strong community that can sustain the changes that grip and threaten earth's bio-diversity. Her conception of kinship is reflected in the Malayali tribes as:

- Malayali tribes have an approximate of 250 divisions among themselves. It can be equated to the caste system of ancient Indian society.
- They live in harmony despite these divisions and come together to help and take part in the celebrations of one family.
- Marriage, a celebration, exhibits the strong bond among the members of the tribe. When a girl or boy from the village is betrothed and the date of marriage is fixed, the people of the village come together to help the family. They split the work among themselves covering the preparations to be made, inviting guests and rituals to take place.
- The parents of the bride or groom do not invite the guest instead the villagers are divided and they invite guests with betel leaf & areca nut symbolising auspiciousness for the wedding.
- It is customary that the family treats them with food when the other people help them with

the marriage. On the day of marriage, "Palakai kadaisal"a dish made of jackfruit is served to the guests in appreciation of their arrival.

The communal harmony of the tribe asserts the need and inevitability of kinship for the functioning of ecology.

**Chthonic Elements**

The continuity of the ecosystem of earth is fostered by Harraway's chthulucene. chthonic entities described by Harraway finds a prominent place in it. She defines that, "The chthonic ones are precisely not sky gods, not a foundation for the Olympiad, not friends to the Anthropocene or Capitalocene and definitely not finished. The Earth bound can take heart – as well as action" (53 Harraway). She states that the scientific origin of chthonic ones remain obscure and biological details are not clearly listed. Chthonic ones usually have a dreadful appearance and they are a part of the earth or underworld. They avenge the injustice done to nature and its orders. Harraway points out that chthonic elements play a vital role in maintaining the balance of nature. It is derived from the Greek work "chthonois" which translates to 'of in or under the earth and the seas."

Chthonic elements as described by Harraway do not only belong to the myths of the past but they are essential components of human civilisation. The chthonic entities range from animals with grotesque outlook and traits to furies and fairies that represent nature. Chthonic entities represent the untamed and unexplored side of nature beyond the reach of human being. They instil fear in the minds of humans that nature is not always altruistic but it has elements that can wreak vengeance against injustice. She lays bare the fact that chthonic ones in the contemporary times are not isolated from everyday life of individuals and that they are together in the earth with them. The myths of chthonic elements are present in most of the indigenous cultures across world in different forms and names. The entities are represented as recursive as the transcend time and may continue to exist in the future. The chthonic elements of chthulucene that can be observed in the Malayali tribes are as follows:

- The Malayali tribes of the Kolli hills believe in the existence of "kolli paavai". It is believed to have been created by the siddhars who are found in the region.
- They address Kolli paavai as Ettukai Amman (Goddess with eight hands) and Kali Amman (Goddess Kali).
- There is a small hill of the eighteen Siddhars located near Kootaru. The eighteen Siddhars gathered and made a figure out of the mud of the forest. They breathed life into the figure and made it dance. This figure called 'pavai' helped them to get rid of the varied forms of evil. This figure is known by named like Kolli Paavai.
- The earliest name was "Kolli Paavai" which contributes to the name of the hills and the inhabitants of the hills believe it as the Goddess guarding the boundaries.
- They also have the belief that the "Kolli Paavai" made by the Siddhars is hidden in the forest and will resurface when they are faced with a threat to their existence.

**Multispecies Storytelling**

Harraway in her prominent work Staying with Trouble, points out the existence of symchthonic stories. The symchthonic story is a blend of symphony and chthonic ones. It consists of the musicality of a symphony as well as the myth of the chthonic elements. Music and dance play a vital role in the narration of symchthonic stories. The themes of these stories encompass the epic elements and are often based on the lives of Gods and kings. Harraway presents symchthonic stories not only as the epic story of valour and prosperity of the past but also as the mirror of the present condition of the earth. The dynamic nature of symchthonic narrative stresses on the ongoing intensity of the depleting resources of earth and the role of people in it. Symchthonic stories encourage the intermingling of different species that eventually pave for the multispecies story telling.

Harraway sets out to reimagine history through her ideology of multispecies storytelling. She terms it multispecies as she opposes the human-centric narratives of modern society. Her emphasis on indigenous storytelling underscores the inclusiveness of people belonging to indigenous culture. She addresses it as an inspiring, comforting as well as inducing power that has impacted society. Her multispecies storytelling can therefore be considered as the myths of the tribal community that include all species of the earth.

Franz Boaz, a pioneer of modern anthropology states that, "…myth is able to integrate material from everyday life and can link present action to circumstances situated in mythical time" (19 Qtd in Meletinsky). Renaissance critics considered myths

as manifestation of moral that guides human beings. Myths can also be understood as the representation of history of a community. As integral components of culture, storytelling channelises the understanding of human beings about the riches of the earth.

Malayali tribe as a community have established themselves through their rich oral tradition. They have their own myths that cover a wide range of subjects like their migration, struggles of settlement, prosperity of land, flora and fauna, lifestyle of harmony. Here are a few of them:

- The origin of Arapaleeswarar temple of Kolli hills exists in the form of oral tradition. It is consecrated by the eighteen Siddhars of the Kolli hills. It is also believed that the Arapaleeswarar temple is built by Rishis who experienced the powers and divinity of God.
- The origin of the tower of Arapaleeswarar temple remains a mystery to the people as there are no account of it. They believe that it was a miracle from the God himself.
- There is yet another myth associated with the temple that King Valvil Ori, a generous king:
- Once people were working in 'Kollakaadu' the part of the forest which is burnt down to clear the land for agriculture. This method was followed to increase the productivity and quality of crops. They removed the weeds and tilled the soil using shovel after burning down. Blood oozed out from the soil when a farmer's spade hit the ground. The people of the Malayali tribe stopped tilling and slowly dug the soil to find the hidden "Linga". The people of the Malayali tribe prayed to Lord Shiva and constructed a temple for Arapaleeswarar. Initially it was built as a tiled hut.
- Realising the power of "Linga", Valvil Ori erected the Arapaleeswarar temple when he visited the hill.
- The other prominent myth highlighting the religious practice of the Malayali tribe is the myth of Meenpillai Aaru. There was a stream called Meenpillai Aaru below the Arapaleeswarar temple in the earlier times. People prayed to Lord Arapaleeswarar and adorned the fish there with nose rings as offerings to God for granting their prayers.
- The fish were considered sacred and people never caught those fish. However, unaware of the sanctity associated with it a man once caught fish from the stream and cooked it but the fish in the curry disappeared when he came back after bath.
- The people of the Malayali tribe believe that their God in Arapaleeswarar temple brought back the fish to life and it swam back to the stream.

Respecting the religious beliefs of the Malayali tribe, Harraway's idea of myth is explored. Nevertheless, in Harraway's point of view, the beliefs of the people when viewed with the scientific reasoning has a potential to reveal the relevance of it in present society.

The study on Malayali tribe and their cultural traditions has unfolded the close association of the Malayali tribes with other forms of life. Exploration of Donna J. Harraway has revealed the belief of the Malayali tribes that shared kinship leads to the unition with the natural world. A close probe into the chthonic entities that guard natural resources has brought to limelight the essentiality of preserving and protecting nature from depletion. Exploring into the symchthonic stories that binds chthonic elements and art forms has divulged the rich oral tradition of the tribes. Harraway's is concept of multispecies storytelling an extension of symchthonic stories has been helpful in bringing to the fore their significant role in discerning the religious practices and beliefs of the Malayali tribes that are also intertwined with nature. The chthulucene concerns evident in the Malayali tribes of the Eastern Ghats of Tamil Nadu fosters requisite action to be taken by the people for creating a sustainable posterity.

**Works Cited:**


1. Edgar, Thurston. Castes and Tribes of Southern India. Vol.4. Hardpress Publishing, 2016.
2. Haraway, Donna J. Staying With the Trouble: Making Kin in the Chthulucene. Duke UP, 2016.
3. ---. The Companion Species Manifesto: Dogs, People, and Significant Otherness. Prickly Paradigm Press, 2007.
4. Meletinsky, Eleazar M. The Poetics of Myth. Routledge, 2013.


●



**Dr. S. J. Kala**

Associate Professor of English & Dean of Research, Fatima College (Autonomous), Madurai.


**Ms. Sajoe Monica. U,**

Research Associate.


# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் வெளியீடாக ஜெயசீல ஸ்டீபன் நூல்கள்





₹ 290/-





₹ 190/-





₹ 270/-




₹ 270/-




₹ 125/-




₹ 150/-


**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎ 044 - 26251968, 26258410, 48601884 www.ncbhpublisher.in | email: info@ncbh.in



Published by **Shanmugam Saravanan** on behalf of **New Century Reader's Sangam** at 16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014 and Printed by **A.Sivakumar** at **Pavai Printers (P) Ltd.,** 16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014. Editor: **T.Stalin Gunasekaran**

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly) Registered with RNI No :TNBIL/2009/28728. Postal Regn No. TN/CH(C)/601/2022-2024. WPP No: TN/PMG(CCR)WPP-673/2022-2024
Date of publication 1-7TH of every month Posted at Egmore RMS / 1 Patrika Channel
If undelivered, please return to: New Centurian Ungal Noolagam,
16 (142), Jani Jhan khan road, Royapettah, Chennai - 14.

